# ஆண்டறிக்கை 2013

இலங்கை சிவில் விமானப்
போக்குவரத்து அதிகாரசபை

# இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை

## ஆண்டறிக்கை

# 2013

2002 இன் 34 ஆம் இலக்க இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைச் சட்டத்தின் 15 ஆவது வாசகத்திற்கிணங்க பாராளுமன்றிற்குச் சமா்ப்பிக்கப்படுகின்றது.

# சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் தொனிப்பொருள் கீதம்

ஸ்ரீ லங்கா சிவில் குவன் சேவா அதிகாரிய
கித் யாசின் கதலே
ஹெலி தொட்ட ஹெலி ஹெலே //

சக்வித்தி ராவண ஆருதி யுகேன்
தண்டு மொனரின் குவன தினா //
விஸ் அமதி லக்தன வாரிய பொலனுத்
பாவிது நுவன மனா //

உவதுரு தொர பவ சந்தஹா முல்வெமு
வெய்பெர வெக்கிய அபே //
இக்மன் அய மகநெகுமகி முல்வெவ
மேவெய் தமக்கும அபேய் //

ரடவெசி யுதுகம இடுவன அயுரின்
மௌபிம ஹா பெதமு //
சமாஜ மெஹவர சாரதாஹும் ரெக
வககீமென் புதமு //

| | | |
|---|---|---|
| ஆக்கம் | : | அரிசன் அஹுபுது |
| பாடல் | : | கலாநிதி பண்டிதர் டப்ள்யூ.டி. அமரதேவ |
| இசையமைத்தவர் | : | கலாநிதி பண்டிதர் டப்ள்யூ.டி. அமரதேவ |

## கௌரவ அமைச்சர், சிவில் விமானப் போக்குவரத்து

இவ் ஆண்டறிக்கை 2002 இன் 34 ஆம் இலக்க சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைச் சட்டத்தின் 15 ஆவது வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டினை நிறைவு செய்யும் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ளதுடன், 01 ஜனவரி 2013 இல் ஆரம்பித்து 31 டிசம்பர் 2013 இல் முடிவடைந்த ஆண்டில் இலங்கை சிவில் சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் செயற்பாடுகளை உள்ளடக்குகின்றது.

ஜெனரல் றொஹான் டி. சில்வா தளுவத்த
தலைவர்,
இலங்கை சிவில் சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை
28 பெப்பரவரி 2014.

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| **சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் தொனிப்பொருள் கீதம்** | **03** |
| **உள்ளடக்கம்** | **05** |
| **சுருக்கமான சொற்றொடர்கள்** | **07** |
| **விபரக்கொத்து** | **09** |
| **தலைவரின் அறிக்கை** | **10** |
| **சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரின் அறிக்கை** | **12** |
| **பக்கத்தோற்றம்** | **20** |
| **மீள்பார்வை** | |
| இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் உறுப்பினர்கள் | 22 |
| இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் ஆளுகையும் பொறுப்புடமையும் அதிகாரசபையின் பொறுப்பு | 29 |
| **நிறுவனக் கட்டமைப்பு** | |
| நிறுவனக் கட்டமைப்பு | 30 |
| அதிகாரசபையின் நிறைவேற்று அதிகாரம் | 30 |
| அதிகாரசபைக் கூட்டங்கள் | 30 |
| சிவில் விமானப் போக்குவரத்து அபிவிருத்தி மற்றும் கல்விக் குழு (CADEC) | 34 |
| நிறுவனத்தில் அக்கறை கொண்டோருடனான தொடர்பு | 34 |
| அதிகாரசபையினதும் சிரேஷ்ட முகாமையினதும் பொறுப்பு | 35 |
| பொறுப்புடமை | 35 |
| ஆர்வ ரீதியான முரண்பாடுகள் | 35 |
| உள்ளகக் கணக்காய்வு | 36 |
| சட்டக் கடப்பாடு | 36 |
| ஒழுக்க விழுமியங்கள் | 37 |
| **இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை** | **38** |
| தூரநோக்கு | 38 |
| குறிக்கோள் | 38 |
| குறிக்கோள் வாசகம் | 38 |
| தத்துவம் | 38 |
| இலக்குகள் | 38 |
| தந்திரோபாயங்கள் | 39 |

**மதிப்பீடுகள்**

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து
அதிகாரசபையின் முதன்மை இலக்குகள் 39
விளைவுகள் 41
வெளியீடுகள 41

**நியதிச் சட்டச் செயற்பரப்பு**

வழிகாட்டல் மற்றும் முகாமைத்துவம் 43
அதிகாரசபையும் அதன் குழுக்களும் 45
வானூர்தி விபத்து விசாரணை அலகு 45

உள்ளகக் கணக்காய்வுப் பகுதி 47

**வானியல் சேவைகள் பிரிவு** 49
விமானப் போக்குவரத்துப் பாதுகாப்புப் பகுதி 49
விஷேட செயற்றிட்டப் பகுதி 50
விமானத்தளம் மற்றும் வான்செலவு சேவைகள் பகுதி 54

**விமானப் பறப்புற் பாதுகாப்புப் பிரிவு**

தனிநபர் அனுமதிப்பத்திரப் பகுதி 57
செயற்பாட்டுப் பகுதி 59
வான்தகைமைப் பகுதி 61

**கூட்டாண்மைப் பிரிவு**

வான் போக்குவரத்து மற்றும் சட்ட விவகாரங்கள் பகுதி 63

மனித வளங்கள் மற்றும் அலுவலகத் முகாமைத்துவ பகுதி 69
நிதி முகாமைத்துவப் பகுதி 75
செயற்சாதனைச் சுருக்கம் -2013 76
முழுமையான வருமானக் கூற்று 84
நிதி நிலமைக்கூற்று 85
உரிமை மாற்றற் கூற்று 86
காசுப்பாய்ச்சற் கூற்று 87
நிதி அறிக்கைகள் - 2013 89
முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் 90

**கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 108**

**கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கு**
**சீ.ஏ.ஏ.எஸ்.எல் இனால் வழங்கப்பட்ட பதிலுரைகள் 125**

# சுருக்கமான

| | | |
|---|---|---|
| A&NS | - | விமானத்தளங்கள் மற்றும் வான்செலவு சேவைகள் |
| AA | - | உதவிக் கணக்காளர் |
| AAI | - | உதவி விமானத்தளப் பரிசோதகர் |
| AA(I) | - | உள்ளகக் கணக்காய்வு உதவியாளர் |
| AASI | - | உதவி விமானப் போக்குவரத்துப் பாதுகாப்புப் பரிசோதகர் |
| AASL | - | வரையறுக்கப்பட்ட விமான நிலையம் மற்றும் விமானப் போக்குவரத்துச் சேவைகள் (இலங்கை) கம்பனி |
| AATO | - | உதவி வான் போக்குவரத்து உத்தியோகத்தர் |
| AAWE | - | உதவி வான்தகமைப் பொறியியலாளர் |
| Acct | - | கணக்காளர் |
| AFM | - | உதவி நிதி முகாமையாளர் |
| AFTN | - | வானியல் நிலையான தொலைத்தொடர்பு வலையமைப்பு |
| AGOI | - | உதவி தளச் செயற்பாட்டுப் பரிசோதகர் |
| AI | - | விமானத்தளப் பரிசோதகர் |
| AIU | - | விபத்து விசாரணை அலகு |
| AISO | - | வானியல் தகவல் சேவைகள் உத்தியோகத்தர் |
| AME(BL) | - | வானூர்திப் பராமரிப்புப் பொறியியலாளர் (அடிப்படை அனுமதிப் பத்திரம்) |
| AML | - | வானூர்திப் பராமரிப்பு அனுமதிப் பத்திரம் |
| AMO | - | அங்கீகரிக்கப்பட்ட பராமரிப்பு அமைப்பு |
| AMT | - | வானூர்திப் பராமரிப்பு தொழிநுட்பக் கலைஞர் |
| ANR | - | வான்செலவுகள் ஒழுங்குக் கோவை |
| ANS | - | வான்செலவுகள் சேவைகள் |
| ANSI | - | வான்செலவுகள் சேவைகள் பரிசோதகர் |
| ADC | - | வான் செயற்பாட்டாளர் சான்றுப்பத்திரம் |
| AS | - | வானியல் சேவைகள் |
| ASI | - | விமானப் போக்குரத்துப் பாதுகாப்புப் பரிசோதகர் |
| ASN | - | விமானப் போக்குரத்துப் பாதுகாப்பு அறிவித்தல்கள் |
| AT&LA | - | வான் போக்குவரத்து மற்றும் சட்ட விவகாரங்கள் |
| ATC | - | வான் நெரிசற் கட்டுப்பாடு / வான் நெரிசற் கட்டுப்பாட்டாளர் |
| ATO | - | வான் போக்குவரத்து உத்தியோகத்தர் |
| AVSec | - | விமானப் போக்குவரத்து பாதுகாப்பு |
| Aw | - | வான்தகமை |
| AwE | - | வான்தகமைப் பொறியியலாளர் |
| BIA | - | பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் |
| CAASL | - | இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை |
| CADEC | - | சிவில் விமானப் போக்குவரத்து அபிவிருத்தி மற்றும் கல்வியூட்டற் குழு |
| CAO | - | சிவில் விமானப் போக்குவரத்து உத்தியோகத்தர் |
| CEO | - | பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் |
| CIA | - | பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் |
| COSCAP-SA | - | செயற்பாட்டுப் பாதுகாப்பு மற்றும் தொடர்ச்சியான வான்தகமையினை விருத்தி செய்வதற்கான தெற்காசிய ஒத்துழைப்பு வேலைத்திட்டம் |
| CP | - | கூட்டாண்மை |
| CSI | - | வானறைப் பாதுகாப்புப் பரிசோதகர் |
| CofR | - | பதிவுச் சான்றிதழ் |

| | |
|---|---|
| DCA | - சிவில் விமானப் போக்குவரத்துத் திணைக்களம் |
| D | - பணிப்பாளர் |
| DD | - பிரதிப் பணிப்பாளர் |
| DGCA | - சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகம் |
| DO | - ஆவண உத்தியோகத்தர் |
| DPIG | - அபிவிருத்தித் திட்டமிடல் மற்றும் அமுலாக்கற் குழு |
| EASA | - ஐரோப்பிய விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு முகவர் |
| ELP | - உபகரணங்கள் ஏற்றும் திட்டம் |
| EU-SA | - ஐரோப்பிய ஒன்றியம்- தெற்காசியா |
| FAL | - அனுசரணை |
| FIR | - விமானப் பறப்புத் தகவல் வலயம் |
| FS | - விமானப் பறப்புப் பாதுகாப்பு |
| GOI | - தளச் செயற்பாட்டுப் பரிசோதகர் |
| GSA | - பொது விற்பனைப் பிரதிநிதி |
| HR&OM | - மனித வளங்கள் மற்றும் அலுவலக முகாமைத்துவம் |
| HR&OMA | - மனித வளங்கள் மற்றும் அலுவலக முகாமைத்துவ உதவியாளர் |
| HR&OMO | - மனித வளங்கள் மற்றும் அலுவலக முகாமைத்துவ உத்தியோகத்தா |
| IA | - உள்ளகக் கணக்காய்வு |
| ICAO | - சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பு |
| MEL | - குறைந்த பட்ச உபகரணப் பட்டியல் |
| NOTAM | - விமான சேவையிலுள்ளோருக்கான அறிவித்தல்கள் |
| OA | - அலுவலக உதவியாளர் |
| OPS | - செயற்பாடுகள் |
| PA | - நேர்முக உதவியாளர்கள் |
| PEL | - தனிநபர் அனுமதிப் பத்திரங்கள் வழங்கல் |
| PLO | - தனிநபர் அனுமதிப் பத்திரங்கள் வழங்கும் உத்தியோகத்தர் |
| PA-AAI | - நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்- விமான விபத்து விசாரணை |
| PA-AE | - நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்- விமான சேவைப் பரீட்சைகள் |
| PA-IT | - நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்- தகவல் தொழிநுட்பம் |
| PA-SP | - நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்- விஷேட செயற்றிட்டம் |
| S/CAASL | - செயலாளர் / இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை |
| SD | - சிரேஷ்ட பணிப்பாளர் |
| SAFA | - வெளிநாட்டு வானூர்திக்கான பாதுகாப்பு மதிப்பீடு |
| SAISO | - சிரேஷ்ட வானியல் தகவல் சேவைகள் உத்தியோகத்தர் |
| SARPs | - தரங்கள் மற்றும் பரிந்துரை செய்யப்பட்ட நடைமுறைகள் |
| SARI | - தெற்காசிய பிராந்திய முன்னெடுப்பு |
| SATO | - சிரேஷ்ட விமானப் போக்குவரத்து உத்தியோகத்தர் |
| SAwE | - சிரேஷ்ட வான்தகமைப் பொறியியலாளர் |
| SFOI | - சிரேஷ்ட விமானப் பறப்புச் செயற்பாட்டுப் பரிசோதகர் |
| SLAS | - இலங்கை கணக்கீட்டு நியமங்கள் |
| SLCAP | - இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து முறைமைகள் |
| SLFRS | - இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமங்கள் |
| SP | - விஷேட செயற்றிட்டம் |
| SMS | - பாதுகாப்பு முகாமைத்துவ முறைமை |
| USAP | - உலகளாவிய பாதுகாப்பு சோதனை வேலைத்திட்டம் |
| USOAP | - உலகளாவிய பாதுகாப்பு மேற்பார்வை சோதனை வேலைத்திட்டம் |

# விபரக்கொத்து

| | | |
|---|---|---|
| பிரதான அலுவலகம் | - | இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை<br>இல. 04, ஹுணுபிட்டிய வீதி, கொழும்பு-02.<br>தொலைபேசி - 94-11-2304632<br>தொலைநகல் - 94-11-2304644<br>மின்னஞ்சல் - infor@caa.lk<br>இணையத்தளம் - www.caa.lk<br>தபால் முகவரி - த.பெ. இல. 535, கொழும்பு<br>தபால் தந்தி முகவரி - AIRCIVIL<br>AFTN முகவரி - VCCCYAYX |
| கிளை அலுவலகம் | - | இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை,<br>மினுவாங்கொட வீதி, கட்டுநாயக்க.<br>தொலைபேசி - 94-11-2251076 |
| உப அலுவலகங்கள் | - | வான்தகைமை உப அலுவலகம்,<br>- இலங்கை சிவில்விமானப் போக்குவரத்து அதிகாரசபை,<br>பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கொழும்பு<br>கட்டுநாயக்க.<br>தொலைபேசி - 94-11-2252269<br>மின்னஞ்சல் - aidbcaa@caa.lk<br><br>விமானதகைமை உப அலுவலகம்,<br>இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை,<br>கொழும்பு விமான நிலையம்,<br>இரத்மலானை.<br>தொலைபேசி - 94-11-3135828<br>தொலைநகல் - 94-11-2635756 |
| கணக்காய்வாளர் | - | இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின்<br>கணக்காய்வாளர் நாயகம். |
| சட்டத்தரணிகள் | - | இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் சட்டமா<br>அதிபர் |
| வங்கியாளர் | - | இலங்கை வங்கி |
| காப்புறுதியாளர் | - | வ/ப இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்<br>வ/ப செலிங்கோ காப்புறுதிக் கம்பனி |

# தலைவரின் அறிக்கை

வான் போக்குவரத்துத் துறையானது இலங்கையிலிருந்தும் மற்றும் இலங்கையை இலக்காகக் கொண்டதுமான பயணிகள் மற்றும் சரக்கு வானூர்திகளின் நகர்வுகளில் அதிகரிப்பொன்றுடன் கூடியதாக 2013 ஆண்டு காலப்பகுதியானது எளிதில் விளங்கக் கூடிய முழுமையிலும் வளர்ச்சியொன்றை அனுபவத்திற் கொண்டுள்ளது.

2013 காலப்பகுதியில் வான் போக்குவரத்துக் கைத்தொழிலில் மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தின் அறிமுகமானது மற்றுமொரு மைல் கல்லாக காணப்படுகின்றது.

இலங்கையினுள்ளும் இலங்கைக்கு வெளியிலும் வான் மூலமான கிடைப்பனவுத் தன்மையானது ஏற்கனவேயுள்ள இருதரப்பு வான் வேலைகள் ஒப்பந்தங்களின் பரப்பெல்லையை மீளாய்விற்கு உட்படுத்துவதன் மூலமோ, குறிப்பிட்ட எண்ணிக்கையுடைய நாடுகள் புதிய வான் சேவைகள் ஒப்பந்தங்களினுள் பிரவேசித்தலினூடாகவோ மேலும் விரிவாக்கஞ் செய்யப்பட்டது.

சில விமான சேவைகள் குறுகிய கால இடைவெளியொன்றின் பின்னர் கொழும்புக்காக தமது செயற்பாடுகளை மீள ஆரம்பித்த அதேவேளை அனேகமான புதிய முன்னணி வெளிநாட்டு விமான சேவைகள் மீளாய்விற்கு உட்படுத்தப்பட்ட வருட காலப்பகுதியில் இலங்கைக்கான செயற்பாடுகளை ஆரம்பித்திருந்தன. பிரிட்டிஷ் எயார்வேய்ஸ் பதினைந்து ஆண்டுகளின் பின்னர் கேற்விக் இலிருந்து இலங்கைக்கு ஏப்ரல் 2014 இல் தனது செயற்பாடுகளை மீள ஆரம்பித்துள்ளது. துருக்கி எயார்வேய்ஸ் ஸ்ரான்புளிலிருந்து ஜனவரி 2013 இல் தனது செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளது. இவ் இரு ஐரோப்பிய விமான சேவைகளினதும் ஆரம்பமானது இலங்கையின் விமானப் போக்குவரத்துச் சந்தையில் நம்பகத்தன்மை மிக்க விமான சேவைகள் உள்ளடங்கியுள்ளமையை வெளிப்படுத்துகின்றது.

ஆசியாவின் முன்னணிப் பாதீட்டு செயற்பாட்டாளரான எயார் ஏசியா எக்ஸ் இலங்கையின் விமானப் போக்குவரத்து மற்றும் பொழுதுபோக்குக் கைத்தொழில்களை மேலும் மெருகூட்டும் பொருட்டு கோலாலம்பூரிலிருந்து தனது செயற்பாடுகளை செப்டெம்பர் 2013 இல் ஆரம்பித்தது. ஆசியாவின் மற்றுதொரு பிரதான விமானசேவையான கொரியன் எயார்லைன்ஸ் அவர்களது அவர்களது செயற்பாடுகளை சீ/ஒலிலிருந்து கொழும்பிற்கு மார்ச் 2013 இல் ஆரம்பித்துள்ளது. ஜலன்ட் ஏவிஜேஷனுக்கு மேலதிகமாக, மோல்ட்டீவியன் கரியர் தனது செயற்பாடுகளை இலங்கைக்கு மாலைதீவிலிருந்து ஆரம்பித்தது.

மேலே கூறப்பட்ட அட்டவணைப்படுத்தப்பட்ட செயற்பாட்டாளர்களுக்கு மேலதிகமாக, லொட் பொலிஸ் (வோசோவிலிருந்து) ஓர்ன்பேக் (ரான்ஸ்ஏரோ ரவல்ஸ் சேர்வீஸ் மற்றும் பொல்ஸ்கா ரவல்ஸ் சேர்வீஸ் என்பன IATA 2013/2014 கோடைக்கால அட்டவணைப்படுத்தப்படாத சுற்றுலாச் செயற்பாட்டாளர்களாக தமது அட்டவணைப்படுத்தப்படாத செயற்பாடுகளை ஆரம்பித்தன. விம் எயார்லைன்ஸ் ஒன்பது ஆண்டுகளின் பின்னர் IATA 2013/2014 கோடைக்கால அட்டவணைப்படுத்தப்படாத செயற்பாடுகளை இலங்கைக்கு ஆரம்பித்தன.

மீள்பார்வைக்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில், அட்டவணைப்படுத்தப்பட்ட செயற்பாட்டாளர்களான ஹல்ப்ஸ் எயார் (பாரீஸிலிருந்து) மற்றும் ரைகர் எயார்வேய்ஸ் (சிங்கப்பூரிலிருந்து) தமது செயற்பாடுகளை இலங்கைக்கு மேலும் விஸ்த்தரித்திருந்தன. இவ் வருடத்தில் மிஹின் லங்கா தனது பயணிகள் சேவைகளை சீசெல்க்கு (மஹூ) ஆரம்பித்ததுடன், சிறிலங்கன் எயார்லைன்ஸ் ஆனது முன்னைய வருடத்தின் படி தனது செயற்பாட்டு இயலளவினை பேணிவந்துள்ளது.

தற்போதுள்ள சீ.ஏ.ஏ.எஸ்.எல் ஆனது ஒரு பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர், முப்பத்து நான்கு (34) சிரேஷ்ட நிறைவேற்று உத்தியோகத்தர்கள் நாற்பது (40) நிறைவேற்று உத்தியோகத்தர்கள், ஐம்பத்தைந்து (55) சிவில் விமானப் போக்குவரத்து உத்தியோகத்தர்கள், மற்றும் முப்பத்து நான்கு

(34) உதவி ஊழியர்கள் உள்ளடக்கிய அதனது அங்கீகரிக்கப்பட்ட ஆளணியின் நூற்று அறுபத்தேழு (167) பதவி நிலைகளைக் கொண்டுள்ளது. 2013 டிசம்பர் இறுதியில் சீ.ஏ.ஏ.எஸ்.எல் இல் மொத்தமாக நூற்று நாற்பத்தாறு (146) ஆளணியினர் ஊழியர்களாகப் பணியாற்றினர். திறனுள்ள ஆளணியினரை உள்வாங்கல் மற்றும் பயிற்சியளித்தலின் பின்னர் அத்தகைய ஊழியர்களை நிறுவனத்தில் தொடர்ந்து தக்கவைத்திருத்தல் என்பன சீ.ஏ.ஏ.எஸ்.எல் இனால் அதனது நியதிச்சட்ட சோதனை மேற்பார்வைச் செயற்பாடுளின் வெளியீட்டில் எதிர்நோக்கப்பட்ட பிரதான சவால்களில் ஒன்றாகக் காணப்பட்டது.

நிறுவன மறுசீரமைப்புகள் முன்மொழியப்பட்டுள்ளதுடன், நிறுவனத்தின் தொழில்சார் விருத்தி இல்லாது காணப்படும் பிரச்சினையை முடிவிற்குக் கொண்டுவரும் பொருட்டு திறைசேரி அனுமதி பெறப்பட்டது. எனினும் பாதுகாப்பு மற்றும் காப்பு சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள ஊழியர்களின் கொடுப்பனவுப் பொதியானது முக்கியமான விடயமொன்றாகவும் இன்னமும் தீர்க்கப்படவேண்டியதொன்றாகவும் உள்ளது.

சீ.ஏ.ஏ.எஸ்.எல் ஆனது பாதுகாப்பு மற்றும் காப்புச் சோதனை இயலளவுகள் தொடர்பில் அண்மைக் கால அடைதல் மட்டத்தினைப் பேணுவதாக இருப்பதால், இவ்வறிக்கையில் எங்காவது குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனத்தின் கூட்டாண்மை இலக்குகள் மற்றும் தந்திரோபாயங்களைக் கருத்திற் கொண்டு, வெளிநாட்டில் மற்றும் உள்நாட்டில் மிகவும் சிக்கலானதும், கடினமானதும், தொடர்ச்சியாக வளர்ந்து வருவதுமாகவுள்ள சிவில் விமானப் போக்குவரத்தின் பாதுகாப்பு மற்றும் காப்புச் சோதனைகளில் சீ.ஏ.ஏ.எஸ்.எல் இன் அடிப்படைத் தொழிற்பாடுகளை முன்னெடுத்துக் கொள்வதற்கு சக்தி கொண்டதாகவுள்ள தொழில்சார் திறன்மிக்க ஆளணியினரை உருவாக்கிக் கொள்ளும் பொருட்டு முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது.

சீ.ஏ.ஏ.எஸ்.எல் ஆனது அதனது கட்டடத்தொகுதி தொடர்புபட்ட அதனது பிரதான தேவைப்பாட்டினைப் பூர்த்திசெய்து கொள்வதற்காக கருத்தூன்றல் மிக்கதான படிநிலைகளின் தொடர்ச்சியொன்றினை முன்னெடுத்துள்ளது. இதன் பிரகாரமான படிமுறைகள் எம்.ஆர்.ஐ.ஏ இல் அலுவலகமொன்றையும், அலுவலகக் கடமைகளுக்காக எம்.ஆர்.ஐ.ஏ க்கு விஜயம் செய்யும் ஊழியர்களின் பயன்பாட்டிற்கென வீரவிலவில் ஊழியர்களுக்கான விடுதி / பங்களா ஒன்றினையும், மற்றும் பீ(B).ஐ.ஏ. இல் அலுவலகக் கட்டடத்தொகுதிக்கான நிர்மாணத்தை நிர்மாணிப்பதாகவும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும் நான் தலைவராக இருந்து எனது தொழிற்பாடுகளை முன்னெடுக்கும் போது வழங்கப்பட்ட அவர்களது அர்ப்பணிப்பு மற்றும் ஆதரவிற்காக சீ.ஏ.ஏ.எஸ்.எல் இன் பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள், அதன் பணிப்பாளர் நாயகம், மற்றும் அதன் அனைத்து ஊழியர்களுக்கும் எனது நன்றியறிதலை தெரியப்படுத்திக் கொள்ள விரும்புகின்றேன். மேலும், நான் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சின் கௌரவ அமைச்சர் அவர்கள், அதன் செயலாளர் அவர்கள், மற்றும் அதன் ஏனைய உத்தியோகத்தர்களுக்கும் அவர்கள் எனக்களித்த கூட்டிணைவு மற்றும் வழிகாட்டல் என்பனவற்றிற்காக இச் சந்தர்ப்பத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

ஜெனரல் றொஹான் டி. சில்வா தளுவத்த
தலைவர்,
இலங்கை சிவில் சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை

# சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரின் அறிக்கை

## உலகளாவிய நிலை

2013 ஆண்டானது தனியொரு வான் பாதையில், தனியொரு பயணியுடன் 01 ஜனவரி 1914 இல் மேலெழுந்த வர்த்தக சேவைக்கான பறப்பின் நூற்றாண்டின் வருகையுடன் விடைபெற்றது. இன்று அதே வர்த்தக விமானப் போக்குவரத்து வான் மூலமாக 3.3 மில்லியன் மக்களுக்கு மேற்பட்டோரையும், 52 மில்லியனுக்கு மேற்பட்ட சரக்கினையும் காவுகைக்கு உட்படுத்தும் ஏறத்தாழ 40,000 பரந்தளவான வான் பாதைகளைக் கொண்ட பிரமாண்ட வலையமைப்புடன் உலகளாவி பரந்துபட்டுள்ளது.

விமானப் போக்குவரத்தானது உலகளாவிய மொத்த தேசிய உற்பத்தியுடன் (GDP) வலிமைமிக்க இணைப்பொன்றினை கொண்டுள்ள உலக பொருளாதாரத்திற்கு மிக முக்கிய பகுதியொன்றாகக் காணப்படுகின்றது. வான் போக்குவரத்தானது உலக சனத்தொகையில் 57 மில்லியன் உயிர்வாழ் இனத்திற்கு துணைபுரியும் அதே சமயம், பறத்தற் காப்பின் மீதான நம்பிக்கைத்தன்மையினை மிக உயர்ந்த மட்டத்தில் பேணும் அதே வேளை 24 மணித்தியாலத்தினுள் உலகின் எந்தவொரு இரு முனைகளையும் இணைப்பதன் மூலம் விரைவான பூகோள மயமாக்கற் செய்முறைக்கு உதவிபுரிகின்றது.

2013 இல், 2250 கிலோகிராமிற்கு மேற்பட்டதான ஆகக் கூடிய மேலெழுகை நிறையுடன் வானூர்தியிற் பயணம் செய்த 337 பிரயாணிகளின் மரணங்கள் உலகளவில் இடம்பெற்றதாக மொத்தத்தில் 37 மரண சம்பவம் நிகழும் விபத்துக்கள் நிகழ்ந்திருந்தன.

சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பினால் வெளியிடப்பட்ட புள்ளிவிபரங்களின் பிரகாரம், 2013 ஆண்டானது அட்டவணைப்படுத்தப்பட்ட சர்வதேச வான் போக்குவரத்துச் செயற்பாடுகளில் இறப்புக்கள் தொடர்பில் எப்போதும் பதிவு செய்து கொள்ளாத மிகப் பாதுகாப்பான வருடமான அமைந்திருந்தது. முப்பத்து மூன்று (33) மில்லியன்களுக்கு அதிகமான புறப்பாடுகளுடன், அட்டவணைப்படுத்தப்பட்ட சர்வதேச செயற்பாடுகளில் இறப்புக்களின் பதிவானது 2012 உடன் ஒப்பிடுகையில் 53.5% குறைவினை உடையதாக 2013 இல் 173 இற்கு வீழ்ச்சியடைந்துள்ளது. 2013 இல் இடம்பெற்ற ஒன்பது விபத்துக்களில், ஏழு விபத்துக்களானவை தரையிறங்குகை மற்றும் வானூர்தி சுற்றுகையின் போது ஏற்பட்டவையாகும் என்பதுடன், இது தரையிறங்கல் மற்றும் மேலெழுகையில் பாதுகாப்பு முன்னேற்றத்திற்கு அதிக அக்கறை காட்டப்பட வேண்டிய தேவையை உணர்த்துகின்றது.

ICAO - SARPs மற்றும் கைத்தொழில் முதன்மைச் செய்முறைகளுடனான நாடுகளின் இணங்கிச் செயற்படல் நிலைமையினை மதிப்பிட்டுக் கொள்வதற்கு அதனது உறுப்பு நாடுகள் அனைத்தின் மேலும் தொடர்ச்சியான கண்காணிப்பு மதிப்பிடலினை முன்னெடுத்து வரும் ICAO ஆனது 2013 இல் ICAO உறுப்புரிமை நாடுகளால் ICAO பாதுகாப்புக் கண்காணிப்பு முழுமையாக வேண்டப்படும் பகுதிகளின் பயனுறுதிமிக்க அமுலாக்கலின் உலகளாவிய விகிதமானது 61.7% இலும் அதிகரித்துள்ளதென அறிவித்திருந்தது. எனினும், ICAO ஆனது பாதுகாப்பு கரிசனைகளை (SSC) வைத்திருப்பதற்கும், அவ்வாறான நாடொன்று தெற்காசியாவிலும் அமைந்துள்ளது. எஞ்சியவற்றில் அதிகமானவை ஆபிரிக்காக் கண்டத்திலும் அமைந்துள்ள நாடுகளாகும். ஐரோப்பிய விமான சேவைகள் சர்வதேச வான் போக்குவரத்துத் துறையில் 38% ஆன சந்தைப் பங்கினை கொண்டிருந்ததுடன், ஆசியாவிலும் பசுபிக் பிராந்தியத்திலும் உள்ள விமான சேவைகள் சந்தைப் பங்கில் 27% உடன் இரண்டாவது நிலையினை தனதாக்கியுள்ளது.

IATA அறிக்கைகளின் பிரகாரம், உயர்வான எரிபொருட் செலவுகள் மற்றும் ஒப்பீட்டளவில் மெதுவான உலகளாவிய பொருளாதார வளர்ச்சியை வெளிப்படுத்தும் 79.5% அடைவினைக் கொண்ட

விரைவான சராசரி உயர்வுக் காரணியொன்றுடன் 2012 உடன் ஒப்பிடுகையில் சராசரி இருக்கைக் கிலோமீற்றர் ரீதியில் மதிப்பிடப்பட்ட 4.8% அதிகரித்தல் இயலளவுடன் கூடியதான 5.2% ஆல் 2013 இல் பயணிகள் கேள்வியானது அதிகரித்துள்ளது. 2013 இல் எரிபொருள் பரல் ஒன்றின் சராசரி விலையானது 124 ஐக்கிய அமெரிக்க டொலர்களாகக் காணப்பட்டது.

குறைந்த செலவுக் காவுனர்களுக்கான (LCC) கிடைக்கக் கூடியதான இருக்கைக் கிலோமீற்றர் அலகு ஒன்றின் கிரயம் 4.5 முதல் 11 ஐக்கிய அமெரிக்க டொலர்களுக்கிடையில் நிரற்படுத்தப்படும் போது வலைப்பின்னலைக் கொண்ட காவுனர்களின் (Legacy Carriers) கிடைக்கக் கூடியதான இருக்கைக் கிலோமீற்றர்களுக்கான அலகுக் கிரயம் 8 முதல் 15 ஐக்கிய அமெரிக்க சதங்களுக்கிடையில் மாற்றமடைந்தது.

2012 உடன் ஒப்பிடுகையில் 2013 இல் வான்சரக்கின் (சரக்கு தொன் கிலோமீற்றர்கள்-FTK) செயற்றிறனானது 2.6% கொள்ளளவு அதிகரிப்புடனான 1.4% ஆல் அதிகரித்துள்ளது. 2013 இல் அறிக்கையிடப்பட்ட வான் சரக்கேற்றல் காரணியானது 45.3% ஆகக் காணப்பட்டது. பயணிகள் மற்றும் வான்சரக்கு ஆகிய இரண்டுக்குமான கேள்வியில் பலமான வளர்ச்சியானது வளர்ச்சியின் 112% அளவுடனான மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் தீர்மானிக்கப்பட்டது.

புறப்படும் பயணி ஒருவருக்கு 5.94 ஐக்கிய அமெரிக்க டொலர்களான செலவைச் சராசரி இலாபமொன்றிற்கு மாற்றீடு செய்யப்பட்டதுமாக 2013 இன் உலகளாவிய விமான சேவைகள் 19.7 பில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களை தேறிய இலாபமாக உழைத்திருந்தன. IATA அறிக்கைகளின் படி, விமான சேவைக் கைத்தொழிலானது 7% முதல் 9% வரையானதாகக் காணப்படும் மூலதனத்தின் நிறையளித்த சராசரிக் கிரயத்திலும் (WACC) மிகை குறைந்தளவாகக் காணப்படும் 4.1% உடைய முதலிடப்பட்ட மூலதனம் மீதான சராசரித் திரும்பல் ஒன்றினை (ROIC) தற்போது உழைத்துள்ளது. விமான சேவைக் கைத்தொழிலானது ஏதாவது கைத்தொழிலின் ROIC இனது ஆகக் குறைந்த மட்டத்தில் ஒன்றாக அடையப்படுவதுடன், அது அதனது WACC ஐ அடைவதற்கு தொடர்ச்சியாக தவறிவரும் சிலவற்றில் ஒன்றாகவும் காணப்படுகின்றது.

2013 இல், உலகின் பிரதான வானூர்தி உற்பத்தியாளர்கள், 2,800 இற்கும் மேற்பட்ட புதிய வானூர்திகளுக்கான பதிவு செய்யப்பட்ட கட்டளைகளுக்கான பதிவு செய்யப்பட்ட கட்டளைகளுக்காக 1,500 இற்கும் மேற்பட்ட வானூர்திகளை உற்பத்தி செய்து வழங்கியுள்ளது. 2013 வருடமானது அடுத்த சந்ததிக்கான அகன்ற உடலமைப்பை கொண்ட வானூர்தி மற்றும் மீள்-இயந்திர ஒடுங்கிய உடலமைப்பைக் கொண்ட வானூர்திகளின் உற்பத்தி மற்றும் விற்பனைகளில் போ(B)யிங் மற்றும் எயார்பஸ் என்பவற்றிற்கான துரித ஆண்டாகக் காணப்பட்டது. பொம்பேடியர் நிறுவனமானது வாடிக்கையாளருக்கு அதனது தொடர் உற்பத்திகளை வினியோகிப்பதில் நேர்த்தியாகப் பணியாற்றி வந்துள்ளது.

ATR ஆனது தனது அனைத்துப் புதிய 90 இருக்கைகள் சுழற்சி ஒன்றிற்கு இணங்குவதற்கு அதன் பங்குதாரர்களைப் பெற்றுக் கொள்வதற்கு முயற்சிகள் மேற்கொண்டிருந்த அதேவேளை, எம்ப்றையர் ஆனது தனது இரண்டாந் தலைமுறையான E-Jets ஐ விருத்தி செய்வதை ஆரம்பித்திருந்தது. 2013 இல் எயார்பஸ் நிறுவனமானது 25 எண்ணிக்கை கொண்ட A380 வானூர்திகள் உள்ளடங்கலாக 626 வானூர்திகளை வினியோகஞ் செய்திருந்தது. அதேவேளை போ(B)யிங் நிறுவனம் 65 எண்ணிக்கை கொண்ட B 787 றீம்லைனர் உள்ளடங்கலாக 648 வானூர்திகளை வினியோகஞ் செய்திருந்தது. எனினும், இவை வெப்ப ஓடுபாதையின் இரு சம்பவங்கள் உள்ளடங்கலாக அதன் இலத்திரனியல் முறைமை மற்றும் லிதியம்- இரும்பு பற்றரிகளுடன் தொடர்புடைய சம்பவங்கள் காரணமாக B 787 வரிசையின் 65 வானூர்திகள் உலகளாவிய ரீதியில் 100 நாட்கள் வரையில் பறப்பின்றி தரித்து நிற்கும் நிலை தோன்றியது. இலண்டன் ஹொத்றோ (Heathrow) விமான நிலையத்தில் தரித்திருந்த எதியோப்பியன் எயார்லைன்ஸ்க்குச் சொந்தமான 787 வானூர்தியொன்று அதனது அவசர சுழலொலியின் பற்றரியில் ஏற்பட்ட வயர் கசிவு காரணமாக தீப்பற்றிக் கொண்ட போது, யூலை 2013 இல் 787 வானூர்தியின் பிரச்சினைகள் கடினமாக்கப்பட்டன.

ICAO இன் செயற்றிறனான ஈடுபாட்டுடன், விமானப் போக்குவரத்துக் கைத்தொழிலானது சூழலுக்கு காபனீரொட்சைட்டினை வெளியேற்றுவதனைக் குறைப்பதற்கு அதன் வினைத்திறனான முயற்சிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டது. ICAO உலகின் ஏதாவது இரு முனைகளுக்கிடையில் பறத்தலை மேற்கொள்ளும் போது பயணியொருவரால் வெளியேற்றப்படும் காபனீரொட்சைட்டின் அளவினைக் கணிப்பிட்டுக் கொள்வதற்கு பிரயாணியொருவருக்கு உதவும் நோக்கில் கணிப்பொறியொன்றினை அதன் வலையமைப்பில் அறிமுகப்படுத்தியுள்ளது. இக் கணிப்பொறியின் படி, கொழும்பிலிருந்து இலண்டனுக்கு சிக்கன வகுப்பில் பயணிக்கும் பயணியொருவர் போகும் பொழுதும் திரும்பி வரும் பொழுதும் சராசரியாக காபனீரொட்சையிட்டின் ஒரு மெற்றிக்தொன்னை வளியில் சேர்த்துக் கொள்கின்றனர். இத் தொகை அக் குறித்த பயணி வியாபார வகுப்பில் பயணிப்பாரெனின் இரட்டை மடங்காகக் காணப்படும்.

## பிராந்திய நிலைமை

ICAO ஆல் வெளியிடப்பட்ட தரவுகளின் படி, ஆசியா மற்றும் பசுபிக் பிராந்தியங்கள் உலகளாவிய ரீதியில் 31% சந்தைப் பங்குடனான 7.2% இன் வருமான பயணி கிலோமீற்றரில் அளவிடப்படும் மொத்த நெரிசல் வளர்ச்சியினைப் பதிவாக்கியுள்ளது. 2013 இல் கிடைக்கத்தக்க இருக்கை கிலோமீற்றர் அடிப்படையில் மதிப்பிடப்பட்ட ஆசியா மற்றும் பசுபிக் பிராந்தியத்தின் இயலளவு வளர்ச்சியானது 77.2% பயணி ஏறுகைக் காரணியுடன் கூடியதாக 6.7% இனை கொண்டிருந்தது. ICAO இன் படி, ஆசிய மற்றும் பசுபிக் விமான சேவைகள் உலகளாவிய சரக்குத் தொன் கிலோமீற்றரில் அதிகளவிலான பங்கினை வகித்துள்ளது. ஆனால் முழுமையான சரக்கு அளவில் குறைவு ஒன்றினைக் காட்டியது.

சீனா மற்றும் இந்தியா ஆகிய பிராந்தியத்தில் இரண்டு பிரதான பொருளாதார நாடுகளின் விமானப் போக்குவரத்துக் கைத்தொழிற் துறையின் வளர்ச்சி வீதம் வீழ்ச்சியடைந்து காணப்பட்டது. SAARC நாடுகள் வர்த்தக வான் சேவைச் செயற்பாடுகளில் ஈடுபடும் 64 மாதிரிகளைக் கொண்ட 598 வானூர்திகளைக் கொண்டுள்ளது. இவற்றில் அதிகளவிலானவை இந்தியாவில் (402) செயற்படுத்தப்பட்டதுடன், மீதியானவை பங்களாதேஷ் (22), பூட்டான் (02), மாலைதீவு (52), நேபாளம் (33), பாகிஸ்தான் (59), மற்றும் இலங்கை (26) செயற்படுத்தப்படுகின்றது.

31 ஜனவரி 2014 இல் ஐக்கிய அமெரிக்க பெடரல் ஏவிஜேஷன் நிர்வாகத்தினால் தீர்மானிக்கப்பட்டவாறு இந்தியாவின் வகுப்பு 02 இற்கு அதனது சர்வதேச விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு மதிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் (IASA) கீழ் பின்தள்ளப்பட்டதானது இந்தியாவிற்குப் பாரிய பின்னடைவினைத் தோற்றுவித்துள்ளது. இந்திய நாடளாவிய பாதுகாப்பு மேற்பார்வை முறைமை எனும் மதிப்பீடொன்றினை வகுப்பு 02 தரமிடலுக்கான முக்கியத்துவமானது சர்வதேச பாதுகாப்பு நியமங்களுக்கு இணங்கியிருக்கவில்லை. இந்தியா FAA இனால் வகுப்பு 02 ஆக தரப்படுத்தப்பட்ட நாடுகளில் ஒன்றாக அமைகின்றது. இது பங்களாதேஷ், கானா, இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ், மற்றும் நைகாராகுவா என்பனவற்றை உள்ளடக்குகின்றது. நேரடித் தாக்கங்கள் என்பது, இந்தியாவின் விமான சேவைகள் US விமான சேவைகளுடன் பகிர்வு விமான சேவையினையோ அல்லது US இற்கு ஏதாவது புதிய சேவையினையோ ஆரம்பிப்பதற்கு அனுமதியளிக்கப்படுவதில்லை. ஏற்கனவே மேற்கொள்ளப்படும் சேவைகளை மட்டும் முன்னெடுக்க முடியும். 2004 இல் தாராளமயமாக்கல் மற்றும் மிகக் குறைந்த கட்டண விமான சேவைகளின் வருகை என்பனவற்றுடன் இந்திய விமானப் போக்குவரத்துத் துறையில் திருப்புமுனையொன்றைப் பதிவுசெய்திருந்தது. 2013 அளவில் 60 மில்லியனுக்கு விரிவாக்கப்பட்டதாக இருக்கும் நெரிசலின் 11 மில்லியன்கள் விரிவாக்கலைக் கொண்ட எதிர்பாராத வினைவினைக் கொண்டிருந்தது.

## உள்நாட்டு நிலைமை

### கைத்தெழிற் செயற்றிறன்

மஹிந்த சிந்தனையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, இலங்கையின் ஐந்து பிரதான அபிவிருத்தி மையங்களில் ஒன்றாக வான் போக்குவரத்துத் துறையினை விருத்தி பெறச் செய்யும் முன்னோக்கிய பயணத்தில், இலங்கை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 4.3% வளர்ச்சி ஒன்றைக் காட்டி 2013 இல் வர்த்தகப் பறப்புக்களில் 52,194 பறப்பு நகர்வுகளை பதிவாக்கியுள்ளது. இதன்படி, இலங்கையானது வானூர்தி நகர்வுகளை கருத்திற் கொள்ளுமிடத்தில், உலகளாவிய ரீதியில் உள்ள 223 நாடுகளில் 91வது இடத்திற்கு தரப்படுத்தப்பட்டுள்ளது.

2013 இல் BIA உள்ளும் வெளியிலுமான பயணிகள் நகர்வுகளானது 3.2% அதிகரிப்பினைக் காட்டும் 7.3 மில்லியன்களைக் கொண்டுள்ளது. BIA இல் வான் சரக்குகள் தொடர்பில் 191,000 மெற்றிக்தொன்கள் கையாளப்பட்டுள்ளது. இலங்கை அதனது இரண்டு சர்வதேச விமான நிலையங்களுடாகவும் இலங்கையினுள் 99,000 மெற்றிக்தொன்களும், இலங்கைக்கு வெளியில் 138 மெற்றிக்தொன்களும் என மொத்தம் 237 மெற்றிக்தொன் சரக்குகளை வான் மூலமாகக் கையாளல் செய்யப்பட்டன. இது 2012 உடன் ஒப்பிடுகையில் 26% ஆன எதிர்பாராத மொத்த வளர்ச்சியொன்றினை காட்டுகின்றது. இச் செயற்பாட்டில் MRIA மூலம் இலங்கையிலிருந்து 18,000 மெற்றிக்தொன்களையும், இலங்கைக்கு 27,000 மெற்றிக்தொன்களும் பரிமாறலுக்காக கையாளப்பட்டுள்ளது.

2013 இன் இறுதியில், MRIA ஆனது 1,170 சர்வதேசப் பறப்புக்கள் மற்றும் 344 உள்நாட்டுப் பறப்புக்கள் என 1,514 பறப்பு நடவடிக்கைகளைக் கையாண்டுள்ளது. மேலும் MRIA ஆனது 2,201 வருகை மற்றும் 14,755 புறப்பாடுகள் என மொத்தம் 16,956 சர்வதேசப் பயணிகளைக் கையாண்டுள்ளது. இதற்கு மேலதிகமாக, MRIA ஆனது 11,083 வருகை மற்றும் 8,018 புறப்படுகை பயணிகள் என 19,191 உள்நாட்டுப் பயணிகளைக் கையாண்டுள்ளது. 2013 இல் உள்நாட்டு வான்சரக்கில் 20,000 மெற்றிக்தொன்கள் MRIA இல் கையாளப்பட்டன. மேலும் மீள்பார்வைக்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில், சிறிலங்கன் எயார்லைன்ஸ் மற்றும் டுபாய் எயார்லைன்ஸ் என்பன MRIA இற்கு அட்டவணைப்படுத்தப்பட்ட பறப்புக்களை மேற்கொண்டு வருகின்றது.

2013 இறுதிவரையில், இலங்கையானது நாளொன்றிற்கு ஆகக் குறைந்தது நேரடி அட்டவணைப்படுத்தப்பட்ட பறப்பொன்றுடன் 18 நாடுகளுடன் இணைக்கப்பட்டது. அனைத்து அவ்வாறான நாளாந்த சர்வதேசப் பறப்புக்களில், 32% ஆனவை இந்தியாவிற்கும், 13% ஆனவை UAE க்கும், 11% ஆனவை மாலைதீவிற்கும், 7% ஆனவை சிங்கப்பூருக்கும், 7% ஆனவை கட்டாருக்கும், 6% ஆனவை தாய்லாந்திற்கும், எஞ்சிய 6% ஆனவை மலேசியாவிற்குமாக அமைந்திருந்தது. இந் நாடுகளில் இந்தியா, UAE, மாலைதீவு, சிங்கப்பூர், கட்டார், தாய்லாந்து, மற்றும் மலேசியா என்பன நாளொன்றிற்கு 05 நேரடி இணைப்புக்களைக் கொண்டிருந்தது.
2013 முழுமையாகவும், BIA ஆனது புறப்படுகைகளில் அட்டவணைப்படுத்தப்பட்ட நேரத்திலிருந்து 0 முதல் 15 நிமிடங்கள் வரையான தாமதமொன்றினைப் பதிவாக்கியதான உரிய நேரப் புறப்பாடுகளில் 87.67% இற்கு மேலானவற்றைப் பதிவாக்கியுள்ளது.

சிவில் விமானப் போக்குவரத்துக் கௌரவ அமைச்சர், அதன் கௌரவ பிரதி அமைச்சர், செயலாளர், மற்றும் ஏனைய சிலரினை உள்ளடக்கி 24 செப்ரம்பர் முதல் 04 ஒக்டோபர் 2013 வரையில் மொன்றியலில் நடாத்தப்பட்ட சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பின் 38வது மாநாட்டில் பங்குகொண்டிருந்தனர்.

### காப்பு மற்றும் பாதுகாப்பு மேற்பார்வை

CAA இன் அடிப்படை செயற்பாடாக இலங்கையின் வான் போக்குவரத்து சேவைகளின் காப்பு, பாதுகாப்பு, வினைத்திறன், மற்றும் தொடர்ச்சியான செயற்பாடுகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு

கைத்தொழில் மீதான செயற்றிறன் மிக்க மேற்பார்வை நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக அமைகின்றது. இவ் விடயத்தில், CAA ஆனது கீழ் வரிசைப்படுத்தப்பட்டுள்ளவாறு ஈடுபாடுடைய 08 முக்கியத்துவங் கொண்ட பகுதிகளைத் தொடர்ச்சியாக பலப்படுத்திக்கொள்ள வேண்டியிருந்தது.

## அடிப்படைச் சட்டங்கள்

சிவில் விமானப் போக்குவரத்துடன் தொடர்புடைய அடிப்படை விமானப் போக்குவரத்து சட்டங்கள் 2010 இல் சீரமைக்கப்பட்டதிலிருந்து 2013 இல் அச் சட்டங்கள் மீதான சிறிய திருத்தங்கள் தேவைப்பட்டன. அமைச்சவை அங்கீகாரமானது 1999 மொன்றியல் உடன்படிக்கையில் திருத்தங்களை மேற்கொள்ளும் பொருட்டு பெற்றுக்கொள்ளப்பட்டதுடன், வரையப்பட்ட சட்டவாக்கங்களை பாராளுமன்றில் வரைபுச் சட்டங்களாகச் சமர்ப்பிப்பதற்காக சட்டமாதிபரிடமிருந்து கருத்தறியப்பட்ட பின்னர் துறைசார் அமைச்சிற்குக் கையளிக்கப்பட்டது. மேலும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சானது நடமாடும் உபகரணங்களின் பதிவுகள் மீதான Cape town உடன்பாட்டில் திருத்தம் தொடர்பான நன்மைகள் தெளிவூட்டப்பட்டது.

## செயற்பாட்டு ஒழுங்குவிதிகள்

படிமுறைகளானவை ICAO இடமிருந்து தொழிநுட்ப உதவிகளுடன் சிவில் விமானப் போக்குவரத்து செயற்பாடுகளின் முழுமையான பரப்பெல்லையை உள்ளாக்கியதான ஒழுங்குவிதிகளின் கட்டாயமான தொகுப்பொன்றினை வெளியீட்டிற்காக பெறப்பட்டன. இத் திட்டமானது அமைச்சரவை அமைச்சர்கள் மற்றும் ICAO ஆல் அங்கீகரிக்கப்பட்டதுடன், CAA க்கும் ICAO க்கும் இடையில் ஒரு விஷேட உடன்பாட்டின் கீழ் தொழிநுட்ப உதவிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டப்பட்டது.

## நிர்வாக ஏற்பாடுகள்

2013 இல் கௌரவ அமைச்சர் அவர்கள் பணிப்பாளர் சபையினை மீள்நிறுவியிருந்தார். இரண்டு புதிய பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் ஏற்கனவே செயற்பட்ட இரண்டு பணிப்பாளர்கள் தமது முறையை நிறைவு செய்ததன் பொருட்டு நியனம் செய்யப்பட்டார்கள். திறைசேரியானது பணிப்பாளர் சபைக்கு அதனது பிரதிநிதியாக பொது நிதிகள் பணிப்பாளர் நாயகத்தினை நியமித்திருந்தது. பணிப்பாளர் சபையானது கொள்கைகளை மற்றும் இலக்குகளை தீர்மானித்துக் கொள்ளவும் வேலைச் செய்முறையை மேற்பார்வை செய்து கொள்ளவும் நிலையான கால இடைவெளியில் சந்தித்துக் கொண்டது.

CAA முகாமையின் சிரேஷ்ட உறுப்பினர்களை உள்ளடக்கியதாக அபிவிருத்தித் திட்டமிடல் மற்றும் அமுலாக்கற் குழு (DPIG) குறித்த இடைவிடாது சந்திப்புக்களை மேற்கொண்டதுடன், CAA இன் குறிக்கோள் அடைந்து கொள்ளப்படும் நிலமையை மீளாய்வு செய்து கொண்டது. கூட்டாண்மைத்திட்டம், வருடாந்த வேலை நிகழ்ச்சித்திட்டம், பிரதான பயிற்சியளித்தற் திட்டம், வருடாந்த பயிற்சியளித்தல் நிகழ்ச்சித்திட்டம், மற்றும் நிகழ்ச்சித்திட்டப் பாதீடு போன்ற CAA இன் முகாமை மற்றும் தொழிற்பாட்டு ஆவணங்களைத் தேவைக்கேற்ப மேம்படுத்தப்பட்டதுடன் தொடர்புடைய அரசாங்க நிறுவனங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

CAA இன் அடிப்படைத் தொழிற்பாடுகளை செயற்படுத்திக் கொள்வதற்கு தகுதிவாய்ந்த ஆளணியினரின் ஆட்சேர்ப்பு மற்றும் அவர்களைத் தொடர்ந்து வைத்திருத்தல் என்பன CAA முழுமையாக எதிர்நோக்கும் பிரதான சவாலாக அமைந்துள்ளது. இப் பிரச்சினையை முடிவிற்கு கொண்டுவரும் நோக்கில், CAA ஆனது நிறுவனக் கட்டமைப்பின் மறுசீரமைப்பு, பதவி நிலைகள், மற்றும் சம்பள அளவுகள் போன்ற விடயங்களை உள்ளடக்கிய முழுமையான முன்மொழிவொன்றினை சம்பளங்கள் மற்றும் பதவிநிலைகள் ஆணைக்குழுவிற்கு அதனது அனுமதியின் பொருட்டு சமர்ப்பித்திருந்தது. சம்பளங்கள் மற்றும் பதவிநிலைகள் ஆணைக்குழுவானது எதிர்பாராத விதமாக CAASL இன் ஊழியரிடற் பிரச்சினைகளை இனங்கண்டு கொள்ளாத வகையில் சில சீராக்கங்களுடன்

முன்மொழிவினை அனுமதித்திருந்தது.
CAA ஆக, அதற்கு முன்னராக இருந்த DCA 1946 இல் உருவாக்கப்பட்ட போதிலும் கூட, DCA ஆனது 2002 இல் அது இல்லாமற் செய்யப்பட்ட வரையில் அது அதனது தலைமையலுவலகத்தினை நிறுவிக்கொள்வதற்கு உகந்த கட்டடமொன்றினை கொண்டிருக்கவில்லை. தொடர்ச்சியாக DCA மற்றும் CAA இரண்டுமே வாடகைக்கு மேற்பட்ட காலங்களில் வேறுபட்ட கட்டடங்களில் தொழிற்பாடுகளை மேற்கொண்டு வந்துள்ளது. இப் பிரச்சினையை முடிவிற்குக் கொண்டுவரும் பொருட்டு, CAA ஆனது நைகந்த, BIA எனும் இடத்தில் அதற்குச் சொந்தமான நிலப்பரப்பொன்றில் அதனது தலைமையலுவலகத்தினை நிர்மாணிப்பதற்கு தீர்மானமொன்றினை நிறைவேற்றியது. நிபுணர் ஒருவர் தேர்வுசெய்யப்பட்டு, நிர்மாணத்தினை வடிவமைத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் என்பவற்றில் ஈடுபடுத்தப்பட்டார். 2013 இன் இறுதியில், குறித்த நிபுணர் ஆரம்ப கட்ட வடிவமைப்பினை முடிவுறுத்தியிருந்தார் என்பதுடன், 2013 இல் CAA ஆனது தனது அலுவலகப் பயன்பாட்டிற்கென MRIA இல் அதனது அலுவலகமொன்றின் நிர்மாணிப்புப் பணிகளை முடிவுறுத்தியிருந்தது. ஆரம்பப் படிநிலைகளாக, அலுவலக கடமைகளுக்காக MRIA இற்கு வரவழைக்கப்படும் CAA ஊழியர்களின் பயன்பாட்டிற்காக வீரவிலவில் CAA இற்குச் சொந்தமாக்கப்பட்ட நிலப்பரப்பொன்றில் விடுதி மற்றும் சுற்றுலா விடுதியொன்றின் நிர்மாணப்பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

CAA இன் ஊழியர்கள் மற்றும் அலுவலக முகாமையுடன் தொடர்புபட்ட விடயங்களானவை அமைச்சரவை அமைச்சர்களால் அங்கீகரிக்கப்பட்டவாறு ஊழியர் ஒழுங்குகள் மற்றும் நிர்வாகச் செய்முறைக் கைநூலுடன் (SLCAP 5000) உடன்படும் வகையில் நிர்வகிக்கப்படுவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டது. அமைச்சரவையால் எடுக்கப்பட்ட தொடர்ச்சியான தீர்மானமொன்றிற்கமைய, கையேட்டின் உள்ளடக்கங்கள் பொதுத் திறைசேரியால் தலைமை வகிக்கப்படும் சிரேஷ்ட அதிகாரிகளின் குழு ஒன்றால் மீளாய்விற்கு உட்படுத்தப்பட வேண்டும். CAA ஆனது முன்மொழியப்பட்ட நிர்வாக சீரமைப்பு உள்ளடங்கலான மீளாய்வுகளையும் உள்ளடக்கியதாக மீளாய்வு செய்யப்பட்ட கைநூலானது இக் குழுவின் பரிசீலனைக்காக சமர்ப்பித்துள்ளதுடன், இக் குழுவின் வேலைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. திறைசேரியானது மீளாய்வு செய்யப்பட்ட கைநூலினை அமைச்சரவையால் அங்கீகரிக்கப்படும் வரை SLCAP 5000 இல் ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளனவற்றின் பயன்பாட்டிற்கான அனுமதியினை வழங்கியுள்ளது.

## மனிதவளமும் பயிற்சியளித்தலும்

நிலமை, பரப்பெல்லை, பொறுப்புக்கூறலின் அளவு மற்றும் செயற்படுத்தப்படவேண்டிய தொடர்புபட்ட நியதிச் சட்ட சேவைகளின் ஈடுபாடு போன்றனவற்றில், CAA ஆனது அதன் அனுமதிக்கப்பட்ட 167 பதவி நிலைகளில் அதிகளவிலானவற்றை (77) நிறைவேற்றுத் தரத்தில் அமைந்த ஊழியர்களாகக் கொண்டிருக்கவேண்டியுள்ளது. தொழிநுட்பப் பதவி நிலைகளில் சில நிலைகளை வழங்கப்படும் சம்பளத்திற்கான பொருத்தமான ஆளணியினரை அடையாளங்கண்டு கொள்வதிலுள்ள இயலாமை காரணமாக நிரப்ப முடியாதுள்ளது. இதன் தொடர்ச்சியாக சில முக்கிய நிலைகள் சேவையின் நெருக்கடி நிலையினை தீர்த்துக் கொள்வதற்கு பேரம் பேசப்பட்ட சம்பளத்தில் ஒப்பந்த அடிப்படையில் ஆளணியினரைப் பெற்று நிரப்பப்பட்டுள்ளது.

மொத்தமாக 98 ஆளணியினர் 26 மாநாடுகள், 10 சோதனைகள், 30 கூட்டங்கள், 05 கருத்தரங்குகள், 18 பயிற்சிகள், மற்றும் 09 வேலைப் பட்டறைகள் என்பனவற்றினை உள்ளடக்கிய வேறுபட்ட வெளிநாட்டு செயற்பாடுகளில் பங்கு கொண்டுள்ளனர்.

## வழிகாட்டல் ஆவணங்கள்

CAA ஆனது அதனது ஊழியர்கள் மட்டுமல்லாது கைதொழில் ஆளணியினரின் வழிகாட்டலுக்காக செய்முறைகளிற் சில புதிய கையேடுகளை வழங்கியிருந்தது. ஏற்கனவேயுள்ள கையேடுகளிற் சில மீளாய்விற்கு உட்படுத்தப்பட்டதுடன் அவை தரமுயர்த்தப்பட்டன.

## சான்றுப்படுத்தற் கடமைகள்

வான் சேவைகளின் காப்பு, பாதுகாப்பு, வினைத்திறன், சீரான செயற்பாடுகளானது சர்வதேச சட்டங்கள் மற்றும் முதன்மையான கைத்தொழிற் செயலாற்றல்கள் மூலம் துணைப்படுத்தப்பட்ட பிரத்தியேக சட்டத் தேவைப்பாடுகளுடன் இணைந்த வகையில் செயற்பாட்டாளர்களது இணங்கியொழுகும் தன்மை மற்றும் அவர்களது செயற்பாட்டு ஆளணியினரில் அடிப்படையிற் தங்கியுள்ளது. இது கட்டாயமானதும் முறைசார்ந்ததுமாக சான்றுப்படுத்தற் செய்முறையொன்றிற்கு சிவில் விமானப் போக்குவரத்தின் காப்பு மற்றும் பாதுகாப்புடன் மிக நெருங்கிய விடயங்களில் ஈடுபட்டுள்ள துறைசார் ஆளணியினர் மற்றும் நிபுணர்களின் மூலம் இனங்காணப்படுகின்றன.

MRIA இன் சான்றுப்படுத்தலானது முதற் காலாண்டு வேலைத்திட்டத்தின் முக்கிய விடயமாக ஒதுக்கீடு செய்யப்பட்டது. தொடர்ச்சியான கூட்டங்கள், விஜயங்கள், மற்றும் சோதனைகளுடன் கூடியதான தேவையான செயற்பாட்டு முறைமைகளை உருவாக்கிக் கொள்வதற்கு விமானத்தளச் செயற்பாட்டாளர்களை வழிப்படுத்துதல் மற்றும் உதவியளித்தலின் பின்னர், இறுதியான நியதிச்சட்ட ஆய்வானது MRIA இன் சான்றுப்படுத்தலுக்காக மேற்கொள்ளப்பட்டது. மேலும், சான்றுப்படுத்தலுக்குப் பின்னரான ஆய்வானது முன்னைய ஆய்வின் போது அடையாளங்காணப்பட்ட குறிப்பிட்ட குறைபாடுகளின் திருத்தியமைக்கப்பட்டமையைப் பரிசீலித்துக் கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்டது. இதற்கு மேலாக CAA ஆனது குறித்த விமான நிலையம் செயற்படுத்தப்படுவதற்கு முன்னர் அதன் செயற்பாட்டு ஆயத்த நிலையின் நிலமையினை மதிப்பிட்டுக் கொண்டது. 2013 இல் CAA ஆல் சான்றுப்படுத்தப்பட்ட நிறுவனங்கள் பற்றிய விபரங்கள் இவ் அறிக்கையில் வேண்டப்படுமிடத்திற் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சோதனை நடவடிக்கைகள்

சான்றுப்படுத்தற் தருணத்தில் சான்றுப்படுத்தப்பட்ட செயற்பாட்டாளர்கள் மற்றும் ஆளணியினர் மீது பிரயோகிக்கப்பட்ட ஆரம்ப நிபந்தனைகள் மற்றும் தேவைப்பாடுகளுக்கு அவர்களின் தொடர்ச்சியான உறுதிப்படுத்தல்களை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு, ஒழுங்கான சோதனை உயிர்நாடியாக விளங்குகின்றது. இவ் விடயத்தில் CAA ஆனது வருடாந்த சோதனைத் திட்டமொன்றின் கீழ், சான்றுப்படுத்தப்பட்ட செயற்பாட்டாளர்கள் மீது ஒழுங்கான சோதனையொன்றினை முன்னெடுத்தது. ஒவ்வொரு பகுதியினதும் சோதனைத் திட்டத்தின் கீழ், CAA இன் அவ்வாறான பகுதிகள் மூலம் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளின் விபரங்கள் இவ் அறிக்கையில் வேண்டப்படுமிடத்திற் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஒழுக்காற்று நடவடிக்கைகள்


பாதுகாப்பு மேற்பார்வை முறைமையின் பயனுறுதித்தன்மையானது பிரயோகத் தேவைப்பாடுகளிலிருந்து அடையாளங்காணப்பட்ட முரண்பாடுகளுக்கான ஒழுக்காற்றுச் செயற்பாடுகளின் பயனுறுதித்தன்மையின் மீதான அடிப்படையிற் தங்கியுள்ளது. இவ் இலக்கினை மனதிற் கொண்டு, CAA இன் ஒழுக்காற்று கொள்கையானது உள்வாங்கப்பட்டுள்ளது. பிழைகள் மற்றும் பிரதிகூலங்களைத் தவிர்ப்பதற்காக, CAA ஆனது அவ்வாறான நிகழ்வுகளின் தவிர்த்தலுக்காக கண்டுபிடிப்பு விடயங்களில் உடனடி ஈடுபாடுடைய பகுதியினருடன் வேலைசெய்யும் தேவைப்பாடுகளின் தெரிந்துகொள்ளப்பட்ட மீறுதல்களுக்காக, CAA ஆனது வேறுபட்ட நடவடிக்கைகளை அமுலாக்கும்.

மேலும் CAA ஆனது விமானப் போக்குவரத்திற்கான எதிர்கால மனிதவலுத் தேவையினை விருத்தி செய்வதற்கான திட்டமொன்றின் மீது கவனம் செலுத்தியுள்ளது. இதன் முன்னோக்கியதான பயணமொன்றாக, CAA ஆனது விமானப் போக்குவரத்துத் துறையில் பாடசாலைச் சிறார்களின் அறிவாற்றலை மேம்படுத்தும் பொருட்டு, சிவில் விமானப் போக்குவரத்து மற்றும் கல்விக் குழு (CADEC) என்பதனை தாபித்துள்ளது. இவ் வருடத்தில் 16 விமானப் போக்குவரத்து விழிப்புணர்வுத் திட்டங்கள் பாடசாலைகளில் முன்னெடுக்கப்பட்டன. விமானப் போக்குவரத்துத் துறையில் பாடசாலைச்

சிறார்களின் அறிவாற்றலை மேம்படுத்திக் கொள்ளும் நோக்குடன், CAA ஆல் வெளியீடு செய்யப்படும் காலாண்டு கல்விச் சஞ்சிகையான “குவான்ஷர” சாதாரண கல்விப் பொதுத்தராதர உயர்தர வகுப்புக்களை முன்னெடுக்கும் 3100 பாடசாலைகளுக்கு இலவச அடிப்படையில் வினியோகிக்கப்பட்டு வருகின்றது.

இந்த அலுவலகத்தில் நான் எனது செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு தமது உதவிகள் மற்றும் ஆதரவினை வழங்கியதற்காக சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சின் கௌரவ அமைச்சர், செயலாளர், மற்றும் அதன் ஊழியர்களுக்கும் இச் சந்தர்ப்பத்தில் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

மேலும், எனது தொழிற்பாடுகளில் உதவிபுரிந்த மற்றும் வழிப்படுத்திய சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் தலைவர், உபதலைவர், மற்றும் அதன் உறுப்பினர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். இறுதியாக தமது கடமைகளை வினைத்திறனுடன் முன்னெடுத்தமைக்காக, உயர்ந்தளவு ஊக்குவிக்கப்பட்ட, ஒழுக்கப்படுத்தப்பட்ட, மற்றும் நம்பகத்தன்மை மிக்க சீ.ஏ,ஏ இன் ஊழியர்களுக்கு இச் சந்தர்ப்பத்தில் நன்றியை கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.



எச்.எம்.சீ.நிமல்சிறி
சிவில் விமான போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகம் மற்றும்
பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்.

# பக்கத்தோற்றம்

## பக்கத்தோற்றம்

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையானது 2002 இன் 34 ஆம் இலக்க சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் 27 டிசம்பர் 2002 இல் தாபிக்கப்பட்டதுடன், இது இலங்கை ஜனநாயக சோசலிஷக் குடியரசின் அரசியல் யாப்பின் 154 வது வாசகத்திற்கமைய கணக்குகளின் கணக்காய்வு நோக்கங்களுக்காக நியதிச் சட்ட நிறுவனமாகக் கருதப்படுகின்றது.

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் பிரதான தொழிற்பாடு என்பது காப்பு, பாதுகாப்பு, வினைத்திறன், மற்றும் தொடர்ச்சித்தன்மை என்பனவற்றை சிவில் விமானப் போக்குவரத்தில் ஒழுங்கு செய்தலாக இருப்பதுடன், இலங்கைப் பிரஜைகளின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தி, அதன் தேசிய பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு பிரதான பங்காளியாக சிவில் விமானப் போக்குவரத்துத் துறையினை வழிப்படுத்தும் அதேவேளை 2002 இன் 34 ஆம் இலக்க இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைச் சட்டம் மற்றும் 2010 இன் 14 ஆம் இலக்க சிவில் விமானப் போக்குவரத்துச் சட்டத்தின் சட்ட ஏற்பாடுகளின் கீழ், சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பால் (ICAO) ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச நியமங்கள் மற்றும் முன்மொழியப்பட்ட பரிந்துரைகளின் பிரயோகத்துடன் இணங்குதலில் சூழல் மீதான அதன் தாக்கத்தையும் ஒழுங்கு செய்வதுமாக அமைகின்றது.

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை எட்டு (08) உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. அவர்களில் ஐவர் (05) சிவில் விமானப் போக்குவரத்துத் துறைக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரால் நியமனம் பெறுகின்றனர். பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், நிதித் துறைக்குப் பொறுப்பான அமைச்சரின் பிரதிநிதியொருவர், மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து பணிப்பாளர் நாயகம் என்போர் இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை பதவிவழி நியமனம் பெற்ற ஏனைய மூன்று உறுப்பினர்களாகக் காணப்படுகின்றனர். இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் தலைவர் மற்றும் உபதலைவர் என்போர் இலங்கையில் சிவில் விமானப் போக்குவரத்துத்துறைக்கு பொறுப்பான கௌரவ அமைச்சர் அவர்களால் நியமிக்கப்படுகின்றனர். அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட சிவில் விமானப் போக்குவரத்து பணிப்பாளர் நாயகம் அவர்கள் சட்டத்தால் CAASL இன் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தராகத் தொழிற்படுகின்றார்.

நியமனம் பெற்ற உறுப்பினரது உத்தியோக பூர்வ காலமானது நியமனம் வழங்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று வருடங்களாகும்.

அதிகாரசபையானது தற்போது சிவில் விமானப் போக்குவரத்துத் துறைக்குப் பொறுப்பாகவுள்ள சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சரின் வழிகாட்டல் மற்றும் கட்டுப்பாட்டின் கீழ் தொழிற்படுவதாக அமையும்.

## இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் உறுப்பினர்கள்

### அமைச்சரினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்

ஜெனரல் றொஹான் டி. சில்வா தளுவத்த (தலைவர்)
திரு.ஜே.எம்.எஸ்.டப்ள்யூ.ஜயசுந்தர (உபதலைவர்)
திரு.ஷஹி அலீப் (உறுப்பினர்)
திரு.கே.ஜே.வி.என். ஜெயவர்த்ன (உறுப்பினர்) – 13 மே 2013 வரை
திரு.டினேஷ் ஹாலகே (உறுப்பினர்) – 13 மே 2013 வரை
திரு.எல்.டி.எஸ்.பாலசூரிய (உறுப்பினர்) – 01 செப்ரெம்பர் 2013 இல் இருந்து
திரு.ஏ.டப்ள்யூ.சைடியுல் அமீன் (உறுப்பினர்) – 01 செப்ரெம்பர் 2013 இல் இருந்து

பதவி வழி நியமனம் பெற்ற உறுப்பினர்கள்
பாதுகாப்புச் செயலாளர் (திரு. கோட்டாபேய ராஜபக்ஷ)
நிதியமைச்சின் பிரதிநிதி (திரு.டப்ள்யூ.ஜ.திசேரா) – 16 ஒக்டோபர் 2013 வரை
திரு.பீ.அல்கம – பணிப்பாளர் நாயகம், பொது நிதி – 17 ஒக்டோபர் 2013 இல் இருந்து
சிவில் விமானப் போக்குவரத்து பணிப்பாளர் நாயகம் (திரு. எச்.எம்.சீ.நிமல்சிறி)

## தலைவர், ஜெனரல் றொஹன் டி.சில்வா தளுவத்த, WWV, RWP, RSP, VSV, USP, LOM, ndc, psc



தலைவர் ஜெனரல் றொஹன் டி.சில்வா தளுவத்த, WWV, RWP, RSP, VSV, USP, LOM, ndc, psc அவர்கள் தனது ஆரம்பக் கல்வியினை பன்னிபிட்டிய தர்மபாலா வித்தியாலயத்தில் பெற்றிருந்ததுடன் அவர் தனது இரண்டாம் நிலைக் கல்வியினை கொழும்பு ஆனந்தாக் கல்லூரியில் பெற்றிருந்தார். அவர் இங்கு கல்வியிலும், விளையாட்டிலும் திறமை காட்டினார்.

இவர் இலங்கைத் தரைப்படையில் 1961 இல் இணைந்து கொண்டார் என்பதுடன் அவர் தமது உத்தியோகத்தர் கடெற் (Cadet) பயிற்சியின் பொருட்டு றோயல் இராணுவ அக்கடமிக்கும் மற்றும் இங்கிலாந்து சன்ட்கியூஸ்ற் இற்கும் அனுப்பிவைக்கப்பட்டார். இலங்கை இராணுவப் பயிற்சி மாணவர்களில் முதலாவதாக வெளியேறிய இவர், கவசப் படைப்பிரிவில் 2வது லெப்டினன்ற் பதவிக்கு அமர்த்தப்பட்டார். மேலும் இவர் தனது இளம் உத்தியோகத்தர் பயற்சியின் பொருட்டு இங்கிலாந்து - பௌங்ரன் (Bowington, UK) இல் உள்ள றோயல் கவசப் படைப்பிரிவு நிலையத்திற்கு அனுப்பப்பட்டார். அதன் பின்னர் அவர் இந்தியா - வெலிங்ரனில் புகழ் பெற்ற உத்தியோகத்தர் கல்லூரிக் கற்கைநெறி, இந்தியா-புதுடெல்லியில் தேசிய பாதுகாப்புக் கற்கை நெறி உள்ளடங்கிய பல கற்கை நெறிகளைப் பெற்றார். இவரது 41 வருட கால முன்னுதாரணம் மிக்க சேவைக் காலத்தில் இவர் பல்துறை செயற்பாட்டுகள் கொமாண்டர் (கட்டளை அதிகாரி), ஊழியர் பிரதானி, பகுதி கொமாண்டர், பிரிகேட் கொமாண்டர் மற்றும் இராணுவ பயற்சிக் கல்லூரி கட்டளை அதிகாரி என பல முக்கிய கட்டளையிடல், உத்தியோக, மற்றும் கற்கைநெறி நியமனங்களை தன்னகத்தே கொண்டிருந்தார்.

மேலும் இவர் வடக்கு மற்றும் கிழக்கு அனைத்துச் செயற்பாடுகளுக்குமான கட்டளை அதிகாரியாக பணிபுரிந்த வேளை 1995 இல் யாழ்ப்பாணம் குடாநாடு விடுவிக்கப்படுவதற்கான சூரியக்கதிர் நடவடிக்கை எனப்படும் மிக முக்கிய இராணுவ நடவடிக்கை உள்ளடங்கலாக பல நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தார்.

மேலும் இவர் ஜெனரல் தளுவத்தயாலும் அமெரிக்காவின் பசுபிக் இராணுவ கட்டளை அதிகாரியாலும் இணைந்து நடாத்தப்பட்ட பசுபிக் இராணுவ முகாமைத்துவக் கருத்தரங்கு உள்ளடங்கலாக பல சர்வதேச கருத்தரங்குகளில் பங்குபற்றினார் என்பதுடன், இந் நிகழ்வில் இவருக்கு வெளியார்ந்த சேவைகளின் செயற்பாடுகளில் செயற்பட்டுக்கொண்ட தனிச் சிறப்பு மிக்க செயலாற்றுகைக்காக அமெரிக்க அதிபரால் LEGRON OF MERIT எனும் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.இராணுவ கட்டளை அதிகாரியாக அவரது சேவையின் மகுடத்தினை அடைந்த நிலையில், அவர் 1998 டிசம்பரில் இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்றார். இவரது பெறுமதி மிக்க சேவையை கௌரவிக்கும் பொருட்டு, இவர் ஜெனரல் நிலைக்கு உயர்த்தப்பட்டதுடன், இணைந்த செயற்பாட்டுச் செயலகத்திற்குத் தலைவராக நியமிக்கப்பட்டார். இராணுவம் வன்னி பகுதியை இழந்து கொண்டு வரும் போதும், யாழ்ப்பாணம் குடாநாட்டை இழக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்ட போதும், இவர் பாதுகாப்பு செயலணிக்கான பிரதானியாக நியமிக்கப்பட்டதுடன், நிலமையினைக் கட்டுப்பாட்டினுள் கொண்டு வரும் பொருட்டு யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்டார். வெற்றிகரமாக இலக்கு முடிவுக்கு கொண்டுவரப்பட்டதன் பொருட்டு, இவர் இறுதியாக 2002 இல் இராணுவ சேவையிலிருந்து ஓய்வு பெற்றார். அதன் பின்னர், அவர் பிரேஸிலுக்கு தூதுவராக நியமனம் பெற்றார். அதுவரை அந் நாட்டில் தூதுவராலயமொன்று இல்லாததன் பொருட்டு, இவரே தூதுவராலயமொன்றை அங்கு நிறுவவேண்டியிருந்தது. தூதுவராக இருந்த அவரது கடமைப் பயண முடிவில் இலங்கைக்கும் பிரேஸிலுக்கும் இடையிலான சிறந்த தொடர் பின் முன்னோடியில் அவரது வெளியார்ந்த பங்களிப்பினை இனங்கண்டு பிரெஸில் ஜனாதிபதியினால் GRAND CROSS OF THE

NATIONAL ORDER OF THE SOUTHERN CROSS எனும் வெகுமதியளித்து கௌரவிக்கப்பட்டார். இவர் இலங்கைக்கு திரும்பிய போது 2011 இல் தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையின் தலைவர் மற்றும் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டார். 2012 இல் இவர் இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் தலைவராக நியமிக்கப்பட்டார் மேலும், இவர் கொத்தலாவ பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தில் வேந்தராக நியமிக்கப்பட்டார்.

இவர் ஆர்வம் மற்றும் பல்துறை பயிற்சித் திறன் மிக்க விளையாட்டு வீரனாக இருந்து மெய்வல்லுநர் போட்டிகள், கூடைப்பந்து, கிரிக்கெட், பற்மின்டன் மற்றும் ரெனிஸ் என்பவற்றில் வர்ணங்களை பெற்று வெற்றியீட்டினார். இவர் இருபது வருடங்களாக தேசிய கூடைப்பந்தாட்ட அணியினைப் பிரதிநிதித்துவப்படுத்தியிருந்ததுடன், அவ் அணியின் தலைமைப் பொறுப்பினையும் ஏற்றிருந்தார். மெய்வல்லுநர் போட்டியில் மிக முக்கிய அடைவு மட்டமாக பிரிட்டிஸ் இராணுவ வெற்றி வீரர்கள் நிகழ்வில் மும்மடங்கு பாய்தல் நிகழ்வில் வெற்றியீட்டியதனையும், பிரிட்டிஷ் தேசிய மெய்வன்மைக் கூட்டங்களில், மெய்வன்மையில் பிரிட்டிஷ் இணைந்த சேவைகளில் பிரதிநிதித்துவத்தினைப் பெற்றிருந்தார். இவர் மெய்வன்மையாளருக்கான பிரிட்டிஷ் இணைந்த சேவைகள் வர்ணங்களை வெற்றியீட்டக் கூடியவராகவும் திகழ்ந்தார்.

அவர் தனது சேவைக்காலம் முழுமையிலும், அவர் பொறுப்பேற்றிருந்த ஒவ்வொரு கடமையிலும் தனது முகாமைத்துவ திறனை வெளிக்காட்டியிருந்தார்.

## உபதலைவர்
## திரு.ஜே.எம்.எஸ்.டப்ள்யூ.ஜயசுந்தர



திரு.ஜே.எம்.எஸ்.டப்ள்யூ.ஜயசுந்தர அவர்கள், அவரது ஆரம்பக் கல்வியினை கண்டி தர்மராஜாக் கல்லூரியில் பெற்றுக் கொண்டார் என்பதுடன், இவர் ஒரு விளையாட்டு வீரருமாவார். இவர் 1971 இல் பொலிஸ் திணைக்களத்தில் தன்னை இணைத்துக் கொண்டதுடன், அவரது 37 வருடகால சேவையின் பின்னர் ஒரு பிரதிப் பொலிஸ் மா அதிபராக ஓய்வு பெற்றார். இவர் அவரது முன்னுதாரணம் மிக்க சேவைக் காலத்தில் பயிற்சியின் நிமிர்த்தம் ஜப்பான், மலேசியா, ஸ்கொட்வான்ட் யாட், அமெரிக்க ஐக்கிய இராச்சியம், மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளில் இருந்தார். மேலும் இவர் இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் உதவித் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினராக கடமைகளை ஏற்பதற்கு முன்னர், வரையறுக்கப்பட்ட விமான நிலையம் மற்றும் விமானப் போக்குவரத்து சேவைகள் (இலங்கை) கம்பனியில் விஷேட நடவடிக்கைப் பணிப்பாளராக இருந்தார்.

# உறுப்பினர்கள்

## திரு கோட்டாபேய ராஜபக்ஷ, RWP, RSP
## பாதுகாப்புச் செயலாளர் - பாதுகாப்பு அமைச்சு - (பதவிவழி உறுப்பினர்)



திரு கோட்டாபேய ராஜபக்ஷ RWP,RSP அவர்கள் கொழும்பு ஆனந்தாக் கல்லூரியில் தனது ஆரம்பக் கல்வியினைப் பெற்றார். இவர் தியத்தலாவ இராணுவப் பயிற்சி நிலையத்தில் பயிற்சியினை நிறைவு செய்ததுடன், 26 மே 1972 இல் இவர் இலங்கைத் தரைப்படையின் சமிஞ்ஞைப் பிரிவிற்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டார்.

1974 இல் இலங்கைத் தரைப்படையின் சிங்க படைப்பிரிவிற்கு மாற்றம் செய்யப்பட்டார். இவர் மேலும் 1980 களில் ராஜரட்ட ரைபிள் படைப்பிரிவிலும், 1983 களில் கஜபா படைப்பிரிவிலும் இவர் ஒரு லெப்டினற் கேர்ணல் பதவி நிலையில் 1991 இல் தனது முதிர்வு பெறாத ஓய்வுறுத்தற் காலம் வரை பணிபுரிந்தார். திரு ராஜபக்ஷ அவர்களின் முன்னுதாரணம்மிக்க இராணுவ சேவைக் காலத்தில், அமெரிக்க ஐக்கிய இராச்சியத்தில் தரைப்படை வீரருக்கான உயர்நிலைப் பாடநெறி மற்றும் இந்தியாவின் வெலிங்டனிலுள்ள பாதுகாப்பு சேவைகள் ஆளணியினர் கல்லூரி உள்ளடங்கலாக மிக முக்கியம் மிக்க பயிற்சி நெறிகளைத் தொடர்ந்தார்.

திரு ராஜபக்ஷ அவர்கள் வடமராட்சி நடவடிக்கைகளில் கலந்து கொண்ட ஒரு இராணுவவீரராவர். இவர் இந்த நடவடிக்கைகளின் போது கஜபா ரெஜின்மென்ற் முதலாவது படைப்பிரிவிற்குக் கட்டளையிடும் அதிகாரியாகத் தொழிற்பட்டார்.

இவர் 1990 இல் முப்படைப் பலம் மற்றும் ஜயசக்தி இராணுவ நடவடிக்கைகளின் போது வெற்றிகரமாகத் தனது அதே படைப்பிரிவிற்கு கட்டளையிடும் அதிகாரியாகச் செயற்பட்டார். மேலும் இவர் கொத்தலாவல பாதுகாப்புப் பயிற்சி நிலையத்தின் பிரதிக் கட்டளையதிகாரி எனும் பதவி வகித்ததுடன், இவரது தன்னிகரற்ற சேவையைப் பாராட்டி இவருக்கு ”ரண விக்கிரம” மற்றும் “ரணசூர” பதக்கங்கள் அணிவிக்கப்பட்டார்.

## திரு.எச்.எம்.சீ.நிமல்சிறி

### சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர். (பதவிவழி உறுப்பினர்)



திரு.எச்.எம்.சீ.நிமல்சிறி அவர்கள் 2002 இல் இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை ஏற்படுத்தப்பட்ட காலத்திலிருந்து அதனது பணிப்பாளர் நாயகமாகவும், பிரதான நிறைவேற்று உத்தியோகத்தராகவும் பணியாற்றி வருகின்றார். இவர் 1987 இல் இருந்து சிவில் விமானப் போக்குவரத்துத் திணைக்களத்தில் செயற்பாட்டுகள் பிரிவின் உதவிப் பணிப்பாளராகக் கடமையாற்றி வந்துள்ளதுடன், இவர் இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையில் பலம்மிக்க ஒரு உத்தியோத்தராகச் செயலாற்றி வருகின்றார். திரு.நிமல்சிறி அவர்கள் சிவில் விமானப் போக்குவரத்தின் புதிய சட்டக் கோட்பாட்டு வரைபினைத் தயாரிக்க முன்னோடியாகச் செயற்பட்ட உத்தியோத்தர்களில் ஒருவராவார். இவர் சிவில் விமானப் போக்குவரத்துச் சட்ட வரைபின் அறிமுகத்திற்கும், இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் தோற்றத்திற்கும் வழி சமைத்த முன்னைய சிவில் விமானப் போக்குவரத்துத் திணைக்களத்தின் மறுசீரமைப்பினை அறிமுகப்படுத்தினார்.

இவர் வான் போக்குவரத்து, வான் போக்குவரத்துப் பாதுகாப்பு, வான்செலவு சேவைகள், பாதுகாப்புச் சோதனை, மற்றும் பாதுகாப்பு முகாமைத்துவ முறைமைகள் சம்மந்தமான பலதரப்பட்ட பயிற்சி நெறிகளில் கலந்து கொண்டுள்ளதுடன், சிவில் விமானப் போக்குவரத்துச் சம்மந்தமான பரந்தளவான அறிவு மற்றும் அனுபவத்தைக் கொண்டுள்ளார். இவர் தற்போதைய இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை மற்றும் முன்னைய சிவில் விமானப் போக்குவரத்துத் திணைக்களம் என்பனவற்றைப் பிரதிநிதித்துவம் செய்து வெளிநாடுகளுடன் இருதரப்பு வான் சேவைகள் கலந்துரையாடல்களில் பங்குகொண்டுள்ளதுடன், சிவில் விமானப் போக்குவரத்துத் தொடர்பான வேறுபட்ட பிராந்திய மற்றும் சர்வதேச மாநாடுகளில் பங்குகொண்டுள்ளார். 2007 இல் இவர் இலங்கை அரசாங்கம் இவருக்கு வழங்கிய விடுமுறையொன்றின் கீழ், மூன்று வருடங்கள் சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பின் கீழ் அமுலாக்கப்பட்டு வரும் COSCAP-SA இன் பிராந்திய நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளராக ICAO இல் இரண்டாந் தர நியமனத்தினைப் பெற்றிருந்தார்.

திரு.நிமல்சிறி அவர்கள், கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து விஞ்ஞானமாணி (B.SC) பெற்றிருந்தார் என்பதுடன், அதே பல்கலைக்கழகத்தில் கணணி விஞ்ஞானத்தில் விஞ்ஞான முதுமாணி (M.SC) பட்டத்தினையும் பெற்றிருந்தார். மேலும் இவர் ரஷ்யா அல்லிறோவிஸ்க் இல் தகைமைமிக்க கற்கை நெறியொன்றைத் தொடர்ந்த பின்னர், பறப்பு செயற்பாட்டு உத்தியோகத்தர் அனுமதிப் பத்திரமொன்றையும் பெற்றுக்கொண்டுள்ளார். மேலும் திரு.நிமல்சிறி அவர்கள் விமானப் போக்குவரத்தினை ஒரு பாடவிதானமாகக் கொண்ட போக்குவரத்து மற்றும் உதவிப் போக்குவரத்து முகாமைத்துவத்தினை விஞ்ஞானமாணி விஷேட பாடமாகக் கொண்ட மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் ஒரு வருகை விரிவுரையாளராகக் கடமையாற்றினார்.

திரு.நிமல்சிறி அவர்கள் ஏசியா மற்றும் பசுபிக் வலயத்திலுள்ள நாடுகளின் வான் செலவு விடயங்களின் திட்டமிடல் மற்றும் அமுலாக்கலுக்கென ICAO இனால் ஒழுங்குபடுத்தப்படும் ஏசியா மற்றும் பசுபிக் வான் செலவு திட்டமிடல் மற்றும் அமுலாக்கற் குழு (APANPIRG) இன் இரண்டாவது தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

## திரு.டப்ள்யூ. ஐ.திசேரா

### நிதியமைச்சின் பிரதிநிதி (பதவிவழி உறுப்பினர்) – 16 ஒக்டோபர் 2013 வரை)

திரு. ஐவன் திசேரா அவர்கள் 1982 இல் ஒரு அரச கணக்காளராகத் தனது தொழிலை ஆரம்பித்தார். இவர் 1982 முதல் 1993 வரையான காலப்பகுதியில் பதுளை மாவட்ட செயலகத்தில் ஒரு கணக்காளராகப் பணிபுரிந்தார். பின்னர் 1993 இல் பிரதிப்பணிப்பாளராகத் தரமுயர்வு பெற்ற இவர், தேசிய கணக்குகள் மற்றும் பொதுத் திறைசேரி திணைக்களத்தில் இணைக்கப்பட்டார். திரு திசேரா அவர்கள் கேள்விப் பத்திர முகாமைத்துவத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்டார். 2011 ஆம் ஆண்டு ஜனவரியில் இருந்து நிதித் திட்டமிடல் அமைச்சின் வெளிநாட்டு உதவிகள் மற்றும் பாதீட்டு மேற்பார்வைத் திணைக்களத்தில் மேலதிகப் பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்டுள்ளார்.



## திரு. கே.வி. என். ஜெயவர்த்தன உறுப்பினர்

### 13 மே 2013 வரை



திரு. கே.வி. என். ஜெயவர்த்தன அவர்கள் 1983 இல் இலங்கை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தன்னை ஒரு வழக்கறிஞராக ஈடுபடுத்திக் கொண்டார் என்பதுடன், 1990-1991 கல்வியாண்டில் வான் மற்றும் ஆகாயம் எனும் துறையில் விஷேடத்துவம் கொண்ட பயிற்சி நெறியின் வெற்றிகரமான முடிவில் இலண்டன் பல்கலைக்கழகக் கல்லூரியால் இவருக்குப் பொதுச் சட்டத்துறையில் முதுமாணிப்பட்டம் வழங்கப்பட்டது. திரு. ஜெயவர்த்தன அவர்கள் 1998 ஆம் ஆண்டு முதல் 2005 ஆம் ஆண்டு மே வரையான காலப்பகுதியில் சட்டமா அதிபர் திணைக்களத்தில் வான் சட்ட மேற்பார்வை உத்தியோகத்தராகப் பணிபுரிந்து விமானப் போக்குவரத்துச் சட்டம் சம்மந்தமாக பரந்த அறிவினைக் கொண்டுள்ளார். மேலும் திரு. ஜெயவர்த்தன அவர்கள் இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை சட்டவாக்க வரைபு மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து சட்டவாக்க வரைபு என்பவற்றைத் தயாரிப்பதில் மிக ஈடுபாடு காட்டியது மட்டுமன்றி சிவில் விமானப் போக்குவரத்து திணைக்களத்தில் ஒரு சட்ட ஆலோசகராகத் தொழிற்பட்டார். மேலும் இவர் இலங்கை சார்பாக பல எண்ணிக்கையான இருநாட்டு விமான சேவை ஒப்பந்தங்களை மேற்கொள்வதற்கான பேச்சுவார்த்தைகளில் பங்குகொண்டுள்ளதுடன், இலங்கையைப் பிரதிநிதித்துவம் செய்து இப் பேச்சுகளில் கலந்து கொள்வோருக்கும் சட்ட ஆலோசகராகச் செயற்பட்டுள்ளார்.

## திரு. ஷஹி அலிப்
உறுப்பினர்



திரு. ஷஹி அலிப் அவர்கள் தம்பதெனிய அபிவிருத்தி நிதியத் தலைவராகவும், ஸ்ராஷன் குழுமத்தின் பணிப்பாளராகவும் பணியாற்றுகின்றார். இதற்கு மேலதிகமாக அம்பாந்தோட்டை அபிவிருத்தி நிதியத்தின் நம்பிக்கை முகாமையாளராகவும் பணியாற்றி வருகின்றார்.

## திரு. தினேஷ் காலஹே
உறுப்பினர் - 13 மே 2013 வரை



திரு. தினேஷ் காலஹே அவர்கள் தனது ஆரம்பக் கல்வியினை காலி மஹிந்த கல்லூரியில் கற்றிருந்தார். பின்னர் அவர் மொரட்டுவ பல்கலைக்கழகத்திலிருந்து மின்னியல் மற்றும் தொலைதொடர்பு எந்திரவியலில் ஒரு பட்டத்தினைப் டீ.ளுஉ (Hons) பெற்றுக்கொண்டார். மேலும் இவர் இலங்கை பொறியியல் நிறுவனத்தால் (IESL) இனங்கண்டுகொள்ளப்பட்ட பட்டயம் பெற்ற பொறியியலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## திரு.ஏ.டப்ள்யூ. சைடியுல் அமீன்
உறுப்பினர் - 01 செப்ரெம்பர் 2013 இல் இருந்து



திரு.ஏ.டப்ள்யூ.சைடியுல் அமீன் அவர்கள் தனது ஆரம்பக் கல்வியினை சிலாபம் நஸ்ரியா மத்திய கல்லூரியில் கற்றிருந்ததுடன், அவர் கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீடம் மற்றும் இலங்கைச் சட்டக் கல்லூரி என்பனவற்றில் தனது உயர் கல்விகளை மேற்கொண்டார். திரு. அமீன் அவர்கள் எஸ்.டி.ஆர்.ஜெயரத்ன ஸ்தாபனத்தில் சட்டப் பணிப்பாளராகப் பணியாற்றுவதுடன், சிலாபம் நஸ்ரியா மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் உபதலைவராகவும் செயற்பட்டுவருகின்றார்.

## திரு.எல்.டி.எஸ்.பாலசூரிய

### உறுப்பினர் - 01 செப்ரெம்பர் 2013 இல் இருந்து



திரு.எல்.டி.எஸ்.பாலசூரிய அவர்கள் ஓய்பெற்ற பொறியியலாளர் ஆவார். மேலும், அவர் BOI கம்பனியொன்றான வரையறுக்கப்பட்ட லங்கா கின்றவெயார் (தனியார்) கம்பனியின் ஸ்தாபகத் தலைவருமாவார். திரு.எல்.டி.எஸ்.பாலசூரிய அவர்கள் தேங்காய் கொப்ரா மற்றும் அதனோடிணைந்த உற்பத்திகளின் ஏற்றுமதியுடன் தொடர்புபட்ட கம்பனியொன்றான ஷம்சிகோ ஏற்றுமதியாளர்களின் முகாமைப் பணிப்பாளரும் ஆவார்.

## திரு.பிரியங்க அல்கம

### நிதியமைச்சின் பிரதிநிதி (பதவிவழி உறுப்பினர்) – 17 ஒக்டோபர் 2013 இல் இருந்து



திரு.பிரியங்க அல்கம அவர்கள் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் பொது நிதிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஆவார். அவர் தேசிய பாதீட்டுத் திணைக்களத்தில் பணிப்பாளர் மற்றும் பிரதிப் பணிப்பாளராகவும் (2000-2007), பொது நிறுவனங்கள் திணைக்களப் பணிப்பாளராகவும் (2012), குயின்ஸ்லான்ட் அரசாங்கத்தின் பங்குச் சேவைகளின் சிரேஷ்ட நிதி அலுவலராகவும் (2008-2012) என வேறுபட்ட இயலளவுகளுடன் பணியாற்றியுள்ளார்.

இவர் சிங்கப்பூர் நன்யாங் தொழிநுட்பப் பல்கலைக்கழகத்திலும், ஐக்கிய அமெரிக்காவின் MIT பொஸ்ரன் பல்கலைக்கழகத்திலும் வியாபார நிர்வாக முதுமாணிப்பட்டத்தை மேற்கொண்டிருந்தார் என்பதுடன், அவுஸ்ரேலியா ஊீயு இன் கனிஷ்ட உறுப்பினருமாவார்.

திரு.பிரியங்க அல்கம அவர்கள் சுதந்திரத்தன்மையற்ற, நிறைவேற்றுத் தரமற்ற பணிப்பாளராக திறைசேரியின் செயலாளரால் CAA இன் பணிப்பாளர் சபைக்கு 08 ஒக்டோபர் 2013 இலிருந்து நியமிக்கப்பட்டார்.

# இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் ஆளுகையும் பொறுப்புடைமையும்

## அதிகாரசபையின் பொறுப்பு

அதிகாரசபையின் பிரதான பொறுப்புகள், ஆனால் அவற்றுடன் மட்டும் வரையறுக்கப்பட்டதாக அன்றி, பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது.

- நாட்டின் சிவில் விமானப் போக்குவரத்துத்துறையினை திட்டமிடுதலில் கௌரவ அமைச்சர் மற்றும் ஏனைய அரசாங்கப் பங்காளர்களின் கருத்துக்கள் பிரதிபலித்துக் காட்டப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக உரிய தரப்பினருடன் கருத்துப் பரிமாறிக் கொள்ளல்.
- உரிய நோக்கினை நிறைவேற்றுவதற்காக சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகம் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தருக்குப் பொறுப்புக்களை ஒப்படைத்தல்.
- சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் கடமைகள் மற்றும் பணிகளை மேற்கொள்ளக் கூடியதாக தகைமைகள் மற்றும் தேர்ச்சி கொண்ட ஊழியர்களைப் பணிக்கு அமர்த்துதல் மற்றும் சம்பளம் உள்ளடங்கிய அவர்களது சேவை நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளைத் தீர்மானித்தல்.
- CAA இன் கூட்டாண்மைத் திட்டத்தினை அமுலாக்குவதனை நோக்கிய திட்டங்கள் மற்றும் செயலாற்கை தொடர்பாக அமைச்சருக்குப் பொறுப்புக்கூறல்.
- சிவில் விமான போக்குவரத்துத் துறையின் கொள்கை மற்றும் இலக்குகளைத் தாபித்தல் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் நோக்கங்களை அடைவதற்காக ஒழுங்கமைப்பு செயற்சாதனை மேற்பார்வைகளை மேற்கொள்ளல்.
- உள்ளக நிர்வாக முறைகள் முன்னெடுக்கப்படுவதனை உறுதிப்படுத்தல்.

## நிறுவனக் கட்டமைப்பு

அதிகாரசபையானது கொள்கை சம்மந்தமான விடயங்களைக் கையாள்வதற்கென பரந்த அறிவொன்றைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடன், வியாபாரம், சட்டம், மற்றும் விமானப் போக்குவரத்துக் கைத்தொழில் போன்றனவற்றில் பரந்தளவான திறன்கள் மற்றும் அனுபவங்களுடைய அங்கத்தவர்களை தன்னகத்தே கொண்டதாக உருவாக்கப்பட்டுள்ளது. இவர்கள் நியமனம் பெறுமிடத்து, அனைத்து அங்கத்தவர்களும் சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைக்கு தங்களது முழுமையான பங்களிப்புடன், செயற்பட வேண்டுமெனவும், அதனது தீர்மானங்கள் அவர்களது ஒருமித்த தன்மையால் பெறப்பட வேண்டுமெனவும், அதிகாரசபைக்கு அப்பால் அங்கத்தவர்களுக்கு எந்தவாறானதொரு ஆழுமையும் இருத்தலாகாது எனவும் வேண்டப்படுகின்றது.

## அதிகாரசபையின் நிறைவேற்று அதிகாரம்

2002 ஆம் ஆண்டு 34 ஆம் இலக்க இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் நியதிகளின் பிரகாரம், அமைச்சரவை அமைச்சர்களால் நியமிக்கப்பட்ட சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகமே சட்டத்தால் சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தராக இருந்து செயற்படுவார். அமைச்சரவை அமைச்சர்களால் தீர்மானிக்கப்பட்ட ஊழியர் விதிகள், நிபந்தனைகளுக்குப் பொறுப்புள்ளவராக இருப்பதுடன், அதிகாரசபையின் தொழிற்பாடுகளின் பொதுவான நிர்வாகத்திற்கு பொறுப்பாக இருப்பதுடன், இலங்கை சிவில் விமானப் போக்குவரத்துச் சட்டம் அல்லது ஏனைய எழுதப்பட்ட சட்டங்களின் கீழ் அல்லது அவற்றால் அவருக்கு வழங்கப்பட்ட தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளை முன்னெடுப்பார். அதிகாரசபையானது கொள்கைகளை வகுத்துக் கொள்வதனூடாக இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் இலக்குகளை அடைவதற்கென அதிகாரங்களைப் பகிர்ந்தளித்து பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரை வழிப்படுத்துகின்றது.

## அதிகாரசபைக் கூட்டங்கள்

அதிகாரசபையானது சம்பந்தப்பட்ட விடயங்களின் மீது தீவிர கவனம் செலுத்தும் நோக்கில் ஊழியர் குழு, நிதிக் குழு, திட்டமிடற் குழு, கணக்காய்வுக் குழு, மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அபிவிருத்தி மற்றும் கல்விக் குழு என ஐந்து குழுக்களை ஸ்தாபித்துள்ளதுடன் அபிவிருத்தித் திட்டங்கள் வடிவாக்கங் செய்யப்பட்டு அமுல்ப்படுத்தப்படுகின்றது. ஒவ்வொரு குழுவிற்கும் அதிகாரசபையின் இலக்குகளை அடைவதனை நோக்காகக் கொண்டு, நிறுவனத்தின் செய்முறை உருவாக்கத்திற்கு மற்றும் மேற்பார்வை செய்வதற்குமான அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதுடன் பின்வரும் எந்தவொரு குழுவிற்குமான வலு மற்றும் தொழிற்பாடுகளின் பங்கீட்டினை பொறுத்தவரையில், சபையானது தேவைக்கேற்ப ஏதாவது அல்லது அவ்வாறான அனைத்து விடயங்களின் மீதும் தனது அதிகாரத்தினைப் பிரயோகிப்பதைத் தொடர்ந்து முன்னெடுக்கும்.

## ஊழியர் குழு

ஊழியர் குழுவானது பின்வரும் விடயங்கள் தொடர்பாக அதிகாரசபைக்கு பொறுப்புக் கூறலைக் கொண்டுள்ளது.

- நிர்வாகக் கட்டமைப்பொன்றினை அல்லது தேவையேற்படின் அதில் மேற்கொள்ளப்படும் மறுசீரமைப்பொன்றினை அங்கீகரித்தல்.
- ஊழியர்களது பணிநிலைப்பிரிவு மற்றும் சம்பள அளவுத்திட்டங்களைத் தீர்மானித்தல்.
- தெரிவு செய்தல், ஆட்சேர்த்தல், நியமனம் வழங்குதல், பதவியுயர்த்துதல், பதவியிறக்குதல், ஓய்வுறுத்துதல், மற்றும் சேவை முடிவுறுத்துதல் போன்றன தொடர்பான விடயங்களைக் கையாளல்.
- ஊழியர் ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் வருடாந்த வேலைத் திட்டத்தினை மேற்பார்வை செய்தல்.
- இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைக்கான நிர்வாக சட்ட திட்டங்கள் மற்றும் செய்முறைகளை அபிவிருத்தி செய்தல்.
- இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை ஊழியர்களுக்கான ஒழுக்காற்றுச் செய்முறைகளை மேற்கொள்ளல்.
- இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் அலுவலகச் செய்முறைகளை மேம்படுத்துதல்.
- இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை ஊழியர்களுக்கான புலமைப்பரிசில்களை வழங்குதல்.
- இலங்கை சிவில் விமானப் போக்குவரத்துத் திணைக்கள ஊழியர்களுக்கான முன்கூட்டிய ஓய்வுறுத்தல்களுக்கான நஷ்டஈட்டுத் திட்டத்தை விருத்தி செய்தல்.
- இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை ஊழியர்களின் சமூக மற்றும் நலன்புரித் திட்டத்தை மேம்படுத்தல்.

ஊழியர் குழுவானது இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.
ஜெனரல் றொஹான் டி. சில்வா தளுவத்த, தலைவர்.
திரு.சரத் ஜெயசுந்தர, உபதலைவர்
திரு.எச்.எம்.சீ.நிமல்சிறி, சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்.
திரு.கே.ஜே.வி.என். ஜெயவர்த்ன, உறுப்பினர் - 13 மே 2013 வரை
திரு.எல்.டீ.எஸ்.பாலசூரிய – 10 ஒக்டோபர் 2013 இல் இருந்து

ஊழியர் குழுவானது இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

- ஜெனரல் றொஹான் டி. சில்வா தளுவத்த, தலைவர்.
- திரு.சரத் ஜெயசுந்தர, உபதலைவர்
- திரு.எச்.எம்.சீ.நிமல்சிறி, சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்.
- திரு.கே.ஜே.வி.என். ஜெயவர்த்ன, உறுப்பினர் - 13 மே 2013 வரை
- திரு.எல்.டீ.எஸ்.பாலசூரிய – 10 ஒக்டோபர் 2013 இல் இருந்து

## நிதிக் குழு

நிதிக் குழுவானது பின்வரும் விடயங்கள் தொடர்பாக அதிகாரசபைக்கு பொறுப்புக் கூறலைக் கொண்டுள்ளது.

- வருடாந்த பாதீட்டுத் திட்டத்தினைத் தயாரித்தல்.
- இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைக்கான நிதிச் சட்ட திட்டங்கள் மற்றும் செய்முறைகளை உருவாக்குதல்.
- உபகரணங்களின் கொள்வனவு, வசதிகள், மற்றும் சேவைகளின் கொள்வனவு களை மேற்பார்வை செய்தல்.
- இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைக்கான வருமான வழி வகைகளை மேற்பார்வை செய்தல்.
- கொள்வனவுகள் மற்றும் அவை தொடர்பான மேற்பார்வை என்பனவற்றுடன் தொடர்புடைய ஒழுங்கு விதிகள் மற்றும் செய்முறைகளை விருத்தி செய்தல்.
- ரூபா 10,000,000 மில்லியனுக்கு மேற்பட்ட கொடுப்பனவுகளை அங்கீகரித்தல்.
- ஏதாவது விடயங்களை பதிவழிப்பதற்கான அனுமதியினை வழங்கல்.
- இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையில் சிக்கன முகாமைத் துவத்தை நடைமுறைப்படுத்துதல்.

நிதிக் குழுவானது இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

- ஜெனரல் றொஹான் டி. சில்வா தளுவத்த, தலைவர்.
- திரு.எச்.எம்.சீ.நிமல்சிறி, சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்.
- திரு.டப்ள்யூ. ஐ.திசேரா, நிதியமைச்சின் பிரதிநிதி.

## திட்டமிடற் குழு

திட்டமிடற் குழுவானது பின்வரும் விடயங்கள் தொடர்பாக அதிகாரசபைக்கு பொறுப்புக் கூறலைக் கொண்டுள்ளது.

- தேசிய சிவில் விமானப் போக்குவரத்துக் கொள்கையை வகுத்தல்
- தேசிய சிவில் விமானப் போக்குவரத்து அபிவிருத்தித் திட்டமொன்றினை வகுத்தல்
- சிவில் விமானப் போக்குவரத்து சம்பந்தமான அடிப்படை மற்றும் இரண்டாந் தரச் சட்டங்களை மேற்பார்வை செய்வதுடன், தேவையேற்படின் திருத்தங்களை மேற்கொள்ளல்.
- தேசிய சிவில் விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு திட்டங்களை அமுலாக்கம் செய்தல்.
- தேசிய வான் போக்குவரத்து வசதியளித்தல் செயற்றிட்ட அமுலாக்கலை மேற்பார்வை செய்தல்.
- சிவில் மற்றும் இராணுவ கூட்டிணைவினை மேற்பார்வை செய்தல்.
- வான் சேவைச் செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல்.
- வானியல் சேவை வழங்குனர்களின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல்

திட்டமிடற் குழுவானது அதிகாரசபையின் அனைத்து எட்டு உறுப்பினர்களையும் உள்ளடக்கியுள்ளது.

## கணக்காய்வுக் குழு

கணக்காய்வுக் குழுவானது பின்வரும் விடயங்கள் தொடர்பாக அதிகாரசபைக்கு பொறுப்புக் கூறலைக் கொண்டுள்ளது.

- உள்ளகக் கணக்காய்வு அலகு மற்றும் வருடாந்தக் கணக்காய்வுத் திட்டம் என்பவற்றிற்கு பொறுப்புடமையினைத் தீர்மானித்தல்.
- நிறுவனத்தின் அனைத்து செயற்பாடுகளுக்குமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையினை மதிப்பிட்டு மேற்பார்வை செய்தல்.
- சீரான கால இடைவெளியில் செலவுகளின் வினைத்திறனை மதிப்பீடு செய்தல் மற்றும் வீணான செலவுகளைத் தவிர்த்தல் என்பதான செயற்றிறன் மதிப்பீட்டை மேற்கொள்ளல்.
- வெளியகக் கணக்காய்வாளர்களுடன் தொடர்புகளைப் பேணுவதுடன், கணக்காய்வாளர் நாயகத்தின் முகாமைத்துவ ஆவணங்களைப் பின்பற்றல்.
- நியாயாதிக்க நியதிச் சட்ட விதிமுறைகள் மற்றும் சுற்று நிருபங்கள் பின்பற்-படுகின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.
- கணக்கியல் நியமங்கள் பின்பற்றப் படுகின்றனவா என்பதனை உறுதி செய்து ஷ கொள்ளும் பொருட்டு நிதிக் கூற்றுகளை மீளாய்விற்குட்படுத்தல்.
- பரிகார நடவடிக்கைகளுக்காக உள்ளகக் கணக்காய்வு அறிக்கை, வெளியகக் கணக்காய்வு அறிக்கை மற்றும் முகாமைத்துவ ஆவணங்கள் போன்றனவற்றை மீளாய்வு செய்தல்.
- அரச தொழில் முயற்சிக் குழுவின் பரிந்துரைகளின் வழிப்படுத்தல்களின் அமுலா-க்கலை மீளாய்வு செய்தல்
- ஆண்டறிக்கையில் உள்ளடக்குவதற்கு குழுவின் கண்டுபிடிப்புகள் தொடர்பான அறிக்கையினை மீளாய்வு செய்தல்.
- சேவைக்கேற்ப அதிகாரசபையால் கேட்கப்படும் போது அனைத்துக் கணக்காய்வு விடயங்கள் தொடர்பாக அறிக்கையிடல்.

ஊழியர் குழுவானது இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

- திரு.டப்ள்யூ. ஐ.திசேரா, தலைவர் (நிதியமைச்சின் பிரதிநிதி).
- திரு.ஜே.எம்.எஸ்.டப்ள்யூ.ஜயசுந்தர, உபதலைவர்.
- திரு.எல்.டீ.எஸ்.பாலசூரிய, உறுப்பினா
- திரு.எஸ்.அமீன், உறுப்பினா
- திரு.எஸ்.எம். சந்திரபாலா, விமானப் போக்குவரத்து, அமைச்சின் பிரதிநிதி

## சிவில் விமானப் போக்குவரத்து அபிவிருத்தி மற்றும் கல்விக் குழு (CADEC)

சிவில் விமானப் போக்குவரத்து அபிவிருத்தி மற்றும் கல்விக் குழுவானது இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் பின்வரும் ஊழியர்களை தன்னகத்தே கொண்டதாக, சிவில் விமானப் போக்குவரத்துச் செயற்பாடுகளில் பொதுமக்கள் விழிப்புணர்வை அதிகரிப்பதனை இலக்காகக் கொண்டு விஷேட செயற்திட்டங்களில் திட்டமிடல், அபிவிருத்தி மற்றும் அமுலாக்கத்திற்கென ஆகஸ்ட் 2010 இல் ஸ்தாபிக்கப்பட்டது. இக் குழுவானது சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதான உத்தியோகத்தரின் தலைமையிலும் சிரேஷ்ட பணிப்பாளர் மற்றும் கூட்டாண்மைப் பணிப்பாளரினதும் வழிகாட்டலிலும் தொழிற்படுகின்றது.

- திரு. தேவ் கௌசல சமரவீர, உபதலைவர்.
- திரு.ஜிம்ஹான் தபரேரா, செயலாளர்.
- திருமதி மஞ்சுளா விக்கிரமநாயக்க, பொருளாளர்.

## உறுப்பினர்கள்

- திருமதி துலாஞ்சலி மாப்பிற்ரியஹே
- திருமதி சீ.எஸ்.கொடித்துவக்கு
- திரு. நிலந்த தென்னக்கோன்
- திரு. ரீ.எம்.வை.பீ.தென்னக்கோன்
- திருமதி. ஜீ.ஈ.மில்லவிதானாராச்சி
- திரு.எம்.ஐ.கே.குணவர்த்தன
- திரு.எஸ்.பி.பீ.வத்தேவவ
- திரு.ஆர்.எல்.தலாஹல்ல

## நிறுவனத்தில் அக்கறை கொண்டோருடனான தொடர்பு

குறிப்பாக இலங்கை சிவில் விமானப் போக்குவரத்தின் கௌரவ அமைச்சரின் எதிர்பார்ப்புக்களை இனங்கண்டு முன்னிலைப்படுத்துவதற்கு நிறுவனத்தில் அக்கறை கொண்டோர் தொடர்பில் கொண்டுள்ள அதனது பதில் கூறும் பொறுப்பினை அதிகாரசபையானது தெரிந்துகொள்கின்றது.

## அதிகாரசபையினதும் சிரேஷ்ட முகாமையினதும் பொறுப்பு

சிரேஷ்ட முகாமை மற்றும் அதிகாரசபையின் வகிபாகம் என்பனவற்றிற்கிடையில் தெழிவானதொரு வேறுபாடு ஆகும்.

அதிகாரசபையானது உயர்மட்ட கொள்கைகள் மற்றும் தந்திரோபாயங்களை அமைத்தலில் கரிசனை கொண்டுள்ளதுடன், அதன் பின்னரான மற்றும் இலக்குகள் அடையப்படுதலை நோக்காகக் கொண்டதான செய்முறை மேற்பார்வை செய்கின்றது.

பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரை தலைமையிற் கொண்ட சிரேஷ்ட முகாமைத்துவமானது அதிகாரசபையால் வகுக்கப்பட்ட உயர்மட்ட கொள்கைகள் மற்றும் தந்திரோபாயங்களின் அமுலாக்கலைக் கருத்திற் கொண்டுள்ளது.

2010 இன் 14 ஆம் இலக்க சிவில் விமானப் போக்குவரத்துச் சட்டம், வான் செலவுச் சட்டத்தில் அல்லது அதனால் மேற்கொள்ளப்பட்ட ஒழுங்குவிதிகள் அல்லது ஏதாவது எழுதப்பட்ட சட்டங்களின் பிரகாரம் சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகத்திற்கு விஷேடமாக வழங்கும் குறிப்பிட்ட நியதிச்சட்டக் கடமைகளின் வெளிப்பாட்டிற்கான பொறுப்புக்கூறலை கொண்டிராத மற்றும் அதற்கு வேறுபாடு கொண்டதை அதிகாரசபை கொண்டு காணப்படுகின்றது. எனினும், அதிகாரசபையானது அவ்வாறான நியதிச்சட்டக் கடமைகளை நிறைவேற்றுவதற்கு சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகத்தினால் வேண்டப்படும் ஆளணியினர், கருவிகள், வசதிகள், மற்றும் சேவைகளை உள்ளடக்கிய ஆனால் வரையறுக்கப்படாத அனைத்து வளங்களையும் வழங்கும்.

அதிகாரசபையானது சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகத்தின் அதிகாரப்பகிர்வு மற்றும் கடமைகளை உறுதிசெய்வதன் மூலம் மேற்கூறிய வகிபாகத்தினை தெழிவாக எடுத்துக்கூறியுள்ளதுடன், இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் வரைவிலக்கணப்படுத்தப்பட்டு முழுமைப்படுத்தப்படுகின்றார்.

## பொறுப்புடமை

அதிகாரசபையின் தந்திரோபாய இலக்குகளை இலக்காகக் கொண்ட தொழிற்பாட்டை மேற்பார்வை செய்யும் நோக்குடன், அதன் மூன்றாண்டு வியாபாரத் திட்டத்தில் வகுக்கப்பட்டுள்ளவாறு அதனது கொள்கைகள், தந்திரோபாய வழிகாட்டல்கள் மற்றும் எதிர்பார்ப்புகள் என்பவற்றிற்கிணங்க, இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் செயற்பாடுகள் முகாமைப்படுத்தப்பட்டு, நடைமுறைப்படுத்தப்படுகின்றன என்பதனை உறுதி செய்யும் நோக்குடன் அதிகாரசபையும் அதனது உப குழுக்களும் தொடர் கூட்டங்களை நடாத்திவருகின்றன.

## ஆர்வ ரீதியான முரண்பாடுகள்

அதிகாரசபையானது ஆர்வலர் பதிவேடொன்றினைப் பராமரித்து வருவதுடன், அதிகாரசபையின் உறுப்பினர்கள் ஆர்வத்துடன் வெளிப்படுத்துவதற்குரிய அவர்களது கடமை பற்றி அறிந்துகொண்டுள்ளனர் என்பதனை உறுதிசெய்து கொள்கின்றது. மேலும் இந்த அணுகுமுறையானது ஊழியர்களுக்காக ஆர்வலர் பதிவேட்டின் முரண்பாடொன்றைப் பராமரிப்பதனை வெளிப்படுத்துகின்றது.

## உள்ளகக் கணக்காய்வு

பெருமளவிலான அதிகாரசபையின் தொழிற்பாடுகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள போதிலும், நிறுவனக் கட்டுப்பாட்டின் வினைத்திறன் மிக்க முறைமையொன்றினைப் பராமரிப்பதற்கான பொறுப்பு அதிகாரசபையையே சாரும்.

அதிகாரசபையினது முக்கியத்துவம் மிக்க இலக்குகள் அடையப்படுகின்றன என்பதனை உறுதிசெய்து கொள்வதற்கு உருவாக்கிக் கொள்ளப்படும் கொள்கைகள், முறைமைகள், மற்றும் செய்முறைகள் என்பவற்றை உள்ளடக்கியதாக உள்ளகக் கட்டப்பாடு காணப்படுகின்றது. அதிகாரசபை மற்றும் சிரேஷ்ட முகாமை என்பன இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டவாறு பொறுப்புடமைக் கூற்றில் கையொப்பமிடுவதன் மூலம் தனது பொறுப்புடமையினைத் தெரியப்படுத்தியுள்ளார்கள்.

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் ஒவ்வொரு பகுதிகளிலும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையினை கண்காணிப்பதற்கான பொறுப்புடமை கொண்டதாக உள்ளகக் கணக்காய்வுப் பகுதியை அதிகாரசபை கொண்டுள்ளது. இவ் அலகானது சீ.ஏ.ஏ.எஸ்.எல் ஆல் வழங்கப்படும் அனைத்து சேவைகளின் தரத்தினை கருத்திற் கொள்வதுடன், அதிகாரசபைக்கு அறிக்கையிடப்பட்ட நிதி மற்றும் ஏனைய தகவல்களின் reliability யும் கருத்திற் கொள்கின்றது.

உள்ளகக் கணக்காய்வானது சிரேஷ்ட முகாமையின் அழுத்தங்கள் இன்றி சுயாதீனமாகச் செயற்படுவதுடன், அதன் கண்டுபிடிப்புகள் உடன்பட்ட வழிமுறைகளினூடாக நேரடியாக இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரான சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகத்திற்கும் கணக்காய்வுக் குழுவிற்கும் அறிக்கையிடப்படுகின்றது.

## சட்டக் கடப்பாடு

நிறுவனம் அனைத்துச் சட்டப் பிரமாணங்களையும் பின்பற்றுகின்றது என்பதனை உறுதி செய்வதற்கான அதன் பொறுப்புடமையினை அதிகாரசபை வெளிப்படுத்துகின்றது. அதிகாரசபையானது உடன்பாட்டு விடயங்களை முறை ரீதியாக அடையாளங்கண்டு கொள்ள நிகழ்ச்சித்திட்டச் செய்முறையொன்றின் மேம்பாடு மற்றும் செயற்படுத்துகை போன்றனவற்றிற்காக, சிரேஷ்ட முகாமைக்குப் பொறுப்புடமையினைப் பகிர்ந்தளித்துள்ளதுடன், அனைத்து ஊழியர்களும் அவர்களுடன் குறிப்பாகத் தொடர்புடைய சட்டத் தேவைப்பாடுகள் பற்றிய அறிவினைக் கொண்டவர்களாக இருக்கிறார்கள் என்பதையும் உறுதி செய்கின்றது.

தனித்தனி விடயங்களாக அதிகாரசபையால் தீர்மானித்துக் கொள்ளும் வகையில் அரசாங்க நிறுவனங்களால் விடப்படும் பொதுவான மற்றும் விஷேடமான சுற்றறிக்கைகள் மற்றும் வழிகாட்டிகள் எவ்வளவிற்கு அதிகாரசபையால் அமுலாக்கப்பட வேண்டும் என்பதனை அதிகாரசபையே தீர்மானிக்குமென அதிகாரசபை இணங்கியுள்ளது. எனவே அரசாங்கத்தினால் விடுக்கப்படும் எவ்வாறானதொரு சுற்றறிக்கைகளையும் அதிகாரசபை அவ் வழிகாட்டலின் உள்ளடக்கத்தினைப் பரிசீலனை செய்து, அவ் வழிகாட்டலின் பிரயோகத்தன்மையின் எல்லை மற்றும் அளவுகளைத் தீர்மானித்தாலன்றி, அவை தன்னிச்சையாக இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் முகாமையின் அமுலாக்கலுக்கு உள்ளடங்கமாட்டாது.

## ஒழுக்க விழுமியங்கள்

உருவாக்கப்பட்ட ஒழுக்க விழுமியங்களின் அடிப்படையில், அதிகாரசபையானது சிறந்த கூட்டுத்தாபன ஆழுகைத் தத்துவத்தினை நடைமுறைப்படுத்தல் மற்றும் ஒழுக்க விழுமிய நடத்தைகளின் உயரிய நியமங்களை அனைத்து ஊழியர்களும் பின்பற்றுகின்றார்களா என்பதனை ஒரு ஒழுங்குமுறையில் கண்காணித்து வருகின்றது. ஒழுக்க விழுமிய சிந்தனையில் உள்ளடக்கப்பட்டுள்ள தத்துவங்களுடன் இணங்காதிருப்பவற்றை வெளிக்காட்டக் கூடியதான மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகளின் பின்பற்றல் போக்கை கண்காணித்தல், உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் அல்லது வேறு ஏதாவது அறிக்கைகள் அல்லது அறிகுறிகள் போன்றனவற்றினூடாக ஒழுக்க விழுமிய நியமங்களுடன் உடன்பாடுகளைக் கண்காணித்தலானது மேற்கொள்ளப்பட்ட வருகின்றது.

சிறந்த கூட்டிணைவான பிரஜைகள் அதிகாரசபையில் ஈடுபாடுகொண்டுள்ளனர், அதாவது பல்வேறுபட்ட சமூகங்களிலுமுள்ள அனைத்துப் பிரஜைகளின் நெறிமுறைகள், ஏற்றுக்கொள்ளப்பட்ட உரிமைகள், மற்றும் பொறுப்புகள் போன்றனவற்றுடன் இயைவாக்கமடைந்த மனநிலையொன்றுடன் செயற்படும் வகையிலான அர்ப்பணிப்பொன்றினை மேற்கொள்ளல் மற்றும் அதிகாரசபை முன்னெடுக்கும் கைத்தொழில் மற்றும் அதற்கும் அப்பால் அனைத்து சமூகங்களின் உறுப்பினர் ஒருவராக இருத்தல் என்னும் அறிவுடன் கூடிய அதன் ஊழியர்களை உள்ளடக்கியதாக அதிகாரசபை காணப்படுகின்றது.

# இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை

## தூரநோக்கு

தேசிய பொருளாதார வளர்ச்சிக்கு முதன்மையானதொரு இயைபியக்க உள்ளாக்கியாக இருத்தல்.

## குறிக்கோள்

தந்திரோபாயத் திட்டமிடல், பயனுறுதிமிக்க ஒழுங்குவிதிகள், இடர் அற்ற பாதுகாப்பானதொரு செயற்பாடு, மற்றும் சர்வதேச நியமங்கள் மற்றும் விதந்துரைக்கப்பட்ட பரிந்துரைகளை உறுதி செய்து கொள்ளும் திறன்மிக்க தேசிய சிவில் விமானப் போக்குவரத்து முறைமைகள் என்பனவற்றினூடாக வசதி ஏற்படுத்திக் கொடுத்தல்.

## குறிக்கோள் வாசகம்

"அனைவருக்கும் ஆபத்தற்ற ஆகாயம்"

## தத்துவம்

"இலங்கையின் வான்பரப்பு, இலங்கையின் எதிர்கால சந்ததியினரின் நல்வாழ்விற்காகவும் முன்னேற்றத்திற்காகவும் ஒரு பொதுச் சொத்தாக முகாமை செய்யப்படல் வேண்டும்"

## இலக்குகள்

- இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையால் உருவாக்கப்பட்ட பாதுகாப்பு விளைவு நோக்கங்கள் அடையப்படல் அல்லது மிகைப்படுத்தப்படல்
- பொருத்தமான விதத்தில் வளமாக்கப்படல்
- தொழில் வல்லுனராக மற்றும் தகுதி வாய்ந்தவராக இருத்தல்
- பரந்தளவான நம்பிக்கை மற்றும் அங்கீகாரத்தைப் பெறல்
- அதன் அடைவு மட்டங்களை நிலைநிறுத்திக் கொள்ளல்
- சர்வதேச நியமங்கள் மற்றும் முன்மொழியப்பட்ட பரிந்துரைகளுடன் இணங்கிச் செல்லும் வேண்டப்படும் அடைவ மட்டத்தினை பராமரித்தல்
- சிவில் விமானப் போக்குவரத்தின் திட்டமிடல் மற்றும் மேம்பாடடின் பலம்மிக்க ஒரு அனுசரணையாளராக இருத்தல்

## தந்திரோபாயங்கள்

- நியதிச் சட்டத் தொழிற்பாடுகளின் அமுலாக்கலை முன்னேற்றுதல் மற்றும் அதனுடன் நிலைப்படுத்துதல் அத்துடன் சமூக கடப்பாடுகளை நிறைவு செய்தல்
- மிக முக்கியமான விமானப் போக்குவரத்துப் பிரச்சினைகளுக்கு தீர்வினை அடையாளங்கண்டு அமுலாக்குதல்
- குறிப்பிட்ட கலாச்சார மாற்றத் தூண்டுதல்களை அறிமுகப்படுத்துதல்
- விமானப் போக்குவரத்துக் கைத்தொழிலுடன் கூட்டிணைவுடனும் பங்குபற்றலுடனும் தொழில் புரிதல
- ஒரு தெளிவான நோக்குடன் தொழிற்படலும், உள்ளார்ந்த மற்றும் வெளியார்ந்தவர்களுடன் வினைத்திறனான வகையில் தொடர்பாடலை மேற்கொள்ளல்
- அனைத்து ஆவணங்கள், மூலங்கள், மற்றும் உள்ளக செய்முறைகளை பயனுறுதி மிக்க வகையிலும் மாறாத தன்மை கொண்டதாகவும் பேணுதல்

## மதிப்பீடுகள்

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை மற்றும் அதன் ஊழியர்கள்

- விமானப் போக்குவரத்தில் பாதுகாப்பிற்கு முக்கியத்துவத்தையும் முன்னிரிமையையும் அளித்து பாதுகாப்புக் கலாச்சாரத்தினை மேம்படுத்த ஈடுபடல்.
- இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை வாடிக்கையாளருக்குச் சேவை வழங்கலை துரிதப்படுத்துதல்
- முன்னெடுக்கப்படும் ஒவ்வொரு விடயத்திலும் “முடியும்” என்ற நடத்தையினைக் கொண்டிருத்தல்
- நம்பகத் தன்மை மற்றும் யதார்த்தத் தன்மை கொண்டிருப்பதனை இலக்காகக் கொள்ளல்
- தொடர்ச்சியான முன்னேற்றப்பணியில் விருப்பங்கொண்டோராகவும், மாற்றத்திற்கு உட்படக் கூடியவராகவும் இருத்தல்
- வெற்றியை அடைவதற்கு ஒன்றாகப் பணியாற்றல்
- திறந்த, நேர்மையுள்ள, வெளிப்படைத் தன்மையுள்ளோராக இருத்தல்
- செய்யப்படும் ஒவ்வொன்றிலும் வினைத்திறனையும் நியதித் தன்மையையும் மேம்படுத்தல்
- குழுவாக வேலைசெய்வதன் மூலம் தனியொருவரை நம்புதல் மற்றும் மதிப்பளித்தல்
- ஒவ்வொருவரின் பங்களிப்பிற்கும் வெகுமதி சேர்த்தல்
- சமூக பொறுப்புடமை மற்றும் கடமையுணர்வு என்பனவற்றை அடையாளங்காணல்
- செய்பவற்றிலிருந்து மகிழ்வடைதல்
- தொழில்சார் அணுகுமுறையில் பங்குகொள்ளல்
- தொழில் மற்றும் வீட்டுச் சூழல்களுக்கிடையில் சமநிலையொன்றைப் பேணல்

## இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் முதன்மை இலக்குகள்

- வர்த்தக விமானப் போக்குவரத்துத் துறையில் இறப்பு நேரக்கூடிய விபத்துக்களைத் தவிர்த்தல்
- சிவில் விமானப் போக்குவரத்துச் செயற்பாடுகளில் கடத்தல் மற்றும் சட்டத்திற்கு முரணான தலையீடுகளைத் தவிர்த்தல்
- பொதுவான விமானப் போக்குவரத்து விபத்துக்கள் ஏற்படலைத் தவிர்த்தல்

- விமான நிலையங்களில் தளத்தில் ஏற்படக்கூடிய இறப்பு நேரக்கூடிய விபத்துக்களைத் தவிர்த்தல்
- பொறியியல் மற்றும் பராமரிப்பு வேலைத்தளங்களில் விபத்துக்களைக் குறைத்தல்
- பறத்தல் நேரங்களில் வர்த்தகப் பறப்புச் சம்பவ வீகிதத்தினை 1:1000 இற்கும் குறைந்த மட்டத்தில் பேணுதல்
- பறத்தல் நேரங்களில் பொது விமானப் போக்குவரத்து பறப்புச் சம்பவ வீகிதத்தினை 1:5000 இற்கும் குறைந்த மட்டத்தில் பேணுதல்
- பறத்தல் பயிற்சிப் பாடசாலைகளில் பறப்புச் சம்பவ வீகிதத்தினை 1:10,000 எனக் குறைத்தல்
- தள உதவுகையுடன் ஈடுபாடுடைய பறப்பு சம்பவ எண்ணிக்கை விகிதத்தினை 1:20,000 பறப்பு மணித்தியாலங்களாகக் குறைத்தல்
- தள உதவுகையுடன் ஈடுபாடுடைய பொது விமானப் போக்குவரத்து பறப்பு சம்பவ எண்ணிக்கை விகிதத்தினை 1:10,000 பறப்புகளாகக் குறைத்தல்
- வான் கட்டுப்பாட்டு சேவைகள் (ஏ.ரீ.எஸ்) உதவுகையுடன் ஈடுபாடுடைய பறப்பு சம்பவ எண்ணிக்கை விகிதத்தினை 1:50,000 பறப்பாகக் குறைத்தல்
- குறிக்கப்பட்ட நேரத்தில் விமானம் புறப்படுவதில் ஏற்படக்கூடிய தாமதத்தினைக் குறைத்தல்.
- சராசரி நிலையுடைய மக்களுக்கு வான்வழிப் பயணம் கிடைக்கக்கூடிய வகையில் வழிவகைகளை மேற்கொள்ளல்
- வான்வழிப் பயணத்தில் சேவைத்தரத்தினை அதிகரித்தல்
- பாதுகாப்புத் தேவைகளைக் கருத்திற் கொண்டு, விமானத் தளத்தில் நெரிசலான, விரைவான பயணிகள் செய்முறையைக் குறைத்தல்
- விமானப் போக்குவரத்தில் செயற்பாட்டுச் செலவீனத்தைக் குறைத்து, வீண்விரயத்தினைத் தவிர்த்தல்
- சூழல் மீது விமானப் போக்குவரத்தின் மறைமுக/எதிர்மறை விளைவுகளைக் குறைத்தல்
- சிவில் விமானப் போக்குவரத்தின் முழுமையான நன்மைகளை பாடசாலைச் சிறார்களுக்கு அறிவூட்டல்.

## விளைவுகள்

- சிவில் விமானப் போக்குவரத்துத் துறையில் நாட்டிற்காக சர்வதேச தேவைப்பாடுகளை நிவர்த்தி செய்வதுடன், சர்வதேச நியமங்கள் மற்றும் முன்மொழிவுகளின் அமுலாக்கல் மற்றும் செயலாக்கத்னை நிலைநிறுத்துதல்
- வரையறைகளிலிருந்து விடுதலை பெற்ற இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து முறைமையின் சர்வதேச அங்கீகாரம்
- சிவில் விமானப் போக்குவரத்தில் பாதுகாப்பு, தற்காப்பு, வினைத்திறன் மற்றும் ஒழுங்கு முறைமையொன்றினையும் மற்றும் வான் போக்குவரத்து முறைமையில் தொடர்ச்சியான பொதுமக்கள் நம்பிக்கைத் தன்மையையும் உருவாக்கல்
- இலங்கைப் பிரஜைகளின் நல்வாழ்விற்காக இலங்கையின் வான்பரப்பை ஆகக் கூடியளவு பயன்படுத்துதல்
- நாட்டில் சமூக பொருளாதார அபிவிருத்தியை உருவாக்கல்
- காரணமற்ற போட்டித்தன்மையால் எழும் பொருளாதார விரயங்களிலிருந்து பாதுகாத்தல்
- மக்களினதும் பொருட்களினதும் கிடைப்பனவு மற்றும் நகர்வுகளை மேம்படுத்துதல்
- சிவில் விமானப் போக்குவரத்துத் துறையில் தங்கியுள்ள சேவைகள்
- சிவில் விமானப் போக்குவரத்து துறையில் கல்வி
- சிவில் வானியல் சார் அனைத்து விடயங்களையும் மேம்படுத்தல்
- வினைத்திறன் மிக்க நடைமுறை மற்றும் ஒழுங்கு முறைகளுக்கான சீரான சட்ட வரையறைகள்
- சூழலின் நிலையான தன்மை

## வெளியீடுகள்

| வெளியீட்டு வகைகள் | வெளியீடுகள் |
| --- | --- |
| கொள்கை ஆலோசனை | ■ அரசாங்கத்திற்கும் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கும் ஆலோசனை வழங்கல்.<br>■ சட்ட மறுசீரமைப்பு<br>■ விதிகளின் உருவாக்கம்<br>■ அமுலாக்க நியமங்களின் உருவாக்கமும் பிரசுரித்தலும்<br>■ விமானப் போக்குவரத்துக் கொள்கை உருவாக்கம்<br>■ செய்முறைக் கையேடுகளின் உருவாக்கம்<br>■ விமானப் போக்குவரத்து கட்டமைப்பின் மூலத் திட்டம் |
| பாதுகாப்பு மதிப்பீடு மற்றும் சான்றுப்படுத்துகை | கீழ்க்குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான இடர் முகாமைத்துவம்<br>■ விமான நிலையம்/வான் துறையின் பாதுகாப்பு<br>■ விமான சேவைத் துறையினரின் பாதுகாப்பு<br>■ பொது விமான போக்குவரத்துத் துறையினரின் பாதுகாப்பு<br>■ தனிநபர் அனுமதிப் பத்திரதாரரின் பாதுகாப்பு<br>■ விமானப் பறப்புப் பயிற்சிப் பாதுகாப்பு<br>■ வானூர்தி பராமரிப்புப் பாதுகாப்பு மற்றும்<br>■ விமான போக்குவரத்து சேவைகள் துறையினரது பாதுகாப்பு இடர் முகாமைத்துவம் |
| பாதுகாப்புப் ஆய்வுத் தகவல்கள் மற்றும் மேம்படுத்தல்கள் | ■ பாதுகாப்பு விசாரணை<br>■ பாதுகாப்புப் ஆய்வு<br>■ பாதுகாப்புத் தகவல், கல்வி மற்றும் மேம்படுத்தல்<br>■ வானூர்தி விபத்து மற்றும் சம்பவ விசாரணை மற்றும்<br>■ பாதுகாப்புப் பரிந்துரைகளின் அமுலாக்கங்கள் |
| அதிகாரமளித்தல் | ■ விமான சேவை அட்டவணை அங்கீகாரம்<br>■ விமானப் போக்குவரத்துக் கட்டணங்களை அங்கீகாரம்<br>■ பயண முகவர்களை சான்றுப்படுத்தல்<br>■ வானூர்திகளைப் பதிவு செய்தல<br>■ வானூர்திஉரிதிப்பாகங்களின் இறக்குமதிக்கான அங்கீகாரம் |

| | |
|---|---|
| | ■ உயர் கட்டட நிர்மானங்களை மேற்கொள்வதற்கான அங்கீகாரம்<br>■ பொது விற்பனை முகவர்களுக்கான (ஜீ.எஸ்.ஏ)அங்கீகாரம் அளித்தல்<br>■ சர்வதேச செயற்பாடுகளுக்காக உள்நாட்டு சேவை வழங்குனர்களை ஒதுக்கீடு செய்தல் |
| பாதுகாப்பு மதிப்பீடு | ■ சிவில் விமானப் போக்குவரத்துத் துறை பாதுகாப்பு இடர் முகாமைத்துவம் |
| நடைமுறைப்படுத்தல் | ■ ஒழுங்குமுறை மீறல்கள் மீதான பதில்கள்.<br>■ பொது சுகாதார மற்றும் சுத்திகரிப்புத் தேவைகளை அமுல்படுத்தல் |
| அரசாங்கத்திற்கு உதவுதல் | ■ விமானப் சேவை நிறுவனங்களிடமிருந்து தாமத வரியினை அறவிடல் |

# நியதிச் சட்டச் செயற்பரப்பு

சிவில் விமானப் போக்குவரத்தின் நியதிச் சட்ட செயற்பரப்பானது 2013 இன் இறுதிக் காலப்பகுதியில் பின்வருமாறு காணப்பட்டது.

| நியமிச் சட்டப் பரப்பெல்லை | 2013 | 2012 | அதிகரிப்பு (%) |
|---|---|---|---|
| **விமான நிலையங்கள்** | | | |
| உள்நாட்டுத் தரை விமான நிலையங்கள் | 12 | 12 | |
| உள்நாட்டு நீர் விமானத் தளங்கள் | 12 | 15 | -20% |
| சர்வதேச விமானத் தளங்கள் (RMA உடன்) | 03 | 02 | 50% |
| **விமான சேவைகள்** | | | |
| உள்நாட்டு வான் சேவைகளில் ஈடுபடும் உள்நாட்டு விமான சேவைகள் | 06 | 06 | - |
| சர்வதேச வான் சேவைகளில் ஈடுபடும் உள்நாட்டு விமான சேவைகள் | 03 | 03 | |
| சர்வதேச வெளிநாட்டு விமான சேவைகள | 24 | 30 | -20% |
| **பயிற்சியளித்தல் நிறுவனங்கள்** | | | |
| பறத்தற் பயிற்சிப் பாடசாலைகள் | 05 | 06 | -16% |
| பொறியியல்/பராமரிப்புப் பாடசாலைகள் | 05 | 03 | 66% |
| வான் போக்குவரத்து நெரிசலுடன் தொடர்புபட்டது | 01 | 01 | |
| **வானியல் சேவைகள் வழங்குனர்கள்** | | | |
| விமானத்தளங்கள் | 01 | 01 | - |
| வான் போக்குவரத்து நெரிசல் சேவைகள் | 01 | 01 | - |
| வானியல் சார் தளச் சேவைகள | 01 | 01 | - |
| வானியல் சார் தொலைதொடர்புச் சேவைகள் | 01 | 01 | - |
| வான் போக்குவரத்து பாதுகாப்புத் சேவைகள் | 01 | 01 | - |
| தளப் பராமரிப்புச் சேவைகள் | 01 | 01 | - |
| உபசரணைச் சேவைகள் | 01 | 01 | - |
| வானூர்தி எரிபொருள் மீள்நிரப்பல் மற்றும் எண்ணெய் வினியோகம் | 01 | 01 | - |
| **வானூர்தி** | | | |
| 136,000 கி.கி. அல்லது அதற்கு மேற்பட்ட எடையுடைய வகைகொண்ட பாரிய வானூர்திகள | 14 | 14 | - |
| 136,000 கி.கி. (300,000 இறாத்தல்கள்) க்கு குறைந்ததும் 7,000 கி.கி. (15,500 இறாத்தல்கள்) க்கு உயர்வானதுமான நடுத்தர எடையுடைய வானூர்திகள் | 18 | 16 | 12% |
| 7,000 கி.கி. (15,500 இறாத்தல்கள்) க்கு குறைவான குறைந்த எடையுடைய வானூர்திகள் | 31 | 32 | -3% |

| | | | |
|---|---|---|---|
| **பறத்தற் பயிற்சி உபகரணங்கள்** | | | |
| உள்நாட்டு முழு அளவான பறப்பு மாதிரிகள் -ஏ 320 | 01 | 01 | |
| வெளிநாட்டைத் தளமாகக் கொண்ட முழு அளவான பறத்தல் மாதிரிகள் | 05 | 06 | -16% |

| | | | |
|---|---|---|---|
| மாணவ விமானி அனுமதிப்பத்திரதாரா் | 231 | 202 | 19% |
| தனிநபா் விமானி அனுமதிப்பத்திரதாரா் | 123 | 146 | -16% |
| வா்த்தக விமானி அனுமதிப்பத்திரதாரா் | 339 | 325 | 04% |
| வான் போக்குவரத்து விமானி அனுமதிப்பத்திரதாரா் | 498 | 319 | 56% |
| வானூா்திப் பராமரிப்பு பொறியியலாளா் அனுமதிப்பத்திரதாரா் | 74 | 76 | -03% |
| வானூா்திப் பராமரிப்பு அனுமதிப்பத்திரதாரா் | 05 | 175 | -97% |
| பறத்தற் செயற்பாட்டு அனுமதிப்பத்திரதாரா் | 474 | 397 | 19% |
| பறப்பு அனுப்புகை அனுமதிப்பத்திரதாரா் | 189 | 175 | 08% |
| வானியல் நிலைய செயற்பாட்டாளா் | 04 | 04 | - |
| அனுமதிப்பத்திரதாரா் விமான அறை உறுப்பினா் சான்றிதழ்தாரா் | 1186 | 1134 | 04% |
| பறத்தற் போதனையாசிரியா்கள் | 05 | 20 | -75% |
| உதவி பறத்தற் போதனையாசிரியா்கள் | 09 | 17 | -47% |
| தளப் போதனையாசிரியா்கள் | 23 | 22 | 4% |
| பறப்புப் பரீட்சகா் | 12 | 08 | 50% |
| ஒதுக்கீடு செய்யப்பட்ட சோதனையிடல் விமானிகள் | 34 | 32 | 06% |
| ஒதுக்கீடு செய்யப்பட்ட வானியல் மருத்துவ பரீட்சகா்கள் | 05 | 06 | -17% |
| சான்றுப்படுத்தப்பட்ட விமானப் போக்குவரத்து பாதுகாப்பு திரைப்படுத்துநா்கள் | 504 | 470 | 72% |
| **வான் போக்குவரத்து சேவை வழங்குநா்கள்** | | | |
| உலகளாவிய வினியோக சேவை வழங்குநா்கள் | 04 | 04 | - |
| வான் போக்குவரத்து சேவை வழங்குநா் அனுமதிப்பத்திரம்- வகை A | 493 | 425 | 16% |
| வான் போக்குவரத்து சேவை வழங்குநா் அனுமதிப்பத்திரம்- வகை B | 19 | 25 | -24% |
| பொது விற்பனை முகவா்கள் | 22 | 32 | -31% |

| | | | |
|---|---|---|---|
| **உயா்ந்த நிா்மாணங்கள்** | | | |
| தொலைதொடா்புக் கோபுரங்கள் | 6090 | 5871 | 3.7% |

# வழிகாட்டல் மற்றும் முகாமைத்துவம்

## அதிகாரசபையும் அதன் குழுக்களு

### பணிப்பாளர் சபை உறுப்பினர்கள்

2002 இன் 34 ஆம் இலக்க சிவில் விமானம் போக்குவரத்து அதிகாரசபைச் சட்டத்தின் பிரகாரம், சிவில் விமானப் போக்குவரத்து கௌரவ அமைச்சர் அவர்கள், சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் பணிப்பாளர் சபையினை நியமித்தார். ஜெனரல் றொஹன் தளுவத்த மற்றும் திரு.J.M.S.W.ஜயசுந்தர முறையே தலைவர், உபதலைவர்களாக நியமிக்கப்பட்டனர்.

### CAASL கூட்டங்கள்

மீளாய்வின் கீழான காலப்பகுதியில் இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை ஒன்பது (09) கூட்டங்களை நடாத்தியிருந்ததுடன், அதிகாரசபையையும், அது ஒழுங்குபடுத்தும் சிவில் விமானப் போக்குவரத்துக் கைத்தொழிலையும் செயற்படுத்தும் பொருட்டும், அவற்றின் சிறந்த தொழிற்பாட்டின் பொருட்டும், முன்நூற்றுப் பதின்மூன்று (313) தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அதிகாரசபையின் ஊழியர் குழுக் கூட்டம் மூன்று தடவைகளும், அதன் கணக்காய்வுக் குழுக் கூட்டம் நான்கு தடவைகளும் மீளாய்வின் கீழான காலப்பகுதியில் கூடியிருந்தன.

## வானூர்தி விபத்து விசாரணை அலகு

2013 ஆண்டானது, இலங்கை வான்பரப்பில் இலங்கை மற்றும் வெளிநாட்டுப் பதிவுகளையுடைய வானூர்திகளுக்கான மேலும் ஒரு விபத்துகளற்ற ஆண்டாகக் காணப்பட்டது.

2013 இல், CAASL இலங்கையினுள் அல்லது அதற்கு வெளியில் செயற்படுத்தப்படும் இலங்கையிற் பதிவு செய்யப்பட்ட வானூர்திகளுடன் அல்லது வெளிநாட்டிற் பதிவு செய்யப்பட்ட வானூர்திகளுடன் தொடர்புடைய விபத்துகள் மற்றும்/ அல்லது சம்பவங்கள் சம்பந்தமான தரவுகள் சேகரிப்பதனை தொடர்ச்சியாக மேற்கொண்டு வந்தது. CAASL ஆனது, தரவு சேகரித்து அதனைப் பகிர்ந்து பயன்படுத்திக் கொள்ள நாடுகளுக்காக ICAO அடையாளங்கண்டு பரிந்துரை செய்த விமானப் போக்குவரத்து சம்பவ அறிக்கையிடல் முறைமைக்கான ஐரோப்பிய கூட்டிணைவு நிலையத்துடன் (ECCAIRS) அதனது கட்டாயப்படுத்தப்பட்ட நிகழ்வு அறிக்கையிடல் முறைமையைப் பயன்படுத்தியது. 2013 இல் ECCAIR முறைமை பதிப்பு 4 ஆனது பதிப்பு 5 இற்குத் தரமுயர்த்தப்பட்டது.

2013 இல் BIA இலங்கையில், இலங்கையிற் பதிவு செய்யப்பட்ட A-340 வானூர்தியின் வாற்பகுதி மோதுகையுடன் தொடர்புடைய பாரதூரமான வானூர்திச் சம்பவமொன்று இடம் பெற்றதுடன், 185 நிகழ்வுகள் CAASL இல் அறிக்கையிடப்பட்டன. அனைத்து நிகழ்விலும், 178 நிகழ்வுகள் இலங்கையிற் பதிவு செய்யப்பட்ட வானூர்திகள் தொடர்பிலும், எஞ்சிய 07 நிகழ்வுகள் இலங்கையினுள்ளும் வெளியிலும் செயற்படுத்தப்படும் வானூர்திகள் தொடர்பிலும் நிகழ்ந்துள்ளன.

49 வானூர்திகளுடன் பறவை மோதல்கள் இலங்கையிற் பதிவு செய்யப்பட்ட வானூர்திகள் தொடர்பில் இலங்கையின் வான் பரப்பிலோ அல்லது இலங்கைக்கு வெளியிலான வான்பரப்பிலோ பதிவு செய்யப்பட்டன. இவ் எண்ணிக்கையில் 30 பறவை மோதல்கள் (மோதல் வீதம் - 0.0006) BIA இல் நிகழ்ந்துள்ளன. 03 பறவை மோதல்கள் MRIA இல் நிகழ்ந்துள்ளன. இது 2012 இல் BIA இல் (மோதல் வீதம் - 0.0003) பதிவு செய்யப்பட்ட 16 மோதல்களுடன் ஒப்பிடுகையில் 2013 இல் BIA இல் இடம்பெற்ற பறவை மோதல்களானது 88% அதிகரிப்பினைக் காட்டுகின்றது. இது ஒவ்வொரு 1667 பறப்புக்களுக்கும் 01 பறவை மோதலானது இடம்பெறுகின்றது என்பதை வெளிக்காட்டுவதானது


விமான நிலையச் செயற்பாட்டாளர்களின் உடனடிக் கவனத்தை வேண்டி நிற்கின்றது.
இலங்கையினுள்ளும் வெளியிலும் செயற்படுத்தப்பட்ட வானூர்திகளில் 48 முறைகள் அல்லது பகுதிகள் செயற்படாமை அல்லது தவறாகத் தொழிற்பட்டமையானது கண்டறியப்பட்டன. 2013 இல் 45 ATM அல்லது தொடர்பாடல் சம்பந்தப்பட்ட நிகழ்வுகள் பதிவு செய்யப்பட்டன. மேலும் 40 நிகழ்வுகள் “ATS அலகுடன் தொடர்பில்லை” என்றும் இதில் அதிகமான எண்ணிக்கை (27) மும்பாய் FIR இல் பதிவு செய்யப்பட்டன.

இலங்கைக் கடற்படையினரால் வானூர்தியின் ரசநஉடமயபந இன் நீருக்கடியில் இருந்து மீட்டதனைத் தொடர்ந்து, அதிகாரசபையானது 29 செப்ரெம்பர் 1998 இல் பலாலியிலிருந்து இரத்மலானை நிலையத்திற்கான பாதையில் இரணைதீவுப் பரப்பின் மீது பறத்தலினை மேற்கொள்கையில் ATC ராடர் திரையிலிருந்து மறைந்த லயன் எயார் நிறுவனத்திற்குச் சொந்தமான AN-24 ரக வானூர்தி மூலமான பறப்பு LN 602 இன் தவறுகை மீதான விசாரணையானது மீள ஆரம்பிக்கப்பட்டது. இவ் மீள் விசாரணையானது இலங்கைப் பொலிசாரின் தீவிரவாத விசாரணைப் பிரிவால் (P.I.D) விசாரணையொன்றின் ஆரம்பத்துடன் மீள ஆரம்பிக்கப்பட்டதுடன் விபத்தின் இறுதி அறிக்கையானது வரையப்பட்டுள்ளது.

CAA ஆனது வானூர்தி விபத்து விசாரணைகளை முன்னெடுப்பதற்காக பிரான்ஸின் BEA வானூர்தி விபத்து விசாரணை அமைப்புடனான உடன்பாடொன்றின் கீழ், பிரான்ஸில் அதன் விசாரணையாளர்களில் ஒருவரை பயிற்றுவிக்கக் கூடியதாக இருந்தது.

சாத்தியத்தன்மைக்கான ஆய்வொன்று நடுக்கடலில் வானூர்தி விபத்து விசாரணை மேற்கொள்வதற்காக காப்புறுதிக் காப்பீட்டை உருவாக்கிக் கொள்ள முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டதுடன், காப்புறுதிக் கட்டணத்தின் உயர் செலவு மற்றும் ஈடுபடுத்தப்படும் ஆபத்தின் குறைந்த நிகழ்தகவு என்ற பார்வையில், CAASL ஆனது காப்புறுதிக் காப்பீடொன்றை பெற்றுக் கொள்வதற்கான தீர்மானத்தினைக் கைவிடுவதாக தீர்மானித்தது.

## 2012 மற்றும் 2013 இல் அறிக்கையிடப்பட்ட அனைத்து வானூர்தி நிகழ்வுகள்



F-NR - நெருப்பு/ புகை (தாக்கமற்றது)
FUEL - எரிபொருள் சம்பந்தப்பட்டது
RAMP - தளக் கையாள்கை
SCF – PP - வலு இயந்திர பாதிப்பு/ பிழையான தொழிற்பாடு
SEC - பாதுகாப்பு சம்பந்தப்பட்டது
TURB - Turbulence encounter
LALT - குறைந்த நடத்தைச் செயற்பாடு
MAC - ARRPROX/ hear miss/ midair Collision
RE - ஓடுபாதை பயணம்
SCE-NP - முறைமை/உதிரிப்பணி பாதிப்பு/பிழையான தொழிற்பாடு (வலு இயந்திரமற்றது)
ADRM - விமானத்தளங்கள்
NOC - தொடர்பற்றது
CABRN - வானறைப் பாதுகாப்பு நிகழ்வுகள்
BIRD - பறவைத் தாக்கம்
OTHER - ஏனையவை

## உள்ளகக் கணக்காய்வுப் பகுதி

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை முகாமையின் ஈடுபாட்டுடன், உள்ளகக் கணக்காய்வுப் பகுதியானது உள்ளகக் கட்டுப்பாடுகளின் போதுமான தன்மையினையும், வினைத்திறனையும் பரிசீலிப்பதற்குரிய படிமுறைகள் எடுத்துள்ளது. இது மேலும் இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் உருவாக்கப்பட்ட கொள்கைகள் செயன்முறைகளுடன் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதனை இது உறுதி செய்வதாக அமைந்தது. 07 தொழிநுட்ப கணக்காய்வுகள் மற்றும் 09 நிதிக்கணக்காய்வுகள் உள்ளடங்களாக 2013 ஆம் ஆண்டு 33 கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.


### பகுதி வெளிப்படுத்தல்கள்

| பகுதிகள் | வழங்கப்பட்ட அறிக்கைகள் | கண்டுபிடிப்புக்கள் | முன்மொழிவுகள் |
|---|---|---|---|
| நிதி முகாமைத்துவம் | 09 | 81 | 03 |
| மனித வளம் மற்றும் அலுவலக முகாமைத்துவம் | 08 | 28 | 06 |
| வான் போக்குவரத்து மற்றும் சட்ட விவகாரங்கள் | 03 | 05 | 04<br>00 |
| வான்தகைமை | 01 | 03 | 01 |
| செயற்பாடுகள் | 01 | 04 | 00 |
| விஷேட செயற்றிட்டங்கள் | 01 | 08 | 00 |
| தனி நபர் அனுமதிப்பத்திரம் | 01 | 02 | 01 |
| ஏனையவை | 06 | 15 | 15 |
| மொத்தம் | 30 | 146 | |

### வரைவு 1 – வழங்கப்பட்ட கணக்காய்வு அறிக்கைகள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட கண்டுபிடிப்புகளின் எண்ணிக்கை – 2013

| ஆண்டு | மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுகள் | கண்டுபிடிப்புக்கள | முன்மொழிவுகள் |
|---|---|---|---|
| 2012 | 34 | 50 | 08 |
| 2013 | 33 | 146 | 15 |

### வரைவு 2 – 2012 உடனான ஒப்பீடு




வரைவு 3 – 2004 முதல் 2013 வரையில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுகளினதும் கண்டுபிடிப்புக்களினதும் எண்ணிக்கை

## விமானப் போக்குவரத்துப் பாதுகாப்புப் பகுதி

2013 இல் அங்கீகரிக்கப்பட்ட சோதனைத் திட்டத்தின் பிரகாரம், விமானப் போக்குவரத்துப் பாதுகாப்புப் பகுதி பின்வருமாறு நியதிச் சட்டச் செயற்பாடுகளை முன்னெடுத்தது.

| | | |
|---|---|---|
| விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு ஆய்வுகள் | - | 01 |
| பரிசோதனைகள் | - | 21 |
| நம்பகத்தன்மைக்கான சோதனைகள் | - | 01 |

மேற்குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளுக்கு மேலதிகமாக, விமானப் போக்குவரத்துப் பாதுகாப்புப் பகுதியானது 10 இற்கும் மேற்பட்ட சந்தர்ப்பங்களில் வானூர்திச் சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ள ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவினருக்கு உதவியிருந்தது.

### விமானப் போக்குவரத்துப் பாதுகாப்புப் பயிற்சி

விமானப் போக்குவரத்துப் பாதுகாப்புப் பகுதியானது ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவினரின் 25 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான வானூர்தி தேடற் செய்முறைகள் மீதான முழுமையான பயிற்சித் திட்டமொன்றினை நடாத்துதலின் மூலம் அப் பிரிவினருக்கு உதவி புரிந்துள்ளது.

விழிப்புணர்வு வெளிப்படுத்துகையானது வான்மூலம் சிறைக் கைதிகளை பரிமாற்றுதலின் போது பின்பற்றப்பட வேண்டிய சர்வதேச நியமங்கள், விதிகள், மற்றும் நிபந்தனைகள் தொடர்பில் இந்தியா மற்றும் இலங்கையைச் சேர்ந்த சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கு முன்னெடுக்கப்பட்டன.

மேலுமொரு விழிப்புணர்வு வெளிப்படுத்துகையானது குறித்த கைத்தொழிற் துறையினருக்காக விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பின் மீதான இணைப்பு 13 இன் திருத்தம் மீது முன்னெடுக்கப்பட்டது.

### சான்றுப்படுத்துகைகள்

விமானப் போக்குவரத்துப் பாதுகாப்புப் பாதுகாப்புச் சோதனையாளர்கள் 18 மார்ச் 2013 இல் செயற்பட ஆரம்பித்த MRIA இன் விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு ஏற்பாடுகளின் சான்றுப்படுத்துகைக்கென சான்றுப்படுத்துகைச் செய்முறையொன்றில் பங்குகொண்டது.

மீள்பார்வைக்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில் பின்வருமாறு AASL மற்றும் சிறிலங்கன் எயார்லைன்ஸின் திரைபடுத்துனர்களின் சான்றுப்படுத்துகை, மீள்சான்றுப்படுத்துகைகள், மற்றும் AASL இன் வழிப்படுத்துனர் சான்றுப்படுத்துகைகள் முன்னெடுக்கப்பட்டன.

| | | |
|---|---|---|
| திரைப்படுத்துனர்களின் சான்றுப்படுத்துகைகள் | - | 122 |
| வழிப்படுத்துனர்களின் வான்றுப்படுத்துகைகள் | - | 01 |
| திரைப்படுத்துனர்களின் சான்றுபடுத்துகைகள் | - | 349 |

### வெடிபொருட்கள் காவுனர்களுக்கான அனுமதி

வான்செலவு ஒழுங்கு விதிகள், சர்வதேச நியமங்கள், மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நடைமுறைகளின் பிரயோக ஏற்பாடுகளுக்கிணங்க, 88 அனுமதிகளானவை சரக்கில் வெடிபொருட்களை காவுவதற்கெனவும் சர்வதேச பயணங்களில் ஈடுபடுத்தப்பட்ட மிக மிக முக்கிய நபர்கள்/ மிக முக்கிய நபர்களின் பறப்புக்களின் போது விமானத்தில் வெடிபொருட்களை காவிச் செல்வதற்கான 51 அனுமதிகள் வழங்கப்பட்டன.

### விமானப் போக்குவரத்துப் பாதுகாப்புக் கூட்டங்கள

விமானப் போக்குவரத்துப் பாதுகாப்புப் பகுதியில் இணைக்கப்பட்டிருக்கும் உத்தியோகத்தர்கள் 2013 இல் விமானப் போக்குவரத்துப் பாதுகாப்புடன் தொடர்புபட்டதாக வெளிநாட்டில் நடத்தப்பட்ட ஐந்து கூட்டங்களில் பங்குகொண்டுள்ளனர்.

விமானப் போக்குவரத்துப் பாதுகாப்புப் பகுதி உத்தியோகத்தர்கள் விஜயத்தை மேற்கொண்டோரினை வினைத்திறனாகக் கையாள்வதற்கு உதவும் பொருட்டு BIA இலும் MRIA இலும் அதன் உத்தியோகத்தர்களை ஈடுபடுத்துவதன் மூலம் 2013 நவம்பரில் நடாத்தப்பட்ட பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டுடன் தொடர்புடைய விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு ஏற்பாடுகளில் ஈடுபட்டிருந்தனர்.

## விஷேட செயற்றிட்டப் பகுதி

### கீழ்க்கட்டுமான விருத்தி

2013 இல், சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையானது நீண்ட காலத் தேவையொன்றாகக் கருதப்பட்ட, அதாவது ஊழியர்களுக்குத் தேவையான அலுவலகக் கட்டடங்களையும் விடுதிகளையும் நிர்மாணிப்பதற்கான படிமுறைகளை எடுத்திருந்தது. இவ் விஷேட செயற்றிட்டப் பகுதியானது அத்தகைய நிர்மாணங்களைத் திட்டமிடல், ஒழுங்கமைத்தல், மற்றும் மேற்பார்வை செய்தல் என்பதான முக்கிய பங்கினைக் கொண்டிருந்தது.

### MRIA இல் அலுவலகக் கட்டடமொன்றினை நிர்மாணித்தல்

18 மார்ச் 2013 இல் இவ் விமான நிலையத்தின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து, CAASL ஆனது அதனது நியதிச் சட்டத் தொழிற்பாடுகளை மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தின் (MRIA) விமானப் போக்குவரத்துச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் பொருட்டு விரிவாக்கிக் கொள்ள வேண்டியிருந்தது.

இதன் தொடர்ச்சியாக, CAASL ஆனது MRIA இல் தொழிற்படுத்தப்படும் அதனது பரிசோதகர்களின் பயன்பாட்டிற்கென 2013 யூனில் அலுவலகக் கட்டடமொன்றின் நிர்மாணங்களை ஆரம்பித்து MRIA இல் அதனது அலுவலகத்தினை உருவாக்கிக் கொள்வதற்கான படிமுறைகளை முன்னெடுத்துள்ளதுடன், இவ் அலுவலகமானது 2014 இன் முதற் காலாண்டில் திறக்கப்பட எதிர்பார்க்கப்படுகின்றது.

### CAASL இற்கான தலைமையலுவலகக் கட்டட நிர்மாணம்.

2002 இல் DCA ஐ CAASL தொடரும் பொருட்டு, CAA ஆனது 1946 இல் DCA இன் உருவாக்கத்திலிருந்து நிரந்தரமான கட்டடமொன்றினை கொண்டிருக்கவில்லை. DCA அவ்வாறே CAA வெவ்வேறுபட்ட காலங்களில் வெவ்வேறு இடங்களில் குறிப்பிடத்தக்கதான கிரயங்கொண்டதான வாடகை அடிப்படையில் அமைந்த கட்டடங்களில் தொழிற்பாடுகளை முன்னெடுத்து வந்துள்ளது. அலுவலகக் கட்டடம் வாடகை அடிப்படையில் அமைந்திருந்ததால் CAASL ஆனது வேண்டப்படும் வசதி வாய்ப்புக்களுடன், வினைத்திறனானதொரு வேலைச் சூழலினை உருவாக்கிக் கொள்ள முடியாது போனதுடன், சர்வதேச தரத்திலும் கூடியதாக இருக்கக் கூடியதான அதனது செயற்பாட்டுத் தரத்திற்கு பொருந்தும் படியான நிரந்தர அடிப்படையிற் சேவைகளையும் வழங்கிக் கொள்ள முடியாமல் இருந்தது.

இதன் காரணமாக, CAA ஆனது கடந்த 60 ஆண்டுகளுக்கு மேலாக இருந்து வந்த பிரதானமானதொரு குறைபாட்டிற்கு தீர்வொன்றினைக் கொண்டுவரும் பொருட்டு, அதனது அனைத்துப் பிரதான செயற்பாடுகளையும் உள்ளடக்கிக் கொள்ளும் படியானதான வேண்டப்படும் இட வசதியினை

வழங்கி, அனைத்து வேண்டப்படும் வசதி வாய்ப்புக்கள் மற்றும் சேவையுடன் கூடியதான கலையம்சம் பொருந்திய கட்டடத் தொகுதியொன்றை நிர்மாணித்துக் கொள்வதற்கு தீர்மானித்தது. மேலும் CAA ஆனது அதன் சொந்த நிதியத்தினைப் பயன்படுத்தி சிவில் விமானப் போக்குவரத்தின் கௌரவ அமைச்சர் அவர்களினதும், பொதுத் திறைசேரியினதும் அனுமதியுடன், இந் நோக்கத்திற்காக BIA இல் அமைந்துள்ள நிலப்பரப்பொன்றினை பயன்படுத்திக் கொள்ளத் தீர்மானித்தது.

மேலும், CAA ஆனது அரசாங்கக் கொள்வனவு வழிகாட்டலுக்கு இணங்கியதாக, அமைச்சுக் கொள்வனவுச் சபை (MPC) ஒன்றினூடாக வழிப்படுத்தப்பட்ட திறந்த விலை மனுக்கோரற் செய்முறையினை முன்மொழியப்பட்ட கட்டட வடிவமைப்பு மற்றும் நிர்மாண மேற்பார்வைச் செயற்பாடுகளுக்காக நிபுணர் ஒருவரை தீர்மானித்தது. CAA ஆனது நவம்பர் 2013 இல் கட்டடத்தினை வடிவமைப்பதில் தெரிவு செய்யப்பட்ட நிபுணரை ஒழுங்கு செய்தது. 2016 இல் CAA ஆனது தனது தலைமையலுவலகக் கட்டட நிர்மாணப் பணிகளை முடிவிற்குக் கொண்டு வருவதற்குத் தீர்மானித்துள்ளது.

## வீரவில இல் CAA ஊழியர்களுக்காக விடுதிகள் / பங்காளாக்களை நிர்மாணித்தல்

MRIA இல் பாதுகாப்பு மற்றும் காப்பு மேற்பார்வைக் கடமைகளை விரிவுபடுத்திக் கொள்ளும் பொருட்டு, MRIA இல் இச் செயற்பாடுகளை முன்னெடுக்கும் CAA ஊழியர்களுக்காக நிரந்தரத் தங்குமிட வசதி வாய்ப்புக்களானவை கட்டாய தேவையொன்றாக அமைந்திருந்தது. எனவே, CAA ஊழியர்களது பயன்பாட்டிற்காக வீரவிலவில் தலா ஒவ்வொன்றிலும் நான்கு படுக்கையறைகளுடன் கூடியதான இரண்டு தட்டுக்களைக் கொண்ட இரட்டை மாடிக் கட்டடங்களை நிர்மாணித்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. வடிவமைப்பு மற்றும் நிர்மாணத்திற்காக ஒப்பந்தக்காரர் ஒருவரை தெரிவு செய்து கொள்வதற்கான கொள்வனவுச் செய்முறை 2013 இல் முடிவுற்றது. 2014 ஒக்டோபரில் குறித்த விடுதிகள் அல்லது பங்களாக்களின் கட்டுமாணப் பணிகளை நிறைவுறுத்திக் கொள்ள முன்மொழியப்பட்டுள்ளது.

## வருடாந்த வெளிக்கள வேலைப்பட்டறை

“தனிநபர்களுக்கிடையிலான தொடர்புகளை விருத்தி செய்வதன் மூலம் உற்பத்தியாற்றலை அதிகரித்துக் கொள்ளல்” எனும் கருப்பொருளில் மூன்று நாட்கள் கொண்ட ஊழியர்களுக்கான வெளிக்கள வேலைப்பட்டறையொன்று 2013 ஒக்டோபர் 25, 26, மற்றும் 27 ஆகிய தினங்களில் கிருந்தல றோயல் லோட்டஸ் ஹோட்டலில் முன்னெடுக்கப்பட்டது. இவ் வேலைப்பட்டறையானது CAA இன் தலைவர், உபதலைவர், சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகம், மற்றும் அதன் ஊழியர்களில் பெரும்பாலானோர் என மொத்தமாக 113 பேருடன் முன்னெடுக்கப்பட்டது. இலங்கை பவுண்டேசன் நிறுவனத்தின் தலைவரான பேராசிரியர் ரஞ்சித் பண்டார மற்றும் இரண்டு ஏனைய வளவாளர்கள் 26 ஆம் திகதி நடாத்தப்பட்ட உள்ளக முயற்சிகளை முன்னெடுத்தனர். மேலும், 25 ஆம் திகதி CAA இன் வான்தகமைப் பகுதியால் கையாளப்பட்டு வரும் செயற்பாடுகளின் குறுகிய விளக்கமளித்தலுக்கு மேலாக, வெப்பவாயு பலூனின் செயற்பாடுகள் மீதான செய்முறை விளக்கமொன்றும் கொடுக்கப்பட்டது.



## தேசத்திற்கு மகுடம் தேசியக் கண்காட்சி

10 நாட்களைக் கொண்டதாக பெப்ரவரி 2013 இல் அம்பாறை ஹடி இன்ஸ்ரியூட்டில் நடாத்தப்பட்ட ஐந்தாவது தேசத்திற்கு மகுடம் தேசியக் கண்காட்சியில் CAA ஆனது கூடமொன்றினைக் காட்சிப்படுத்தியது. இதற்கு மேலாக, CAA இன் சார்பில் குறித்த பகுதியானது 2.7 மில்லியன் செலவில் CAA இன் கூட்டிணைக்கப்பட்ட சமூகநல செயலாற்றுகையின் கீழ், 2013 தேசத்திற்கு மகுடம் தேசியக் கண்காட்சியுடன் இணைந்த வகையில் அம்பாறை மாவட்டத்திலுள்ள வலகம்பர விகாரையில் பகுதியளவில் நிர்மாணிக்கப்பட்டிருந்ததான மண்டபத்தினைப் பூர்த்தி செய்து அதன் நிர்வாகத்திடம் கையளித்தது.


## CAPSA-AP உதவியாளர் விஜயத்திற்கு நிர்வாக உதவியளித்தல்

ICAO CAPSA-AP (சிவில் விமானப் போக்குவரத்தின் பொது மக்களின் சுகாதார விடயங்களை முகாமை செய்தல் மற்றும் பாதுகாத்தலுக்குமான கூட்டிணைக்கப்பட்ட ஏற்பாடு – ஆசிய பசுபிக் பிராந்தியம்) அமைப்பின் ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட குழுவொன்று விமானப் போக்குவரத்துத் துறையில் பொது சுகாதார அவசர தயார் நிலைப்படுத்தற் திட்டங்கள் (PHE) உடன் தொடர்புபட்ட WHO தேவைப்பாடுகள் மற்றும் வழிகாட்டல்களை உள்நாட்டு விமானப் போக்குவரத்துக் கைத்தொழிலில் ஈடுபடுவோர் மற்றும் ICAO இன் பொது சுகாதார நலன் விரும்பிகளுக்கிடையில் தேவையேற்படுமிடத்து BIA இல் நடைமுறையிலுள்ள ஏற்பாடுகளை மதிப்பீடு செய்வதுடன், அபிவிருத்திக்கான முன்மொழிதல்களை வழங்கி, விழிப்புணர்வை உருவாக்கிக் கொள்ளவென 2013 மே 28 முதல் 29 வரை இலங்கையில் இலக்கொன்றினை முன்னெடுத்தது.

சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சு, சுகாதார அமைச்சு, CAA, விமான நிலையச் செயற்படுத்துனர்கள், விமான நிலைய மருத்துவ உத்தியோகத்தர்கள், பாதுகாப்புப் பகுதியினர், சுங்கப் பகுதியினர், குடிவரவுப் பகுதியினர், மற்றும் விமான சேவைப் பிரதிநிதிகள் என வேறுபட்ட நிறுவனங்களிலிருந்து 40 உத்தியோகத்தர்கள் சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்தில் ஈடுபடும் தேசிய பொது சுகாதார உடனடி நிகழ்ச்சித் திட்டமொன்றின் உருவாக்கலுக்கான இணக்கப்பாட்டொன்றுடன் முடிவுற்ற இவ் விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சியில் பங்கு கொண்டனர்.

## விமானப் போக்குவரத்து எரிபொருள் விலையினைக் கண்காணித்தல்

விஷேட செயற்றிட்டப் பகுதியானது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடமிருந்து விமானப் போக்குவரத்து எரிபொருள் விலைகள் மீதான மாதாந்த அறிக்கையொன்றை பெற்றதுடன், 2013 காலத்தில் அதன் போக்கைக் கண்காணித்துக் கொண்டது.




மூலம்: இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

## வெளியீடுகள் / அறிக்கைகள்

2012 வருடாந்த அறிக்கையானது 2002 இன் 34 ஆம் இலக்க இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைச் சட்டத்திற்கு ஏற்புடைய வகையில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட கால வரையறையினுள் தொடர்புபட்ட அதிகாரசபைக்கு கட்டாயப்படுத்தப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது.

விஷேட செயற்றிட்டப் பகுதியானது தொடர்புபட்ட அமைச்சு மற்றும் மத்திய வங்கிகளுக்கு பௌதீக மற்றும் செய்முறை அறிக்கைகள், குழு நிலைப் பாதீட்டு அறிக்கைகள், திட்டங்கள், மற்றும் அபிவிருத்தி அறிக்கைகள் வேண்டப்படுமிடத்து சமர்ப்பிக்கின்றது.

சிவில் விமானப் போக்குவரத்துத் தெழிவூட்டல் நிகழ்ச்சி
மேலும், CAA ஆனது விமானப் போக்குவரத்தின் எதிர்கால மனித வலுத் தேவைகளை விருத்தி செய்வதற்கான திட்டமொன்றினை ஆரம்பித்துள்ளது. இதன் முள்னோக்கிய பயணமொன்றாக, CAA நாடொன்றின் சமூக, பொருளாதார விருத்தி மற்றும் இணைந்த தொழில்சார் வாய்ப்பில் விமானப் போக்குவரத்தின் முக்கியத்துவத்தினை பாடசாலைச் சிறார்களிடத்தில் தெழிவூட்டலை ஏற்படுத்தும் பொருட்டு, விஷேட செயற்றிட்டங்கள் பகுதியின் கீழ், தொழிற்படும் சிவில் விமானப் போக்குவரத்து அபிவிருத்தி மற்றும் அறிவூட்டற் குழு (CADEC) என்ற அமைப்பினை தாபித்தது. மீளாய்விற்கு உட்படுத்தப்பட்ட வருடத்தில் 16 விமானப் போக்குவரத்துத் தெழிவூட்டல் நிகழ்வுகளை அநுராதபுரம், அம்பாறை, கொழும்பு, காலி, அம்பாந்தோட்டை, குருநாகல், மொனறாகலை, மற்றும் புத்தளம் மாவட்டங்களில் அமைந்துள்ள பாடசாலைகளில் முன்னெடுக்கப்பட்டன.

“குவான்ஷர” எனப்படும் விமானப் போக்குவரத்து அறிவூட்டற் சஞ்சிகையானது காலாண்டு வெளியீடாக வருடத்திற்கு நான்கு சஞ்சிகைகள் விமானப் போக்குவரத்துத் துறையில் பாடசாலை மாணவர்களது ஊக்கத்தையும் அவர்களது அறிவையும் அதிகரித்துக் கொள்ளும் நோக்குடன், CAA ஆல் வெளியிடப்படுகின்றது. இச் சஞ்சிகை 3100 பாடசாலைகளுக்கு இலவச அடிப்படையில் வினியோகிக்கப்பட்டு வருவதுடன், இது மிகவும் பிரபல்யமடைந்து அதன் பயனாளிகளிடமிருந்து பரந்தளவிலான நன்மதிப்பினையும் பெற்றுள்ளது,

“ தேசிய பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கு மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தின் பங்களிப்பு” எனும் தலைப்பில் கட்டுரைப் போட்டியொன்று நாடு பூராகவும் பாடசாலை ரீதியில் உருவாக்கப்பட்டுள்ள சிவில் விமானப் போக்குவரத்துக் கழகங்களுக்கிடையில் நடாத்தப்பட்டதுடன், பரிசுகளும் வெற்றியாளர்களுக்கிடையில் வழங்கப்பட்டன.

## விமானத்தளம் மற்றும் வான்செலவு சேவைகள் பகுதி

### வான்வெளி முகாமைத்துவம்

தேசிய வான்பரப்பானது அத் தேசத்திற்கு மதிப்புமிக்கதொரு சொத்தாகும். பாதுகாப்பானதும் வினைத்திறனுமான வான் பரப்பொன்று நாட்டினது நலனுக்கும் பொருளாதார அபிவிருத்திக்குமான ஆகக் கூடுதலான நன்மையை தொடர்ந்து வழங்கி வரும். தேசத்தின் வேறுபட்ட பாதுகாப்புத் தேவைகளை கருத்திற் கொள்ளும் அதேவேளை, ஏற்கனவேயுள்ள நியதிச்சட்ட ஏற்பாடுகளினுள் அமைந்த வகையில், மீளாய்விற்கு உட்பட்ட காலத்தில் வான் பரப்பின் பயன்பாட்டினை பெற்றுக் கொள்வதற்கு அம்மதிப்பு மிக்க சொத்தினது பாதுகாப்பையும் வினைத்திறனையும் முகாமை செய்து கொள்வதனை தொடர்ந்து மேற்கொண்டதுடன், இந்த உண்மையின் முக்கியத்துவத்தினை வலியுறுத்திக் கொள்வதற்கு விமானத்தளம் மற்றும் வான் செலவு சேவைகள் பகுதியால் தேவையான ஒவ்வொரு சாதகமான அளவீடுகளும் எடுக்கப்பட்டது.

குறிப்பாக இவ் வருடத்தில் இவ் இலக்கினை அடைந்து கொள்ளும் பொருட்டு, வான் வழிகாட்டற் சேவை வழங்குனர், வரையறுக்கப்பட்ட விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனி, மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சு என்பனவற்றுடனான கூட்டிணைவுடன், இலங்கைக்கு ஒதுக்கப்பட்ட ஆட்புல வான்பரப்பினுள் உறுப்பு நாடுகளுக்காக, ICAO ஆல் பரிந்துரைக்கப்பட்ட செயற்கைக் கோளை (satellite) அடிப்படையாகக் கொண்ட வான் செலவு வழிகாட்டல் முறைமையின் (PBN) அமுலாக்கத்திற்கு ஒவ்வொரு சாத்தியமான முயற்சியையும் முன்னெடுத்து வருகின்றது. இந் நோக்கத்திற்கென, குறித்த பகுதியானது PBN இன், பிராந்திய அமுலாக்கலுக்காக நாடுகளுக்கு உதவி செய்வதற்கு ICAO ஆல் உருவாக்கப்பட்ட ICAO பறப்புச் செய்முறை நிகழ்ச்சியுடன் மிக நெருக்கமாகப் பணியாற்றி வருகின்றது.

### உபகரணப் பறத்தற் செய்முறைக்கான அனுமதி

குறித்த பகுதியானது வான் வழிகாட்டற் சேவை வழங்குனர் மற்றும் வரையறுக்கப்பட்ட விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனி என்பனவற்றால் வடிவமைக்கப்பட்ட பறத்தற் செய்முறையின் அங்கீகரித்தலுக்கான பொறுப்பினைக் கொண்டுள்ளது. 2013 காலங்களில் குறித்த பகுதியானது மூன்று உபகரண அணுகுகைச் செய்முறைகள், பத்து நியம உபகரண வருகைச் செய்முறைகள் மற்றும் மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்திற்கான வான் செலவியல் அட்டவணை என்பனவற்றிற்கு அனுமதியளித்திருந்தது.

### நீர் விமானத்தளங்களின் சான்றுப்படுத்துகைக்கான ஒழுங்கு விதிகள்

இவ் வருட ஆரம்பத்தில், நாட்டினுள் அமையப்பெற்றுள்ள நீர் நிலைகளில் மிதப்பு விமானங்களின் செயற்பாட்டிற்காக உள்நாட்டு வானூர்திச் செயற்பாட்டாளர்களிடமிருந்தான கோரிக்கைகள் கணிசமான அளவில் அதிகரித்துக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. இதன் காரணமாக குறித்த பகுதியானது நீர் விமானத்தளங்களை சான்றுப்படுப்படுத்துவதற்கான ஒழுங்கு விதிகளைத் தயாரித்ததுடன், குறித்த ஒழுங்கு விதிகளின் முழுமை பெறுவதற்கு முன்பாக அதன் நலன் விரும்பிகளிடமிருந்து அபிப்பிராயங்கள் வரவழைக்கப்பட்டன.

இதற்கு மேலதிகமாக, குறித்த பகுதியானது இவ்வாறான நீர் நிலைகளினுள் மிதப்பு விமானங்கள்

செயற்படுவதனால் நீர் நிலைகளில் ஏற்படக்கூடிய சூழலியல் தாக்கங்களை மதிப்பீடு செய்து கொள்வதற்கு ஆய்வொன்று முன்னெடுக்கப்படுவதற்கான படிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. குறித்த பகுதியானது ஆரம்பத்தில் மகாவலி நீர் நிலையில் நாரா (NARA) எனும் அமைப்புடன் இணைந்து இந்த ஆய்வினை முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

## விமானத்தளச் சான்றுப்படுத்தற் சோதனை- மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் (MRIA)

வானூர்திச் செயற்பாடுகளுக்காக புதியதோர் சர்வதேச விமான நிலையம் திறக்கப்படுவதற்கு முன்னதாக, சிவில் விமானப் போக்குவரத்துச் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துனராகக் கருதப்படும் சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையானது ICAO இன் தேவைப்பாடுகளுக்கிணங்க, குறித்த விமானத்தளத்தினைச் சான்றுப்படுத்தவேண்டியிருந்தது. இதனை செயன்முறைப்படுத்திக் கொள்ளும் நோக்கில், குறித்த பகுதியானது விமான நிலையத்தில் வானூர்தி பாதுகாப்புச் செயற்பாடுகளுக்கான சர்வதேச மற்றும் உள்நாட்டுத் தேவைப்பாடுகளை மதிப்பிட்டுக் கொள்வதற்காக 2013 மார்ச் 04 முதல் 08 வரையில் ஐந்து நாட்கள் கொண்ட சோதனையொன்றை முன்னெடுத்தது. அச் சோதனையின் இறுதியில், சோதனைக் காலத்தில் அவதானிக்கப்பட்ட குறைகளைச் சரிசெய்து கொள்வதற்குத் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர், குறித்த விமான நிலையமானது 2013 மார்ச் 18 இல் சான்றுப்படுத்தப்பட்டதுடன், அது உத்தியோக பூர்வமாக அன்று திறந்துவைக்கப்பட்டது.

## வான் நெரிசற் கட்டுப்பாட்டு சேவைகள்

குறித்த பகுதிளானது இரத்மலானைப் பிரதேசக் கட்டுப்பாட்டு நிலையம், BIA அணுகுகைக் கட்டுப்பாட்டு நிலையம், BIA, RMA, மற்றும் MRIA இல் உள்ள கட்டுப்பாட்டுக் கோபுரங்களை உள்ளடக்கியதாக 32 ATC மேற்பார்வைச் சோதனைகளை முன்னெடுத்தது.

## விமானத்தளங்கள்

குறித்த பகுதியானது BIA, RMA, மற்றும் MRIA இல் 36 விமானத்தள மேற்பார்வைச் சோதனைகளை முன்னெடுத்தது. இதற்கு மேலதிகமாக, குறித்த பகுதியானது நீர் விமானத்தளங்கள் மீது நான்கு சோதனைகளையும், ஹெலிகொப்ரர் தளங்கள் மீது ஏழு சோதனைகளையும் முன்னெடுத்திருந்தது.

## வானியற் தகவற் சோதனைகள்

குறித்த பகுதியானது BIA மற்றும் MRIA இல் அமைந்துள்ள வானியற் தகவற் சேவைகள் மீது 19 மேற்பார்வைச் சோதனைகளை முன்னெடுத்திருந்தது.

நியதிச் சட்ட மேற்பார்வைச் சோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகளுக்கு வேண்டப்படும் சீராக்கல் நடவடிக்கைகளுக்கு இலங்கை சிவில் விமான நிலையங்களின் வான் வழிகாட்டற் சேவைகள் மற்றும் செயற்பாடுகளின் ஏற்பாடுகளுக்குப் பொறுப்பாக அமைந்துள்ள வரையறுக்கப்பட்ட விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனிக்கு தெரிவிக்கப்பட்டது.

## மேலாகப் பறத்தல் மற்றும் தரையிறங்கலுக்கான அனுமதி

2013 இல் CAA ஆனது இலங்கை வான் பரப்பில் பறப்பதற்காக 27,781 பறப்புக்களுக்கு அனுமதியளித்திருந்ததுடன், BIA இல் தரையிறங்குவதற்காக 27,082 பறப்புக்களுக்கு அனுமதியளித்திருந்தது. 2012 இல் 24,061 எண்ணிக்கை கொண்ட இலங்கை வான்பரப்பின் மேலான வானூர்திப் பறப்புக்களுடன் ஒப்பிடும் போது, 2013 இல் 13% அதிகரிப்பினை வெளிப்படுத்தியிருந்தது. அவசர நிலமைகளின் கீழ் தரையிறக்குவதற்கு பொருத்தமான பிரதியீட்டு விமான நிலையமாக பெரும்பாலாக வெளிநாட்டு விமான சேவைகள் இவ் விமான நிலையத்தினை இனங்கண்டுள்ளதால் இவ் அதிகரிப்பிற்கு MRIA இன் திறப்பானது பங்களித்துள்ளது.

## பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டிற்காக செயற்படுத்தப்பட்ட பறப்புக்கள்

குறித்த பகுதியானது பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டுக் காலத்தில் BIA இல் 24 மணி நேரச் செயற்பாட்டு அறையொன்றை செயற்படுத்தியதன் மூலம் CHOGM இற்காகச் செயற்படுத்தப்பட்ட விஷேட பறப்புக்களுக்கான அனுமதி வழங்கலில் பாரிய பங்களிப்பொன்றினை வழங்கியிருந்தது.

## ஹெலிகொப்டர் மூலமான வான் வேலைச் சேவைகள்

பல வகையான வர்த்தக ரீதியான ஹெலிகொப்டர்கள் வானிலிருந்து புகைப்படமெடுத்தல், வானிலிருந்து காணொளி உருவாக்கம், மற்றும் இலத்திரனியற் பிரதிகள், மலர்ப் பொழிவுகள், துண்டுப் பிரசுரப் பொழிவுகள், நிறுவன உருவாக்கங்களின் விளம்பர நோக்கங்களுக்காக வியாபார இலச்சினை பிரசித்தப்படுத்தல் வேலைகள் போன்ற வான் வேலைச் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தன. குறித்த பகுதியானது 2013 காலப்பகுதியில், 31 அவ்வாறான அனுமதிகளை ஏனைய தொடர்புபட்ட முகவர்களின் இணங்குதல்களுக்கிணங்க வழங்கியிருந்தது.

## ஏனைய வான் வழிகாட்டற் சேவைகளுடன் தொடர்புபட்ட செயற்பாடுகள்

மேலும் குறித்த பகுதியானது பிராந்திய ஒழுங்குவிதிகளின் பிரகாரம், உயர்ந்த அமைப்புக் கொண்ட நிர்மாணங்களுக்கான உயரம் தொடர்பான அனுமதிகளை வழங்குவதற்கும், வான் நெரிசற் சம்பவங்களுடன் தொடர்புபட்ட விசாரணைகளை மேற்கொண்டு சரிசெய்தற் செயற்பாடுகளுக்காக சேவை வழங்குனர்களுக்கு முன்மொழிவுகளை மேற்கொள்ளல், தரங்கள் வழங்குவதற்காக வான் நெரிசற் கட்டுப்பாட்டாளர்களைப் பரீட்சித்தல் மற்றும் இவர்களது நியமங்களை பேணும் பொருட்டு அவர்களுக்கான ஏனைய பரீட்சைகளை நடாத்துதல் மற்றும் வழங்கலின் போதும் திருத்தங்களை மேற்கொள்ளும் போதும் வானியற் தகவல் வெளியீட்டு (AIP) பொதியில் உள்ளடக்கப்பட்ட விடயங்களுக்காக அனுமதியளித்தல் போன்றவற்றிற்கு பொறுப்பாகக் காணப்படுகின்றது. குறித்த பகுதியால் மேற்கொள்ளப்பட்ட மேற்படி செயற்பாடுகள் தொடர்பான புள்ளிவிபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| உயர்வான அமைப்புடைய நிர்மாணங்களுக்கான அனுமதி | - 312 |
| விசாரணை மேற்கொள்ளப்பட்ட ATC சம்பவங்கள் | - 02 |
| நடாத்தப்பட்ட ATC தரப்படுத்தற் பரீட்சைகள் | - 23 |
| ATC வானூர்தி மாதிரிகைச் சோதனை | - 45 |
| மொழித் தேர்ச்சிப் பரீட்சை | - 66 |
| நடாத்தப்பட்ட வானொலித் தொலைபேசிப் பரீட்சை | - 43 |
| NOTOM வழங்குவதற்கான அனுமதி | - 186 |
| வானியற் தகவற் சுற்றறிக்கைகளின் வழங்குகை | - 07 |
| வழங்கப்பட்ட AIP குறை நிரப்புகள் | - 06 |
| வழங்கப்பட்ட AIP திருத்தங்கள் | - 01 |

# விமானப் பறப்புற் பாதுகாப்புப் பிரிவு

## தனிநபர் அனுமதிப்பத்திரப் பகுதி

தனிநபர் அனுமதிப்பத்திரப் பகுதியானது விமானப் போக்குவரத்துடன் தொடர்புபட்டுள்ள ஆளணியினரின் அனுமதிப்பத்திரங்களின் செய்முறையுடன் பணிகளை முன்னெடுத்து வந்துள்ளது. மீள்பார்வைக்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பிரதான செயற்பாடுகளில் சில பின்வருமாறு காணப்பட்டன.

### புதிய பயிற்சிப் பாடசாலைகளுக்கான சான்றுப்படுத்தல்

தனிநபர் அனுமதிப்பத்திரப் பகுதியானது இலங்கையிற் பறத்தற் பயிற்சி வகைகளை ஏற்பாடு செய்யும் பொருட்டு, ஐந்து (05) அத்தகைய நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பச் செய்முறைகளை ஆரம்பித்தது. அவையாவன, சிறெக் மெரீரைம் கம்பஸ், சிறிலங்கன் எயார்லைன்ஸ் பறத்தற் பயிற்சி நிறுவனம், தெற்காசிய சேவைகள் வகைத்தரப்படுத்தற் பயிற்சி நிறுவனம், எவ். எயார்வேய்ஸ் மற்றும் மிலேனியம் பிளைட் அக்கடமி என்பனவாகும்.

### அனுமதிப்பத்திர தகவல் முகாமைத்துவ முறைமை

தன்னியக்க முறைமையொன்றினூடான தனிநபர் அனுமதிப்பத்திரங்களின் வழங்குகையை மேற்கொள்வதற்கு கொழும்பு பல்கலைக்கழகத்தின் ஸ்கூல் ஒவ் கொம்பியூட்டரிங் அமைப்பிடமிருந்து பெறப்பட்ட தொழினுட்ப உதவியுடன் விருத்தியாக்கப்பட்ட தனிநபர் அனுமதிப்பத்திர தகவல் முகாமைத்துவ முறைமையானது பரீட்சார்த்த அடிப்படையில் செயற்பாடுகளுக்காக ஆரம்பிக்கப்பட்டது. குறித்த முறைமையானது அனுமதிப்பத்திரதாரர்களை குறித்த முறைமையினுள் அனுமதிப்பதற்கும், அவர்களது சொந்த விபரங்களை உருவாக்கிக் கொள்வதற்கும், முறைமையினூடாக விண்ணப்பங்களை அனுப்பிக்கொள்ளவும் வழிவகுப்பதுடன், CAA ஆல் அவ் விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டதும் இம் முறைமையினூடாக விண்ணப்பங்கள் செயன்முறைப்படுத்தப்படுகின்றன. குறித்த முறைமை சாதாரண முறைமையுடன் ஒப்பிடுகையில் செய்முறைக்கான நேரம் மீதப்படுத்தப்படுவதுடன், விண்ணப்பதாரியின் நேரடித் தொடர்புகளுக்கான தேவை குறைக்கப்படுகின்றது.

### பறத்தற் பயிற்சிப் பாடசாலைகள் / விமானப் போக்குவரத்துப் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் பரிந்துரை செய்யப்பட்ட வைத்தியசாலைகள்

தனிநபர் அனுமதிப்பத்திரப் பகுதியானது விமானப் போக்குவரத்துப் பயிற்சி வழங்கல் நிலையங்கள் மற்றும் பரிந்துரை செய்யப்பட்ட வைத்தியசாலைகள் மீது பத்து (10) நியதிச் சட்ட சோதனைகளை முன்னெடுத்தது.

### சர்வதேச மாநாட்டில் பங்கு கொள்ளல்

தனிநபர் அனுமதிப்பத்திரப் பகுதியிலிருந்து ஒரு சோதனையாளர் சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பினால் மாற்றப்பட்ட மொன்றியல் பல்லின விமான அனுமதிப்பத்திரம் மாநாட்டில் பங்குகொண்டது.

### வான் மருத்துவ அலகிற்காக புதிதாக சிவில் விமானப் போக்குவரத்து மருத்துவப் பரிசோதகர்களின் நியமனம்

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையானது தனிநபர் அனுமதிப்பத்திரத்திற்கான தகைமையினைப் பெற்றுக் கொள்வதற்கு மருத்துவப் பொருத்தப்பாட்டினை உறுதி செய்து கொள்வதற்கு

வேண்டப்படுபவர்களாகக் கருதுவோர் மீது மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு இரண்டு (02) புதிய மருத்துவப் பரிசோதகர்கள் நியமிக்கப்பட்டனர்.

## பறத்தல் வழிகாட்டுநர் கற்கைநெறி

குறித்த பகுதியானது உதவிப் பறத்தல் வழிகாட்டுநர்களின் பயிற்சிநெறிக்காக கொஸ்மோஸ் ஏவியேஷனினால் சமர்ப்பிக்கப்பட்ட உதவிப்பறத்தல் வழிகாட்டுநர்களுக்கு பயிற்சிநெறி நிகழ்ச்சி திட்டத்திற்கான அனுமதியை வழங்கியிருந்தது.

## வெளிநாட்டு விமானிகளை ஆட்சேர்த்தல்

சிறிலங்கன் எயார்லைன்ஸ், மிஹின்லங்கா, பி(f)ற்ஸ் ஏவியேஷன் மற்றும் ஏனைய உள்நாட்டு விமான சேவைகளின் வேண்டுகோளுக்கிணங்க, குறித்த பகுதியானது போதுமான அளவு திறனுள்ள உள்நாட்டு விமானிகளின் பற்றாக்குறை காரணமாக குறித்த விமான சேவைச் செயற்பாடுகளுக்கு உதவும் பொருட்டு 41 வெளிநாட்டு விமானிகளின் ஆட்சேர்த்தலுக்கான அனுமதியினை வழங்கியிருந்தது.

## மருத்துவப் பரிசோதனை / மருத்துவச் சபைக் கூட்டங்கள்

குறித்த பகுதியானது மீளாய்விற்கு உட்படுத்திய காலப்பகுதியில் விமானிகளுக்கும் வான் நெரிசற் கட்டுப்பாட்டாளர்களுக்கும் அனுமதிப்பத்திரங்களை வழங்கும் பொருட்டு, 198 ஆரம்ப கட்ட மருத்துவப் பரிசோதனைகளையும், 760 மீண்டெழும் மருத்துவப் பரிசோதனைகளையும் முன்னெடுத்திருந்தது. வான் மருத்துவச் சபையானது மருத்துவத் தகுதி நிலையுடன் தொடர்புபட்ட மட்டமான நிலைகளுக்குத் தீர்வு காணும் பொருட்டு இவ் வருடம் நான்கு கூட்டங்களை நடாத்தியிருந்தது.

## ஒதுக்கீடு செய்யப்பட்ட வைத்தியசாலைகளுடனான உடன்பாடு

குறித்த பகுதியானது விமானிகளுக்கும் வான் நெரிசற் கட்டுப்பாட்டாளர்களுக்குமான மருத்துவப் பரிசோதனைகளை முன்னெடுத்துக் கொள்வதற்காக டேடன்ஸ் வைத்தியசாலை, ஆசிரி சேயிக்கல் வைத்தியசாலை மற்றும் லங்கா வைத்தியசாலை என்னும் ஒதுக்கீடு செய்யப்பட்ட வைத்தியசாலைகளுடனான உடன்பாடுகளை மீளப் புதுப்பித்துக் கொண்டது. மேலும், குறித்த பகுதியானது அவ்வாறான சேவைகளை வழங்கும் பொருட்டு, நீர்கொழும்பு வீதி, வத்தளயில் அமைந்துள்ள ஹேமாஸ் வைத்தியசாலை மற்றும் நவலோக வைத்தியசாலைகளிடமிருந்தான விண்ணப்பங்களைப் பரிசீலனைக்கு உட்படுத்த ஆரம்பித்தது. அவை அனுமதிக்கப்படும் போது, அவ் வைத்தியசாலைகள் விமானிகள் மற்றும் வான் நெரிசற் கட்டுப்பாட்டாளர்கள் அனுமதிப்பத்திரங்களுக்கான மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொள்ள விண்ணப்பதாரருக்குக் கிடைக்கக்கூடிய தெரிவினை விரிவுபடுத்துவதாக அமையும்.

## சிவில் விமானப் போக்குவரத்து மருத்துவப் பரிசோதகர்களுக்கான வேலைப்பட்டறை

குறித்த பகுதியானது சிவில் விமானப் போக்குவரத்து மருத்துவம் தொடர்பான ஒரு நாள் வேலைப்பட்டறையொன்றை ஒழுங்கு செய்தது. இதில் சில மருத்துவ விடயங்களும் மருத்துவ பரிசோதனைக்கான ICAO இணைப்பு 01 இன் தேவைப்பாடுகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது. இவ் வேலைப்பட்டறையில் சிவில் விமானப் போக்குவரத்து மருத்துவ சபை உறுப்பினர்கள் பங்கு கொண்டனர்.

## சிவில் விமானப் போக்குவரத்து அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு இராணுவ அனுபவங்களை இனங்கண்டு கொள்ளல்

சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவொன்று சிவில் விமானிகளுக்கான அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கான அவ்வாறான பயிற்சிசெறிகளை

இனங்கண்டு கொள்வதற்காக ICAO இணைப்பு 01 இன் தேவைப்பாடுகளுக்கு அமைவாக பயிற்சிநெறி நியமங்களை மதிப்பீடு செய்துகொள்ளும் பொருட்டு சீனக்குடாவிலுள்ள இலங்கை விமானப்படையின் பறத்தற் பயிற்சிக் குழாமினர் மீது சோதனை நடவடிக்கையொன்று முன்னெடுக்கப்பட்டது. இச் சோதனை மதிப்பீட்டு முடிவுகள் தகவல் வழங்குகையின் பொருட்டும், நடவடிக்கைகளை முன்னெடுக்கும் பொருட்டும் இலங்கை விமானப்படை கட்டளைத் தளபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### பறத்தற் பரிசீலனை பரீட்சகர்களுக்கான ஞாபகமூட்டல் பயிற்சியளித்தல்

குறித்த பகுதியானது பறத்தற் பயிற்சியளித்தல் பரிசீலனைப் பரீட்சகர்களுக்கான ஞாபகமூட்டல் பயிற்சிநெறியொன்றை ஒழுங்கு செய்திருந்தது. இப் பயிற்சிநெறியில் அனைத்து ஒதுக்கீடு செய்யப்பட்ட பறத்தற் பரிசீலிப்புப் பரீட்சகர்களும் கலந்து கொண்டனர். பங்குபற்றியோருக்கு இப் பயிற்சிநெறியானது அவர்களது அறிவினை ஞாபகமூட்டிக் கொள்வதற்கு உதவி புரிவதாக அமைவதுடன் மட்டுமன்றி, அவர்களது அனுபவத்தினை பகிர்ந்து கொள்ளவும் உதவிபுரிந்தது.

### கணனி அடிப்படையில் அமைந்த AML பரீட்சைக்கான முறைமையொன்றை உருவாக்கல்

தனிநபர் அனுமதிப்பத்திரப் பகுதியானது கணனி அடிப்படையில் அமைந்த AML பரீட்சையொன்றிற்கான முறைமையை ஆரம்பித்துள்ளது. இதன் முதல் அங்கமாக, குறித்த பகுதியானது ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்த ஒன்றிணைந்த விமானப் போக்குவரத்து அதிகாரசபையிடமிருந்து அனைத்துப் பன்னிரெண்டு அத்தியாயங்களுக்குமான வினாக்கள் வங்கியொன்றினைக் கொள்வனவு செய்துள்ளது. வினாக்களை வடிவமைப்புச் செய்தல் மற்றும் மதிப்பீட்டு வேலைகளை ஆரம்பித்துள்ளதுடன், அவ் வேலைகள் செய்முறையிற் காணப்படுகின்றன.

### CMA செயற்பாடுகள்

குறித்த பகுதியானது 101 ICAO - SARPS களின் செயற்றிறன் மிக்க அமுலாக்கலுக்கும் கண்காணிப்பிற்கும் பொறுப்பாக அமைவதுடன், SARPS களின் அமுலாக்கல் மட்டம் 99.44% ஆகக் காணப்படுகின்றது. இந் நோக்கங்களுக்கென, குறித்த பகுதியானது 71 உடன்பாட்டு வினாக்களுக்குத் திருப்பதிகரமான முறையில் விடையளித்துள்ளதுடன், 06 உடன்பாட்டு வினாக்கள் மீள்பார்வையில் உள்ளன.

## செயற்பாட்டுப் பகுதி

2010 இன் 14 ஆம் இலக்க சிவில் விமானப் போக்குவரத்துச் சட்டத்தின் பிரகாரம், செயற்பாட்டுப் பகுதியானது சர்வதேச பொது விமானப் போக்குவரத்து – ஆகாய விமானங்கள் மற்றும் இலத்திரனியற் பறப்புப் பைகளுடன் தொடர்புபட்ட விஷேட தேவைப்பாடுகள் மற்றும் செயற்பாட்டு அடிப்படையிலான வழிகாட்டல் (PBN) இணைப்பு 6 பகுதி II ஐ அமுலாக்கும் பொருட்டு அமுலாக்கல் நியமங்களை வழங்கியிருந்தது.

### மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தின் (MRIA) சான்றுப்படுத்தல்

குறித்த பகுதியானது பறத்தற் செயற்பாடுகள் மற்றும் தளக் கையாள்கையுடன் தொடர்புபட்ட விடயங்களைக் கருத்திற் கொண்டு, மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தின் சான்றுப்படுத்துதலை முன்னெடுத்தது.

## வான் செயற்பாட்டாளர்களைச் சான்றுப்படுத்தல்

2013 இல், செயற்பாட்டுப் பகுதியானது ஷவ்ரோன் ஏவியேஷனுக்கு இரண்டு அம்ப்கிபியன் வானூர்திகளைப் பயன்படுத்தி உள்நாட்டு வான் சேவைச் செயற்பாடுகளில் ஈடுவடுவதற்கு வான் செயற்பாட்டாளர் சான்றிதழ் ஒன்றினை (VXC) வழங்கியிருந்தது.

மேலும், குறித்த பகுதியானது உள்நாட்டு வான் சேவைகளில் ஈடுபடுவதற்கு வான் செயற்பாட்டாளர் சான்றிதழின் வழங்கலுக்காக ஸ்கைலைன் ஏவியேஷன் மற்றும் எவ்-எயார்வேய்ஸ் என்பனவற்றின் விண்ணப்பங்கள் மதிப்பீடு செய்யப்பட்டன. குறித்த பகுதியானது AOC இனை பெற்றுக் கொள்ளும் பொருட்டு, IWS ஏவியேஷன் மற்றும் பி(f)ளை மீ ஏவியேஷன் என்பனவற்றுடன் இருந்தான இரண்டு மேலதிக விண்ணப்பங்களை பெற்றுக்கொண்டதுடன், அவைகள் செய்முறைப்படுத்தப்பட்டு வருகின்றன. செயற்பாட்டாளர்கள் அவர்களது விமான வரிசைகளை மேம்படுத்துவதில் ஆர்வம் காட்டியிருந்ததுடன், குறித்த பகுதியானது உள்நாட்டுச் செயற்பாடுகளில் இரண்டு சிறிய ரக வானூர்திகளை சேர்த்துக் கொள்வதற்கான அனுமதியினை வழங்குவதில் ஈடுபாடு கொண்டிருந்தது.

குறித்த பகுதியானது கொரியன் எயார், துருக்கி எயார்லைன்ஸ், பிரிட்டிஷ் எயார்வேய்ஸ் மற்றும் வெற்பொலிஸ் எனும் நான்கு வெளிநாட்டுச் செயற்பாட்டாளர்களுக்குச் சான்றிதழை வழங்கியிருந்ததுடன், மேலும் ஐலண்ட் ஏவியேஷன், எயார் ஏஷியா எக்ஸ், ரான்ஸ்ஏரோ எயார்லைன்ஸ், ஒரேன் எயார், ரவல் சேவீஸ் சூ, ரவல்ஸ் சேர்வீஸ் ஏ.எஸ் மற்றும் விம் எயார் ஆகிய ஏழு (07) வெளிநாட்டு வான் செயற்பாட்டாளர்களுக்கு இலங்கையினுள்ளும் இலங்கைக்கு வெளியிலும் வான் சேவைச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு பிரத்தியேக சான்றிதழை வழங்கியிருந்தது. இவ்வாறான பிரத்தியேக சான்றிதழை வழங்குவதற்குக் காரணம் யாதெனில், இலங்கையின் அமுலாக்கத்திலுள்ள ICAO இன் இணைப்புப் 17 இன் 13வது திருத்தத்துடன் கூடியதான அவர்களது விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு செயற்றிட்டங்களை நிறைவேற்றிக் கொள்வதாகும்.

## சோதனை நடவடிக்கைகள்

குறித்த பகுதியானது பிரயோகிக்கப்படவேண்டிய ICAO – SARPs மற்றும் வெளியிடப்பட்ட உள்நாட்டுத் தேவைப்பாடுகளுடன், அவர்களது இணக்கப்பாட்டினை மதிப்பீடு செய்துகொள்ளும் பொருட்டு, அனுமதிக்கப்பட்ட சோதனையிடற் திட்டங்களுக்கமைய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வான் செயற்பாட்டாளர்கள் மீது ஒழுங்குமுறையான சோதனையிடலை முன்னெடுப்பதில் ஈடுபட்டிருந்தது. இதன் பிரகாரம், குறித்த பகுதியானது அப்பகுதியுடன் இணைக்கப்பட்டுள்ள மூன்று பரிசோதகர்களைப் பயன்படுத்தி, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விமான சேவைகள் மீது 122 மனித மணித்தியாலங்களைக் கொண்ட ரம்ப் பரிசோதனைகளை முன்னெடுத்திருந்தது.

மேலும், குறித்த பகுதியானது மீள்பார்வைக்குட்படுத்தப்பட்ட வருடத்தில், பாதுகாப்புச் செயற்றிறன் தொடர்பில் சிறிலங்கன் எயார்லைன்ஸால் செயற்படுத்தப்பட்ட 47 பறப்புக்களையும், மிஹின்லங்காவால் செயற்படுத்தப்பட்ட 14 பறப்புக்களையும் கண்காணிப்புச் செய்திருந்தது.

மேலும், குறித்த பகுதியானது வெவ்வேறுபட்ட வானூர்தி சம்பவம் மற்றும் விபத்து விசாரணைகளில் ஈடுபட்டிருந்தது.

ரம்ப் சோதனைகள், பிரதான தளச் சோதனைகள், DCP கண்காணிப்பு, ஒழுங்குமுறை ஆய்வு, பறத்தலின் போதான சோதனைகள், மற்றும் நிலைய வசதிகளைச் சோதனையிடல் என்பன சோதனையிடல் நடவடிக்கைகளின் வகைகளாகும்.

பறத்தற் செயற்பாடு (LOM), வானறைப் பாதுகாப்பு, செயற்பாட்டுக் கட்டுப்பாடு மற்றும் பயிற்சியளித்தல், தளச் செயற்பாடு, பாதுகாப்பு முகாமை முறைமை, மற்றும் வான் மூலம் ஆபத்தான பொருட்களை நகர்த்துதல் என்பன மீது வெளியீடு செய்யப்பட்ட தேவைப்பாடுகளுடன் இணைந்தொழுகும் தன்மையினை மதிப்பிட்டுக்கொள்ளும் பொருட்டு, குறித்த பகுதியால் 2013 செப்ரம்பர் 23 முதல் 27 வரையில்

சிறிலங்கன் எயார்லைன்ஸ் மீதான கட்டாய ஒழுங்குமுறையான சோதனை முன்னெடுக்கப்பட்டது.

இதற்கு மேலாக, குறித்த பகுதியானது உள்நாட்டு விமான சேவைகளின் செய்முறைக் கைநூல்கள் மீளாய்விற்கு உட்படுத்தியிருந்ததுடன், தேவைக்கேற்ப அனுமதிகளையும் வழங்கியிருந்தது.

## USOAP ஆய்வு 2010

சர்வதேச விமானப் போக்குவரத்து பாதுகாப்பான செயற்பாடுகளை விருத்தி செய்யும் இறுதி இலக்குடன், தொடர்ச்சியான அடிப்படையில் அங்கத்துவ நாடுகளின் பாதுகாப்பு மேற்பார்வை இயலளவினை கண்காணிப்பதற்கு ICAO ஆல் ஏற்றுக்கொள்ளப்பட்ட முற்காப்பு முறைமையொன்றான தொடர்ச்சியான கண்காணிப்பு அணுகுமுறையினை 2013 முழுமையாகவும் குறித்த பகுதியானது இலங்கையின் பாதுகாப்பு மேற்பார்வை இயலயவிற்கு அமைவாக சரியான தகவல் வழங்கும் செய்முறையினைக் கொண்டிருந்தது.

குறித்த பகுதியானது 1388 ICAO–SARPs இன் வினைத்திறன்மிக்க அமுலாக்கலுக்கும் கண்காணித்தலுக்கும் பொறுப்பாக உள்ளதுடன், SARPs இன் அமுலாக்கல் மட்டமானது 96.76% ஆக அமைந்துள்ளது. இன் நோக்கத்திற்காக, குறித்த பகுதியானது CMA இன் கீழ், ICAO ஆல் விடுக்கப்பட்ட 152 செய்முறை வினாக்களுக்கு திருப்திகரமான விடைகளை வழங்குவதற்கு வேண்டப்படுகின்றது.

மேலும், குறித்த பகுதியானது இணைப்பு 06 மற்றும் 18 களின் அண்மிய கால பதிப்புத் தொடர்பிலான இணக்கப்பாட்டு சரிபார்க்கும் பட்டியலை ICAO இற்குச் சமர்ப்பித்திருந்தது.

## வான்தகைமைப் பகுதி

வான்தகைமைப் பகுதியானது இலங்கையிற் பதிவு செய்யப்பட்ட 63 வானூர்திகளின் தொடர்ச்சியான வான்தகைமையின் பராமரிப்பிற்குத் தேவையான ஒழுங்குமுறையான சோதனையிடல் நடவடிக்கைகளை முன்னெடுத்தது.

குறித்த பகுதியானது 21 வானூர்திகளைக் கொண்ட (எட்டு (08) A-320 எயார்பஸ் ரக வானூர்திகளையும், ஏழு (07) A-330 எயார்பஸ் ரக வானூர்திகளையும், ஆறு (06) A-340 எயார்பஸ் ரக வானூர்திகளையும்) சிறிலங்கன் எயார்லைன்ஸின் வானூர்தி வரிசையினையும், நான்கு (3) வானூர்திகளைக் கொண்ட (இரண்டு (02) A-320 எயார்பஸ் ரக வானூர்திகளையும் ஒரு A-321 எயார்பஸ் ரக வானூர்தியையும்) மிஹின் லங்கா விமான சேவை வானூர்திகளின் வரிசையினையும் வான்தகைமையினைக் கண்காணித்தது. இச் செய்முறையின் போது, குறித்த பகுதியானது சிறிலங்கன் எயார்லைன்ஸின் 27,100 பறப்பு வட்டங்களைக் கொண்ட 248,267 எந்திர மணித்தியாலங்களையும், மிஹின்லங்காவின் 3,539 பறத்தல் வட்டங்களைக் கொண்ட 23,741 எந்திர மணித்தியாலங்களைக் கொண்ட பாதுகாப்புச் செயற்றிறனைக் கண்காணித்தது.

இவ்வாண்டில், மொத்தத்தில் இப் பகுதியானது பதினொன்று (11) ஆரம்ப வான்தகைமைச் சான்றிதழ்களை வழங்கியிருந்ததுடன், நாற்பத்தியேழு (47) ஏற்கனவே வழங்கப்பட்ட வான்தகமைச் சான்றிழ்களைப் புதுப்பித்திருந்தது.

### வானூர்திப் பராமரிப்பு நிறுவனங்கள்

தேவைப்படும் மதிப்பீடுகள் முன்னெடுக்கப்பட்ட பின்னர், ஐந்து (05) வானூர்தி பராமரிப்பு நிறுவனங்களுக்கு அனுமதியளிக்கப்பட்டதுடன், மேலும் ஐம்பத்தேழு (57) வானூர்தி பராமரிப்பு நிறுவனங்களின் செல்லுபடித்தன்மையானது புதுப்பித்துக் கொடுக்கப்பட்டது. இவற்றிற்கு மேலாக, மூன்று (3) மூன்றாந் தரப்பினருக்கான அனுமதிகள் மீள்பார்வைக்கு உட்படுத்தப்பட்ட ஆண்டினுள் தகைமையளிக்கப்பட்டன. இக் காலப்பகுதியில் நாற்பத்தியாறு (46) வேலைப்பட்டறைகளுக்கான அனுமதிகள் வழங்கப்பட்டன.

### வானூர்தி பதிவு

மீளாய்விற்குட்பட்ட காலத்தில், CAASL ஆனது ஒன்பது (09) வானூர்திகளுக்கான ஆரம்பப் பதிவுச் சான்றிதழ்களை வழங்கியிருந்ததுடன் ஐம்பத்து நான்கு (54) வானூர்திகளுக்கான பதிவுகளைப் புதுப்பித்திருந்தது.

### பாதுகாப்பு மேற்பார்வை

2013 இல் அனுமதியளிக்கப்பட்ட சோதனைத் திட்டத்திற்கு இணங்க, குறித்த பகுதியானது இலங்கையிற் செயற்படுத்தப்படும் இலங்கையிற் பதிவு செய்யப்பட்ட வானூர்திகள், வெளிநாட்டிற் பதிவு செய்யப்பட்ட வானூர்திகள் மற்றும் பொது விமானப் போக்குவரத்தில் பயன்படுத்தப்படும் வானூர்திகள் மீதான ரம்ப் சோதனைகள் இருநூற்று முப்பத்தைந்து (235) மேற்கொள்ளப்பட்டன. மேலும் குறித்த பகுதியால் ஏழு (07) கடல் கடந்த நிலைய வசதிச் சோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

### விஸாவிற்கான பரிந்துரைகள்

CAASL ஆனது இருபத்தொன்பது (29) தள வெளிநாட்டுப் பொறியியலாளர்களுக்கான தரையிறக்கல் மற்றும் வதிவிடப் பரிந்துரைகளை வழங்கியிருந்தது.

### பறத்தற் பயிற்சிப் பாடசாலைகள் / பொறியியற் பாடசாலைகள்

இரண்டு (02) பறத்தற் பயிற்சிப் பாடசாலைகளின் வானூர்தி மற்றும் வானூர்திப் பராமரிப்பு நிலைய சோதனைகளும் மூன்று (03) பராமரிப்பு பயிற்சி நெறிப் பாடசாலைகளின் புதுப்பித்தற் சோதனைகளும் மேற்கொள்ளப்பட்டன.

### பராமரிப்புப் பொறியியலாளர் அனுமதிப்பத்திரம்

வான்தகமைப் பகுதியானது கைத்தொழிலிற் பணியாற்றும் ஆளணியினருக்கான வானூர்திப் பராமரிப்புப் பொறியியலாளர் அனுமதிப்பத்திரத்தின் வழங்குகைகளுக்காக இரண்டு (02) வானூர்திப் பராமரிப்புப் பொறியியலாளர் (AME) பரீட்சைகளை நடாத்தியிருந்தது. மேலும், இரண்டு (02) பரீட்சைகள் AME (BL) அனுமதிப்பத்திரங்களை AME அனுமதிப்பத்திரமாக மாற்றீடு செய்யும் பொருட்டு நடாத்தப்பட்டது.

### உதிரிப் பாகங்களுக்கான அனுமதி

2013 இல், வான்தகைமைப் பகுதியானது வானூர்தி உதிரிப்பாக ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக்காக 236 விண்ணப்பப்படிவங்களுக்கு அனுமதி வழங்கலைப் பரிந்துரைத்தது.

## வான் போக்குவரத்து மற்றும் சட்ட விவகாரங்கள் பகுதி

இலங்கையின் வான் போக்குவரத்துத் துறையானது 2013 காலப்பகுதியில் பயணிகள், சரக்குகள் மற்றும் வானூர்தி நகர்வுகள் என்பவற்றில் அதிகரிப்பொன்றுடன் கூடியதான எதிர்பாராத வளர்ச்சியொன்றை அனுபவமாகக் கொண்டுள்ளது.

மேலும், இலங்கையானது புதிய வான் சேவைகள் ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளதுடன், மேலும் சில ஏற்கனவேயுள்ள ஒப்பந்தங்கள் வான் மூலமான இணைப்புக்களை விரிவாக்கிக் கொள்ளும் இலக்குடன் விருத்திசெய்யப்பட்டுள்ளது.

மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தின் ஆரம்பமானது 2013 இல் இலங்கையின் வான் போக்குவரத்து கையாளல் இயலளவினை அதிகரித்துக் கொள்வதில் வான் போக்குவரத்துக் கைத்தொழிலில் மைற்கல் ஒன்றாக இருக்கின்றது.

### விமான சேவை செயற்பாடுகள்

மீளாய்விற்கு உட்படுத்தப்பட்ட வருடத்தில், புதிதாக வெளிநாட்டு முன்னணி விமான சேவைகள் இலங்கைக்குச் செயற்பாடுகளை ஆரம்பித்துக் கொண்ட அதேவேளை மேலும் சில விமான சேவைகள் குறுங்கால இடைவெளியின் பின்னர் கொழும்பிற்கான தமது செயற்பாடுகளை மீள ஆரம்பித்துள்ளன. 2013 ஏப்ரலில் வானூர்தி வரிசையில் ஐக்கிய இராட்சியத்தின் மிகப் பெரியதும் கொடி காவுகையினருமான பிரிட்டிஷ் எயார்வேய்ஸ் ஏறத்தாழ 15 வருடங்களின் பின்னர் ஹேற்விக்கிலிருந்து இலங்கைக்கான அதன் செயற்பாடுகளை மீள ஆரம்பித்துள்ளது. 2012 இன் ஐரோப்பிய விமான சேவையும், பெரிய பாதை வலையமைப்பையும் கொண்ட துருக்கிஷ் எயார்லைன்ஸ் ஆனது 2013 இல் ஸ்ரான்போவிலிருந்து செயற்பாடுகளை ஆரம்பித்தது. இவ் இரண்டு ஐரோப்பிய விமான சேவைகளின் செயற்பாட்டு ஆரம்பமானது நம்பகரமான முன்னணி சர்வதேச விமான சேவைகள் இலங்கையில் வான் போக்குவரத்து சந்தையைக் கொண்டுள்ளன என்பதனை வெளிப்படுத்துகின்றது.

ஆசியாவின் முதன்மையான செலவுச் சிக்கன செயற்பாட்டாளரான எயார் ஏசியா எக்ஸ் ஆனது 2013 செப்ரெம்பரில் கோலாலம்பூரிலிருந்து செயற்பாடுகளை ஆரம்பித்ததுடன், அது இலங்கையின் விமானப் போக்குவரத்து மற்றும் பொழுது போக்குக் கைத்தொழில்களை முன்னகர்த்துவதாகவும் அமைந்தது. ஆசியாவில் மற்றுமொரு பிரதான விமான சேவைச் செயற்பாட்டாளரான கொரியன் எயார்லைன்ஸ் 2013 மார்ச்சில் சீசெல்ஸிலிருந்து கொழும்பிற்கான தமது செயற்பாடுகளை ஆரம்பித்தது. இதற்கு மேலாக, மாலைதீவு செயற்பாட்டாளரான ஐலன்ட் ஏவியேஷன் மாலைதீவிலிருந்து இலங்கைக்கான செயற்பாடுகளை மீள ஆரம்பித்தது.

மேலே கூறப்பட்ட அட்டவணைப்படுத்தப்பட்ட செயற்பாட்டாளர்களுக்கு மேலதிகமாக, லொட் பொலிஷ் (வாசோவிலிருந்து), ஒன்பேக் ( செயாமெற்யேவோவிலிருந்து), ரான்ஸ் ஏறோ (மொஸ்கோவிலிருந்து), ரவல் சேர்வீஸ் ((பிராகூனிலிருந்து), மற்றும் ரவல் சேர்வீஸ் பொல்ஹா (வாசோவிலிருந்து) சுற்றுலா அட்டவணைப்படுத்தப்படாத செயற்பாட்டாளர்களாக 2013/2014 IATA குளிர் காலப்பகுதியில் இலங்கைக்கு அவர்களது அட்டவணைப்படுத்தப்படாத செயற்பாடுகளை ஆரம்பித்தது. விம் எயார்லைன்ஸ் (மொஸ்கோவிலிருந்து) ஒன்பது ஆண்டுகளின் பின்னர் 2013/2014 IATA குளிர் காலப்பகுதியில் இலங்கைக்கான அட்டவணைப்படுத்தப்படாத செயற்பாடுகளை மீள ஆரம்பித்தது.

இதேவேளை, அட்டவணைப்படுத்தப்பட்ட செயற்பாட்டாளர்களான ஹல்வ் எயார் (பாரினிலிருந்து) ரைகர் எயார்வேய்ஸ் (சிங்கப்பூரிலிருந்து) இலங்கைக்கான தமது செயற்பாடுகளை மீளாய்விற்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில் இடைநிறுத்தியிருந்தன. வின்ட்றோஸ் (Kiev இலிருந்து) மற்றும் என்ரர் எயார் (வாசோவிலிருந்து) எனும் அட்டவணைப்படுத்தப்படாத செயற்பாட்டாளர்களும் 2013 இன் முதற் காலாண்டில் தமது இலங்கைக்கான செயற்பாடுகளை இடைநிறுத்தியிருந்தன.

குறித்த வருடத்தில் மிஹின் லங்கா விமானசேவையானது தனது பயணிகள் சேவையினை சீசெல்ஸ் (Mahe) ஆரம்பித்ததுடன், சிறிலங்கன் எயார்லைன்ஸ் முன்னைய ஆண்டினைப் போலவே தமது செயற்பாட்டு இயலளவினைப் பேணிவந்தது.

## பயணிகள் மற்றும் சரக்குகளின் நகர்வு

மீளாய்விற்கு உட்படுத்தப்பட்ட காலத்தில் பயணிகள் மற்றும் சரக்குகளின் நகர்வுகளில் குறிப்பிடத் தக்கவாறு முன்னேற்றகரமான பதிவுகள் பதிவுசெய்யப்பட்டன. BIA இற்கு பிரயாணம் மேற்கொண்ட மற்றும் BIA இருந்து புறப்பட்ட பயணிகள் முறையே 3,621,822 மற்றும் 3,690,047 ஆக அமைந்திருந்தன. அப் பயணிகள் தொடர்பின் சிறிலங்கன் எயார்லைன்ஸின் சந்தைப் பங்கானது 2,021,261 மற்றும் 1,997,282 ஆக அமைந்ததுடன் இது முறையே ஐம்பத்து நான்கு (54%) மற்றும் ஐம்பத்தைந்து (55%) வீதங்களைக் கொண்டிருந்தது.

2013 இல் BIA இல் ஏற்றுமதி செய்யப்பட்ட சரக்குகள் 119,477 (மெற்றிக் தொன்) நிறையுடைய மொத்த சரக்குகளில், சிறிலங்கன் எயார்லைன்ஸ் 56,070 மெற்றித்தொன்களை கொண்ட அதனது சந்தை பங்கில் நாற்பத்தேழு (47%) வீதத்தை கொண்ட ஏற்றுமதி செய்திருந்தது. BIA இல் இறக்குமதிக்கென கையாளப்பட்ட சரக்குகள் தொடர்பில், மொத்தமான 77,776 மெற்றிக் தொன் சரக்குகளில், சிறிலங்கன் எயார்லைன்ஸ் 43,496 மெற்றிக்தொன்களை, அதாவது மொத்த சந்தைப் பங்கில் அறுபது (60%) வீதமானவற்றை கையாண்டிருந்தது.

## இடைத்தங்கற் பயணிகள்

BIA ஆனது பிராந்தியத்தில் மையமான விமான நிலையமொன்றாக விருத்திசெய்யப்பட இருப்பதால், இவ் விமான நிலையத்தினூடாக பிரயாணிகள் செய்யும் இடைத்தங்கற் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொள்வதற்கு முன்னேற்றமாவதற்கும், விருத்தி செய்வதற்குமான மன்னியமான பிரதேசமொன்றாக அமையும். மொத்த வருவாயில் முப்பத்திநான்கு (34%) வீதத்தினைக் கொண்ட 1,231,903 பயணிகள் இடைத்தங்கற் பயணிகளாக BIA இல் காணப்பட்டனர். சிறிலங்கன் விமான சேவையானது இவ் இடைத்தங்கற் பயணிகளில் 1,010,196 பேரைக் காவுகைக்குட்படுத்தியது.

## உள்நாட்டு விமானப் போக்குவரத்து

மீளாய்விற்கு உட்படுத்திய ஆண்டில், பி(f)ற்ஸ் ஏவியேஷன் இரத்மலானைக்கும் யாழ்ப்பாணத்திற்கிடையில் உள்நாட்டு நிலையான இறக்கைகளைக் கொண்ட அட்டவணைப்படுத்தப்பட்ட பயணிகள் செயற்பாடுகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்விற்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில் இரத்மலானைக்கும் யாழ்ப்பாணத்திற்கிடையில் பிரயாணம் மேற்கொண்ட பயணிகளில் சிறிய அதிகரிப்பொன்றை பதிவாக்கியிருந்தது. தயா ஏவியேஷன் லிமிட்டெட் குறித்த ஆண்டில் தமது தனிப்பட்ட மற்றும் வர்த்தக நிலையான இறக்கைச் செயற்பாடுகளை முன்னெடுத்தது.

2004 இல் ஹெலிகொப்டர் செயற்பாடுகளுடன் ஆரம்பித்த டெக்கான் ஏவியேஷன் (லங்கா) லிமிட்டெட் என சாதாரணமாகத் தெரிந்து கொண்ட மிலேனியம் எயார்லைன்ஸ் நாட்டின் வேறுபட்ட மையங்களுக்கு செயற்பாட்டைத் தொடர்ந்து மேற்கொண்டது. கொஸ்மோஸ் ஏவியேஷன் குறித்த வருடத்தில் அவர்களது ஹெலிகொப்டர் செயற்பாடுகளை முன்னெடுத்தது.

நாட்டின் சுற்றுலாத்துறையை முன்னெடுப்பதற்கு ஏற்றவகையில் சினமன் எயார் எனும் பெயரால் புதியதொரு மிதப்பு வானூர்திச் செயற்பாடொன்று அட்டவணைப்படுத்தப்பட்ட செயற்பாடொன்றாக சவ்ரொன் ஏவியேஷனால் நாடு பூராகவும் நீர் விமானத தளங்களில் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன.

## பிரயாண முகவர்கள்

1992 இன் 55 ஆம் இலக்க வான்செலவு (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஒழுங்கு விதிகளின் படி, இலங்கையில் உள்ள அனைத்து பிரயாண முகவர்களும் CAASL வழங்கப்படும் அனுமதிப்பத்திரமொன்றை பெற்றுக்கொள்ள வேண்டப்படுவதுடன், வருடாந்த அடிப்படையில் அவற்றை புதிப்பித்து கொள்ளவும் வேண்டப்படுகின்றனர்.

## இருதரப்பு வான் சேவை பேரம்பேசல்

CAASL ஆனது இலங்கையைப் பிரதிநிதித்துவஞ் செய்யுமொரு பங்காளராக கடல்கடந்த வானியல் நிறுவனங்களுடன் இருதரப்பு வான்சேவைப் பேரம்பேசல்களில் பங்குகொண்டது. அவ்வாறான ஐந்து பேரம்பேசல்கள் தனிப்பட்ட அரசாங்கங்களுடன் நடாத்தப்பட்டதுடன், CAASL ஆனது தெற்காசியாவில் நடாத்தப்பட்ட வான்சேவைக் கலந்துரையாடல் சம்மந்தமான ICAO மாநாட்டிலும் (ICON) பங்குபற்றியது. இப் பேரம்பேசல்களின் பிரதிபலன்கள் வருமாறு.

## இருதரப்பு அரசாங்கங்களுடன் நடாத்தப்பட்ட இருதரப்புப் பேரம்பேசல்கள்

தென்கொரியா (செயோல் - பெப்பரவரி) – ஒப்பந்தமொன்று (MOU) இரண்டு அரசாங்கங்களுக்குமிடையில் வான் சேவைகள் ஏற்பாடுகளை தொடர்ச்சியாக நவீனமயமாக்கல் எனும் கருத்தில் கையொப்பமிடப்பட்டதுடன், இருதரப்பினரும் நடுநிலையில் ஐந்தாவது பறத்தற் சுதந்திரத்துடன் பறப்புக்களை வழங்கிக் கொள்ள இணங்கிக் கொண்டன.

அசைபையான் ( கொழும்பு – பெப்பரவரி) - ஒப்பந்தமொன்று கையொப்பமிடப்பட்டதுடன், வரைபு வான் சேவைகள் இணக்கப்பாடொன்று (ASA) பேரம்பேசலில் உருவாக்கப்பட்டது. இலங்கையின் ஒதுக்கீடு செய்யப்பட்ட விமான சேவைகளில் ஒப்பந்தப்படி அசைபையானுக்கு 21 வாராந்த தடவைகள் செயற்படுத்துவதற்கு உரித்துடைதாக்கப்பட்டது.

சீசெல்ஸ் (கொழும்பு – ஏப்பிரல்) - ஒப்பந்தமொன்று கையொப்பமிடப்பட்டதுடன், வரைபு வான் சேவைகள் இணக்கப்பாடொன்று (ASA) பேரம்பேசலில் எட்டப்பட்டது. இலங்கையின் ஒதுக்கீடு செய்யப்பட்ட விமான சேவைகளில் ஒப்பந்தப்படி 07 வாராந்த தடவைகள் செயற்படுத்துவதற்கு உரித்துடைதாக்கப்பட்டது.

ஹஸகஸ்தான் (அஸ்ரானா – ஒகஸ்ட்) - ஒப்பந்தமொன்று கையொப்பமிடப்பட்டதுடன், வரைபு வான் சேவைகள் இணக்கப்பாடொன்று (ASA) பேரம்பேசலில் எட்டப்பட்டது. ஒவ்வொன்றும் 03 வாராந்த தடவைகள் இலங்கையின் ஒதுக்கீடு செய்யப்பட்ட விமான சேவைகளுக்காக ஹஸகஸ்தான் அஸ்ரா-னா மற்றும் அல்மாட்ஸ் நகரங்களில் கிடைக்கக் கூடியதாக உள்ளது.

இந்தியா (கொழும்பு – செப்ரெம்பர்) – புதியதொரு ஒப்பந்தம் இரு அரசாங்கங்களுக்குமிடையில் கையொப்பமிடப்பட்டதுடன், எதிர்கால பேரம்பேசலில் ஏற்கனவேயுள்ள ஏற்பாடுகள் மீளாய்விற்கு உட்படுத்திக் கொள்வதற்கு அதில் இணக்கங் காணப்பட்டது.

## 2013 டிசம்பரில் டிறபான், தென்கொரியாவில் நடைபெற்ற ICAN மாநாட்டில் இடம்பெற்ற இருதரப்புப் பேரம்பேசல்கள்

இலங்கை 2013 டிசம்பர் 08 முதல் 13 வரையில் தென்னாபிரிக்காவின் டிறபானில் நடைபெற்ற வான் சேவைகள் பேரம்பேசல்கள் மீதான ICAO மாநாட்டில் பங்குபற்றியது. இலங்கைப் பிரதிநிதிகள் பின்வரும் ஒன்பது (09) அரசாங்கப் பிரதிநிதிகளை சந்தித்தனர்.

## எதியோப்பியா

இலங்கைக்கும் எதியோப்பியாவிற்குமிடையில் புதிய வான் சேவைகள் இணக்கப்பாடொன்று வாராந்தம் ஏழு பறப்புக்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டு ஒப்பந்தங்களில் ஒதுக்கீடு செய்யப்பட்ட விமான சேவைகளுக்கான 3வது, 4வது, மற்றும் 5வது பறத்தற் சுதந்திரங்களுடன், இரு தரப்பினருடனும் ஏற்கனவே இணக்கப்பாடு கண்டு கொண்டதான வரைபு உடன்படிக்கையின் பிரகாரம் எட்டப்பட்டது. சிறிலங்கன் எயார்லைன்ஸ் மற்றும் மிஹின் லங்கா லிமிட்டெட் என்பன இவ் வான்சேவை இணக்கப்பாடடின் கீழ், அட்டவணைப்படுத்தப்பட்ட செயற்பாடுகளை முன்னெடுக்க ஒதுக்கீடு செய்யப்பட்டன.

## பி(f)ன்லாந்து

இலங்கைக்கும் பி(f)ன்லாந்திற்குமிடையில் புதிய வான் சேவைகள் இணக்கப்பாடொன்று பறத்தற் தடவைகளில் மட்டுப்பாடுகள் இன்றி ஒப்பந்தத் தரப்பினரின் ஒதுக்கீடு செய்யப்பட்ட விமான சேவைகள் 3வது, 4வது, மற்றும் 5வது பறத்தற் சுதந்திரங்களின் அடிப்படையில் பறப்புக்களை மேற்கொள்ள எட்டப்பட்டது. சிறிலங்கன் எயார்லைன்ஸ் மற்றும் மிஹின் லங்கா லிமிட்டெட் என்பன இவ் வான்சேவை இணக்கப்பாடடின் கீழ், அட்டவணைப்படுத்தப்பட்ட செயற்பாடுகளை முன்னெடுக்க ஒதுக்கீடு செய்யப்பட்டன.

## கிறீஸ் (ஹெலனிக் குடியரசு)

இலங்கைக்கும் கிறீஸிற்குமிடையில் புதிய வான் சேவைகள் இணக்கப்பாடொன்று பறத்தற் தடவைகளில் மட்டுப்பாடுகள் இன்றி ஒப்பந்தத் தரப்பினரின் ஒதுக்கீடு செய்யப்பட்ட விமான சேவைகள் 3வது, 4வது, மற்றும் 5வது பறத்தற் சுதந்திரங்களின் அடிப்படையில் பறப்புக்களை மேற்கொள்ள எட்டப்பட்டது. சிறிலங்கன் எயார்லைன்ஸ் மற்றும் மிஹின்லங்கா லிமிட்டெட் என்பன இவ் வான்சேவை இணக்கப்பாடடின் கீழ், அட்டவணைப்படுத்தப்பட்ட செயற்பாடுகளை முன்னெடுக்க ஒதுக்கீடு செய்யப்பட்டன.

## கெனியா

ஏற்கனவே காணப்பட்ட வான்சேவை உடன்படிக்கைகள் மூன்றாந்தரப்பினரின் சேவைப் பகிர்வினை உள்ளடக்கியதாக திருத்தஞ்செய்யப்பட்டது. சிறிலங்கன் எயார்லைன்ஸ் மற்றும் மிஹின்லங்கா லிமிட்டெட் என்பன ஒதுக்கீடு செய்யப்பட்டன.

## நியூசிலாந்து

இலங்கைக்கும் நியூசிலாந்திற்குமிடையில் புதிய வான் சேவைகள் இணக்கப்பாடொன்று பறத்தற் தடவைகளில் மட்டுப்பாடுகள் இன்றி ஒப்பந்தத் தரப்பினரின் ஒதுக்கீடு செய்யப்பட்ட விமான சேவைகள் 3வது, 4வது, மற்றும் 5வது பறத்தற் சுதந்திரங்களின் அடிப்படையில் பறப்புக்களை மேற்கொள்ள எட்டப்பட்டது. சிறிலங்கன் எயார்லைன்ஸ் மற்றும் மிஹின் லங்கா லிமிட்டெட் என்பன இவ் வான்சேவை இணக்கப்பாடடின் கீழ், அட்டவணைப்படுத்தப்பட்ட செயற்பாடுகளை முன்னெடுக்க ஒதுக்கீடு செய்யப்பட்டன.

## ஸ்பெயின்

இலங்கைக்கும் ஸ்பெயினிற்குமிடையில் புதிய வான் சேவைகள் இணக்கப்பாடொன்று பறத்தற் தடவைகளில் மட்டுப்பாடுகள் இன்றி ஒப்பந்தத் தரப்பினரின் ஒதுக்கீடு செய்யப்பட்ட விமான சேவைகள் 3வது, 4வது, மற்றும் 5வது பறத்தற் சுதந்திரங்களின் அடிப்படையில் பறப்புக்களை மேற்கொள்ள எட்டப்பட்டது. சிறிலங்கன் எயார்லைன்ஸ் மற்றும் மிஹின் லங்கா லிமிட்டெட் என்பன

இவ் வான்சேவை இணக்கப்பாடடின் கீழ், அட்டவணைப்படுத்தப்பட்ட செயற்பாடுகளை முன்னெடுக்க ஒதுக்கீடு செய்யப்பட்டன.

## துருக்கி

ஏற்கனவே காணப்பட்ட வான் சேவை உடன்படிக்கையின் கீழ் கிடைக்கக் கூடியதான தடவைகள் ஏழு (07) இல் இருந்து பதின்நான்காக (14) அதிகரிக்கப்பட்டுள்ளது.

துருக்கி எயார்லைன்ஸில் ஆடவர் செயற்பாடுகளுக்கான மையப் புள்ளியொன்றாக மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தினை இலங்கை வழங்கியுள்ளது.

ஐக்கிய அரபு இராச்சியத்திற்கும் இலங்கைக்குமான செயற்பாடுகளின் மொத்தத் தடவைகள் வாரத்திற்கு எண்பதாக (80) அதிகரிக்கப்பட்டது. இத் திருத்தத்தின் பிரகாரம், எமிரேற்ஸ், பி(f)ளை டுபாய், எயார் அரேபியாவிற்கான தடவைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. இலங்கையின் ஒதுக்கீடு செய்யப்பட்ட விமான சேவைகள் அவ் விமான சேவைகளின் விருப்பத்திற்கமைவாக, எந்தவொரு மையத்திற்கும் வாராந்தம் எண்பது (80) தடவைகள் செயற்படுத்துவதற்கு உரித்துடையதாக்கப்படும். கொழும்பிற்கான UAE இன் எழுமாறான அட்டவணைப்படுத்தப்படாத செயற்பாடுகள் ஏற்கனவே காணப்படும் அட்டவணைப்படுத்தப்படாத ஒழுங்குவிதிகளின் கீழ் உடன்பாடு காணப்பட்டது.

UAE விமான சேவைகள் முழுமையான 5வது சுதந்திரமான பறத்தல் உரிமைகளுடன் MRIA இற்கு எந்தவொரு பறப்புக்களையும் செயற்படுத்த அனுமதிக்கப்பட்டது.

## நோர்டிக் நாடுகள் (டென்மார்க், நோர்வே, மற்றும் சுவீடன்)

டென்மார்க், நோர்வே, மற்றும் சுவீடன் ஆகிய நாடுகளைப் பிரதிநிதித்துவஞ் செய்யும் நோர்டிக் நாடுகளும் இலங்கையும் EU நிலைக்குத்தான உடன்படிக்கையிலிருந்து உருப்பெறும் தொடர்ச்சியான திருத்தங்களை உள்வாங்குவதற்கு அத்தியாயம் 3 மற்றும் 4 இற்காக 2012 இல் இலங்கையால் முன்மொழியப்பட்ட திருத்தங்களை உருப்பெறச் செய்த மீளாய்விற்கு உட்படுத்தப்பட்ட வான்சேவை உடன்படிக்கையினை தோற்றுவித்தது.

## வான்சேவை ஒதுக்கீடு மற்றும் கட்டணக் கணிப்பீட்டுப் பயிற்சி

2009 இல் ஆரம்பிக்கப்பட்ட வான்சேவைகள் ஒதுக்கீடு மற்றும் கட்டணக் கணிப்பீட்டுப் பயிற்சிநெறியானது பயணக் கைத்தொழிலுக்கான திறனுள்ள மனித வளத்தினை வழங்குவதில் நேர்த்தியான செய்முறையொன்றை மேற்கொண்டுள்ளது. ஏழாவது (07) மாணவர் தொகுதியானது 2013 டிசம்பரில் தமது கற்கைகளை நிறைவு செய்திருந்தனர் என்பதுடன், எட்டாவது (08) மாணவர் தொகுதி 2014 ஜனவரியில் ஆரம்பிக்கப்படத் திட்டமிடப்பட்டுள்ளது.

## SLOT ஒருங்கிணைப்பு

BIA மற்றும் MRIA இல் SLOT குழுவின் ஒதுக்கீடானது குறித்த வருடத்தில் SLOT குழுவில் இணக்கங் காணப்பட்ட பரப்பெல்லைகளின் நிபந்தனைகளில் மேற்கொள்ளப்பட்டன. நாட்டில் காணப்படும் சமாதான சூழலுடன், BIA ஆனது அனேகமான விமான சேவைகள் மற்றும் பயணிகளின் விருப்பத்திற்குரிய தரிப்பிடங்களாக காணப்படுவதுடன், எதிர்காலத்தில் கொள்ளளவுக் கட்டுப்பாடுகள் தோன்றலாம். மேலும், MRIA இன் செயற்பாடுகள் குறிப்பிட்ட தொகையால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், SLOT ஒருங்கிணைப்பாளர் அவர்களுக்கான செயற்பாடுகளுக்கான செயற்பாட்டாளர்களைத் தூண்டியுள்ளார்.

## வான் போக்குவரத்துக் கைத்தொழிலினை ஒழுங்குபடுத்துதல்

மதிப்பீட்டுக் கூட்டங்கள் பயண முகவர்களின் அனுமதிப்பத்திரச் செய்முறையின் பொருட்டு உள்ளடக்கப்பட்டது. நிர்வாக உறுப்பினர்களின் பொருத்தமான தன்மையானது இக் கூட்டத்தில் மதிப்பீடு செய்யப்பட்டன. இதற்கு மேலாக, எதிர்கால முகாமையானது கைத்தொழிலையும் பொதுமக்களையும் நோக்கியதாக பயண முகவர்களின் பொறுப்புக் கூறல் கற்றுக்கொடுக்கப்பட்டது. மேலும் பொதுமக்களும், அனுமதிப்பத்திரம் உடைய பயண முகவர்களினூடாக அவர்களது வான் பிரயாண ஏற்பாடுகளை பூர்த்தி செய்து கொள்வதற்கு ஊடகங்களுடாக அறிவுறுத்தப்பட்டனர்.

சோதனை முறையொன்று செல்லுபடியான வான்போக்குவரத்து வழங்குனர் அனுமதிப்பத்திரமொன்றினைக் கொண்டிராது செயற்படும் பயண முகவர்களை ஒழுங்குபடுத்த மேற்கொள்ளப்பட்டது. பயண முகவர்கள் ஒழுங்குவிதித் தேவைப்பாடுகளை நிறைவு செய்த பின்னர் உரிமங்களைப் பெற்றுக்கொள்வதற்கு சந்தர்ப்பங்கள் கொடுக்கப்பட்டன.

## வான் போக்குவரத்துக் கைத்தொழிலின் பங்காளருடனான கூட்டங்கள்

குறித்த பகுதியானது விமான சேவைப் பிரதிநிதிகளின் சபை, சிவில் விமான சேவைப் பிரதிநிதிகளின் இலங்கைக்கான அமைப்பு, இலங்கை பயண முகவர் அமைப்பு, மற்றும் வர்த்தகத் திணைக்களம் போன்ற அரச நிறுவனங்கள் உள்ளடங்கலான கைத்தொழில் அமைப்புக்களுடன் வான் போக்குவரத்துக் கைத்தொழிலின் சாதகமான விருத்தியினை உறுதி செய்து கொள்வதற்கு ஒழுங்கு முறையான கூட்டங்களை ஏற்பாடு செய்திருந்தது.

## பொது விமானப் போக்குவரத்து விருத்தி

பொது விமானப் போக்குவரத்து அபிவிருத்தியுடன் தொடர்புபட்டதான செயற்பாடுகள் வான் போக்குவரத்துப் பகுதிக்கு கையளிக்கப்பட்டுள்ளது. 2013 இல் வெப்பவாயு பலூன்களின் செயற்பாடுகள் வெற்றிகரமானதொரு அமர்வாக முடிவிற்குக் கொண்டுவரப்பட்டது. பலூன் செயற்பாடுகளானவை தம்புள்ள மற்றும் அக்குரஸ்ஸ போன்ற பிரதேசங்களில் சுற்றுலாத்துறையின் விருத்திக்கு உதவக்கூடியதாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. பரா மோட்டரிங் என்பது 2011 இல் வரையறுக்கப்பட்ட ஸ்கை கிளப் (தனியார்) கம்பனியால் முதந்தடவையாக இலங்கைக்கு அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து, 2013 காலங்களில், இது ஒரு பிரத்தியேகமான பொழுதுபோக்கொன்றாக உருவாகியுள்ளது. மீளாய்விற்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில் தெற்காசிய விமானப் போக்குவரத்து அக்கடமி, கூல் பொழுதுபோக்கு கழகம், மற்றும் நீர்கொழும்பு வான் கழகம் என்பனவும் தமது வலுவூட்டப்பட்ட பரா செயற்பாடுகளை ஆரம்பித்தன.

பரா மோட்டரிங் செயற்பாடுகளானது கொக்கல, கற்பிட்டி, மற்றும் புத்தளம் ஆகிய பிரதேசங்களில் உருவாக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டது. புதிய பரா மோட்டரிங் பகுதியானது பென்தோட்டை மற்றும் முன்டலமா பிரதேசங்களில் செயற்பாடுகளுக்காக அனுமதிக்கப்பட்டது. உள்நாட்டவர்களுக்குச் சொந்தமான இரண்டு அல்ரா லைட்ற் வானூர்திகள் கட்டுக்கிருந்தையிலிருந்து தனியார் செயற்பாடுகளை தொடர்கின்றன. தன்னியக்க மாதிரி வானூர்திக் கழகங்கள் கொழும்பு மாநகரப் பிரதேசத்திலுள்ள வாட்டர் எச் இலும், பன்னிப்பிட்டிய தர்மபாலா கல்லூரி மைதானத்திலும் பறத்தல் நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன.

## ஹெலிகொப்டர் மற்றும் பலூன் செயற்பாடுகள்

| வானூர்தி வகை | மொத்தப் பறப்புகள் | | பிரயாணம் செய்த பயணிகள் | |
|---|---|---|---|---|
| | 2012 | 2013 | 2012 | 2013 |
| ஹெலிகொப்டர் | 596 | 351 | 2130 | 1984 |
| பலூன் | 141 | 156 | 947 | 1019 |

## மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் பட்டதாரி மாணவர்களுக்கான உள்ளகக் கற்கை

மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் வேண்டுகோளின் பொருட்டு, 2013 இல் ஆறு (06) மாதங்களாக CAASL இல் உள்ளக பயிற்சி நெறியொன்றில் ஈடுபடுவதற்கு இரண்டு (02) பட்டதாரி மாணவர்களுக்கு வசதிசெய்து கொடுக்கப்பட்டது. இந்த பயிற்சி நெறி நிகழ்ச்சியானது குறித்த பகுதியால் முன்னெடுக்கப்பட்டதுடன், குறித்த பட்டதாரி மாணவர்களுக்கான கல்விசார் விஜயமொன்றினை ஏற்பாடு செய்து ஒருங்கிணைத்தல் செய்ததன் மூலம், அவர்களுக்கு கைத்தொழில்சார் அறிவு வழங்கப்பட்டது. இவர்கள் வான் போக்குவரத்து மற்றும் சட்டவிவகாரங்களுக்கான பிரதிப் பணிப்பாளரின் வழிகாட்டலின் கீழ் தொழிற்பட்டனர். CAASL இல் உள்ளகப் பயிற்சி நெறியுடன் அப் பல்கலைக்கழகத்தின் போக்குவரத்து மற்றும் சரக்குக் கையாள்கை முகாமைத் திணைக்களத்திலிருந்து அவ்வாறான ஒன்பது (09) மாணவர்கள் இதுவரை உள்வாங்கப்பட்டுள்ளனர்.

மொறட்டுவைப் பல்கலைக்கழகத்திலிருந்து இரண்டு புதிய மாணவர்கள் 2013 நவம்பர் 11 இல் அவர்களது உள்ளக் கற்கை நெறியினை ஆரம்பித்துள்ளனர் என்பதுடன், அவர்கள் தற்போது பயிற்சி நெறியினை தொடர்ந்து வருகின்றனர்.

# மனித வளங்கள் மற்றும் அலுவலகத் முகாமைத்துவப் பகுதி


## நிறுவன மறுசீரமைப்பு

CAASL ஆனது அதனது நிறுவனக் கட்டமைப்பு, ஆளணியினர், சம்பளத்திட்டம், மற்றும் ஆட்சேர்ப்புத் திட்டம் என்பன தொடர்பில் முழுமையான மீளாய்வொன்றிற்கு கைத்தொழில் விரிவாக்கம் காரணமாகவும், தகுதிவாய்ந்த ஆளணியினரை உள்ளீர்த்துக் கொள்வதிலும், பாதுகாப்பு மற்றும் தற்காப்பு சோதனை நடவடிக்கைகளில் ஈடுபடும் பயிற்றுவிக்கப்பட்ட ஊழியர்களை தக்கவைத்துக் கொள்ளலிலும் உள்ள பிரச்சினைகளை வெளிக் கொண்டுவரும் தேவையின் பொருட்டும் சிவில் விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு மற்றும் தற்காப்புச் சோதனைகளுக்காக அதனது உயர்ந்தபட்ச பொறுப்புக்கூறலினைக் கருத்திற் கொண்டு 2012 இல் அனுமதியளித்தது. நிறுவன மறுசீரமைப்பிற்காக CAASL ஆல் அனுமதியளிக்கப்பட்டவாறு முழுமையான முன்மொழிவானது முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் மற்றும் அரச பொதுத் திறைசேரி என்பனவற்றிற்கு அவற்றின் அனுமதியைப் பெறும் நோக்கில் அனுப்பிவைக்கப்பட்டது.

CAA அனுமதித்த நிறுவன மறுசீரமைப்புப் பொதிக்கு மாறானதாக, CAASL இன் தேவைகளைத் திருப்தி செய்யாத நிலையில் அமைந்த வேறுபட்ட நிறுவன அமைப்பு, பதவி நிலைகள், மற்றும் சம்பளத் திட்டங்களை 23 நவம்பர் 2013 இல் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் அனுமதித்திருந்தது. மேலும், முகாமைத்துவ சேவைகள் திணைக்களமானது தம்மால் புதிய பதவி நிலைகளுக்கான ஆட்சேர்ப்புத் திட்டம் அனுமதிக்கப்படும் வரையில் ஏற்கனவே கிடைக்கத்தக்க பதவிநிலைகள் மற்றும் புதிய பதவிநிலைகள் எவைக்கும் CAASL ஆனது ஊழியர்களை ஆட்சேர்த்துக் கொள்ளக்கூடாது என்ற நிபந்தனையொன்றை முன்வைத்தது. அவ்வாறான விடயங்களுக்காக CAASL சட்டத்தில் விஷேட சட்ட ஏற்பாடுகள் இருந்தபோதிலும் கூட, மேற்கூறப்பட்ட விடயங்களுடன் தொடர்புபட்ட

CAASL இன் நிர்வாக ஒழுங்குபடுத்தல்கள் அரச பொதுக் கொள்கையை உறுதிசெய்து கொள்வதாக அமைய வேண்டும் என DMS இன் கூற்று அமைந்திருந்தது. இதன் பிரகாரம், CAASL ஆனது DMS அனுமதித்திருந்த ஒவ்வொரு பதவிநிலைக்குமான ஆட்சேர்ப்புத் திட்டத்தினை தயாரிப்பதை முன்னெடுத்ததுடன், அவை மிக விரைவில் DMS இற்கு அதன் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படும். DMS இடமிருந்து ஆட்சேர்ப்புத் திட்டத்திற்காகத் தேவைப்படும் அனுமதியினை பெற்ற நிலையில் உடனுக்குடன் ஊழியர்களின் ஆட்சேர்ப்பினை ஆரம்பித்துக் கொள்வது CAASL இன் நோக்கமாகக் காணப்படுகின்றது.

# Civil Aviation Authority of Sri Lanka Functional Responsibility Chart



## ஊழியரிடல்

தற்போது ஒரு பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர், முப்பத்துநான்கு (34) சிரேஷ்ட நிறைவேற்ற உத்தியோகத்தர்கள், நாற்பத்து மூன்று (43) நிறைவேற்று உத்தியோத்தர்கள் என்போரை முகாமைத்துவ மட்டத்தில், பிரதானமாக காப்பு மற்றும் பாதுகாப்பு மேற்பார்வை தொடர்பான கடமை, செயற்பாடு, மற்றும் தொழிற்பாடுகளை முன்னெடுத்துக் கொள்ளும் பொருட்டும், அவர்களுக்கு உதவி புரியும் பொருட்டு, ஐம்பத்தைந்து (55) விமானப் போக்குவரத்து உத்தியோகத்தர்கள், மற்றும் முப்பத்தி நான்கு உதவி நிலை ஊழியர்கள் உள்ளடக்கிய அதன் அங்கீகரிக்கப்பட்ட பதவி நிலைகளில் நூற்று அறுபத்தேழு (167) நிலைகளை CAASL தற்போது தன்னகத்தே கொண்டுள்ளதுடன், CAASL இல் மொத்தமாக நூற்று நாற்பத்தாறு (146) ஊழியர்கள் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். மேலும் 2013 இன் இறுதியில் 21 பதவிநிலைகள் வெற்றிடமாகக் காணப்பட்டன.

## ஊழியர் நலன்புரி

CAASL ஆனது ஊழியர்களுக்கும் அவர்களது நெருங்கிய குடும்ப அங்கத்தவருக்கும் நலன்புரி நன்மைகளை வழங்குவதற்காக ரூபா.6,573,480.00 செலவில் அதனது மருத்துவக் காப்பீட்டுத் திட்டமொன்றினை முன்னெடுத்து வருகின்றது. 2012 மே இல் ஆரம்பமாகிய காலப்பகுதியில் ரூபா 2,415,742.00 பெறுமதி மிக்க உள்ளக மருத்துவ காப்பீட்டு நன்மைகளையும், ரூபா 2,354,074.00 பெறுமதியான வெளியக மருத்துவக் காப்பீட்டு நன்மைகளையும் பெற்று மொத்தமான நூற்று முப்பத்து நான்கு (134) ஊழியர்கள் நன்மை அடைந்துள்ளனர்.
விபத்து காப்புறுதிக் கொள்கையானது சிவில் விமானப் போக்குவரத்துப் பரிசோதகர்களின் சுகாதாரம், காப்பு, மற்றும் பாதுகாப்பு போன்ற மிக முக்கிய நிலமைகளுக்கு சில சந்தர்ப்பங்களில் அவர்கள் முகங்கொடுக்க வேண்டிய சூழல் ஏற்படும் போது அவர்களுக்கு விஷேட காப்பொன்றை பெற்றுக் கொடுப்பதற்கு வரையறுக்கப்பட்ட சிலிங்கோ காப்புறுதிக் கம்பனி இணங்கிக் கொண்டதற்கிணங்க, அக் கொள்கையானது புதுப்பித்துக் கொள்ளப்பட்டது.

ஊழியர்களுக்கு உதவிக்கரம் நீட்டும் பொருட்டு, CAASL முப்பத்தொன்பது (39) ஊழியர்களுக்கு ரூபா 6,594,657.00 ஐ இடர் கடனாகவும், ஊழியரொருவருக்கு ரூபா 2,559,089.00 ஐ ஆதனக் கடனாகவும் மீளாய்விற்கு உட்படுத்திய காலத்தில் வழங்கியிருந்தது.

இதற்கு மேலதிகமாக, 2013 இல் பதினெட்டு ஊழியர்களுக்கு மொத்தம் ரூபா 15,417,700.00 ஐ மோட்டார் வாகனம், மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கர வண்டிகள், மற்றும் துவிச்சக்கர வண்டிகளைக் கொள்வனவு செய்யும் பொருட்டு கடனாக வழங்கப்பட்டது.

## “மல் வருஷ”

“மல் வருஷ” என அழைக்கப்படும் நிகழ்வொன்று வேலைப்பட்டறை முடிவுகளைக் கருத்திற்கொண்டு ஊழியர்களுக்கிடையில் பரஸ்பர புரிந்துணர்வினை ஏற்படுத்திக் கொள்வதனூடாக ஊழியர்களை ஊக்குவிப்பதனையும் அவர்களது வளர்ச்சியையும் இலக்காகக் கொண்டு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந் நிகழ்வானது அனைத்து ஊழியர்களின் பங்குபற்றுதலுடன் மாதமொன்றிற்கு ஒரு முறை நடாத்தப்பட்டு வருகின்றது.

## பயிற்சியளித்தல், கருத்தரங்குகள், வேலைப்பட்டறைகள், கூட்டங்கள், மற்றும் மகாநாடுகள்.

கூட்டங்களிலும், மகாநாடுகளிலும் பங்கு கொள்வதற்கான கடல் கடந்த பயணங்கள் உள்ளடங்கிய அனைத்து வகைப் பயிற்சி நெறிகளுக்காகவும் மொத்தமான ரூபா 38,470,006.70 செலவு செய்யப்பட்டுள்ளது. மேலும், CAASL ரூபா 1,377,300.00 ஐ 586 மனித நாட்களுக்கு உள்நாட்டுப் பயிற்சி நெறிகளுக்காக செலவு செய்துள்ளது. ரூபா. 16,356,184.82 ஐ 234 மனித நாட்களைக் கொண்ட வெளிநாட்டு பயிற்சி நெறிகளுக்காக செலவு செய்துள்ளது.

CAA இன் செயற்பாடுகள் அதிகளவில் சர்வதேச நிலமைகளைக் கொண்டு முன்னெடுக்க வேண்டிக் காணப்படுவதனால், மீளாய்விற்குக் கீழான காலப்பகுதியில் கைத்தொழிலுடன் தொடர்புடைய வெவ்வேறுபட்ட கூட்டங்கள், பேரம்பேசல்கள், மற்றும் மகாநாடுகளில் பங்குபற்றும் பொருட்டு, CAASL ஆனது தனது உத்தியோகத்தர்களை வெளிநாட்டிற்கு அனுப்பவேண்டிய தேவையினைக் கொண்டுள்ளது. இவ்வாறான செயற்பாடுகளுக்கென CAA ஆனது ரூபா. 22,119,821.88 ஐ செலவு செய்துள்ளது.

2013 நிகழ்ச்சித்திட்டப் பாதீட்டிலும், பயிற்சி நெறித் திட்டத்திலும் இனங்காணப்பட்டவாறு, பயிற்சி நெறிக்கான தேவைகள் ஆண்டிற்கான பாதீட்டு ஒதுக்கீடுகளினுள் வசதி செய்து கொடுக்கப்பட்டன. 2012 ஐ கருத்திற் கொள்கையில், இது ஊழியரின் இயலளலினை வளர்த்துக் கொள்வதற்கான முதலீட்டின் குறிப்பிடத்தக்க அளவிலான அதிகரிப்பொன்றாகக் காணப்படுகின்றது.

எல்லாவற்றிலும், நிறைவேற்றுத் தரத்திலுள்ள உத்தியோகத்தர்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட வெளிநாட்டுப் பயிற்சிநெறிகள், கருத்தரங்குகள், வேலைப்பட்டறைகள், கூட்டங்கள், மற்றும் மகாநாடுகள் போன்றனவற்றிற்கான சந்தர்ப்பங்கள் உள்ளடங்கியதாக 439 மனித நாட்களை மொத்தத்திற் கொண்டதான எண்பத்தெட்டு (88) மனித வள விருத்திச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

பயிற்சிநெறிகள், கருத்தரங்குகள், மற்றும் வேலைப்பட்டறைகள் போன்ற சந்தர்ப்பங்களை உள்ளடங்கிய 586 மனித நாட்களை உள்ளடக்கிய 586 மனித நாட்களைக் கொண்ட மொத்தமாக 263 உள்நாட்டுச் செயற்பாடுகளானவை மனிதவள இயலளவினைக் கட்டியெழுப்புவதனை இலக்காகக் கொண்டு நிறைவேற்றுத் தர உத்தியோகத்தர்கள் மற்றும் செயற்பாட்டு உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டன. இதன் அடிப்படையில் இவ் வருடத்தில் மொத்தத்தில் 820 மனித நாட்களைக் கொண்ட பயிற்சிநெறிகள், கருத்தரங்குகள், மற்றும் வேலைப்பட்டறைகளுக்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டன.

## தொழில்நுட்ப நூலகம்

விமானப் போக்குவரத்தில் ஆர்வமுடையோரின் அறிவாற்றலினை மேம்படுத்துவதை இத் தொழிநுட்ப நூலகத்தின் பிரதான இலக்காகக் கொண்டு, CAASL நூலகமானது அதனது ஊழியர்கள் மற்றும் விமானப் போக்குவரத்துத்துறை ஆளணியினர் ஆகிய இரு தரப்பினராலும் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது.

மீளாய்விற்கு உட்படுத்தப்பட்ட வருடத்தில் 360 இற்கும் மேற்பட்ட வெளிநபர்கள் நூலக மூலகங்களை பயன்படுத்தியுள்ளனர். மேலும், இது இலங்கையின் விமானப் போக்குவரத்தில் வள மற்றும் அறிவாற்றல் நிலையமாகத் தொழிற்படுகின்றது.

2012 இல் இந் நிறுவனத்திற்கு புதிய வெளியீடுகளை கொள்வனவு செய்யும் பொருட்டு ரூபா.251,559.75 செலவு செய்யப்பட்டது. இதற்கு மேலதிகமாக ஊழியர்களிடையே தகவல்களின் பரம்பலை உருவாக்கிக் கொள்ளும் நோக்குடன், பகுதி நூலகங்களானவை ICAO ஆவணங்களை விருத்தியாக்கும் தொடர்ச்சியான முறைமையொன்றுடன் பிரதான தொழிநுட்ப நூலகத்தினால் பேணப்பட்டு வருகின்றது.

## CAASL இணையத்தளம்

CAASL இணையத்தளமான றறற.உயய.டம ஆனது விருத்தியாக்கப்பட்ட உள்ளடக்கங்களுடனும், தரவுப் பாதுகாப்பிற்காகத் தேவைப்படும் போதியளவிலான பாதுகாப்பு அளவீடுகளையும் பிரயோகித்து பேணப்பட்டது. இணையத்தளத்தை அடிப்படையிற் கொண்ட மென்பொருள்களினூடாக பரீட்சை முடிவுகளை வழங்குவதற்கு வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளதுடன், மேலதிக தரவுகளை கூட்டாண்மைத் தேவைகளுக்காக முகங்கொடுக்கும் பொருட்டு சேர்க்கப்பட்டுள்ளன.

## ஊயுயுளுடு கூட்டாண்மைத் திட்டம் மற்றும் வேலை நிகழ்ச்சித்திட்டம்

CAA இன் விஸ்தரிப்புத் தேவைகள் மற்றும் கடப்பாடுகளை பிரதிபலித்துக் கொள்வதற்கு வருடாந்தம் விருத்தியாக்கப்படும் அதன் கூட்டாண்மைத் திட்டத்துடனான இணக்கப்பாட்டில் குறித்த பகுதியானது CAA இன் ஒவ்வொரு பகுதி மற்றும் அலகுகளின் வேலை நிகழ்ச்சித் திட்டங்கள் உள்ளடக்கி 2013 வருடத்திற்கான அதன் முழுமையான வேலை நிகழ்ச்சித் திட்டத்தினைத் தயாரித்தது.

சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சினால் தயாரிக்கப்பட்ட செயற்றிட்ட விபரங்கள் அனுப்பிவைக்கப்பட்டன.

## CAASL இன் பராமரிப்புடன் தொடர்புபட்ட செயற்பாடுகள்

CAASL இன் தலைமையலுவலகமானது புதிய சுற்றுச் சூழல் அலுவலக கட்டமைப்பு உருவாக்கப்பட்டதற்கிணங்க, 2013 காலப்பகுதியில் அழகிய தோற்றங் கொண்டு காணப்பட்டது. ஆரம்பத்தில் குறித்த கட்டடமானது மூன்று ஆண்டுகளுக்கு குத்தகைக்கு பெற்றுக்கொள்ளப்பட்டதுடன், குறித்த காலப்பகுதியானது 2014 பெப்பரவரி 28 இல் காலாவதியாகின்றது. CAASL ஆனது நைகந்த, கட்டுநாயக்க, BIA இல் நிரந்தரமாக்கப்படுவதற்கான அதன் தலைமைத்துவக் கட்டடம் நிர்மாணிக்கப்படும் வரையில் இரண்டு ஆண்டுகளால் இவ் ஒப்பந்த காலத்தை நீடித்துக் கொள்வதற்கு விருப்பந்தெரிவித்துள்ளது.

கட்டுநாயக்க (இல. 09) இல் அமையப்பெற்றுள்ள விடுதியானது குறித்த மீளாய்விற்கு உட்படுத்தப்படும் ஆண்டில் சிரேஷ்ட வானியற் தகவல் உத்தியோகத்தரால் பயன்படுத்தப்படுகின்றது. இரத்மலானையில் அமையப் பெற்றுள்ள விடுதியானது 2012 இல் மறுசீரமைக்கப்பட்டதுடன், மீளாய்விற்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில் சிரேஷ்ட வான்தகைமைப் பொறியியலாளர் ஒருவருக்கு ஒதுக்கிடப்பட்டுள்ளது.

## CAASL இனைத் தன்னியக்கமாக்கல்

2013 இற்காக ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட மென்பொருள் பொதியில் குறிப்பிடத்தக்க தகவற் தொழிநுட்ப மேம்படுத்தல்கள் மைக்ரோ சொப்ட் 2013 பொதியின் உள்வாங்கலுடன் மேற்கொள்ளப்பட்டது.

அலுவலக உதவியாளர்கள் மற்றும் வாகன சாரதிகள் உள்ளடங்கிய CAA இன் ஒவ்வொரு ஊழியருக்கும் தொடர்பாடலை மேம்படுத்திக் கொள்வதற்காக உத்தியோக பூர்வமான மின்னஞ்சல் முகவரிகள் வழங்கப்பட்டுள்ளன. இதன் பிரகாரம், CAA இன் அனைத்து ஊழியர்களும் மின்னஞ்சலூடாக தற்போது e-literate மற்றும் தொடர்புபடுத்தப்படக் கூடியவர்களாகக் காணப்படுகின்றனர்.
மேலும், சிவில் விமானப் போக்குவரத்து உத்தியோகத்தர் அல்லது அதற்கு மேலான பதவி நிலைகளைக் கொண்டுள்ள ஒவ்வொரு உத்தியோகத்தருக்கும் இணையத்தளத்தைப் பயன்படுத்திக் கொள்ளக் கூடியதாக பிரத்தியேக கணனிகள் வழங்கப்படுகின்றன.

## CAASL ஊழியர்களால் பயன்படுத்தப்படும் விடுமுறைகள்

காலந் தாழ்த்திய வருகை பதிவேடுகள் மற்றும் குறுங்கால விடுமுறைப் பதிவேடுகளின் நெருக்கமான கண்காணித்தலானது அலுவலகத்திற்கு சமூகமளிக்கும் போது ஊழியரால் முகங்கொடுக்கப்படும் கஷ்டத்தன்மை காரணமாக வருகையில் வழங்கப்பட்ட தயவு காலத்திற்கு மேலதிகமாக மேற்கொள்ளப்பட்டது.

பயன்படுத்தப்படாத விடுமுறைக்கு பணத்தைப் பெற்றுக் கொள்ளும் வசதி போன்ற ஊக்குவிப்புக்கள் வேலைக்கு ஊழியர்களின் தொடர்ச்சியான வருகையை ஊக்குவித்துள்ளது.

## செயற்திட்ட பாதீடு

வழிப்படுத்தலும் முகாமைத்துவமும், வான்செலவு சேவைகள், விமானபறப்பு பாதுகாப்பு, மற்றும் கூட்டாண்மை என்னும் நான்கு பிரதான வேலைத்திட்டத்தின் கீழ் பணிப்பாளர் சபையினரால் அனுமதிக்கப்பட்ட 2013 இற்கான செயற்திட்டப் பாதீட்டின் பிரகாரம், CAA இன் நிதிகளை நிதிப் பகுதியானது முகாமை செய்தது. 78 மில்லியன் கொண்ட மூலதன செலவொன்றை உள்ளடக்கியதான ரூபா 644 மில்லியனைக் கொண்ட மொத்தச் செலவுகளுக்கு எதிரானதாக, ரூபா 1,179 மில்லியன் வருமானம் அமைந்திருந்தது. ரூபா 989 மில்லியனாகக் காணப்பட்ட முன்னைய வருட வருமானத்துடன் ஒப்பிடுகையில் 19% அதிகரிப்பொன்றைக் காட்டும் வருமானமாகவும் மற்றும் ரூபா 518 மில்லியனாகக் காணப்பட்ட முன்னைய வருடச் செலவுடன் ஒப்பிடுகையில் 9.3% அதிகரிப்பொன்றை காட்டும் மீண்டெழும் செலவையும் கொண்டதாக 2013 அமைந்திருந்தது.

## முகாமைத்துவ தகவல்கள்

மீளாய்விற்கு உட்படுத்தப்பட்ட காலப்பகுதியில் நிதி முகாமைத்துவத் தகவலின் முழுமையான முறைமையொன்று வெற்றிகரமாக அமுலாக்கப்பட்டுள்ளது. இது நிதி முகாமைத்துவத் தகவலின் பரந்தளவிலான உள்ளடக்கங்களை வழங்குவதுடன், CAA வாடிக்கையாளருக்கான இலத்திரனியல் அட்டைக் கொடுப்பனவின் ஏற்றுக் கொள்ளலுக்கான வசதியளித்தலையும் உள்ளடக்குகின்றது. CAA இன் நிதி முகாமைத்துவத் தகவற் கூற்றுக்களானவை 2012 இல் அறிமுகப்படுத்தப்பட்ட இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களையும் உறுதி செய்வனவாக அமைகின்றது.

# 2013 - செயற்சாதனைச் சுருக்கம்

| 2013 - CAASL இன் செயற்சாதனை | 2013 | 2012 |
|---|---|---|
| **ஆபத்தற்றதன்மை மற்றும் பாதுகாப்பு மேற்பார்வை தொடர்பான கடமைகள் மற்றும் தொழிற்பாடுகள் (வினியோகிக்கப்பட்ட ஒழுங்கு விதிகள், அறிவித்தல்கள், விதிகளின் எண்ணிக்கை)** | | |
| வான் போக்குவரத்து | 03 | 01 |
| வான்தகைமைகள் | 02 | 00 |
| **நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களுக்கான ஆரம்பநிலைச் சான்றுப்படுத்தல்கள்** | | |
| விமான சேவை நிறுவனங்கள் | 01 | 02 |
| பராமரிப்பு நிறுவனங்கள் | 05 | 10 |
| விமானிகள் | 268 | 199 |
| வான் நெரிசற் கட்டுப்பாட்டாளர்கள் | 00 | 16 |
| வானூர்திப் பராமரிப்பாளர் அனுமதிப்பத்திரம் | 73 | 158 |
| விமானப் பறப்பு அனுப்புநர்கள் | 14 | 00 |
| விமானப் பறப்பு பயிற்றுவிப்பாளர்கள் | 00 | 07 |
| உதவி விமானப்பறப்பு பயிற்றுவிப்பாளர்கள் | 00 | 04 |
| தளப் பயிற்றுவிப்பாளர்கள் | 04 | 10 |
| வானறைக்குழு அங்கத்தவர்கள் | 229 | 187 |
| **சான்றுப்படுத்தப்பட்ட நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களின் சோதனைகள்** | | |
| ராம்ப் சோதனைகள்- வான்தகைமை | 263 | 102 |
| ராம்ப் சோதனைகள்- செயற்பாடு | 53 | 36 |
| விமானத்தளச் சோதனைகள் | 39 | 19 |
| வான் நெரிசற் சேவைச் சோதனைகள் | 32 | 23 |
| பராமரிப்பு நிறுவன சோதனைகள் | 46 | 42 |
| வானூர்திப் பறத்தற் பாடசாலைகள் சோதனைகள்- தனிநபர் அனுமதிப்பத்திரங்கள் | 08 | 14 |
| விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு சோதனைகள் | 21 | 42 |
| பறப்பு மாதிரிகைகள் மீதான சோதனைகள் | 01 | 02 |
| பறத்தலின் போதான சோதனைகள் | 04 | 04 |
| ஆபத்தான பொருட்கள் மீதான சோதனைகள் | 09 | 18 |
| நிலைய வசதிகள் பற்றிய சோதனைகள்- வான்தகைமை | 07 | 00 |
| நிலைய வசதிகள் பற்றிய சோதனைகள்- செயற்பாடுகள் | 00 | 02 |
| வானியற் தகவற் சேவைச் சோதனைகள் | 19 | 12 |
| பிரதான தளச் சோதனைகள் / பயிற்றுவிப்பாளர் அவதானிப்பு | 14 | 21 |
| ஒதுக்கீடு செய்யப்பட்ட சோதனை விமானிகள் (னுஊீ அவ-தானிப்பு) | 14 | 26 |
| **முடிவுறுத்தப்பட்ட கணக்காய்வுகள்** | | |
| வான் செலவு சேவைகள் | 01 | 01 |
| விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு | 01 | 01 |

| வகை | 2013 | 2012 |
|---|---|---|
| **வழிகாட்டல் மற்றும் முகாமைத்துவம்** | | |
| நடைபெற்ற அதிகாரசபையின் கூட்டங்கள் | 09 | 13 |
| நடைபெற்ற கணக்காய்வுக் குழுக் கூட்டம் | 04 | 08 |
| நடைபெற்ற ஊழியர் சபைக் குழுக் கூட்டம் | 03 | 02 |
| நடைபெற்ற அபிவிருத்தித் திட்டமிடல் மற்றும் அமுல்படுத்தல் குழுக் கூட்டங்கள் | 04 | 06 |
| நடைபெற்ற கைத்தொழில் ஆலோசனைக் கூட்டம் | 22 | 201 |
| வெளி நிறுவனங்கள் / நபர்களின் சந்திப்புகள் | 136 | 249 |
| கிடைக்கப்பெற்ற கடிதங்களின் எண்ணிக்கை | 5518 | 5839 |
| **விமான போக்குவரத்துப் பாதுகாப்புப் (AV-SEC) பகுதி** | | |
| விமான நிலைய நுழைவு அனுமதிப் பத்திர வழங்குகைக்கான பரிந்துரை | 30 | 19 |
| விமானத்தில் பயணிக்கும் போது / சரக்குப் பொருளினுள் போர்ச் சாதனங்களைக் கையாள்வதற்கான அனுமதி | 139 | 171 |
| விமானத்தில் விமானியுடன் பயணிப்பதற்காக அனுமதி | 01 | 01 |
| தேசிய விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு வேலைத்திட்டத்தினைத் திருத்துதல் மற்றும் மீளாய்வு செய்தல். | 02 | 29 |
| முன்னெடுக்கப்பட்ட பாதுகாப்புச் சோதனை நடவடிக்கைகள் | 20 | 36 |
| கைத்தொழிலுக்காக நடாத்தப்பட்ட பாதுகாப்புப் பயிற்சிப் பாடநெறிகள் | 09 | 05 |
| நடாத்தப்பட்ட பாதுகாப்பு சோதனை நடவடிக்கைகள் | 349 | 429 |
| பங்கேற்ற பாதுகாப்புப் பயிற்சிப் கற்கைநெறி / கருத்தரங்கு | 10 | 02 |
| நடாத்தப்பட்ட விமானப் போக்குவரத்துப் பாதுகாப்புப் பரீட்சைகள் | 13 | 07 |
| வழங்கப்பட்ட விமானப் போக்குவரத்துப் பாதுகாப்புப் வெளிப்படுத்துகைகள் | 02 | 01 |
| **விஷேட செயற்றிட்டங்கள் (SP) பகுதி** | | |
| CAA தலைமையலுவலகக் கட்டட நிர்மாணம் | 06 | 00 |
| TEC கூட்டங்கள் | 05 | 00 |
| ஒப்பந்தகாரருடனான கூட்டங்கள் | 05 | 00 |
| முன்மொழியப்பட்ட கட்டட நிர்மாண இடத்திற்கான விஜயங்கள் | 11 | 00 |
| உள்ளகக் கூட்டங்கள் | | |
| **MRIA இல் அலுவலகக் கட்டட நிர்மாணங்கள்** | | |
| TEC கூட்டங்கள் | 09 | 00 |
| ஒப்பந்தகாரருடனான கூட்டங்கள் | 06 | 00 |
| முன்மொழியப்பட்ட கட்டட நிர்மாண இடத்திற்கான விஜயங்கள் | 16 | 00 |
| உள்ளகக் கூட்டங்கள் | 30 | 00 |

### வீரவிலவில் CAA விடுதிகளுக்கான நிர்மாணம்

| | | |
|---|---|---|
| TEC கூட்டங்கள் | 06 | 00 |
| ஒப்பந்தகாரருடனான கூட்டங்கள் | 00 | 00 |
| முன்மொழியப்பட்ட கட்டட நிர்மாண இடத்திற்கான விஜயங்கள் | 01 | 00 |
| உள்ளகக் கூட்டங்கள் | 07 | 00 |
| குவான்ஷர சஞ்சிகை வெளியீடு | 04 | 03 |
| நடாத்தப்பட்ட CADEC நிகழ்வுகள் | 19 | 12 |
| பாடசாலை அதிபர்களுக்கான வேலைப்பட்டறைகள் | 02 | 00 |
| பாடசாலை மாணவர்களுக்கான வேலைப்பட்டறைகள் | 06 | 06 |
| பாடசாலை மாணவர் கழகங்களுக்கான வேலைப்பட்டறைகள் | 08 | 00 |
| நடாத்தப்பட்ட விஷேட செயற்பாடுகள் | 01 | 01 |
| தேசிய குழு நிகழ்வுகள் | 02 | 00 |
| WHO IHR (2005) வேலைப்பட்டறை | 01 | 00 |
| CAPSCA உதவியாளர் விஜயம் | 01 | 00 |
| நடாத்தப்பட்ட வருடாந்த வெளிக்களப் பயிற்சி வேலைப்பட்டறை | 01 | 00 |
| தேசத்திற்கு மகுடம் தேசியக் கண்காட்சி | 01 | 01 |
| கண்காட்சியில் CAA யின் காட்சியறையை ஒழுங்குபடுத்தல் | 02 | 02 |
| ஊயுயு வருடாந்த அறிக்கை | 01 | 01 |
| ஏனைய வெளியீடுகள் / அறிக்கைகள் | 05 | 04 |
| பகுதிகளின் புள்ளிவிபரங்கள் | 12 | 12 |
| CAA புள்ளிவிபரங்கள் | 121 | 121 |

### வான் செலவுச் சேவைகள் (ANS) பகுதி

| | | |
|---|---|---|
| உயரிய கட்டிடங்களை அமைப்பதற்கான அனுமதி | 312 | 653 |
| NOTAM வழங்குவதற்கான அனுமதிகள் | 186 | 264 |
| வானியற் தகவற் சுற்றறிக்கைகளை வழங்கல் | 08 | 09 |
| AIP குறைநிரப்புக்களை வழங்கல் | 07 | 08 |
| மேலாகப் பறப்பதற்காக அங்கீகாரம் வழங்கல் | 929 | 1030 |
| அட்டவணைப்படுத்தப்படாத விமானங்களுக்காக தரையிறக்கும் அனுமதி | 586 | 655 |
| பங்கேற்ற பயிற்சிப் கற்கைநெறிகள் / கருத்தரங்கு | 29 | 34 |
| வழங்கப்பட்ட நீர் சார்ந்த விமானத்தளச் சான்றிதழ்கள் | 01 | 00 |
| நடாத்தப்பட்ட விமானத்தளச் சோதனைப்பணிகள் | 39 | 19 |
| நாடாத்தப்பட்ட வானியல் சேவை (ATS) சோதனைப்பணிகள் | 32 | 24 |

### தனியார் அனுமதிப் பத்திரங்களை வழங்குதல் பகுதி (PEL)

| | | |
|---|---|---|
| மாணவ விமானி அனுமதிப் பத்திரம் (வழங்கல் + புதுப்பித்தல்) | 231 | 155 |
| தனியார் விமானி அனுமதிப் பத்திரம் (வழங்கல் + புதுப்பித்தல்) | 110 | 94 |
| வர்த்தக விமானி அனுமதிப் பத்திரம் (வழங்கல் + புதுப்பித்தல்) | 339 | 264 |
| விமானப் போக்குவரத்து விமானி அனுமதிப் பத்திரம் (வழங்கல் + புதுப்பித்தல்) | 498 | 414 |
| வான் போக்குவரத்து கட்டுப்பாட்டாளர் அனுமதிப் பத்திரம் (வழங்கல் + புதுப்பித்தல்) | 26 | 44 |
| வானூர்தியின் பராமரிப்பு பொறியியலாளர் அனுமதிப் பத்திரம் (வழங்கல் + புதுப்பித்தல்) | 05 | 113 |
| வானூர்தியின் பராமரிப்பு அனுமதிப் பத்திரம் (வழங்கல் + புதுப்பித்தல்) | 474 | 397 |

| | | |
|---|---|---|
| வானூர்தியின் பராமரிப்பு அனுமதிப் பத்திரம்- வகைத் தரங்கள்-வழங்குகைகள் | 25 | 38 |
| வானூர்தியின் பராமரிப்பு அனுமதிப் பத்திரம்- வகைகள்-வழங்குகைகள் | 10 | 14 |
| விமான அறை ஊழியர் சான்றுப் பத்திரம்- வழங்குகைகள் | 229 | 225 |
| விமான அறை ஊழியர் சான்றுப் பத்திரம்- மீள் வழங்குகைகள் | 512 | 50 |
| வானூர்திச் செயற்பாட்டு உத்தியோகத்தர் அனுமதிப் பத்திரம் - வழங்குகைகள் | 14 | 00 |
| சுதந்திரமான பலூன் விமானி அனுமதிப் பத்திரம் (வழங்கல் + புதுப்பித்தல்) | 00 | 05 |
| விமானப் பறப்புப் பொறியியலாளர் அனுமதிப் பத்திரம் - (வழங்கல் + புதுப்பித்தல்) | 01 | 00 |
| வர்த்தக விமானி அனுமதிப்பத்திரம் மற்றும் விமானப் போக்குவரத்து விமானி அனுமதிப்பத்திரம் வழங்குகைகள் மீதான விமான வகைத் தரப்படுத்தல்கள் | 154 | 140 |
| பறத்தல் பயிற்றுவிப்பாளர்கள் / உதவிப் பறத்தல் பயிற்றுவிப்பாளர்கள் தரப்படுத்தல்கள் (வழங்கல் + புதுப்பித்தல்) | 09 | 28 |
| பறத்தற் பாடசாலை அனுமதிப் பத்திரங்களைப் புதுப்பித்தல் | 03 | 06 |
| தளப் பயிற்றுநருக்கான அனுமதிகள் | 04 | 12 |
| வான் நெரிசற் கட்டுப்பாட்டாளர் தரப்படுத்தல் (வழங்கல் + புதுப்பித்தல்) | 201 | 100 |
| வானூர்திப் பராமரிப்பு பொறியலாளர் அனுமதிப் பத்திரம் (AME) வகை- வழங்கல் | 00 | 01 |
| வீசாவுக்கான பரிந்துரை வழங்கல் | 85 | 92 |
| NIB அனுமதிகளை வழங்குதல் | 159 | 359 |
| வைத்தியப் பரீட்சைகள் | 958 | 866 |

## பரீட்சைகள்

| | | |
|---|---|---|
| தனிநபர் விமானி அனுமதிப்பத்திரப் பரீட்சை (PPL) | 107 | 89 |
| விசேட வான் சட்டப் பரீட்சை | 00 | 06 |
| AML பரீட்சை | 02 | 02 |
| | 414 | 411 |
| | விண்ணப்பங்கள | விண்ணப்பதாரி |
| விமானப் போக்குவரத்து விமானி (ATPL) அனுமதிப்பத்திரப் பரீட்சை | 79 | 56 |
| விமானப் போக்குவரத்து விமானி (ATPL -H)அனுமதிப்பத்திரப் பரீட்சை | 03 | 06 |
| வெளிநாட்டு அனுமதிப் பத்திர மாற்றீட்டுப் பரீட்சை | 00 | 04 |
| ஆங்கில மொழித் தேர்ச்சிப் பரீட்சை | 109 | 117 |
| காலங்கடந்த அனுமதிப் பத்திரத்தை மீள்செய்முறைப்படுத்தலுக்கான | 03 | 12 |
| பரீட்சை (CPL/IR) | 56 | 55 |
| றேடியோ தொலைபேசி செய்முறைப் பரீட்சை | 00 | 00 |
| விமானப் பறப்புத் தேர்ச்சி பரீட்சகர் பரீட்சை | 01 | 00 |
| பரீட்சைக்கான PPL பரீட்சை | 00 | 02 |
| | 414 | 411 |
| | விண்ணப்பதா | விண்ணப்பதாரி |

## செயற்பாடுகள் (OPS)

| | | |
|---|---|---|
| பங்குபற்றிய பயிற்சிப் கற்கைநெறி / கருத்தரங்குகள் | 10 | 13 |
| வழங்கப்பட்ட புதிய வழிகாட்டல் ஆவணம் | 00 | 03 |
| விசேட செயற்பாடுகள் | | |
| | 12 | 11 |

| | | |
|---|---|---|
| விமான அறை ஊழியர்கள் அதிகாரமளித்தல் | 229 | 266 |
| வெளிநாட்டு வான் செயற்பாட்டுச் சான்றிதழ் - வழங்கல் | 04 | 02 |
| வெளிநாட்டு வான் செயற்பாட்டுச் சான்றிதழ்- புதுப்பித்தல்கள் | 11 | 26 |
| அபாயகரப் பொருட்களை நகர்த்துவதற்கான அனுமதி-வழங்கல் | 02 | 00 |
| அபயாகரப் பொருள் போக்குவரத்து அனுமதிப் பத்திரங்கள்- புதுப்பி-த்தல் | 13 | 13 |
| DCP - வழங்கல் | 04 | 09 |
| DCP - புதுப்பித்தல் | 30 | 23 |
| வான் செயற்பாட்டுச் சான்றிதழ்- வழங்கல் | 01 | 00 |
| வான் செயற்பாட்டுச் சான்றிதழ் - புதுப்பித்தல். | 08 | 08 |
| விமான மாதிரிகைகளைப் புதுப்பித்தல் | 07 | 05 |
| பரீட்சார்த்த அதிகாரமளித்தல் | 249 | 220 |
| முன்னெடுக்கப்பட்ட சோதனைச் செயற்பாடுகள் | 106 | 92 |

## வான்தகைமை பகுதி (AW)

| | | |
|---|---|---|
| வெளியிடப்பட்ட புதிய விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு அறிவி-த்தல்கள் | 02 | 00 |
| பங்குபற்றிய பயிற்சிப் கற்கைநெறி / கருத்தரங்கு | 08 | 06 |
| முன்னெடுக்கப்பட்ட சோதனைச் செயற்பாடுகள் (ரம்ப் மற்றும் ஆய்வு) | 238 | 102 |
| வானூர்திகளின் வான்தகைமைச் சான்றிதழ் - வழங்கல் | 11 | 08 |
| வானூர்திகளின் வான்தகைமைச் சான்றிதழ் - புதுப்பித்தல் | 47 | 40 |
| வானூர்தி பராமரிப்பு ஒழுங்கமைப்பு வேலைத்தள அங்கீகாரம் | 46 | 10 |
| வானூர்திகளைப் பதிவுசெய்யும் சான்றுப்பத்திரம் - வழங்கல் | 09 | 06 |
| வானூர்திகளைப் பதிவுசெய்யும் சான்றுப்பத்திரம் - புதுப்பித்தல் | 54 | 51 |
| வசதிகள் பரிசோதனையுடன் கூடிய பராமரிப்பு ஒழுங்கமைப்பு அங்கீகாரம் | 46 | 42 |
| விமான சேவை நிகழ்வுகளைத் தீர்த்தல் | 93 | 32 |

## விமான போக்குவரத்து மற்றும் சட்ட விவகாரங்கள் பகுதி (AT & LA)

| | | |
|---|---|---|
| புதிய ஒழுங்குக் கோவை சட்ட வரைவு | 03 | 01 |
| பங்கேற்ற பயிற்சிக் கற்கைநெறி / கருத்தரங்கு | 04 | 02 |
| புதிய வழிகாட்டல் ஆவண உருவாக்கம் | 03 | 01 |
| ஏற்கனவேயுள்ள வழிகாட்டல் ஆவண மீளாய்வு | 01 | 01 |
| உள்நாட்டு பறப்பு அட்டவணை | 37 | 03 |
| மேற்கொள்ளப்பட்ட வான் போக்குவரத்து வழங்குநர் மீதான சோதனைகள் மற்றும் முன்னெடுக்கப்பட்ட மதிப்பீட்டுக் கூட்டங்கள் | 118 | 18 |
| சர்வதேச வானூர்தி பறப்பு அங்கீகாரம் | 185 | 25 |
| தொழிநுட்பம் அல்லாத நிபுணத்துவ ஊழியர்களுக்கு வீசாப் பரிந்துரை | 21 | 16 |
| இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட விமானப் போக்குவரத்துக் கம்பனிக்காக வாடகை விமானசேவை அனுமதிப் பத்திரம் | 08 | 08 |
| இலங்கையில் பதிவுசெய்துள்ள விமானப் போக்குவரத்துக் கம்பனிகளுக்கான வான் சேவை அனுமதிப் பத்திரம் | 03 | 03 |
| வாடகை விமானசேவை அனுமதிப் பத்திரம் - சர்வதேச செயற்பாடுகள் | 03 | 04 |

| | | |
|---|---|---|
| வாடகை விமானசேவை அனுமதிப் பத்திரம் - உள்நாட்டு நிரந்தரச் செயற்பாடுகள் | 04 | 06 |
| வான் போக்குவரத்து வழங்குநர்களுக்கான அனுமதிப் பத்திரம் | 518 | 450 |
| தனிநபர் செயற்பாட்டு அனுமதிப் பத்திரம் | 02 | 02 |
| கையொப்பமிடப்பட்ட புதிய வான் போக்குவரத்து உடன்படிக்கை | 05 | 00 |
| ஏற்கனவேயுள்ள வான் போக்குவரத்து உடன்படிக்கைகளின் மீள்பார்வை | 09 | 02 |
| ஆண்டு இறுதியில் காணப்பட்ட “திறந்த ஆகாயம்” வான் சேவை உடன்படிக்கை | 07 | 06 |

## மனிதவள மற்றும் அவலக முகாமைத்துவப் பகுதி (HROM)

| | | |
|---|---|---|
| HROM தொடர்பாக வெளியிடப்பட்ட புதிய விழுமியங்கள் | 21 | 06 |
| HROM தொடர்பான சீர்திருத்தப்பட்ட விழுமியங்கள் | 00 | 02 |
| ஊழியர் / ஆட்சேர்ப்பு | 07 | 09 |
| மொத்தமாக ஒழுங்கு செய்த வெளிநாட்டு பயிற்சிகள் | 32 | 80 |
| மொத்தமாக ஒழுங்கு செய்த உள்நாட்டுப் பயிற்சிகள் | 50 | 117 |
| மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை | 146 | 147 |
| நடாத்தப்பட்ட செயற்சாதனைக் மதிப்பீடுகள் | 56 | 70 |
| ஊழியர்களை ஓய்வுறுத்தல்கள் | 01 | 01 |
| வழங்கப்பட்ட ஊழியர் கடன்கள் வசதிகள் | ரூபா 24.8 மில். | ரூபா 18.2 மில். |
| தொழிநுட்ப நூலகங்களுக்கு சேர்க்கப்பட்ட புதிய ஆவணங்கள் | 21 | 137 |

## நிதி முகாமைத்துவம் (FM)

| | | |
|---|---|---|
| சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் | ரூபா 1,179 மில். | ரூபா 988 மில். |
| நேர்ந்த மொத்த செலவினம் | ரூபா 593. மில். | ரூபா 370 மில். |
| ஊழியர் சம்பளத்தின் மொத்த நிதி | ரூபா 157. மில். | ரூபா 148 மில். |
| கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்கள் | 00 | 03 |
| கொள்வனவு செய்யப்பட்ட கணனிகள் | 07 | 09 |

## உள்ளகக் கணக்காய்வு (IA)

| | | |
|---|---|---|
| நடாத்தப்பட்ட கணக்காய்வுகள் | 30 | 34 |
| சமர்ப்பிக்கப்பட்ட கண்டுபிடிப்புக்கள் | 146 | 50 |

## விமான விபத்து மற்றும் நிகழ்வு விசாரணை அலகு (AIU)

| | | |
|---|---|---|
| அறிக்கையிடப்பட்ட சம்பவங்கள் | 05 | 06 |
| அறிக்கையிடப்பட்ட விபத்துக்கள் | 00 | 00 |
| அறிக்கையிடப்பட்ட நிகழ்வுகள் | 186 | 137 |
| பிரயாணிகளுக்கு அல்லது ஊழியருக்கு கெடுதியான காயம் ஏற்பட்டமை | 01 | 00 |
| பிரயாணிகளுக்கு அல்லது ஊழியருக்கு இலகுவான காயம் ஏற்பட்டமை | 00 | 19 |
| வரைவு புதிய ஒழுங்குவிதிகள் உருவாக்கம் | 00 | 01 |
| பங்கேற்ற பயிற்சிக் கற்கைநெறி / கருத்தரங்கு | 01 | 01 |
| ஏற்கனவேயுள்ள வழிகாட்டல் ஆவணங்களின் மீளாய்வு | 04 | 01 |

## விமானப் போக்குவரத்து விபரங்கள்
## சர்வதேச விமானப் போக்குவரத்து

| | 2013 | 2012 |
|---|---|---|
| பயணிகள் | 8,543,772 | 8,290,688 |
| புறப்பட்ட | 3,621,822 | 3,554,969 |
| தரையிறங்கிய | 3,690,047 | 3,590,122 |
| இடைத்தங்கல் | 1,231,903 | 1,145,577 |
| சரக்கு (மெற்றிக் தொண்) | 191,224 | 174,645 |
| தருவிக்கப்பட்ட | 71,776 | 66,602 |
| அனுப்பப்பட்ட | 119,447 | 108,043 |
| வானூர்தி நகர்வுகள் | 50,969 | 48,734 |
| அட்டவணைப்படுத்தப்பட்ட பறப்புகள் | 48,413 | 46,616 |
| அட்டவணைப்படுத்தப்படாத பறப்புகள் | 2,556 | 2,118 |
| செயற்பாடுகளில் ஈடுபட்ட விமான சேவைக் கம்பனிகளின் எண்ணிக்கை | 39 | 40 |
| அட்டவணைப்படுத்தப்பட்ட சேவைகள் | 27 | 30 |
| அட்டவணைப்படுத்தப்படாத சேவைகள் | 08 | 07 |
| அனைத்து சரக்கு | 04 | 03 |
| உள்நாட்டு விமானப் போக்குவரத்து | | |
| பயணிகளின் காவுகை | 7,694 | 8,421 |
| வானூர்தி நகர்வுகள் | 1,842 | 1,715 |
| செயற்படுத்தப்பட்ட வான் சேவைகளின் எண்ணிக்கை | | |
| அட்டவணைப்படுத்தப்பட்ட பறப்புகள் | 02 | 01 |
| அட்டவணைப்படுத்தப்படாத பறப்புகள் | 06 | 02 |

## இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை
## 2013 டிசம்பர் 31 ஆந் திகதி முடிவுற்ற வருடத்திற்கான
## முழுமையான வருமானக் கூற்று

| | குறிப்பு | SLFRS<br>31.12.2013<br>(ரூபா) | SLFRS<br>31.12.2012<br>(ரூபா) |
|---|---|---|---|
| **வருமானம்** | | 1,178,712,159.10 | 988,991,622.16 |
| செயற்பாட்டு வருமானம் | (1) | 1,078,895,686.64 | 918,524,428.11 |
| செயற்பாடு அல்லாத வருமானம் | (2) | 99,816,472.46 | 70,467,194.05 |
| **செலவீனம்** | | 365,040,299.83 | 370,804,177.77 |
| ஊழியர் செலவுகள் | (3) | 156,700,965.10 | 148,638,658.02 |
| கூட்டங்கள், செயலமர்வுகள் மற்றும் | (4) | 33,254,645.02 | 26,794,066.10 |
| செயற்பட்டறைகள் | (5) | 11,269,722.26 | 20,106,117.69 |
| பயிற்சியளித்தற் செலவுகள் | (6) | 136,960,888.79 | 148,764,416.90 |
| நிர்வாக மற்றும் ஏனைய செலவுகள் | (8) | 26,854,078.66 | 26,500,919.06 |
| பெறுமானத் தேய்வு | | | |
| விசாரணை நிதியத்திற்கான ஏற்பாடு | | | |
| வருமான வரிக்கு முன்னரான சாதாரண நடவடிக்கையிலிருந்தான இலாபம் / (நட்டம்) | | 813,671,859.27 | 618,187,444.39 |
| வருமான வரி | (7) | 228,159,304.45 | 94,722,505.91 |
| **வருடத்திற்கான தேறிய இலாபம்/ (நட்டம்)** | | 585,512,554.82 | 523,464,938.48 |
| ஏனைய விரிவான வருமானம் | | | |
| ஆதனங்கள், பொறிகள், மற்றும் உபகரணங்கள் மீதான மறுமதிப்பீட்டு மிகை | | | |
| தீர்மானிக்கப்பட்ட நன்மைத் திட்டத்தின் மீதான சாத்தியமான மிகை / (நட்டம்) | | | |
| வெளிநாட்டுச் செயற்பாடொன்றின் நிதிக் கூற்று மாற்றீட்டின் மீதான மிகை / (நட்டம்) | | | |
| நிதிச் சொத்து விற்பனை மீது கிடைக்கக் கூடியதான மிகை / (நட்டம்) | | | |
| மிகை / (நட்டம்) விடயத்துடன் தொடர்புடைய வருமான வரி | | | |
| **வருடத்திற்கான மொத்த முழுமையான வருமானம்** | | 585,512,554.82 | 523,464,938.48 |

## இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை
## 2013 டிசம்பர் 31 இல் நிதி நிலமைக்கூற்று

| | குறிப்பு | SLFRS 31.12.2013 | SLFRS 31.12.2012 (ரூபா) |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | 1,931,531,245.45 | 1,202,805,871.50 |
| நடைமுறையல்லாச் சொத்துக்கள் | | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | (8) | 92,488,294.11 | 114,891,490.00 |
| நடைமுறைச் சொத்துக்கள் | | 1,839,042,951.34 | 1,087,914,381.50 |
| நுகர்வுப் பொருட்கள் | (9) | 79,146,992.92 | 6,934,256.43 |
| வியாபார வருமதிகள் மற்றும் ஊழியர் கடன்கள் | (10) | 219,721,394.16 | 180,555,880.06 |
| ஏனைய நிதிச் சொத்துக்கள் | (11) | 801,046,519.12 | 543,528,106.43 |
| முற்பணங்கள், முற்கொடுப்பனவுகள், மற்றும் ஏனைய வருமதிகள் | (12) | 106,488,296.86 | 136,448,863.07 |
| காசும் காசுக்குச் சமமானதும் | (13) | 632,639,748.28 | 220,447,275.51 |
| **உரிமை மற்றும் பொறுப்புக்கள்** | | 1,931,531,245.45 | 1,202,805,871.50 |
| **மூலதனம் மற்றும் ஒதுக்கங்கள்** | | 896,255,554.68 | 511,349,053.86 |
| அரசாங்க நன்கொடை | (14) | 7,956,326.05 | 8,562,380.05 |
| மீள் மதிப்பீட்டு மிகை | (15) | 13,485,465.44 | 13,485,465.44 |
| பொது ஒதுக்கம் | | 485,000,000.00 | |
| இலாப நட்டக் கணக்கு | | 389,813,763.19 | 489,301,208.37 |
| நடைமுறையல்லாப் பொறுப்புக்கள் | | 277,799,071.34 | 274,709,426.94 |
| பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புக்கள் | (16) | 4,658,204.67 | 4,762,194.44 |
| ஏற்பாடுகள் மற்றும் ஏனைய பொறுப்புக்கள் | (17) | 261,851,639.67 | 259,676,305.00 |
| ஓய்வூதிய நன்மைகளுக்கான கடமைப்பொறுப்பு | (18) | 11,289,227.00 | 10,270,927.50 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | | 757,476,619.43 | 416,747,390.70 |
| வியாபாரச் சென்மதிகள் | (19) | 616,588,928.22 | 282,872,312.57 |
| ஏனைய சென்மதிகள் | (20) | 17,531,743.11 | 43,274,312.31 |
| வருமான வரிப் பொறுப்புக்கள் | (21) | 123,355,948.10 | 90,600,765.82 |

இந் நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பு மற்றும் வெளிப்படுத்துகை தொடர்பான பொறுப்புக்கள் அதிகாரசபை உறுப்பினர்களையே சாரும். அதிகாரசபையின் பேரிலும் அதன் சார்பாகவும் கையொப்பமிடப்படுகின்றன.

...................................................

ஜெனரல் றொஹான் டி சில்வா தளுவத்த,
தலைவர்.
இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து
அதிகாரசபை

...................................................

எச்.எம்.சீ. நிமல்சிறி,
சிவில் விமானப் போக்குவரத்துப்
பணிப்பாளர் நாயகமும் பிரதான
நிறைவேற்று உத்தியோகத்தரும்.

28 பெப்பரவரி 2014

## 31 டிசம்பர் 2013 இல் முடிவுற்ற ஆண்டிற்கான உரிமை மாற்றற் கூற்று

| | அரசாங்க நன்கொடை ரூபா | மீள்மதிப்பீட்டு மிகை ரூபா | பொது ஒதுக்கம் ரூபா | திரண்ட இலாபம் ரூபா | மொத்தம் ரூபா |
|---|---|---|---|---|---|
| 01 ஜனவரி 2012 இல் மீதி | 9,168,434.05 | 13,485,465.44 | | 425,412,628.47 | 448,066,527.96 |
| குறித்த காலத்திற்கான இலாபம் | | | | 523,464,938.48 | 523,464,938.48 |
| முன்னைய ஆண்டிற்கான சீராக்கங்கள்-2011 | | | | (103,645,776.49) | (103,645,776.49) |
| வருடத்திற்கான அறவீடுகள் 2011 | | | | (5,930,582.09) | (5,930,582.09) |
| தேறிய மிகைப் பங்கீடு | | | | (350,000,000.00) | (350,000,000.00) |
| வருடத்திற்கான amo-tization | (606,054.00) | | | | (606,054.00) |
| 31 ஜனவரி 2012 இல் மீதி | 8,562,380.05 | 13,485,465.44 | | 489,301,208.37 | 511,349,053.86 |
| குறித்த காலத்திற்கான இலாபம் | | | | 585,512,554.82 | 585,512,554.82 |
| தேறிய மிகைப் பங்கீடு- திரள்நிதியம் | | | | (200,000,000.00) | (200,000,000.00) |
| தேறிய மிகையின் மாற்றீடு | | | 485,000,000.00 | (485,000,000.00) | |
| வருடத்திற்கான பகிர்ந்தளிப்பு | (606,054.00) | | | | (606,054.00) |
| 31 டிசம்பர் 2013 இல் மீதி | 7,956,326.05 | 13,485,465.44 | 485,000,000.00 | 389,813,763.19 | 896,255,554.68 |

## இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை
## 31 டிசம்பர் 2013 இல் முடிவுற்ற ஆண்டிற்கான காசுப்பாய்ச்சற் கூற்று

| விபரம் | 2013 ரூபா | 2012 ரூபா |
|---|---|---|
| செயற்பாட்டு நடவடிக்கையிலிருந்தான/ பயன்படுத்தப்பட்ட காசோட்டம் | | |
| வரிக்கு முன் சாதாரண நடவடிக்கைகளில் இருந்தான தேறிய இலாபம் / நட்டம் | 813,671,859.27 | 618,187,444.39 |
| சீராக்கங்கள் | | |
| பெறுமானத் தேய்வு | 26,854,078.66 | 26,500,919.06 |
| அரச நன்கொடை மீதான தீர்ப்பனவு | (606,054.00) | (606,054.00) |
| முதலீட்டின் மீதான வருமானம் | (90,940,918.72) | (64,756,055.37) |
| காப்புறுதி நிதியத்திற்கான ஏற்பாடு | 72,216.67 | 67,450.00 |
| முன்னைய ஆண்டுக்கான சீராக்கங்கள் | - | 6,986,497.51 |
| ஆதனம், பொறிகள், உபகரணங்களின் விற்பனையின் மீதான இலபபம்/ நட்டம் | (63,865.00) | 225,842.59 |
| நிலையான சொத்துகளின் கொள்வனவு மீதான அனுமதிக்கப்படாத ஏயுவு | | (3,030,221.66) |
| குறிப்பிட்ட நன்மைத் திட்டத்திற்காக ஏற்பாடுகள் | 1,138,179.50 | 1,767,642.50 |
| செயற்பாட்டு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான செயற்பாட்டு இலாபம்/ நட்டம். | | |
| இருப்புக்களிலான அதிகரிப்பு | 750,125,496.38 | 585,343,465.02 |
| வியாபார வருமதிகள் மற்றும் ஊழியர் கடன்களில் ஏற்பட்ட அதிகரிப்பு | (72,212,736.49) | (5,348,025.27) |
| முற்பணங்கள் முற் கொடுப்பனவுகள், மற்றும் ஏனைய வருமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பு | (39,165,514.10) | (41,645,146.47) |
| வியாபார மற்றும் ஏனைய கொடுக்க வேண்டியவைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு | 18,751,822.04 | (12,872,922.05) |
| ஏற்பாடுகள் மற்றும் ஏனைய பொறுப்புக்களில் ஏற்பட்ட குறைவு | 307,974,046.45 | 62,764,560.29 |
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசு உருவாக்கம் | | 262,434.00 |
| முன்கூறப்பட்ட நன்மைத் திட்டத்தின் மூலம் செலுத்தப்பட்ட கிரயம் (பணிக்கொடை) | 965,473,114.28 | 588,504,365.52 |
| செலுத்தப்பட்ட வருமான வரி | (119,880.00) | (736,585.00) |
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான / (பயன்படுத்தப்பட்ட) தேறிய காசோட்டம் | (195,508,111.94) | (222,082,339.45) |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான/ | 769,845,122.34 | 365,685,441.07 |
| பயன்படுத்தப்பட்ட) காசோட்டம் | | |
| ஆதனம், பொறி, உபகரணக் கொள்வனவு | (4,458,717.77) | (28,926,051.48) |
| ஆதனம், பொறி, உபகரண விற்பனையிலிருந்தான விளைவு | 71,700.00 | 437,500.00 |
| ஏனைய முதலீடுகளின் கொள்வனவு | (257,518,412.69) | (210,303,036.52) |

| | | |
|---|---|---|
| ஏனைய முதலீடுகளின் கொள்வனவு | | |
| ஏனைய முதலீடுகளின் விற்பனையிலிருந்தான விளைவு | (116,882.00) | 169,402,178.19 |
| பெற்ற வட்டிகள் | 102,149,662.89 | 65,135,454.99 |
| வங்கி உத்தரவாதம் | 2,220,000.00 | 138,000.00 |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான / (பயன்படுத்தப்பட்ட) தேறிய காசு | (157,652,649.57) | (4,115,954.82) |
| நிதி நடவடிக்கைகளிலிருந்தான / (பயன்படுத்தப்பட்ட)காசோட்டம் | | |
| திறைசேரிக்கு வழங்கப்பட்ட தொகை | (200,000,000.00) | (350,000,000.00) |
| நிதி நடவடிக்கைகளிலிருந்தான / (பயன்படுத்தப்பட்ட) தேறிய காசு | (200,000,000.00) | (350,000,000.00) |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவற்றில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு/ குறைவு | 412,192,472.77 | 11,569,486.25 |
| வருட ஆரம்பத்திலிருந்த காசு மற்றும் காசுக்குச் சமனானவை | 220,447,275.51 | 208,877,789.26 |
| வருட இறுதிலிருந்த காசு மற்றும் காசுக்குச் சமனானவை | 632,639,748.28 | 220,447,275.51 |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை மீதான ஆய்வு | | |
| வங்கியிலுள்ள காசு | 488,639,748.28 | 40,447,275.51 |
| குறுங்கால முதலீடுகள் | 144,000,000.00 | 180,000,000.00 |
| | 632,639,748.28 | 220,447,275.51 |

## நிதி அறிக்கைகள் - 2013

## நிதி அறிக்கையிடலுக்கான அதிகாரசபை முகாமையின் பொறுப்புக் கூறல் கூற்று


2002 இன் 34 ஆம் இலக்க இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைச் சட்டத்தின் 14 ஆம் மற்றும் 15 ஆம் பிரிவுகளின் பிரகாரம், அதிகாரசபையின் உறுப்பினர்கள் கீழ்க்கூறப்பட்ட விடயங்கள் தொடர்பாக பொறுப்புக்களைக் கொண்டுள்ளனர்.

i. அதிகாரசபையின் வருமானம், செலவீனங்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் ஏனைய அனைத்து நிதிசார் கொடுக்கல் வாங்கல்கள் ஆகியன தொடர்பில் உரிய கணக்கேடுகள் பேணப்படுதல்.

ii. அதிகாரசபையின் நிதிச் செயற்பாடுகளினதும் நிதி நிலமையினதும் உண்மையானதும், செம்மையானதுமானதுமான நோக்கினை அளிக்குமுகமாக 1995 இன் 15 ஆம் இலக்க, இலங்கை கணக்கியல் மற்றும் கணக்காய்வு நியமங்களின் கீழ் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் பின்பற்றப்படும் இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக கணக்குகளைத் தயாரிக்கப்பட்டிருத்தல்.

iii. அதிகாரசபையின் சொத்துக்களை பாதுகாப்பதற்கும், மோசடிகள் மற்றும் ஏனைய ஒழுங்கீனங்களைத் தடுப்பதற்கும் அவற்றைக் கண்டுபிடிப்பதற்கும் என பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாடுகளை உருவாக்குவதற்கும் பொருத்தமான படிமுறைகள் நடவடிக்கை எடுக்கப்பட்டிருத்தல்.





ஜெனரல் றொஹான் டி சில்வா தளுவத்த,
தலைவர்.

எச்.எம்.சீ. நிமல்சிறி,
சிவில் விமானப்
போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகமும்
பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரும்.

28 பெப்பரவரி 2014

## முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள்

### 1. பொதுவான கொள்கைகள்

### 1.1. உடன்பாட்டுக்கான கூற்று

சா்வதேச கணக்கியல் நியமம் சபையினால் வழங்கப்பட்டவாறு சா்வதேச நிதி அறிக்கையிடல் நியமங்களை (IFRS) பிரதிநித்துவப்படுத்தி, இலங்கை பட்டயக்காளா் நிறுவனத்தால் வழங்கப்பட்டவாறு இலங்கைக் கணக்கீட்டு நியமங்களின் (SLFRS) பிரகாரம் அதிகாரசபையின் நிதி நிலமைக் கூற்று, முழுமையான வருமானம், உரிமை மாற்றங்கள், காசுப்பாய்ச்சல் மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளின் சுருக்கத்துடன் கூடியதான குறிப்புக்கள் (நிதிக்கூற்றுக்கள்) தயாரிக்கப்பட்டுள்ளன.

### 1.2 நிதிக் கூற்றுக்கான பொறுப்புக்கூறல்

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் முகாமையானது நிதிக்கூற்றுகளின் தயாரிப்பு மற்றும் அறிக்கையிடல்களுக்கான பொறுப்பினைக் கொண்டுள்ளது.

### 1.3 தொடா்ந்து செயற்படல்

நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படும் போது முகாமையானது தொடா்ந்தியங்குதலை பேணிவருவதற்கான அதிகாரசபையின் இயலுமைத் தன்மையினை மதிப்பிடப்பட்டுள்ளது. அதிகாரசபையானது அதனது சட்டப்படியான கடமைகள் மற்றும் தொழிற்பாடுகளை முன்னெடுப்பதற்கு போதுமான வளங்களை கொண்டுள்ளது என்பதுடன், முன்னுணர முடியாத எதிா்காலத்திற்கான செயற்பாட்டு நிலையில் தொடா்ந்து இயங்கும் என்னும் நியாயமான எதிா்பாா்ப்பொன்றினை முகாமை கொண்டுள்ளது. அதிகாரசபை எதிா்காலம் பற்றிய அனைத்து கிடைக்கக் கூடிய தகவல்களை கவனத்திற் கொண்டு திரவத்தன்மைக்கான தேவையொன்றை அல்லது செயற்பாடுகளின் நீக்கங்களை முன்னுணா்வதில்லை. இதன் பிரகாரம், அதிகாரசபை நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதில் தொடா்ந்து செயற்படல் எண்ணக்கரு அடிப்படையை உள்வாங்க முயற்சி செய்கின்றது.

### 1.4 புதிய கணக்கீட்டு நியமங்கள் வழங்கப்பட்ட போதும் ஐந்தொகைத் திகதியில் இதுவரை அமுலாக்கப்படவில்லை

ஏற்கவேயுள்ள நியமங்களுக்கான பின்வரும் புதிய நியமங்கள், சீராக்கங்கள் மற்றும் விளக்கங்கள் இலங்கை பட்டயக் கணக்கறிஞா் நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ளன. ஆனால் அவை இந் நிதிக் கூற்றுக்களின் அங்கீகாரத்திற்கான திகதி வரை அமுலாக்கலுக்கு வரவில்லை. மேற்கூறப்பட்ட புதிய நியமங்களின் பிரயோகங்களின் நிதிக் கூற்று மீதான சாத்தியமான தாக்கமானது இதுவரை மதிப்பிடு செய்யப்படவில்லை என்பதுடன், அதிகாரசபையானது ஏற்கவேயுள்ள நியமங்களுக்கான புதிய நியமங்கள், சீராக்கங்கள், மற்றும் விளக்கங்கள் நடைமுறைக்கு வரும் போது அதில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்கு தொடா்புறுத்துவதற்கு எதிா்பாா்த்துள்ளது.

SLFRS 9 - நிதி ஆவணங்கள்
SLFRS 12 - ஏனைய அலகுகளில் அக்கறையை வெளிப்படுத்தல்
SLFRS 13 - சந்தைப் பெறுமதி அளவீடுகள்

### 1.5 முக்கியமான கணக்கியல் நடுநிலமைகள், மதிப்பீடுகள், மற்றும் எடுகோள்கள்

அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு, அறிக்கையிடல் திகதியில் சாா்ந்த பொறுப்புக்களின் வெளிப்பாடுகள், வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், மற்றும் பொறுப்புக்களின் அறிக்கையிடப்பட்ட தொகைகளின் பாதிக்கும் நடு நிலமைகள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்கள் என்பவற்றை முகாமை மேற்கொள்ளவேண்டுகின்றது எனினும் இவ் எடுகோளினதும் மதிப்பிடுகளினதும்

எதிர்வு கூறமுடியாத தன்மை எதிர் காலத்தில் தாக்கத்திற்குட்படுத்தப்படும். சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் கீழ் கொண்டுவரப்பபட்ட தொகைக்கு கணிசமான அளவு நடுநிலமையினை வேண்டி நிற்கின்றது இக்காரணிகள் நடுநிலமை மதிப்பிடு மற்றும் எதிர்வு கூறல்களை உள்ளடக்க கூடும்.

## நடுநிலைமை

அதிகாரசபையின் கணக்கீட்டுக் கொள்கைகளை பிரயோகிக்கும் செயன்முறையில் நிதிக் கூற்றுக்களில் அடையாளங் காணப்பட்ட தொகைகள் மீதான மிக முக்கியமான தாக்கத்தினைக் கொண்டிருக்கும் மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்களின் ஈடுபாட்டிற்கு அப்பால் முகாமையானது பின்வரும் நடு நிலைமைகளை மேற்கொண்டுள்ளது.

## குத்தகைகள்

குத்தகைகள் தொடர்பில், அதிகாரசபையானது ஏறத்தாழ அனைத்து ஆபத்துக்களையும் கொண்டுள்ளதுடன், உரிமைக்கான வெகுமதிகள் நிதிக் குத்தகையாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. குத்தகை தொடர்பில், ஆபத்துக்களில் மற்றும் உரிமைக்கான வெகுமதிகளில் ஒரு குறிப்பிடத்தக்களவு பகுதியானது குத்தகைதாரரால் ஏற்க்கொள்ளும்படுமிடத்து அது செயற்பாட்டுக் குத்தகையாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

## மதீப்பீட்டுகள் மற்றும் எடுகோள்கள்

அடுத்த நிதி வருடத்தினுள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் கீழ் கொண்டு வரப்பட்ட தொகைகளுக்கு கணிசமானதொரு சீராக்கத்தை தோற்றுவித்த குறிப்பிடத்தக்கலான ஆபத்தினைக் கொண்டுள்ளதான அறிக்கையிடல் திகதியில் மதிப்பிடப்பட்ட எதிர்பாராத தன்மையின் ஏனைய பிரதான காரணிகள் மற்றும் எதிர்காலத்தைக் கருத்திற் கொள்ளும் பிரதான எடுகோள்கள் கீழே கலந்துரையாடப்பட்டுள்ளது.

## அ. நிதி ஆவணங்களின் சந்தைப் பெறுமதி

நிதி நிலமைகளின் கூற்றின் மீது பதிவு செய்யபட்ட நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பொறுப்புகளின் சந்தைப் பெறுமதியானது செயலாற்றல் மிக்க சந்தைகளிலிருந்து பெற்றுக் கொள்ள முடியாதவிடத்து அவை கழிவு செய்யபட்ட காசுப்பாய்ச்சல் மாதிரிகை அல்லது / அத்துடன் கணித ரீதியான மாதிரிகைகளின் பயன்பாட்டினை உள்ளடக்கியதான மதிப்பீட்டு நுட்பங்களின் வகைப்படுத்தலினைப் பயன்படுத்தி தீர்மானிக்கப்படுகின்றன. அவ்வாறான மாதிரிகைகளுக்கான உள்ளீடுகளை சாத்தியமேற்படுமிடத்து, அவதானிக்கக்கூடிய சந்தைத் தரவுகள் பெறப்படுகின்றன என்பதுடன், அவதானிக்கக்கூடியதான சந்தைத் தரவுகள் கிடைக்கப் பெறாதவிடத்து, சந்தைப் பெறுமதிகளை நிர்ணயம் செய்து கொள்வதற்கு நடு நிலமையானது தேவைப்படுகின்றது. இவ் காரணிகள் பற்றிய எடுகோள்களின் மாற்றங்களானவை நிதி ஆவணங்களின் பதிவு செய்யப்பட்ட சந்தைப் பெறுமதியினை தாக்கும் நிதிச் சொத்துக்களின் ஐந்தொகைத் திகதியில் கீழ் கொண்டு செல்லும் பெறுமதியானது ரூபா 1,219,511,333.00 ஆக அமைந்துள்ளது. (2012 இல் ரூபா 955,676,310.00)

## ஆ. குறித்துரைக்கப்பட்ட நன்மைக் கடப்பாட்டின் பெறுமதி மதிப்பீடு

குறித்துரைக்கப்பட்ட நன்மை ஓய்வூதிய திட்டங்களின் கிரயமானது சமன்பாட்டு முறைமைப் பயன்படுத்தித் தீர்மானிக்கப்படுகின்றன. குறித்துரைக்கப்பட்ட நன்மை கடப்பாடு இன் ஐந்தொகைத் திகதியில் கீழ் கொணரப்பட்ட பெறுமதி ரூபா 11,289,227.00 ஆக காணப்படுகின்றது. (2012 இல் ரூபா 10,270,828.00)

### இ. சந்தைப் பெறுமதி

சந்தைப் பெறுமதி என்பது செயற்படுவதற்கு கட்டாயப்படுத்தப்படாதவர்களாய் இருக்கின்ற, அறிவாற்றல் கொண்ட விருப்பந்தெரிவிக்கும் பகுதியினரிடையில் கையாலான கொடுக்கல் வாங்கல்களின் கீழ் இணக்கம் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட கருத்திற் கொள்ளப்பட்டதான தொகையாகும். நிதி ஆவணமொன்று ஆரம்பத்தில் அடையாளம் காணப்படும் போது, அதன் சந்தைப் பெறுமதியானது பொதுவாக செலுத்தப்பட்ட அல்லது பெறப்பட்ட கருத்திற் கொள்ளப்பட்ட பெறுமதியாக அமைகின்றது. ஆரம்ப அடையாளங் காணலுக்கான தொடராக, செயற்பாட்டுச் சந்தையொன்றில் குறிப்பிடப்பட்ட நிதிச் சொத்தொன்றின் சந்தைப் பெறுமதி பொதுவாக கேள்விப் பத்திர விலையாக இருக்கும் என்பதுடன், செயற்பாட்டுச் சந்தையொன்றில் குறிப்பிடப்பட்ட நிதிப் பொறுப்பொன்றில் சந்தைப் பெறுமதியானது பொதுவாக கேட்கப்பட்டதாக அமைகின்றது. குறுகிய காலமொன்றைக் கொண்டதான காசுக்குச் சமமானவை மற்றும் குறுங்கால முதலீடுகளை போன்ற நிதி ஆவணங்களுக்கு அவ்வாறான ஆவணங்களின் கீழ் கொண்டு செல்லப்பட்ட பெறுமதி ஏறத்தாழ சந்தைப் பெறுமதியாக காணப்படுகின்றது.

### ஈ. வருமான வரி

அதிகாரசபையானது வருமானவரிக்கும் பொறுப்புடையது என்பதுடன் வருமான வரிக்கான முழுமையான ஏற்பாடுகளை தீர்மானிப்பதில் குறிப்பிடத்தக்கதான நடுநிலை வேண்டப்படுகின்றது.

## 1.6 தொழிற்பாடு மற்றும் வெளிப்படுத்தல் நாணய அலகு

அதிகாரசபையின் தொழிற்பாட்டு நாணய அலகாக இலங்கை ரூபா தீர்மானிக்கப்பட்டதுடன், மேலும் நிதிக் கூற்றிலுள்ள இலங்கை ரூபாவில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

## 2. விஷேட கணக்கியற் கொள்கைகள்
## 2.1 நிதிச் சொத்துக்கள்

அதிகாரசபையானது அதன் நிதிச் சொத்துக்களை பின்வரும் வகைகளினுள் வகைப்படுத்துகின்றது. விற்பனைக்காக கிடைக்கப் பெறும் மற்றும் முதிர்வு வரை வைத்திருக்கப்படும் கடன்கள் மற்றும் பெற வேண்டியவைகளுமாகும். இவ் வகைப்படுத்தலானது ஆரம்ப இனங்காணலில் முகாமையினால் தீர்மானிக்கப்படுவதுடன் முதலீடுகள் கொள்வனவு செய்யப்படுகின்ற நோக்கிலும் தங்கியுள்ளது.

### 2.1.1 வகைப்படுத்தல்

### அ. கடன்களும் பெறவேண்டியவையும்

கடன்களும் பெறவேண்டிவைகளும் செயற்பாட்டுச் சந்தையொன்றில் குறிப்பிடப்படாதுள்ள அல்லது நிலையான கொடுப்பனவுகளுடனான ஒன்றிலொன்று தங்கியிராத நிதிச் சொத்துக்களாக காணப்படுகின்றது. மேலும் சாதாரண நடவடிக்கையிலிருந்து எழும் பெறவேண்டியவைகள் இந்த வகையினுள் வகைப்படுத்தப்படுகின்றன என்பதுடன் அவை வலுவிழப்பிற்காக மீள் பார்வைக்குட்படுத்தப்படுகின்றன.

### ஆ. முதிர்வு நிதிச் சொத்துக்களை வைத்திருத்தல்

முதிர்வுக்கான முதலீடுகளை வைத்திருத்தல் என்பது பின்வருவன தவிர்ந்ததாக, அதிகாரசபையின் முகாமையானது சாதகமான விருப்பத்தினை அல்லது முதிர்வு வரை வைத்திருக்கும் திறனைக் கொண்டுள்ளதான நிலையான முதிர்வினையும் நிலையான அல்லது தீர்மானிக்கப்படக்கூடியதான கொடுப்பனவுகளுடனான ஒன்றிலொன்று தங்கியிராத நிதிச் சொத்துக்களாக காணப்படுகின்றது.

- ஆரம்ப இனங்காணலின் கீழ் அதிகாரசபையானது இலாபம் அல்லது நட்டத்தினூடாக சந்தைப் பெறுமதியில் ஒதுக்கீடுசெய்கின்றது அல்லது
- விற்பனைகள் கிடைக்கக் கூடியதாக அதிகாரசபையானது ஒதுக்கீடு செய்கின்றது மற்றும்
- அது கடன்கள் மற்றும் பெறவேண்டிவைகளின் வரைவிலக்கணக்கத்தினை சந்திக்கின்றது.

முதிர்வு முதலீடுகளை வைத்திருத்தல் மீதான வட்டியானது வருமானக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படுகின்றதுடன், "முதலீடு வருமானம்" அறிக்கையிடப்படுகின்றது.

### இ. விற்பனை நிதிச் சொத்துக்களின் கிடைப்பனவு

விற்பனை முதலீடுகளுக்கான கிடைப்பனவு என்பது இலாபம் அல்லது நட்டத்தினூடான சந்தைப் பெறுமதியில் கடன்கள் மற்றும் பெறவேண்டியவைகள், முதிர்வு முதலீடுகளை வைத்திருத்தல் அல்லது நிதிச் சொத்துக்களை வகைப்படுத்தப்படாத அல்லது வட்டி வீதங்கள், நாணயமாற்று வீதங்கள் அல்லது உரிமை விலைகளில் அல்லது மாற்றத்திற்கான தேவைகளுக்கு பதிலளித்தலில் விற்கப்படக் கூடிதான எதிர்வு கூறமுடியாத கால எல்லையொன்றை வைத்திருப்பதற்கு விருப்பப்படும் நிதிச் சொத்துக்களாக அமைகின்றன.

## 2.1.2 அடையாளப்படுத்தல்களும், அளவீடுகளும்

நிதிச் சொத்துக்களால் சந்தைப் பெறுமதியில் ஆரம்பத்தில் அடையாளங் காணப்படுவதுடன் சந்தைப் பெறுமதியில் கீழ் கொண்டு செல்லப்படாத அனைத்து நிதிச் சொத்துக்கள் தொடர்பில் சந்தைப் பெறுமதியுடன், அவற்றினை கொள்வனவுக்கு நேரடியாக உடமையாக்கத்தக்கதாக இருக்கும் இலாபம் அல்லது நட்டம் அத்துடன், கொடுக்கல் வாங்கல் கிரயம் என்பன கருத்திற் கொள்ளப்பட்டு அடையாளப்படுகின்றது. இலாபம் அல்லது நட்டத்தினூடாக சந்தைப் பெறுமதியில் கீழ் கொண்டு செல்லப்படும் நிதிச் சொத்துக்கள ஆரம்பத்தில் சந்தைப் பெறுமதியில் அடையாளங்காணப்படுவதுடன், கொடுக்கல் வாங்கல் கிரயங்களான நிதிக் கூற்றுக்களில் செலவு வைக்கப்படுகின்றன. அவற்றிலிருந்தான காசோட்டத்தை பெறுவதாக உரிமையானது காலாவதியாகும் போது அல்லது அவை மீது அனைத்து ஆபத்துகளையும் இதன் தொடர்ச்சியாக மாற்றீடு செய்யப்படும் போது நிதிச் சொத்துக்களை மீள இனங்காணப்படுகின்றன. விற்பனை நிதிச் சொத்துக்கான கிடைப்பனவானது பின்னராக சந்தைப் பெறுமதியில் கீழ் கொண்டு செல்லப்படுகின்றது. கடன்களும் பெறவேண்டிவைகளும் மற்றும் முதிர்வு நிதிச் சொத்தாக வைத்திருந்தவாறு பயனுறுதிகொண்ட வட்டி முறைமையைப் பயன்படுத்தி பகிர்ந்தளிக்கப்படும் கிரயத்தில் கீழ்க் கொண்டு செல்லப்படுகின்றன.விற்பனைக்கு கிடைக்கக் கூடியதான வகைப்படுத்தப்ட்ட பணரீதியான முதிர்வு மற்றும் பணரீதியானவற்றின் சந்தைப்பெறுமதிகள் ஏனைய முழுமையான வருமானமாக இணங்காணப்படுகின்றது.விற்பனைக்கு கிடைக்கக் கூடியதாக வகைப்படுத்தப்பட்ட முறிகள் விற்கப்படும் போது அல்லது வலுவிழப்புச் செய்யப்படும் போது, நிதிச் சொத்துக்களின் மீது எழும் தேறிய உணரப்பட்ட வருமானம் அல்லது நட்டங்களான வருமானக் கூற்றில், ஏனைய முழுமையான வருமானமாக அடையாளப்படுத்தப்பட்ட திரட்டிய சந்தை பெறுமதிச் சீராக்கங்கள் உள்ளடக்கப்படுகின்றன. செயற்றிறனான வட்டி முறைமையினைப் பயன்படுத்திக் கணிக்கப்பட்ட விற்பனைக்குக் கிடைக்கக் கூடியதான முறிகள் மீதான வட்டியானது வருமானக் கூற்றில் இனங்காணப்படுகின்றது.

## 2.1.3 சந்தைப் பெறுமதியின் தீர்மானம்

கடன்கள் மற்றும் முற்பணங்கள் அவ்வாறே வங்கிகள் மற்றும் வாடிக்கையாளருக்கான பொறுப்புக்களின் சந்தைப் பெறுமதியானவை கடன்களின் தரம், திரவத்தன்மை மற்றும் கிரயங்கள் போன்றவற்றை கவனத்திற் கொண்டு ஒப்பந்தத்தால் இணங்கிக் கொள்ளப்பட்ட காசோட்டங்களின் அடிப்படையில் ஒரு தற்போதைய பெறுமதி முறைமையை பயன்படுத்தித் தீர்மானிக்கப்படுகின்றன.

வியாபார பெறவேண்டியவைகள் மற்றும் கொடுக்க வேண்டியவையின் வலுவிழப்பு ஏற்பாட்டினை கழித்த கீழ்க்கொண்டு செல்லும் பெறுமதி அவைகளின் சந்தைப் பெறுமதி அண்ணளவாக கொள்ள எடுகோள் எடுக்கப்படுகின்றது.

### 2.1.4. மீள இனங்காணல்

பின்வரும் சந்தர்ப்பங்களில் ஒரு நிதிச் சொத்தானது இனங்காணப்படாது விடப்படுகின்றது. (நிதிச்சொத்தொன்றின் ஒரு பகுதிக்கு பிரயோகிக்கப்படுமிடத்து அல்லது அதையொத்த நிதிச்சொத்தொன்றின் ஒரு பகுதிக்கு பிரயோகிக்கப்படுமிடத்து)

- குறித்த சொத்திலிருந்து காசோட்டத்தினைப் பெறுவதற்குரிய காலாவதியாகும் போது
- குறித்த சொத்திலிருந்து காரோட்டதினை பெறுவதற்குரிய உரிமையை

அதிகாரசபையானது மாறறீடு செய்யும் போது அல்லது “pass – thorough” ஒழுங்குபடுத்திலின் கீழ் மூன்றாம் நபரொருவருக்கு அதிகாரியான தாமதமின்றி முழுமையாக பெறப்பட்ட காசோட்டத்தினை செலுத்துவதற்கான ஒரு கடப்பாடாக எடுகோளாககக் கொள்ளும் போது

அ. குறித்த சொத்தின் வெகுமதிகள் மற்றும் அனைத்து ஆபத்துக்களையும் கணிசமான அளவில் அதிகாரசபையானது மாற்றீடு செய்யும் போது அல்லது

ஆ. குறித்த சொத்தின் வெகுமதிகள் மற்றும் அனைத்து ஆபத்துக்களையும் அதிகாரசபையானது மாற்றீடு செய்யவில்லையோ அல்லது வைத்திருக்கின்றதோ, ஆனால் குறித்த சொத்தினுடைய கட்டுப்பாட்டினை மாற்றீடு செய்திருக்கும் போது

அதிகாரசபையான சொத்தொன்றிலிருந்தான காசோட்டத்தினைப் பெறுவதற்கான அதன் உரிமையான மாற்றீடு செய்யும் போது அல்லது pass- through ஒழுங்கொன்றினுள் நுளைந்துள்ள போது அத்துடன், அச்சொத்துக்களின் கட்டுப்பாட்டினை மாற்றீடு செய்தோ அல்லது அச் சொத்தின் வெகுமதி மற்றும் ஆபத்துக்கள் அனைத்தினையும் கணிசமான அளவில் மாற்றீடு செய்யாது வைத்திருக்கும் போது அல்லது தன்னகத்தே கொண்டிராத போது அவ்வொத்தானது அதிகாரசபையின் தொடர்ச்சியான அச்சொத்தின் மீதான ஈடுபாட்டினை நீடிப்பதற்கு அடையாளப்படுத்துகின்றது. இந்நிலைமையில், அதிகாரசபையும் கூட்டிணைக்கப்பட்ட பொறுப்பொன்றாக அடையாளப்படுத்தப்படுகின்றது. மாற்றீடு செய்யப்பட்ட சொத்தும் கூட்டிணைக்கப்பட்ட பொறுப்பும் அதிகாரசபையிடமுள்ள உரிமைகள் மற்றும் கடப்பாடுகளைப் பிரதிபலிக்கும் ஒரு அடிப்படையாக அளவிடப்படுகின்றது. மாற்றீடு செய்யப்பட்ட சொத்தின் மீதான பிணையாளியொருவரின் வடிவில் எடுக்கப்பட்ட தொடர்ச்சியான ஈடுபாடானது அச்சொத்தின் உண்மையான கீழ் கொண்டு வந்த தொகையின் குறைந்த பெறுமதியில் மட்டுமன்றி, அதிகாரசபை மீளச்செலுத்தும்படி வேண்டப்பட்டிருக்கும் கருத்திற் கொள்ளும் ஆக்கக்கூடிய தொகையாகவும் அளவிட்டுக் கொள்ளப்படுகின்றது.

## 3. ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

### 3.1 கிரயம் / மறுமதிப்பு

உரிமையாளர் வதியும் ஆதனம் உள்ளடக்கிய ஆதனங்கள் மற்றும் திரட்டிய வலுவிழப்பு நட்டங்களைக் கழித்து நாளாந்த சேமிப்பின் செலவினை உள்ளடக்காத கிரயத்தில் குறிப்பிடப்படுகின்றது. மாற்றீட்டு அவ்வாறு முக்கிய சோதனைச் செலவுகள் அவை ஏற்படும் போது மூலதனமாக்கப்படுவதுடன், குறித்த சொத்துடன் சேர்க்கப்பட்டதான எதிர்கால பொருளாதார நன்மைக்கான சாத்தியம் காணப்படின் உரிமையுடன் சேர்க்கப்படும் என்பதுடன் குறித்த சொத்தின் கிரயம் நம்பகமாக அளவிடப்படும்.
ஆதன மற்றும் உபகரணத்தின் கிரயம் என்பது கொள்வனவு செய்யப்பட்ட அல்லது தீர்மானிக்கப்பட்ட கிரயத்துடன் அதனைப் பயன்படுத்தக்கூடியதான அதன் நிலைக்கு அச்சொத்தினை கொண்டுவருதில் ஏற்பட்ட ஏதாவது செலவையும் சேர்க்க வருவதாகும். ஆதனம் மற்றம் உபகரணமானது சில

சந்தா்ப்பங்களில் மறுமதிப்பீட்டிற்கு உட்படும் போது, அவ்வாறான சொத்துகளின் முழுமையான தொகுதியும் மறுமதிப்பீடு செய்யப்படுகின்றது. அதிகாரசபையானது ஒவ்வொரு மூன்று வருடத்திற்கும் சொத்துக்களை மறுமதிப்பீடு எனும் கொள்கைகொன்றை உள்வாங்கியுள்ளது. எனினும் மறு மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்ட வேண்டிய சொத்துக்களின் சந்தைப் பெறுமதியானது கீழ் கொண்டுள்ளதை தொகையிலிருந்து கணிசமான அளவில் வேறுபடும் போது மேலதிய மறுமதிப்பீடொன்று செய்யப்படுகின்றது.

சொத்தொன்றானது மறுமதிப்பீடு செய்யப்படும் போது, ஏதாவது கீழ் கொண்டு செல்லும் தொகையில் ஏதாவது அதிகரிப்பானது, வருமானக் கூற்றில் ஏற்கனவே இனங்காணப்பட்ட அதே சொத்தினுடைய மறுமதிப்புக் குறைவொன்றிற்கு அச்சொத்து ஒதுக்கீடு செய்யப்படும் அளவினைத் தவிர மறுமதிப்பீட்டு ஒதுக்கீடானது செலவு வைக்கப்படுகின்றது. இந்நிலையில், அதிகரிப்பானது வருமானக் கூற்றில் அடையாளம் காணப்படுகின்றது. ஒரே வகையான சொத்தின் ஏற்கவேயுள்ள மிகையொன்றாக பதிவளித்திருந்தால் ஏதாவது மறுமதியீட்டு குறைவானது (நட்டமாக) நேரடியாக மறுமதிப்பீட்டு ஒதுக்கீட்டின் மிகைக்கு எதிராக பதிலளிக்கப்படுவதுடன், ஏதாவது மிகையானது வேறொன்றாக அடையாளப்படுத்தப்படுகின்றது. விற்பனையின் பிரகாரம், விற்பனை செய்யப்பட்ட சொத்து தொடர்பில் ஏதாவது மறுமதிப்பீட்டு ஒதுக்கீடானது பகிரப்படாத இலாபத்திற்கு மாற்றீடு செய்யப்படும்.

3.2 பொதுத்தினசேரி அல்லது அரசாங்கத்திலிருந்து மாற்றீடு செய்யபபட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை சொத்துகள் பெற்றுக் கொள்ளப்பட்ட திகதியிலிருந்த சந்தைப் பெறுமதிகள் பெற்றுக் கொள்ளப்பட்ட திகதியிலிருந்த சந்தைப் பெறுமதியில் வெளிப்படுத்தப்படுகின்றது. (மறுமதிப்பீடானது 2003 இல் மேற்கொள்ளப்பட்டது) IFRS மாற்றீட்டு நோக்கத்திற்காக, கூறப்பட்ட சொத்துகளின் மறுமதிப்பீடு தொகையான 01 ஜனவரி 2011 இல் Deemed கிரயமாகக் கருதப்பட்டுள்ளன.

## 3.3 பெறுமானத் தேய்வு

பெறுமானத் தேய்விற்கான ஏற்பாடானது ஆதனம், பொறி, மற்றும் உபகரணங்களில் கிரயம்/ மதிப்பிடப்பட்ட பெறுமதியின் (சொத்தின் கிரயம் / மதிப்பிடப்பட்ட பெறுமதியினது இருப்புப் பெறுமதியில் 10% கழித்து) மீது நேர்கோட்டு முறையில் கணிப்பிடப்படுகின்றது. நிலம் தவிர்ந்த அனைத்து ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களும் அவற்றின் பயனுள்ள வாழ்க்கை காலத்தின் மீது அவ்வாறான தொகையான பதிலளித்துக் கொள்ளும் பொருட்டு வருடாந்தம் பின்வரும் வீதங்களில் பெறுமானத் தேர்வு இடப்பட்டு வருகின்றது.

| | |
|---|---|
| கட்டடங்கள் | 6 2/3% |
| மோட்டார் வாகனங்கள் | 12.5% |
| பொறிகள், இயந்திரங்கள், மற்றும் உபகரணங்கள் | 25% |
| தளபாடங்கள் மற்றும் பொருத்துகள் | 25% |
| தகவற் தொழிநுட்ப மென்பொருள் | 50% |

பெறுமானத்தேய்வு கொள்வனவு செய்யப்பட்ட தேதியில் ஆரம்பித்து கணிப்பிடப்படுகின்றது என்பதுடன் கிரயம் அல்லது மதிப்பிடப்பட்ட தொகையில் 10% ஆனது தனிப்பட்ட சொத்துகளின் பெறுமதியிடக்கூடிய தொகையினை தீர்மானிப்பதில் இருப்புப் பெறுமதியாக பேணப்படுகின்றது.

மீள்பார்வைக்கு உட்படுத்தப்பட்ட வருடத்தில், ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பொருளாதார ஆயுட்காலமானது கிடைப்பனவின் சிறப்பான தன்மையின் அடிப்படையில் LKAS 16 ஆல் வேண்டப்பட்டவாறு மீள்மதிப்பிற்குட்படுத்தப்பட்டது. இதன் விளைவாக பெறுமானத்தேய்வு வீதமானது சில ஆதனம், பொறி, மற்றும் உபகரணங்களும் மாற்றப்பட்டுள்ளது. அச்சொத்துகளின் பொருளாதார வாழ்க்கைகளை மாற்றத்தின் பெறுபேற்றுத் தாக்கமானது 2012 இலிருந்து ஆரம்பமாகும் நிதிக் கூற்றுக்களின் சீராக்கம் செய்யப்படும்.

மோட்டார் வாகனங்களுக்கான வாழ்க்கைக் காலமானது மீள்மதிப்பீடு செய்யப்பட்டதுடன், பெறுமானத்தேய்வு வீதமானது 2008 இற்குப் பின்னர் கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்களுக்கு 25% இலிருந்து 12.5% ஆக மாற்றப்பட்டது. 2008 இற்கு முன்னராகக் கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்கள் பாவனைக்கு உகந்தவையல்லவென கருதப்பட்டுள்ளதுடன், அவை விற்பனை செய்யும் செய்முறையில் உள்வாங்கப்பட்டதனால் அவற்றிற்கான பெறுமானத்தேய்வு வீதமானது மாற்றப்படவில்லை.

### 3.4 மீள இனங்காணல்

ஆதனம் மற்றும் உபகரணங்களினது விற்பனையின் போது அல்லது அச் சொத்துக்களின் பயன்பாட்டிலிருந்து எவ்வாறானதொரு எதிர்மறை பொருளாதார நன்மையும் எதிர்பார்க்கப்படாத போது மீள இனங்காணப்படுகின்றது. ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் மீள இனங்காணலின் மீது எழுந்த ஏதாவது இலாபம் அல்லது நட்டமானது சொத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட தொகைக்கும் விற்பனை செய்யப்பட்ட தொகைக்கும் இடையிலான வித்தியாசமாக தீர்மானிக்கப்படுகின்றதுடன், வருமானக் கூற்றில் காண்பிக்கப்படுகின்றது.

### 3.5 தொட்டுணரக் கூடிய சொத்துக்களின் வலுவிழப்பு

ஒவ்வொரு அறிக்கையிடல் காலப்பகுதியின் முடிவிலும், அதிகாரசபையானது தொட்டுணரக் கூடிய சொத்துக்கள் வலுவிழப்பு நட்டமொன்றினை அனுபவிப்பதான ஏதாவது அறிகுறி இருக்கின்றதா என்பதனை தீர்மானித்துக் கொள்வதற்கு அந் நிறுவனத்தின் தொட்டுணரக்கூடிய சொத்துக்களின் கீழ் கொண்டுவரப்படும் தொகையினை மீள் பார்வைக்குட்படுத்துகின்றது. ஏதாவது அவ்வாறான அறிகுறிகள் தென்படுமிடத்து வலுவிழப்பு நட்டத்தின் (ஏதாவது) எல்லையினைத் தீர்மானித்துக் கொள்ளும் பிரகாரம், சொத்துக்களின் மீளப் பெறக்கூடிய தொகை மதிப்பிடப்படுகின்றது. தனிப்பட்ட ஒவ்வொரு சொத்துக்களின் மீளப் பெறக்கூடிய தொகையினை மதிப்பிடுவது சாத்தியமற்றிருக்குமிடத்து, அக் குறித்த சொத்தை உரித்தாகக் கொண்டுள்ள காசினை உருவாக்கிக் கொள்ளும் அலகிற்கென மீளப்பெறக்கூடிய தொகையானது தீர்மானிக்கப்படுகின்றது. ஒதுக்கீட்டின் நியாயமான மற்றும் நிலையான அடிப்படை அடையாளங்காணப்படுமிடத்து, தனிப்பட்ட காசு உருவாக்கிக் கொள்ளும் அளவிற்கு சொத்துக்கள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன அல்லது அவ்வாறு அல்லாதுவிடின், நியாயமானதும் நிலையானதுமான ஒதுக்கீட்டு அடிப்படை அடையாளங்காணப்படக் கூடியதான காசு உருவாக்கிக் கொள்ளும் அலகுகளின் சிறிய குழுக்களிற்கு அவை ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.

மீளப் பெறக்கூடிய தொகை என்பது விற்பதற்கான செலவுகள் அல்லது பயன்பாட்டின் பெறுமதியை சந்தை பெறுமதியின் கூடிய தொகையிலிருந்து கழித்து பெறுவதாக அமைகின்றது. பயன்பாட்டின் பெறுமதி மதிப்பிடுகையில், மதிப்பிடப்பட்ட எதிர் கால காசோட்டங்களின் மதிப்பீடுகள் எவ்வாறான சொத்துக்களிற்கு ஆபத்துக்களை குறித்து நிக்கின்றதோ அவை சீராக்கப்படுவதில்லை.

ஒரு சொத்தின் மீளப்பெறக்குடிய தொகையானது (அல்லது காசு உருவாக்கி கொள்ளும் அலகு) அதன் கீழ் கொண்டு செல்லும் தொகையிலும் குறைவாக இருக்க மதிப்பிடப்படுமாயின் ,அச்சொத்தின் கீழ் கொண்டு செல்லும் தொகையானது. (காசு உருவாக்கி கொள்ளும் அலகு) அதன் மீளப் பெறக்கூடியாதான தொகைக்கு குறைக்கப்படுகின்றது. வருமான தொகை ஒன்றில் தொடர்புடைய சொத்து கொண்டு வரப்பட்டலன்றி வருமானக்கூற்றில் வலுவிழப்பு நட்டமொன்றானது உடனடியாக இணங்காணப்படுகின்றது இச் சந்தர்ப்பத்தில் வலுவிழப்பு நட்டமானது மீள்மதிப்பீட்டில் ஏற்பட்ட குறைவாக கருதப்படுகிறது.

## 4. இருப்புக்கள்

அனைத்து இருப்புக்களும் குறைத்தெழுதப்பட்ட பெறுமதியில் அல்லது தேறிய உணரப்பட்ட பெறுமதியில் பெறுமதியிடப்படுவதுடன், செலவானது முதல் வந்தது முதல் வெளியே அடிப்படையில் தீர்மானித்துக் கொள்ளப்படுகின்றது

## 5. ஏனைய சொத்துக்கள்

ஏனைய சொத்துக்கள் என்பது ஏனைய கடன்பட்டோரில் பெறவேண்டியவைகள், முற்பணங்கள் வைப்புக்கள், முற்பணக் கொடுப்பனவுகள் மற்றும் பெறவேண்டிய வசதிகளை உள்ளடக்குகின்றது.

### அ. முற்பணங்கள், வைப்புக்கள், முற்பணச்செலவுகள்

ஒரு நிதிவருடத்திலும் கூடிய தொடர்பு அல்லது நன்மை ஒன்றினை பெற்றுக்கொள்வதற்கென காணப்படும் செலவு முற்பணங்களாகவும், வைப்புக்களாகவும் முற்பண செலவுகளாகவும் வகைப்படுத்தப்படுகின்றது. அவ்வாறான செலவுகள் நேர விகிதசார அடிப்படையில் அவை தொடர்புடையாதாக காணப்படும் காலங்களின் மீது பதிலளிக்கப்படுகின்றது.

### ஆ. ஏனைய கடன்பட்டோர்கள்

ஏனைய கடன்பட்டோர்கள் கிரயத்திலிருந்து வலுவிழப்பு நட்டத்தினை கழித்து இனங்காணப்படுகின்றது.

### இ. பெறவேண்டிய வரிகள்

பெறவேண்டிய வரிகள் கிரயத்தில் இனங்காணப்படுகின்றது.

### ஈ. முற்பணமாகச் செலுத்தப்பட்ட ஊழியர் செலவுகள்

இவை அதிகாரசபையின் ஊழியர்களுக்கு நியாயமான வீதத்தில் கொடுக்கப்பட்ட ஊழியர் கடன்களிலிருந்து எழும் மீதிகளை பிரதிநிதித்துவம் செய்கின்றது.

## 6. காசும் காசுக்கு சமமானவையும்

காசும் காசுக்கு சமமானவையும் என்பது கையிலுள்ள காசினையும் காசுத்தொகையாக உடனடியாக மாற்றக்கூடியதாக இருக்கும் அதிகளவு திரவத்தன்மை கொண்ட குறுங்கால முதலீடுகளையும் உள்ளடங்குகின்றதுடன், இவைகள் பெறுமதியாக மாற்றப்படும் போது முக்கியத்துவமற்றதொரு ஆபத்துத்தன்மைக்கு உட்பட்டனவாக காணப்படும் இவைகள் குறுங்கால காசுத் தேவைகளை ஈடுசெய்து கொள்ளும் நோக்குடன் வைத்திருக்கப்படுகின்றன.

காசுப் பாய்ச்சற் கூற்றின் நோக்கத்திற்கென, காசும் காசுற்கும் சமமானவைகள் என்பது கையிலுள்ள காசு மற்றும் வங்கி மேலதிகப்பற்றுக்களின் தேறியதான வங்கியிலுள்ள வைப்புக்களையும் உள்ளடக்குகின்றது. மேலும், குறுகிய கால முதலீடுகள் அதாவது மூன்று மாதங்கள் அல்லது கொள்வனவுத் திகதியிலிருந்து கழித்து காசுக்குச் சமமானதாகக் கருதப்படுகின்றது. கூட்டிணைக்கப்பட்ட ஐந்தொகையில், வங்கி மேலதிகப்பற்றானது நடப்புப் பொறுப்புகளில் கடன் கொடுத்தவர்களினுள் காட்டப்படுகின்றது.

## 7. ஏற்பாடுகள்

கடப்பாடுகளைத் தீர்ப்பதற்குத் தேவைப்படும் பொருளாதார நன்மைகளை ஏற்படுத்தும் வளங்களின் வெளிச் செல்கையொன்றிற்கு சாத்தியமாக இருக்கும் இடத்து மற்றும் நம்பகரமான மதிப்பீடொன்று கடப்பாட்டுத் தொகைக்கு மேற்கொள்ளப்பட முடியுமிடத்து, ஒரு கடந்தகால பெறுபேறாக அதிகாரசபை ஒரு நடைமுறை கடப்பாடுகளை வைத்திருக்கும் போது ஏற்பாடுகள் இனங்காணப்படுகின்றன. பணத்தினுடைய காலப்பெறுமதியின் தாக்கம் முக்கியத்துவம் மிக்கதொன்றாக காணப்படுமிடத்து,

ஏற்பாடுகள் பணத்தினை காலப்பெறுமதியின் நடைமுறைச் சந்தை மதிப்பீடுகளை பிரதிபலிக்கும். ஒரு முற்கூட்டிய வரி வீதத்தில் எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால காசோட்டங்களை கழிவு வழங்கலின் மூலம் தீர்மானிக்கப்படுவதுடன் பொருத்தமானவிடத்து ஆபத்துக்கள் பொறுப்புக்களுக்கு குறித்து நிற்கின்றது.

## 7.1 ஊழியர் நன்மைகள்

### தீர்மானிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டம்

ஊழியர்கள் குறித்த நியதிச்சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளின் பிரகாரம் ஊழியர் சேமலாப நிதிப் பங்களிப்புக்கும் (EPF) ஊழியர் நம்பிக்கை நிதியப் பங்களிப்புக்கும் (ETF) உரித்துடையவர்கள் ஆவார். அதிகாரசபையானது ஊழியர் சேமலாப நிதிப்பங்களிப்புக்கும், ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் ஊழியர்களின் மொத்தச் சம்பளத்தின் நிலையான பங்களிப்பொன்றினை செலுத்துகின்றதுடன், மேலதிக தொகையினை செலுத்துவதற்கு அதிகாரசபைக்கு சட்ட ரீதியான அல்லது ஆக்கபூர்வமான கடப்பாடுகளைக் கொண்டிருக்கின்றது.

### தீர்மானிக்கப்பட்ட நன்மைத்திட்டங்கள்

தீர்மானிக்கப்பட்ட நன்மைத்திட்டங்களானவை தீர்மானிக்கப்பட்ட பங்களிப்பத் திட்டங்களுக்கு மேலானதான பிந்திய வேலைவாய்ப்புத் திட்டங்களாகும். அதிகாரசபையானது 1983 இல் 12ஆம் இலக்க பணிக்கொடைச் சட்டத்தின் பிரகாரம் பணிக்கொடையை செலுத்த வேண்டிய பொறுப்பினையும் கொண்டுள்ளது. இந்த சட்டத்தின் கீழுள்ள இக் கடப்பாடுகளுக்கான ஏற்பாடொன்று, சேவைக்கான வருடங்களை மாதச் சம்பளத்தின் அரைப்பங்கினை பெருக்குவதன் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றது.

## 7.2 விபத்து விசாரணை நிதியம்

வான் விபத்து தொடர்பான விபத்து விசாரணையின் நாட்டினது கடமைப்பாடு தேடுதல் மற்றும் காப்பாற்றல் என்பன சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளது. இந் நோக்களுக்காக 250 மில்லியன் ரூபா ஏற்பாடுகள் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ் ஏற்பாடுகளின் பெறுமதியானது அதிகாரசபையின் முகாமையின் நடுநிலமையின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## 7..3 ஊழியர் நலன்புரி மற்றும் சமூக பாதுகாப்பு நிதியம்

ஊழியர் நலன்புரி மற்றும் சமூகம் பாதுகாப்பு நிதியமானது அரச சேவையிலிருந்து ஓய்வுபெற்று சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையில் இணைந்து கொண்ட அரச உத்தியோகத்தர்கள் தொடர்பில் 2002 இன் 34 ஆம் இலக்க இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைச் சட்டத்தில் பந்தி 20 (5) இன் பிரகாரம் உருவாக்கப்பட்டுள்ளது. திரட்டிய வட்டியுடனான ஒவ்வொரு இளைப்பாறும் ஊழியர் பெயரிலும் இத்தொகையானது சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையிலிருந்து ஓய்வு பெறும் தருணத்தில் அவர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது.

## 8. நிதிப்பொறுப்புக்கள்

## 8.1 ஆரம்ப இனங்காணலும் அளவீடும்

LKAS 39 இன் வரையறையினுள் நிதிப் பொறுப்புக்களானவை பொருத்தமான வகையில் கடன்கள் மற்றும் கடன் பெறுவனவுகள் அல்லது இலாபம் அல்லது நட்டத்தினூடாக சந்தைப் பெறுமதியில் நிதிப் பொறுப்புக்களாக வகைப்படுத்தப்படுகின்றன. அதிகாரசபையானது ஆரம்ப இனங்காணலில் அதன் நிதிப் பொறுப்புக்களின் வகைப்படுத்தலைத் தீர்மானிக்கின்றன.

அனைத்து நிதிப் பொறுப்புக்களும் ஆரம்பத்தில் சந்தைப் பெறுமதியில் இனங்காணப்படுவதுடன், கடன்கள் மற்றும் கடன் பெறுவனவுகள் தொடர்பில் பகிர்வு செய்யப்பட்ட செலவாக கீழ்க் கொணரப்படுகின்றன. இது நேரடியாக உடமையாக்கத்தக்க கொடுக்கல் வாங்கற் செலவாக உள்ளடக்கப்படுகின்றது.

அதிகாரசபையின் நிதிப் பொறுப்புக்கள் வியாபார மற்றும் ஏனைய கொடுக்க வேண்டியவைகளையும் உள்ளடக்குகின்றது.

## 9. ஏனைய பொறுப்புக்கள்

ஏனைய பொறுப்புக்களானவை அட்டுறு செலவு உள்ளடங்கிய ஏனைய கடன் கொடுத்தோரை உள்ளடக்குகின்றது. இவைகள் அவற்றின் சந்தைப் பெறுமதியில் இருக்க ஏற்படுத்திக் கொள்ளப்பட்டதான அவற்றின் வரலாற்றுப் பெறுமதியில் எடுத்துரைக்கப்படுகின்றது.

10. 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பகுதி 10.2 இன் பிரகாரம், 95வது CAA இயக்குனர் சபையில் வேண்டப்பட்டவாறு தலைமையலுவலக கட்டட நிர்மாணத்தின் மீது எழக்கூடியதான மூலதனச் செலவுகளை ஈடுசெய்யும் பொருட்டு ரூபா.485 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 11. வருமானத்தினை இனங்காணல்

11.1 கடல் கடந்த விற்பனை மிகைக்கட்டணம் / விமான மேறல் வரி மீதான சேவைக் கட்டணம்/ அனுமதிப்பத்திரங்களின் ஆரம்ப வழங்குகைகள் மற்றும் புதுப்பித்தல்கள் / விமான சேவை அனுமதிப்பத்திரத்தின் மீதான திருத்தங்கள ் / நியதிச் சட்ட சேவைக் கட்டணம் / பரீட்சைக் கட்டணங்கள்

மேற்கூறப்பட்ட சேவைகள் கட்டணங்களிலிருந்தான வருமானமானது எக்காலத்தில் தொடர்புடைய சேவைகள் வழங்கப்படுகின்றவோ அக்காலத்தில் காணப்படும் சந்தைப் பெறுமதியில் இனங்காட்டப்படுகின்றது.

### 11.2 வட்டி வருமானம்

இலாபம் அல்லது நட்டத்தினூடாக சந்தைப் பெறுமதியில் அளவிடப்பட்ட நிதி ஆவணங்கள் உள்ளடங்கலாக அனைத்து வட்டியுடன் கூடிய நிதி ஆவணங்களுக்கான வட்டி வருமானமானது நடப்பு வட்டி வீத முறைமையினால் வருமானம் என்பதனுள் இனங்காட்டப்படுகிறது. பெறவேண்டிய ஒன்று இல்லாது செய்யப்படுமிடத்து போது சபையானது அதிகார ஆவணத்தின் மூல நடப்பு வீதத்தில் கழிவு செய்யப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட எதிர்கால காசோட்டத்தினை கொண்டதாக அதன் மீளப்பெறக்கூடியதாக கீழ் கொண்டு வரப்படும் தொகையினை குறைக்கின்றதுடன் வட்டி வருமானமாக நேர்த்தியான கழிவினை முன்னெடுக்கின்றது.

### 11.3 ஏனைய வருமானம்

ஏனைய வருமானமானது அட்டுறு அடிப்படையில் இனங்காட்டப்படுகின்றது.

## 12. செலவுகளை இனங்காணல்

அனைத்து செலவுகளும் கொடுக்கப்பட்ட முக்கியத்துவத்தின் சந்தைப் பெறுமதியில் மதிப்பிடப்படுவதுடன், எந்தக் காலப்பகுதிக்கு அசெலவுகள் தொடரப்படுகின்றவோ அக்காலப்பகுதிக்குரியதான இனங்காட்டப்படுகின்றன.

எதிர்பார்க்கும் பயனுள்ள ஆயுட்காலத்தின் மாற்றங்கள் அல்லது குறித்த சொத்தில் உள்ளடக்கப்பட்ட எதிர்கால பொருளாதார நன்மையின் பயன்பாட்டின் எதிர்பார்க்கப்பட்ட மாதிரிகை ஆனது பெறுமானத் தேய்வு காலத்தினை மாற்றுவதன் மூலம் கணக்கிடப்படுவதுடன், கணக்கியல் மதிப்பீடொனறில் ஏற்பட்ட மாற்றமொன்றாகக் கருதப்படுகின்றது.

## 13. கடன் பெறலுக்கான செலவுகள்

கடன் பெறற் செலவுகள் என்பது நிதியின் கடன் பெறலுடன் தொடர்புடைய அதிகாரசபையால் ஏற்ப்படுத்திக் கொள்ளப்பட்ட வட்டி மற்றும் ஏனைய செலவுகளைக் குறிக்கும் கடன் பெறலுக்கான செலவுகள் அச்செலவு இடம்பெற்ற காலப்பகுதிக்குரியதான செலவொன்றாக இனங்காணப்படகின்றது,

## 14. நடப்பு மற்றும் பிற்போடப்பட்ட வருமான வரி

குறித்த காலத்திற்கான வரிச்செலவானது நடப்பு மற்றும் பிற்போடப்பட்ட வரிகளை உள்ளடக்குகின்றது. உரிமையில் நேரடியாக அல்லது ஏனைய முழுமையான வருமானத்தில் அடையாளப்படுத்தப்பட்ட விடயங்களிற்கு வரியானது தொடர்புபட்டு இருக்கும் அளவு தவிர, வரியானது வருமானக்கூற்றில் இனங்காட்டப்படுகின்றது. இந்நிலையில் மேலும், வரியானது முறையே ஏனைய முழுமையான வருமானம் அல்லது உரிமையில் நேரடியாக இனங்காட்டப்படுகின்றது.

நடப்பு வரிச் சொத்துக்கள் அல்லது பொறுப்புகள் நடப்பு அதே போல முன்னைய வருடங்கள் தொடர்பில் வரி நிறுவனத்திற்குச் செலுத்தப்பட்ட அல்லது அதனிடமிருந்து பெறப்பட்ட எதிர்பார்க்கப்படும் தொகையினை உள்ளடக்குகின்றது. தொகையினை நிர்ணயித்து பயன்படுத்தப்படும் விரி வீதங்கள் மற்றும் வரிச் சட்டங்களை நிதி நிலமை திகதியிலுள்ள கூற்றினால் சட்டவாக்கம் செய்யப்படுகிறது அல்லது பின்னராக சட்டவாக்கஞ் செய்யப்படுகின்றது. இதன் பிரகாரம், வரிக்கான ஏற்பாடானது 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு வருமான சட்ட ஏற்பாடுகள் மற்றும் அதன் பின்னர் அச்சட்டத்தில் கொண்டு வரப்பட்ட திருத்தங்களுக்கிணங்க வரியிடல் நோக்கங்களுக்காக சீராக்கப்பட்ட வருடத்திற்கான இலாபத்தினை அடிப்படையில் கொண்டதாக மேற்கொள்ளப்படுகிறது. பிற்போடப்பட்ட வருமான வரியானது நிதிக் கூற்றுக்களில் அவற்றின் கீழ் கொண்டு வரப்பட்ட தொகை மற்றும் சொத்துக்கள் மற்றும் பொறுப்பக்களின் என்பவற்றின் வரி அடிப்படைகளுக்கிடையில் எழும் தற்காலிக வேறுபாடுகள் மீதான பொறுப்பு முறைமையைப் பயன்படுத்தி அடையாளப்படுத்துகின்றது. இருந்த போதிலும் கணக்கீடோ அல்லது வரியிடக்கூடிய வருமானமோ அல்லது தாக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்ற தருணத்தில் வியாபார சேர்மானம் தவிர்ந்த நடவடிக்கையொன்றில் சொத்து அல்லது பொறுப்பொன்று ஆரம்பத்தில் இனங்காணப்படுதலிலிருந்து பிற்போடப்பட்ட வரியானது ஏற்படின், அதற்கு கணக்கீடுகள் மேற்கொள்ளப்படமாட்டாது. பிற்போடப்பபட்ட வருமான வரியானது அறிக்கையிடல் காலத்தின் முடிவில் சட்டவாக்கப்படுத்தப்பட்ட அல்லது பின்னராக சட்டவாக்கப்படுத்தப்பட்ட வரி வீதங்களை (மற்றும் சட்டங்களை) பயன்படுத்தி தீர்மானிக்கப்படுவதுடன், பிற்போடப்பட்ட வருமான வரிப் பொறுப்பு தீரககப்படும் போது அல்லது தொடர்புடைய பிற்போடப்பட்ட வருமான வரி சொத்து உணரப்படும் போது உபயோகப்படுத்த எதிப்பார்க்கப்படுகின்றது.

பிற்போடப்பட்ட வருமான வரிச் சொத்தாக்களை எதிராக எதிர்காலத்தில் வரிவிதிக்கக் கூடிய இலாபம் கிடைக்கக் கூடியதான சாத்தியத் தன்மைக்கெதிராக தற்காலிகமான வேறுபாடுகள் பயன்படுத்தப்பட முடியுமான வரைக்கும் இணங்காணப்படுகின்றது.

பிற்போடப்பட்ட வருமான வரியானது அதிகாரசபை தற்காலிக வேறுபாடுகளின் திருப்பங்களுக்கான தருணங்களை கட்டுப்படுத்தும் சந்தர்ப்பம் தவிர துணை மற்றும் கூட்டிணைக்கப்பட்டவைகளின் முதலீடுகள் மீது எழும் தற்காலிக வேறுபாடுகளின் மீது வழங்கப்படுகின்றதுடன், முன்னுணரப்படும் எதிர்காலத்தில் தற்காலிக வேறுபாடானது அநேகமான வகையில் திரும்புதலுக்குட்படமாட்டாது.

பிற்போடப்பட்ட வருமான வரிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களானவை நடப்பு வரிச் சொத்துக்களை நடப்பு வரிச் சொத்துக்கெதிராக பதிவளிக்கும் உரிமையினை சட்டரீதியாக ஏற்படுத்திக்

கொள்ளுமிடத்திலும் மற்றும் தேறிய அடிப்படையொன்றில் தீர்த்துக் கொள்ள விருப்பமொன்றை தெரிவிக்குமிடத்தில், வரியிடக்கூடிய அலகு அல்லது வேறுபட்ட வரியிடக் கூடிய அலகுகளின் மீது வரி நிறுவனங்களில் விதிக்கப்பட்ட வருமான வரியுடன் பிற்போடப்பட்ட வருமான வரிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்புபடும் போது பதிலளிப்புச் செய்யப்படுகின்றது.

பயன்படுத்தப்படாத நட்டங்களின் அல்லது பயன்படுத்தப்படாத வரிச் செலவுகளின் கீழ் கொண்டு வரப்பட்டதற்கான வரித் தாக்கங்களை எதிர்கால வரிவிதிக்கக்கூடிய இலாபங்கள் கிடைப்பதற்கான சாத்தியத்தன்மைக்கெதிராக இவ்வாறான நட்டங்கள் பயன்படுத்தப்பட முடிகின்ற போது அது ஒரு சொத்தாக இனங்காட்டப்படுகின்றது.

## 15. வெளிநாட்டு நாணய மாற்றம் அல்லது கொடுக்கல் வாங்கல்கள்

தொழிற்பாட்டு நாணயம் தவிர்ந்த நாணயங்களிலான அனைத்துக் கொடுக்கல் வாங்கல்களும், கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்ட தருணத்தில் வழக்கமான பரிமாற்று வீதங்களைப் பயன்படுத்தி, இலங்கை ரூபாய்களில் பதிவு செய்யப்படுகின்றது. நிதி நிலமை திகதியினை ஒவ்வொரு கூற்றிலும், வெளிநாட்டு நாணயங்களின் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. பணரீதியான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களானவை ஐந்தொகைத் திகதியில் பொலாவுள்ள பரிமாற்று வீதத்தில் சமமான இலங்கை ரூபாய்க்கு மாற்றீடு செய்யப்படுகின்றது. வெளிநாட்டு நாணயத்தில் வெளிப்படுத்தப்படும் பணரீதியற்ற சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், நடவடிக்கைத் திகதியில் பொதுவாவுள்ள பரிமாற்று வீதத்தினை பயன்படுத்தி மாற்றப்படுகின்றன. பணரீதியான விடயத்தின் தீர்ப்வை மற்றும் பணரீதியான விடயங்களின் மீள் பரிமாற்றத்தின் மீது எழும் பரிமாற்று வேறுபாடுகள் அவை எவ்வருடத்தில் ஏற்படுகின்றனவோ அவ்வருடத்தில் வருமானக் கூற்றில் இனங்காட்டப்படுகின்றது.

## 16. ஐந்தொகைத் திகதிக்குப் பிந்திய சம்பவங்கள்

பணிப்பாளர்கள் விடயங்களை நெருக்கமான முறையில் அவதானிக்கின்றனர் என்பதுடன், தேவைப்படுமிடத்து சீராக்கங்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் பொருத்தமான வகையில் குறிப்பிட்டக் கூடியதான ஐந்தொகைக்குப் பிந்திய நிகழ்வுகள் தொடர்பில் நடப்பு நிதிக் கூற்றுகளில் மேற்கொள்ளப்படுகின்றன.

## 17. சார்ந்த பொறுப்புக்கள்

கடந்த காலச் சம்பவமொன்றின் பெறுபேறு ஒன்றாக சாத்தியமான எதிர்கால கடமைப்பாடு காணப்படுமெனில் அல்லது கொடுப்பனவு ஒன்று சாத்தியமற்று அல்லது தொகையானது நியாயமற்று மதிப்பிடப்பட்டதொன்றாக இருக்குமிடத்து கடந்த கால நிகழ்வொன்றில் பெறுபேறொன்றாக தற்போதைய கடப்பாடு இருக்குமெனில் சார்ந்த பொறுப்புக்கள் வெளிப்படுத்தப்படுகின்றன.

## 18. காசுப் பாய்ச்சற் கூற்று

காசுப் பாய்ச்சற் கூற்றானது காசுப் பாச்சற் கூற்றின் மீதான இலங்கை கணக்கியல் நியமம் இலக்கம் 9 இற்கிணங்க நேரில் முறையினைப் பயன்படுத்தி தயாரிக்கப்படுகின்றது.

நேரில் முறைமையானது காசு சாராத விடயங்கள் தொடர்பிலான கொடுக்கல் வாங்களின் தாக்கத்தால் அல்லது ஏதாவது வேறுபட்டால் அல்லது கடந்த கால கெடுக்க வேண்டியவையால் அல்லது எதிர்கால செயற்பாட்டு காசு பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகளால் மற்றும் நிதி விடயங்களில் அல்லது முதலீடு அல்லது நிதி காசோட்டத்துடன் தொடர்புபட்டதான செலவுகளால் சீராக்கப்பட்ட இலாப மற்றும் நட்டங்களை வெளிக் காட்டப்படுகின்றன.

| குறிப்பு இல. | விபரம் | SLFRS 31.12.2013 (ரூபா) | SLFRS 31.12.2012 (ரூபா) |
|---|---|---|---|
| 01 | செயற்பாட்டு வருமானம் | 1,078,895,686.64 | 918,524,428.11 |
| | வெளிநாட்டு விற்பனை மிகைக் கட்டணம் (OSS) | 893,284,113.90 | 777,079,501.28 |
| | விமானமேற்றல் வரி மீதான சேவைக் கட்டணங்கள் | 138,082,367.67 | 92,897,230.67 |
| | அனுமதிப் பத்திரங்களின் ஆரம்ப வழங்குகைகள் மற்றும் புதுப்பித்தல்கள் | 18,296,515.52 | 17,118,445.73 |
| | பரீட்சைக் கட்டணங்கள் | 4,184,475.00 | 4,546,056.19 |
| | ஏனைய நியதிச் சேவைக் கட்டணங்கள் | 21,821,191.00 | 19,510,535.24 |
| | ஏனைய செயற்பாட்டு வருமானங்கள் | 3,227,023.55 | 7,372,659.00 |
| 02 | ஏனைய வருமானங்கள் | 99,816,472.46 | 70,467,194.05 |
| | பல்வேறு வகையுடைய வருமானங்கள் | 1,213,048.77 | 879,972.43 |
| | வாடகை வருமானங்கள் | 87,673.25 | 115,503.25 |
| | நிலையான சொத்துக்களின் விற்பனை மீதான இலாபங்கள் | 63,865.00 | - |
| | ஊழியர் கடன்களின் மீதான வட்டி வருமானம் (IFRS) | 6,317,926.22 | 4,109,609.00 |
| | அரசாங்க நன்கொடைத் தீர்ப்பனவு | 606,054.00 | 606,054.00 |
| | வாடிக்கையாளரிடமிருந்து திரட்டப்பட்ட தேச நிர்மாண வரி | 586,986.50 | |
| | வட்டி வருமானங்கள் | | |
| | ஊழியர் கடன்களிலிருந்தான வட்டி | 3,458,587.20 | 2,928,507.31 |
| | அரச முறிகளிலிருந்தான வட்டி | 68,989,229.39 | 20,433,433.92 |
| | நிலையான வைப்புக்களிலிருந்தான கடன் வட்டி | 3,042,243.27 | 31,142,884.22 |
| | அழைப்பு வைப்புக்களிலிருந்தான கடன் வட்டி | 15,450,858.86 | 8,842,495.67 |
| | விமானமேறல் வரியிலிருந்தான வட்டி | | 1,408,734.25 |
| 03 | ஊழியர் செலவீனங்கள் | 156,700,965.10 | 148,638,658.02 |
| | சம்பளங்களும் கூலிகளும் | 62,643,485.59 | 59,821,258.92 |
| | ஏனைய படிகள் | 48,482,451.35 | 46,761,582.30 |
| | ஊழியர் சேமலாப நிதியம் | 15,520,351.56 | 14,963,426.50 |
| | ஊழியர் நம்பிக்கை நிதியம் | 3,103,619.98 | 2,991,966.01 |

| | | | |
|---|---|---|---|
| | மிகையூதியம் | 3,405,590.69 | 3,543,736.03 |
| | நலன்புரிச் செலவுகள் | 9,562,626.17 | 8,993,452.88 |
| | பணிக்கொடை | 1,138,179.50 | 1,767,642.50 |
| | மேலதிக நேரம் மற்றும் விடுமுறை நாள் கொடுப்பனவுகள் | 3,773,052.62 | 3,361,126.12 |
| | கடன் நன்மைகள் மீதான ஊழியர் செலவுகள் (IFRS சீராக்கங்கள்) | 6,317,926.22 | 4,109,609.00 |
| 04 | கூட்டங்கள், கருத்தரங்குகள், மற்றும் வேலைப்பட்டறைகள் | 33,254,645.02 | 26,794,066.10 |
| | வேலைப்பட்டறைகளும் கருத்தரங்குச் செலவுகளும் | | |
| | உள்நாடு | 2,683,340.70 | 6,384,027.94 |
| | வெளிநாடு | 30,571,304.32 | 20,410,038.16 |
| 05 | பயிற்சியளித்தற் செலவுகள் | 11,269,722.26 | 20,106,117.69 |
| | பயிற்சியளித்தற் செலவுகள் | | |
| | உள்நாடு | 1,086,540.00 | 2,955,351.00 |
| | வெளிநாடு | 10,183,182.26 | 16,914,549.50 |
| | சிவில் விமானப் போக்குவரத்துப் பயிற்சியளித்தற் கல்லூரிச் செலவுகள் | | 236,217.19 |
| 06 | நிர்வாக மற்றும் ஏனைய செலவுகள் | 136,960,888.79 | 148,764,416.90 |
| | போக்குவரத்துச் செலவுகள்- உள்நாடு | 42,882.00 | |
| | இயக்குனர் சபைக் கொடுப்பனவுகள் | 1,162,500.00 | 1,556,250.00 |
| | காகிதாதிகள் மற்றும் நுகர்வுப் பொருட் செலவுகள் | 6,368,207.83 | 5,006,745.34 |
| | ஏனைய வினியோகங்களுக்கான செலவுகள் | 370,919.11 | 501,358.59 |
| | தொலைதொடர்பு | 3,752,508.31 | 4,260,690.86 |
| | தபாற் செலவுகள் | 227,480.08 | 216,215.23 |
| | உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நி-றுவனங்களுக்கான அங்கத்துவ மற்றும் பங்களிப்புச் செலவுகள் | 20,370,000.00 | 15,582,000.00 |
| | வெளியீடுகள் மற்றும் விளம்பரங்களு-க்கான அங்கத்துவக் கட்டணம் | 888,283.18 | 698,565.63 |
| | பரீட்சைக் கட்டணங்கள் | 418,415.96 | 216,308.43 |
| | பதிப்புச் செலவுகள் | 2,414,167.89 | 2,201,553.24 |
| | வான் கட்டண மற்றும் அனுமதிச் சீட்டு கற்கைநெறிச் செலவுகள் | 132,197.00 | 361,031.89 |
| | உள்ளக மற்றும் வெளியக கூட்டங்களுக்கான செலவுகள் | 257,268.07 | 421,728.51 |
| | சோதனைகளும் வெளியகக் கூட்டங்களும் | 2,882,540.13 | 768,922.97 |

| | | | |
|---|---|---|---|
| | மொழிபெயர்ப்பு மற்றும் பதிப்பேற்றச் செலவுகள் | 171,115.88 | 106,991.11 |
| | ஆதனங்கள், பொறி, மற்றும் உபகரணங்களின் பராமரிப்புச் செலவுகள் | 1,073,443.98 | 1,160,536.65 |
| | கணக்காய்வுக் கட்டணம் | 1,206,672.00 | |
| | எரிபொருள் செலவுகள் | 9,151,441.72 | 7,595,356.24 |
| | வாகன பராமரிப்பு | 9,020,533.77 | 6,904,174.63 |
| | வாடகை மற்றும் குத்தகைக் கட்டணங்கள் | 851,780.84 | 1,055,532.26 |
| | பொது - நலன்புரி | 328,281.00 | |
| | நலன்புரி பயன்கள் - விளையாட்டு | 144,541.00 | |
| | அலுவலகக் கட்டடம் மற்றும் விடுதிகள் மீதான செலவுகள் | 53,838,364.50 | 47,657,085.98 |
| | தேச நிர்மாண வரி | 587,013.46 | 569,702.00 |
| | தேசத்தின் மகுடம் கண்காட்சி | 7,376,143.00 | 6,309,271.99 |
| | விமானப் போக்குவரத்து அபிவிருத்தி | 8,115,195.13 | 4,583,246.91 |
| | தகவற் தொழிநுட்ப விருத்தி | 549,428.06 | 273,558.85 |
| | கூட்டாண்மை சமூகப் பொறுப்புக்கள் | 1,660,500.00 | |
| | நன்கொடைகள் | | 350,000.00 |
| | விமானப் போக்குவரத்துக் கொண்டாட்டங்கள் | 1,320,060.00 | 11,385,293.44 |
| | ஒழுங்குவிதி விருத்தியாக்கல் | 883,440.50 | 27,752,849.25 |
| | நானாவிதச் செலவுகள் | 24,700.00 | 1,043,604.31 |
| | நிறுவன நிகழ்வுகள் | 1,370,864.39 | |
| | நிலையான சொத்து விற்பனை மீதான நட்டம் | | 225,842.59 |
| 07 | வரியியல் | 228,159,304.45 | 94,722,505.91 |
| | வருமானவரி | 227,828,120.60 | 173,092,484.43 |
| | வருமானவரி- முன்னைய ஆண்டு மிகை ஏற்பாடு | 435,173.62 | (77,201,590.87) |
| | பிற்போடப்பட்ட வரி | (103,989.77) | (1,168,387.65) |

குறிப்பு இல. 08

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கிரயம்/ மறுமதிப்பு | 01.01.2013 இல் மீதி | சேர்ப்புக்கள்/ மாற்றங்கள் | விற்பனைகள் | 31.12.2013 இல் மீதி | 31.12.2012 இல் மீதி |
|---|---|---|---|---|---|
| காணி | 5,359,200.00 | - | - | 5,359,200.00 | 5,359,200.00 |
| கட்டடம் | 13,265,682.05 | 77,719.00 | - | 13,343,401.05 | 13,265,682.05 |
| வாகனங்கள் | 87,928,633.15 | - | - | 87,928,633.15 | 87,928,633.15 |
| பொறி, இயந்திரம் | 52,144,503.72 | 1,969,875.00 | (78,350.00) | 54,036,028.72 | 52,144,503.72 |
| தகவற் தொழிநுட்ப மென்பொருள் | 8,680,747.51 | | - | 8,680,747.51 | 8,680,747.51 |
| தளபாடம் மற்றும் பொருத்துக்கள் | 26,416,618.30 | 2,411,123.77 | | 28,827,742.07 | 26,416,618.30 |
| ஏனைய நிலையான சொத்துக்கள் | 999,079.00 | - | - | 999,079.00 | 999,079.00 |
| | **194,794,463.73** | **4,458,717.77** | **(78,350.00)** | **199,174,831.50** | **194,794,463.73** |
| பெறுமானத்தேய்வு | 01.01.2013 இல் மீதி | வருடத்திற்கான பெறுமானத்தேய்வு | விற்பனைகளின் மீதான பெறுமானத்தேய்வு | 31.12.2013 இல் மீதி | 31.12.2012 இல் மீதி |
| கட்டடம் | 6,345,911.87 | 695,352.18 | | 7,041,264.05 | 6,345,911.87 |
| வாகனங்கள் | 29,254,347.96 | 8,244,129.87 | | 37,498,477.83 | 29,254,347.96 |
| பொறி, இயந்திரம் | 27,498,742.64 | 10,271,250.66 | (70,515.00) | 37,699,478.30 | 27,498,742.64 |
| தகவற் தொழிநுட்ப மென்பொருள் | 3,835,088.51 | 2,075,261.39 | | 5,910,349.90 | 3,835,088.51 |
| தளபாடம் மற்றும் பொருத்துக்கள் | 12,019,846.75 | 5,568,084.56 | | 17,587,931.31 | 12,019,846.75 |
| ஏனைய நிலையான சொத்துக்கள் | 949,036.00 | - | | 949,036.00 | 949,036.00 |
| | **79,902,973.73** | **26,854,078.66** | **(70,515.00)** | **106,686,537.39** | **79,902,973.73** |
| குறைத்து எழுதப்பட்ட பெறுமதி | - | – | – | **92,488,294.11** | **114,891,490.00** |

| | | SLFRS 31.12.2013 (ரூபா) | SLFRS 31.12.2012 (ரூபா) |
|---|---|---|---|
| 09. | இருப்புக்கள் | 79,146,992.92 | 6,934,256.43 |
| | நுகரத்தக்க இருப்புக்கள் | 4,605,810.97 | 2,104,256.43 |
| | வழியிற் சரக்குகள் | 28,280,000.00 | |
| | நடைபெறும் வேலைகள் | 46,261,181.95 | 4,830,000.00 |
| 10. | வியாபாரப் பெறுவனவுகள் மற்றும் ஊழியர் கடன்கள் | 219,721,394.16 | 180,555,880.06 |
| | ஓ.எஸ்.எஸ் மற்றும் நியதிச் சேவை வருமானப் பெறுவனவுகள் | 183,780,105.91 | 144,073,407.09 |
| | ஏனைய கடன்பட்டோர்கள் | 171,114.73 | 1,013,855.11 |
| | ஊழியர் கடன்கள் | 66,877,986.77 | 53,176,212.86 |
| | கழி-பிற்போடப்பட்ட ஊழியர் செலவுகள் | (31,107,813.25) | (17,707,595.00) |
| 11. | நிதிச் சொத்துக்கள் | 801,046,519.12 | 543,528,106.43 |
| | நிலையான வைப்புக்கள் | 36,308,635.50 | 84,657,875.00 |
| | திறைசேரி உண்டியல்கள் | 764,737,883.62 | 458,870,231.43 |
| 12. | முற்பணங்கள், முன்கூட்டிய கொடுப்பனவுகள், மற்றும் ஏனைய பெறுவனவுகள் | 106,488,296.86 | 136,448,863.07 |
| | முற்பணங்கள் | 4,263,304.46 | 4,357,584.24 |
| | முன்கூட்டிய கொடுப்பனவுகள் | 10,337,887.77 | 46,378,640.19 |
| | ஏயுவு பெறுவனவுகள் | 36,671,446.98 | 32,688,455.07 |
| | வட்டி வருமானப் பெறுவனவுகள் | 24,107,844.40 | 35,316,588.57 |
| | முற்கூட்டிச் செலுத்தப்பட்ட ஊழியர் செலவுகள். | 31,107,813.25 | 17,707,595.00 |
| 13. | காசும் காசுக்குச் சமமானவையும் | 632,639,748.28 | 220,447,298.51 |
| | வங்கியில் காசு | 488,639,748.28 | 40,447,298.51 |
| | நடைமுறைக் க/கு 0002026666 | 54,435,041.25 | 2,368,212.66 |
| | நடைமுறைக் க/கு 0002026678 | 434,204,707.03 | 38,079,085.85 |
| | குறுங்கால முதலீடுகள் | 144,000,000.00 | 180,000,000.00 |
| 14 | பெறப்பட்ட நன்கொடைகள் | 7,956,326.05 | 8,562,380.05 |
| | காணி | 5,359,200.00 | 5,359,200.00 |
| | கட்டடம் | 3,014,485.95 | 3,620,539.95 |
| | ஏனைய நிலையான சொத்துகள் | 188,694.10 | 188,694.10 |
| | மொத்தம் | 8,562,380.05 | 9,168,434.05 |
| | குறித்த வருடத்தில் தீர்ப்பனவு | (606,054.00) | (606,054.00) |
| | 31.12.2012 இல் மீதி | 7,956,326.05 | 8,562,380.05 |
| 15 | மீள்மதிப்பீட்டு மிகை | 13,485,465.44 | 13,485,465.44 |
| | வாகனங்கள் | 4,720,625.00 | 4,720,625.00 |

| | | | |
|---|---|---|---|
| | பொறி, இயந்திரம், மற்றும் உபகரணங்கள் | 3,855,992.93 | 3,855,992.93 |
| | தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் | 4,908,847.51 | 4,908,847.51 |
| 16. | பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புக்கள் | 4,658,204.67 | 4,762,194.44 |
| | 01.01.2013 இல் மீதி | 4,762,194.44 | 5,930,582.09 |
| | வருடத்திற்கான புறமாற்றல்<br>31.12.2013 இல் மீதி | (103,989.77) | (1,168,387.65) |
| | 31 டிசம்பர் 2013 இல் மீதி | 4,658,204.67 | 4,762,194.44 |
| 17 | ஏற்பாடுகள் மற்றும் ஏனைய பொறுப்பு-க்கள் | 261,851,639.67 | 259,676,305.00 |
| | காப்பீட்டுக்கான ஏற்பாடு | 702,516.67 | 630,300.00 |
| | ஊழியர் நலன்புரி நிதியம் | 301,123.00 | 418,005.00 |
| | விபத்து விசாரணை நிதியத்திற்கான ஏற்பாடு | 250,000,000.00 | 250,000,000.00 |
| | பெறப்பட்ட வைப்புக்கள் | 10,848,000.00 | 8,628,000.00 |
| 18 | இளைப்பாற்று நன்மைகளுக்கான கடப்பா-டுகள் | 11,289,227.00 | 10,270,927.50 |
| | 01.01.2013 இல் மீதி | 10,270,927.50 | 9,239,870.00 |
| | வருடத்திற்கான ஏற்பாடுகள் | 1,138,179.50 | 1,767,642.50 |
| | குறித்த வருடத்திற் செலுத்தப்பட்டது | (119,880.00) | (736,585.00) |
| 19 | வியாபார சென்மதிகள் | 616,588,928.22 | 282,440,828.52 |
| | சோதனை கட்டணங்கள் மற்றும் செயற்பா-டுகள் மீதான வைப்புக்கள் | 7,791,581.00 | 8,418,271.41 |
| | விமான நிலையம் மற்றும் விமானப் பே-ாக்குவரத்து அதிகாரசபை மற்றும் அரச பொதுத் தினசேரி | 578,204,706.53 | 270,521,941.16 |
| | ஏனைய சென்மதிகள் | 30,592,640.69 | 3,932,100.00 |
| 20 | ஏனைய சென்மதிகள் | 17,531,743.11 | 43,274,312.31 |
| | சென்மதிச் செலவுகள் | | |
| | -ஊழியர் செலவுகள் | 4,410,728.15 | 4,070,880.75 |
| | -பொதுச் செலவுகள் | 13,121,014.96 | 39,203,431.56 |
| 21 | வருமானவரிப் பொறுப்புக்கள் | 123,355,948.10 | 90,600,765.82 |
| | 01.01.2013 இல் மீதி | 90,600,765.82 | 106,159,937.71 |
| | வருடத்திற்கான ஏற்பாடுகள் | 228,263,294.22 | 95,890,893.56 |
| | வருடத்தில் செலுத்தப்பட்டவைகள் | (195,508,111.94) | (111,450,065.45) |
| | | | |
| | 31.12.2013 இல் மீதி | 123,355,948.10 | 90,600,765.82 |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. } ரீசீ/பீ/சீஏஏஎஸ்எல்/எவ்ஏ/2013   ඔබේ අංකය / உமது இல. / Your No. }   දිනය / திகதி / Date } 2015 மார்ச் 31

தலைவர்,
இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகாரசபை

**இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகாரசபையின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகாரசபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய வெளிப்படுத்தல் தகல்வல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2002 இன் 34 ஆம் இலக்க இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 14(4) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் ஒரு விரிவான அறிக்கை அதிகாரசபையின் தலைவருக்கு 2015 பெப்ரவரி 11 ஆந் திகதி வழங்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34   +94-11-2887223   oaggov@sltnet.lk   www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். உயர் கணக்காய்வு நிறுவனத்தின் சர்வதேச கணக்காய்வு நியமங்களைப் (ISSAI 1000 – 1810) பின்பற்றி இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை விமான சேவைகள் அதிகாரசபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

மீளாய்வாண்டில் ரூபா 28,280,000 பெறுமதியான மோட்டார் வாகனங்கள் கொள்வனவு செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், அது சம்பந்தமாக எவ்விதக் கடப்பாட்டினையும் ஏற்படுத்திக்கொள்ளும் விதத்தில் கொடுக்கல்வாங்கல்கள் இடம்பெற்றிராதிருக்கையில் அந்த மோட்டார் வாகனங்களின் பெறுமதி வாகனங்களின் வழிச்சரக்காகவும் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் பொறுப்பாகவும் காண்பிக்கப்பட்டிருந்தன.

#### 2.2.2 கணக்காய்விற்கான சான்றின்மை

பின்வரும் ஒவ்வொரு விடயங்களிற்கு எதிரேயும் காட்டப்பட்டுள்ள சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை காரணமாக அவற்றை கணக்காய்வில் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

| விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) வாகன திருத்தம் | 1,042,108 | சிட்டைகளின் மூலப் பிரதிகள், மோட்டார் தொழில்நுட்ப உத்தியோகத்தரின் உறுதிப்படுத்தும் அறிக்கைகள் மற்றும் காசுக் கொடுப்பனவுகளை உறுதிப் படுத்துகின்ற பற்றுச்சீட்டுக்களின் மூலப் பிரதிகள் |
| (ஆ) மத்தளைக்குச் செல்வதற்காக பாடசாலைப் பிள்ளைகளை போக்குவரத்துச் செய்தல் செலவினம் | 360,000 | சுற்றுலாவில் பங்குபற்றிய பாடசாலை களின் விபரங்கள், குறித்த பாடசாலை அதிபர்களின் உறுதிப்படுத்தல் கடிதம், பிள்ளைகளின் எண்ணிக்கை, |

| | | |
|---|---|---|
| | | போக்குவரத்தில் ஈடுபட்ட பேருந்துகளின் இலக்கங்கள் |
| (இ) புத்தளம் மற்றும் சிலாபம் பிரதேசங்களில் பொதுக் கூட்டங்களிற்காக போக்குவரத்துச் செய்தல் மற்றும் அவர்களிற்கான உணவுச் செலவினம் | 494,000 | பொதுமக்களை இலவசமாக போக்குவரத்துச் செய்தமைக்கான காரணம், இச் செலவினத்தை இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகாரசபையால் மேற்கொள்ள வேண்டியிருந்தமைக்கான காரணம், உணவுகளை இலவசமாக வழங்க வேண்டியிருந்தமைக்கான காரணம், போக்குவரத்தில் ஈடுபட்ட பேருந்துகளின் இலக்கங்கள் மற்றும் போக்குவரத்துச் செய்யப்பட்ட ஆட்களின் எண்ணிக்கை |
| (ஈ) விமான தளங்கள் எண்ணக்கரு தொடர்பில் பட்டதாரிகளை அறிவுறுத்தும் விரிவுரை | 337,500 | பங்குபற்றிய பட்டதாரிகளின் பெயர் பட்டியல், அவர்கள் எவ்வகையான பட்டங்களை பெற்றுள்ளனர் என்பது, அவர்களின் பல்கலைக்கழகங்கள், அவர்களது தேசிய அடையாள அட்டை இலக்கங்கள், சொந்த முகவரிகள் போன்ற விபரங்கள் |

## 2.3 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களிற்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் | |
| (i) 10(5) ஆம் பிரிவு | பகிர்வின் பின்னர் எஞ்சுகின்ற வருமான மிகையினை திரட்டிய நிதியத்திற்கு செலவு வைக்க வேண்டிய போதிலும், 2003 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரை திரண்ட இலாபம் உரிய விதத்தில் திரட்டிய நிதியத்திற்கு செலவு வைக்கப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் பகிர்வின் பின்னரான ரூபா 585,512,555 இலாபத்தை திரட்டிய |

| | | |
|---|---|---|
| | | நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. |
| | (ii) 11 ஆம் பிரிவு | திறைசேரியின் முன் அங்கீகாரமோ அல்லது பிந்திய அங்கீகாரமோ இன்றி மீளாய்வாண்டில் 19 சந்தர்ப்பங்களில் ரூபா 801,046,519 மொத்தமான தொகை முதலீடு செய்யப்பட்டிருந்தது. |
| (ஆ) | 1992 ஆகஸ்ட் 19 ஆந் திகதிய 26/92 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | உத்தியோகபூர்வ வாகனங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து அரசாங்க வாகனங்களிலும் அரசாங்க இலச்சினையுடன் நிறுவனத்தின் பெயர் பொறிக்கப்பட வேண்டிய போதிலும், 04 வாகனங்களில் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | அரசாங்க கொள்வனவு வழகாட்டல்கள் கோவை 2.14.1 ஆம் பிரிவு | அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்களின் படி ரூபா 50 மில்லியனுக்கு மேற்பட்ட கொடுக்கல் வாங்கல்களிற்காக அமைச்சுக் கொள்வனவுச் சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும், அதிகாரசபைக்காக ரூபா 106,021,080 கட்டிடமொன்றை வாடகைக்கு எடுக்கையில் அதன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | அரசாங்க முயற்சிகள் சுற்றறிக்கை | |
| | (i) 2006 ஒக்தோபர் 09 ஆந் திகதிய பீஈடீ 39 ஆம் இலக்க சுற்றறிக்கை | (i) அதிகாரசபையின் நான்கு சிரேஷ்ட உத்தியோகத்தர்களிற்கு சுற்றறிக்கை எல்லையினை மீறி ரூபா 1,681,798 இற்கு மேலதிகமாக எரிபொருள் வழங்கப்பட்டிருந்தது. |
| | | (ii) சுற்றறிக்கைக்கு முரணாக இணைப்புச் செய்யப்பட்ட உத்தியோகபூர்வ வாகனத்திற்கு மேலதிகமாக பணிப்பாளரின் தனிப்பட்ட நடவடிக்கைகளிற்காக வேறொரு வாகனத்திற்கு மீளாய்வாண்டில் எரிபொருளிற்காக ரூபா 685,315 செலவிடப்பட்டிருந்தது. |

Auditor General's Department

| | |
|---|---|
| (ii) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 9.12 ஆம் பந்தி | சுற்றறிக்கை ஏற்பாடுகளிற்கு முரணாக அதிகாரசபையின் ஊழியர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களிலுள்ள சகல உறுப்பினர்களிற்குமாக வைத்தியசாலை மற்றும் சத்திரசிகிச்சைகளிற்காக முழுமையான காப்புறுதி ஒப்பந்தத்தினை பெற்றுக் கொள்வதற்காக மீளாய்வாண்டில் ரூபா 7,538,843 உதவுதொகை செலவிடப்பட்டிருந்தது. இக் காப்புறுதி ஒப்பந்தத்திற்கான வருடாந்த காப்புறுதி தவணைப்பணம் ரூபா 38,400 முதல் ரூபா 60,000 வரையான வீச்சில் காணப்பட்டது. |
| (உ) 2000 இன் 38 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்தின் 111 (அ) பிரிவு மற்றும் 2011 இன் பாதீட்டு அறிக்கை | சிவில் விமான சேவைகள் அதிகாரசபையின் உத்தியோகத்தர்களினால் அவர்களது சம்பளம் மற்றும் ஏனைய உழைப்புக்களிற்காக, உழைக்கும் போதே செலுத்தும் வரியை தமது தனிப்பட்ட சம்பளத்திலிருந்து செலுத்த வேண்டிய போதிலும், 2007 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரையான 06 ஆண்டுகளிற்குரிய ரூபா 16,995,279 மொத்தமான உழைக்கும் போதே செலுத்தும் வரி அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஊ) 2008 யூன் 26 ஆந் திகதிய 14/2008 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | (i) சுற்றறிக்கைக்கு முரணாக உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு உரித்தற்ற 11 சிரேஷ்ட நிறைவேற்று உத்தியோகத்தர்களிற்கு மாதமொன்றிற்கு ரூபா 30,000 வீதமும் 41 நிறைவேற்று உத்தியோகத்தர்களிற்கு மாதமொன்றிற்கு ரூபா 20,000 வீதமும் அலுவலக உதவியாளர் உள்ளிட்ட ஏனைய 85 உத்தியோகத்தர்களிற்கு மாதமொன்றிற்கு ரூபா 13,250 வீதமும் போக்குவரத்துப் படி செலுத்தப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டிலும் மீளாய்வாண்டிலும் சுற்றக்கைக்கு முரணாக செலுத்தப்பட்டிருந்த மொத்த போக்குவரத்துப் படிகள் முறையே ரூபா 28,348,259 மற்றும் |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
Auditor General's Department

ரூபா 27,794,875 ஆக காணப்பட்டன.

(ii) சுற்றறிக்கை ஏற்பாடுகளிற்கு முரணாக உத்தியோகபூர்வ வாகனங்களைப் பெற்றுக்கொள்வதற்கு உரித்தற்ற இரண்டு உத்தியோகத்தர்களிற்கு மாதமொன்றிற்கு ரூபா 22,680 வீதம் ரூபா 543,994 தொகையும் மேலும் 8 உத்தியோகத்தர்களிற்கு மாதமொன்றிற்கு ரூபா 19,440 வீதம் ரூபா 1,787,500 தொகையும் இன்னுமோர் உத்தியோகத்தருக்கு ரூபா 14,440 வீதம் ரூபா 138,700 தொகையுமாக ரூபா 2,470,194 மொத்தமான தொகை மீளாய்வாண்டில் எரிபொருள் படியாக செலுத்தப்பட்டிருந்தது.

| | | |
|---|---|---|
| (எ) | 2012 திசெம்பர் 24 ஆந் திகதிய 49 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் நியதிச்சட்ட சபைகளில் ரூபா 10,000 உச்ச தொகைக்கு சமனான உபகாரப் படியொன்று செலுத்தப்பட முடியுமான போதிலும், அதனைக் கருத்திற்கொள்ளாது ஒவ்வொரு உத்தியோகத்தரினதும் மாதாந்தச் சம்பளத்திற்குச் சமனான தொகை மீளாய்வாண்டில் உபகாரப் படியாக செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறு செலுத்தப்பட்டிருந்த மொத்த உபகாரப் படி ரூபா 3,405,591 ஆகும். |
| (ஏ) | 1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் சுற்றறிக்கை | (i) சுற்றறிக்கைக்கு முரணாகவும் முறையான அங்கீகாரமின்றியும் 06 உத்தியோகத்தர்களிற்கு தொழில்சார் படியாக ரூபா 25,000 வீதமும் ஒரு உத்தியோகத்தருக்கு ரூபா 10,000 வீதமும் விசேட படியொன்று மாதந்தோரும் வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் அவ்வாறு செலுத்தப்பட்டிருந்த மொத்த படி ரூபா 1,895,000 ஆகும்.<br><br>(ii) பணிப்பாளர் நாயகம் பதவியில் பதிற்கடமைக்காக சிரேஷ்ட பணிப்பாளருக்கு மாதத்திற்கு ரூபா 17,625 வீதம் பதிற்கடமை |

படி செலுத்தப்பட்டிருந்ததுடன் 2010 மே மாதம் முதல் அவரை பதிற்கடமை பதவியிலிருந்து நீக்கிய பின்னரும் அத்திகதியிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 742,250 தொகையான பதிற்கடமைப் படி செலுத்தப்பட்டிருந்தது.

| | | |
|---|---|---|
| (ஐ) | 2010 செப்தெம்பர் 01 ஆந் திகதிய 446 ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கை | 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் இரண்டு உத்தியோகத்தர்களிற்காக ரூபா 14,000 முதல் ரூபா 60,000 வரையான மாதாந்த செல்லிடத் தொலைபேசி சிட்டைகள் அதிகாரசபையால் செலுத்தப்பட்டிருந்தது. இவ்வாறு வரம்பினை மீறிச் செலவிடப்பட்டிருந்த முறையே ரூபா 150,149 மற்றும் ரூபா 6,846 தொகைகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (ஒ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | கணனிகள் மற்றும் துணைப்பாகங்களிற்காக தனியானதோர் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணிவரப்பட வேண்டிய போதிலும், அதன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஓ) | 2007 பெப்ரவரி 28 ஆந் திகதிய சீ.எஸ்.ஏ/பீ.1/40 ஆம் இலக்க சனாதிபதியின் சுற்றறிக்கை | சுற்றறிக்கைக்கு முரணாக பின்வரும் செலவினங்கள் அதிகாரசபை நிதியித்திலிருந்து மேற்கொள்ளப்பட்டிருந்தன.<br>(i) சிவில் விமான சேவைகள் அதிகாரசபையின் உத்தியோகத்தர்கள் மத்தள விமான நிலைய திறப்பு விழாவில் கலந்துகொள்வதற்காக சொகுசு ஹோட்டல்களில் தங்குமிட வசதிகளை பெற்றுக்கொண்டமைக்காகவும் உணவுகளிற்காகவும் ரூபா 768,273 செலவிடப்பட்டிருந்தமை.<br>(ii) அதிகாரசபையின் உத்தியோகத்தர்கள் அலுவலகக் கடமைகளிற்காகவும் பல்வேறு கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகளி |

ற்காகவும் சொகுசு ஹோட்டல்களில் தங்குமிட வசதிகளை பெற்றுக்கொண்டமை மற்றும் உணவுகளிற்காக ரூபா 2,747,241 மொத்தமான தொகை செலவிடப்பட்டிருந்தமை.

### 2.4 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்கள்

திறைசேரியின் அங்கீகாரமின்றி அதிகாரசபையின் சாரதிகளினதும் அலுவலக உதவியாளர்களினதும் சம்பளங்கள் ஏறத்தாழ 5 சதவீதத்திற்கு கிட்டிய தொகையினால் அதிகரிக்கும் விதத்தில் ஒரே தடவையில் பல சம்பள ஏற்றங்கள் வழங்கப்பட்டிருந்தன.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டிற்கான அதிகாரசபையின் தொழிற்பாடுகளிலிருந்தான நிதி விளைவுகள் ரூபா 813,671,859 மிகையொன்றானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 618,187,444 ஆனமையால் நிதி விளைவுகளில் ரூபா 195,484,415 சாதகமான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. செயற்பாட்டு வருமானம் மற்றும் சேவைகளை வழங்கியமையால் கிடைத்த வருமானம் அதிகரித்திருந்தமை மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ஏற்பட்ட அதிகரிப்புக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் விமானப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்தமையால் வெளிநாட்டு விற்பனை மிகைஅறவீட்டு வருமானம் 19.18 சதவீதத்தால் அதிகரித்தும் பதவியணியினர் செலவினம், வெளிநாட்டு கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகளிற்கான செலவினம் அதிகரித்தும் இருந்தமையால் மீளாய்வாண்டிற்கான செலவின அதிகரிப்பு 1.55 சதவீதமாக காணப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி கடந்த இரண்டு ஆண்டுகளினதும் மீளாய்வாண்டினதும் அதிகாரசபையின் பிரதான

செயற்பாடுகளின் செயன்முன்னேற்றம் தொடர்பான பகுப்பாய்வு கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| விடயம் | விபரம் | 2013 | 2012 | 2011 |
|---|---|---|---|---|
| (i) விமான போக்குவரத்து | • வாடகைப் பயணங்கள் | 2,556 | 2,118 | 1,782 |
| | • நிரந்தர பயணங்கள் | 48,413 | 46,616 | 41,891 |
| (ii) பூரணப்படுத்தப்பட்ட பரிசோதனைகள் (எண்ணிக்கை) | • விமான திருத்தச் சேவைகள் | 01 | 01 | 01 |
| (iii) மேற்கொள்ளப்பட்ட திறந்த/பாதுகாப்பான பயிர் கண்காணிப்பு நடவடிக்கைகள் (எண்ணிக்கை) | • ரூமப் பரிசோதனை எண்ணிக்கை (விமான தகைமை) | -- | -- | 65 |
| | • மிதக்கும் இறங்குதுறை | 39 | 19 | 20 |
| | • அபாயகரமான பொருட்கள் | 09 | 18 | 35 |
| | • பறக்கும் பாடசாலைகள் பரிசோதனை (தனிப்பட்ட அனுமதிப்பத்திரம்) | 08 | 14 | 13 |
| | • நிலைய வசதிகள் செயற்பாடுகள் | 00 | 02 | 04 |

- ஆண்டுக்காண்டு தொடர்ச்சியாக இலங்கைக்கு வருகை தருகின்ற விமானங்களும் விமானச் செயற்பாடுகளும் அதிகரித்துள்ள போதிலும், சிவில் விமான சேவைகள் கண்காணிப்புக்குரிய பரிசோதனைகள் போதியளவில் அதிகரிக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

- விமான செயற்பாட்டு நடவடிக்கைகளில் இடம்பெறுகின்ற விமான விபத்துச் சம்பவங்களை அறிவித்தல், விசாரணை செய்தல் மற்றும் அச் சம்பவங்களைக்

குறைத்துக் கொள்வதற்காக அதிகாரசபை மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பான விபரங்கள் கணக்காய்வில் கோரப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பான எவ்வித விபரங்களும் கணக்காய்விற்கு வழங்கப்பட்டிருக்காமையால் அதிகாரசபையின் செயற்பாடுகளின் செயலாற்றல் தொடர்பில் விரிவான பகுப்பாய்வொன்றை மேற்கொள்ள முடியவில்லை.

(ஆ) சிவில் விமான சேவைகள் அதிகாரசபையால் நிறைவேற்றப்படுகின்ற சேவைகளிற்கான கட்டணங்கள் திருத்தப்படாமை

அதிகாரசபையால் விமான ஓட்டுனர் அனுமதிப்பத்திரங்களை வழங்குதல், தொலைத் தொடர்பு சமிக்கை கோபுரங்களுக்காக அங்கீகாரம் வழங்குதல், உயரமான கட்டிடங்களிற்காக அங்கீகாரம் வழங்குதல் போன்ற பல்வேறு சேவைகளையும் வழங்கியமைக்காக அறவிடப்படுகின்ற கட்டணங்கள் 2006 ஆம் ஆண்டில் இறுதியாக திருத்தப்பட்டிருந்ததுடன் கடந்த 07 ஆண்டுகளின் போது எவ்விதக் கட்டணத் திருத்தங்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

கட்டணங்கள் மற்றும் அனுமதிப்பத்திரங்களை வழங்குதலும் புதுப்பித்தலும் தொடர்பான விபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

(i) கட்டணங்களை அறிவிடுதல்

| அனுமதிப்பத்திர வகை | ஆரம்ப அனுமதிப்பத்திர கட்டணம் | மதிப்பீட்டுக் கட்டணம் | புதுப்பித்தல் | புதுப்பித்தலை மதிப்பிடுதல் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| விமானஓட்டி – மாணவர் | 690 | 500 | 345 | 250 |
| விமானஓட்டி – தனியார் | 1,380 | 500 | 690 | 250 |
| விமானஓட்டி – வர்த்தகம் | 4,140 | 1,500 | 1,035 | 750 |
| விமானஓட்டி – விமானப் போக்குவரத்து | 6,900 | 2,000 | 1,725 | 1,000 |
| தோலைத்தொடர்பு கட்டுப்பாடு | 1,380 | 500 | 345 | 750 |
| விமானச் செயற்பாட்டு பொறியியலாளர் | 2,070 | 1,500 | -- | -- |

 විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

மேற்படி சேவைகளிற்காக அறவிடப்படுகின்ற கட்டணம்; அதிகாரசபையால் செலவிடப்படுகின்ற கிரயத்தையேனும் சமாளிப்பதற்கு போதுமானதாக இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ii) அனுமதிப்பத்திரங்களை வழங்குதலும் புதுப்பித்தலும்

| அனுமதிப்பத்திர வகை | 2013 | 2012 | 2011 | 2010 |
|---|---|---|---|---|
| விமானஓட்டி – மாணவர் | 231 | 155 | 115 | 142 |
| விமானஓட்டி – தனியார் | 110 | 94 | 98 | 76 |
| விமானஓட்டி – வர்த்தகம் | 339 | 264 | 317 | 300 |
| விமானஓட்டி – விமானப் போக்குவரத்து | 498 | 414 | 382 | 359 |
| தொலைத்தொடர்பு கட்டுப்பாடு | 26 | 44 | 81 | 91 |
| விமானச் செயற்பாட்டு பொறியியலாளர் | 05 | 113 | 173 | 283 |

**(இ) விமான சம்பவங்கள்**

இலங்கை சிவில் விமான சேவைகளை கண்காணிப்பதற்காக தாபிக்கப்பட்டுள்ள சிவில் விமான சேவைகள் அதிகாரசபை தனது கண்காணிப்பு நடவடிக்கைகளை வினைத்திறனாகவும் சர்வதேச நியமங்களிற்கு அமைவாகவும் மேற்கொள்கின்றதா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக அதிகாரசபைக்கு அறிவிக்கப்பட்ட விமான சம்பவங்கள் மற்றும் அந்த சம்பவங்களை விசாரணை செய்தல், அதிகாரசபையால் பராமரிக்கப்பட்டிருந்த கோவைகள் மற்றும் அதிகாரசபை அவ்வப்போது அறிவித்திருந்த வழிகாட்டல்கள் மற்றும் பணிப்புரைகள் தொடர்பான தகவல்களை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பான எவ்வித தகவல்களும் சமர்ப்பிக்கப்பட்டிருக்காமை காரணமாக அதிகாரசபையின் செயலாற்றல் தொடர்பில் பகுப்பாய்வொன்றை மேற்கொள்ள முடியவில்லை.

**4.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையின் தலைமை அலுவலகத்திற்காக வாடகைக்குப் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த கட்டிடத்தில் புதிய நிர்மாணங்களையும் மேம்படுத்தல்களையும் கட்டிட உரிமையாளரைக் கொண்டு நிறைவேற்றிக் கொள்ளாது அதற்குப் பதிலாக அதிகாரசபையால் ரூபா 28,214,123 செலவிடப்பட்டிருந்தது. அதில் ரூபா 3.5 மில்லியன் தொகை வாடகைக் கட்டிடத்தின் வாகனங்களை நிறுத்தி வைக்கும் வளவில் நகர சபையின் அங்கீகாரமின்றி புதிதாக கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்டிருந்த போதிலும், அச் செலவினத்தை குறித்த கட்டிடத்தின் வாடகைக்கு எதிராக எதிரீடு செய்வதற்கேனும் கருத்திற் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பெறுமதிசேர் வரியை சரியான முறையில் கணிப்பிட்டிராமை காரணமாக கடந்த இரண்டு ஆண்டுகளிற்கும் மேலாக மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 32,688,455 வரித் தொகையை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நியதிச்சட்ட சட்ட விதிகளை மீறியிருந்தமை அநேக சந்தர்ப்பங்களில் வெளிப்பட்டிருந்தமையால், அவை முன்னைய கணக்காய்வு அறிக்கைகளின் மூலம் சுட்டிக் காட்டப்பட்டிருந்ததுடன், அரசாங்க கணக்குகள் குழுவினாலும் இது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டிருந்தது. இப் பலவீனத்தை தவிர்ப்பதற்காக முகாமைத்துவம் போதிய கவனம் செலுத்தியிருக்காமை அவதானிக்கப்பட்டது.

**4.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல்வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையின் பதவியணி உத்தியோகத்தர்களிற்கான சந்திப்பு அட்டைகளை (visiting cards) அச்சிடுதல் மற்றும் அதிகாரசபை உத்தியோகத்தர்களது குடும்பத்தினரின் மரணச் சடங்குகளிற்கான மலர் வளையங்களிற்காகவும் ரூபா 94,652 தொகை அதிகாரசபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) சிவில் விமான சேவைகள் பிரதிப் பணிப்பாளர் (ஆகாய விமானங்கள்) மற்றும் பிரதிப் பணிப்பாளர் (விமான ஓட்டுனர்) போன்ற பதவிகளிற்கான ஆட்சேர்ப்புத்

திட்டத்தின் (Scheme of Recruitment) படி விமானப் பயண கட்டுப்பாட்டு அனுமதிப்பத்திரம் (Air Traffic Controller License) கட்டாயமாக வைத்திருக்கப்பட வேண்டிய போதிலும், அத் தகைமைகளின் அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட மூன்று உத்தியோகத்தர்களிற்கு மாதமொன்றுக்கு ரூபா 25,000 வீதம் மீளாய்வாண்டில் ரூபா 1,200,000 செலுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், தொழில்சார் படிகள் செலுத்தப்படுகின்ற அந்த உத்தியோகத்தர்கள் விமானப் பயண கட்டுப்பாட்டு அனுமதிப்பத்திரம் (Air Traffic Controller License) இனை பல ஆண்டுகளாக புதுப்பித்திருக்கவில்லை.

(இ) அதிகாரசபையின் பணிப்பாளர் சபையின் 5 உறுப்பினர்கள் அடங்கலாக ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டிருந்த 08 உத்தியோகத்தர்களினதும் அவர்களது குடும்பங்களின் சகல உறுப்பினர்களினதும் வைத்தியசாலை மற்றும் சத்திரசிகிச்சைக்காக அதிகாரசபையால் ரூபா 525,200 செலவிடப்பட்டிருந்தது.

(ஈ) அமைச்சரின் பதவியணிக்கு சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்த உத்தியோகத்தர் ஒருவர் அங்கு முழுநேரச் சேவையில் இருக்கையில் அவ் உத்தியோகத்தருக்கு அதிகாரசபையின் நிரந்தர பதவிக்கு நியமனமொன்று வழங்கப்பட்டிருந்ததுடன் ஒரு நாளேனும் அதிகாரசபைக்கு சேவைக்குச் சமூகமளிக்காதிருந்த போதிலும், சம்பளம், எரிபொருள், மருத்துவ காப்புறுதி மற்றும் வெளிநாட்டுப் பயணங்கள் என்பவற்றிற்காக ரூபா 3,051,897 செலவிடப்பட்டிருந்தது.

(உ) விமான சேவைகள் கண்காணித்தல் நடவடிக்கைகளிற்காக மாத்திரம் தாபிக்கப்பட்டுள்ள அதிகாரசபைக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாது ரூபா 80,000 மாதாந்த சம்பளத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் விற்பனை மேம்படுத்தல் ஆலோசகர் ஒருவர் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தார். அவ் உத்தியோகத்தர் ஒரு நாளேனும் அதிகாரசபைக்கு சேவைக்குச் சமூகமளிக்காதிருந்த போதிலும், சம்பளம், வெளிநாட்டுப் பணயங்கள் மற்றும் ஏனைய படிகளிற்காக மீளாய்வாண்டில் ரூபா 1,328,294 செலுத்தப்பட்டிருந்தது.

(ஊ) 2011 ஆம் ஆண்டில் இலங்கை சிவில் விமான சேவைக்கு நூறு ஆண்டுகள் பூர்த்தியை முன்னிட்டு நடாத்தப்படுகின்ற விழாவை அந்த ஆண்டில் நடத்தாது அதனை வரிசை அமைச்சினதும் ஏனைய நிறுவனங்களினதும் ஒத்துழைப்பின்றி 2012 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டமைக்காக ரூபா 14,000,000 செலவிடப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டில் ரூபா 1,320,000 செலவிடப்பட்டுள்ளமை சர்ச்சைக்குரியதாகும்.

(எ) அதிகாரசபையின் நிதிப்பிரமாணங்கள் கையேட்டை தயாரிப்பதற்காக வெளிவாரி நபரொருவரின் உதவியைப் பெற்று அதற்காக ரூபா 330,000 இனைச் செலுத்துவதற்கு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் அதற்காக செலுத்தப்பட்டிருந்த ரூபா 66,000 ஆரம்ப தொகை மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

## 4.4 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபைக்காக வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்டிருந்த கட்டிடத்தின் வாடகை உடன்படிக்கையின் படி வருடாந்தம் அதிகரிக்கின்ற இறைவரிக் கட்டணம் அதிகாரசபையால் செலுத்தப்படுதல் வேண்டுமென்ற பாதகமான நிபந்தனை உள்ளடக்கப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டில் ரூபா 285,390 மேலதிக இறைவரிக் கட்டணம் அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) சிவில் விமான சேவைகள் அதிகாரசபையால் புத்தாக்கம் மற்றும் புத்தாக்கச் சிந்தனை எனும் எண்ணக்கருக்களின் கீழ் மீளாய்வாண்டில் திறந்தவெளி செயலமர்வொன்று பொலன்னறுவை கிரிதலே பிரதேசத்திலுள்ள சொகுசு ஹோட்டலொன்றில் நடாத்தப்பட்டிருந்ததுடன் இதற்கான தங்குமிடக் கட்டணம், உணவு குடிபானச் செலவினம் மற்றும் போக்குவரத்துச் செலவினமாக ரூபா 1,801,542 செலவிடப்பட்டிருந்தது. மேற்படி செயலமர்வு 6 மணித்தியாலம் கொண்ட சொற்ப காலத்திற்காக நடாத்தப்பட்டிருந்ததுடன் கொழும்பு நகரத்திற்கு வெளியிலுள்ள பிரதேசத்தில் நடாத்தப்பட்டிருந்தது. அத்துடன், 2007 பெப்ரவரி 28 ஆந் திகதிய சீ.எஸ்.ஏ.பீ1/40 ஆம் இலக்க சனாதிபதியினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைக்கு முரணாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 4.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2010 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 145,000 பெறுமதியான "மல்ரி மீடியா புரஜெக்டர்" காணமற்சென்று மீளாய்வாண்டிற்கு ஒருவருடம் கடந்திருந்ததுடன், அதன் மூலம் ஏற்பட்டிருந்த நட்டத்தை

Auditor General's Department

பொறுப்புடைய உத்தியோகத்தரிடமிருந்து விரைவாக அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2009/2010 ஆம் ஆண்டுகளில் வருமான வரியாக ரூபா 6,110,895 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 4.6 பயனற்ற செலவினம்

தாய்லாந்தின் பாங்கொக் நகரத்தில் இடம்பெற்ற ஆசிய பசுபிக் பிராந்திய 50 ஆவது சிவில் விமான சேவைகள் பணிப்பாளர் நாயகங்களின் மாநாட்டில் பங்குபற்றிய 09 உத்தியோகத்தர்களிற்காக ரூபா 2,840,572 சிவில் விமான சேவைகள் அதிகாரசபையால் செலவிடப்பட்டிருந்தது.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நாட்டிற்கு அல்லது சிவில் விமான சேவைகள் அதிகாரசபைக்கு நலன்கள் எதனையும் வழங்க முடியாத விமான சேவையின் தொழில்நுட்ப நடவடிக்கைகள் சம்பந்தமான அறிவு அல்லது அது தொடர்பில் தொழில்சார் தகைமையற்ற மூன்று உத்தியோகத்தர்களின் பிரயாணத்திற்காக ரூபா 839,212 அதிகாரசபையால் செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) தகுதிகாண் காலத்திலிருந்த உத்தியோகத்தர் ஒருவர் அடங்கலாக பங்குபற்றியிருந்த மூன்று உத்தியோகத்தர்களும் தற்போது சிவில் விமான சேவைகள் அதிகாரசபையிலிருந்து விலகிச் சென்றிருந்ததுடன் அவர்களின் இணைந்த படிகள், விமான சீட்டுக்கள் மற்றும் அமைய படிகளிற்காக ரூபா 874,644 தொகையான பயனற்ற செலவினம் அதிகாரசபையால் செலவிட்டிருந்தது.

## 4.7 ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரசபையின் வளங்கள்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஎடீ/12 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் 3.8.9 ஆம் பந்திக்கு முரணாக அமைச்சின் பல்வேறு செலவினங்களிற்காகவும் ரூபா 1,774,879 அதிகாரசபையால் செலவிடப்பட்டிருந்ததுடன், அதிகாரசபைக்குச் சொந்தமான 05 வாகனங்களும் 07 உத்தியோகத்தர்களும் அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்தனர். மீளாய்வாண்டில் அந்த வாகனங்களிற்கான எரிபொருள் மற்றும் திருத்தச் செலவினத்திற்காக முறையே ரூபா 1,643,751 தொகையும் ரூபா 3,125,074 தொகையும் உத்தியோகத்தர்களின் சம்பளம் மற்றும் படிகளிற்காக ரூபா 2,828,670 தொகையும் அதிகாரசபையால் செலவிடப்பட்டிருந்தது.

**4.8 பதவியணியினர் நிர்வாகம்**

அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 166 ஆக காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் இறுதியில் 20 வெற்றிடங்கள் காணப்பட்டன. அதில் 19 வெற்றிடங்கள் நிறைவேற்றுத் தரத்திற்குரியதாகும்.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டின் மதிப்பிடப்பட்ட வருமானங்கள் மற்றும் செலவினங்களை உள்ளபடியான வருமானங்கள் மற்றும் செலவினங்களுடன் ஒப்பிடுகையில் 180 சதவீதம் முதல் 92.64 சதவீதம் வரையிலான வீச்சில் குறிப்பிடத்தக்களவு முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது முகாமைத்துவக் கட்டுப்பாட்டின் ஒரு தாக்கமான கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

**6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது அதிகாரசபையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமானச் சேகரிப்பு

(இ) விமான நிலைய சம்பவங்களை பரீட்சித்தல்

(ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(உ) செலவின முகாமைத்துவம்

(ஊ) ஒப்பந்த நிர்வாகம்

(எ) ஊழியர் கடன்கள்

ஒப்பம்: டபிள்யூ.பீ.சீ. விக்ரமரத்ன
பதில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கு சீ.ஏ.ஏ.எஸ்.எல் இனால் வழங்கப்பட்ட பதிலுரைகள

குசே /12 /4 2015.04.01

கணக்காய்வாளர்
கணக்காய்வாளர் திணைக்களம்
பத்தரமுல்ல

<u>இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் 2013 டிசம்பர் 31 முடிவடைந்த ஆண்டிற்கான நிதி வெளிப்பாடுகள் தொடர்பாக 1971 இலக்கம் 38 கொண்ட நிதிச் சட்டத்தின் 14(2)(சீ) வாசகத்திற்கமைய கணக்காய்வாளரது அறிக்கை</u>

இலக்கம் ரீ.சீ/பீ/சீ.ஏ.ஏ.எஸ்.எல்/எப்/ஏ 2013 மற்றும் 2015 மார்ச் மாதம் 31 ஆம் திகதிய தங்களது மேற்கூறப்பட்ட அறிக்கையில் குறிப்படப்பட்டுள்ள மேற்பார்வைகள் தொடர்பான கருத்துக்கள் மற்றும் தெளிவுபடுத்தல்களை இத்தால் சமர்ப்பிக்கிறேன்.

சர்வதேச சிவில் விமான சேவைகள் இணக்காப்பாட்டிற்கு கட்டுப்பட்ட இராட்சியம் என்ற வகையில் அவ் இணக்கப்பாடு மற்றும் அதனுடன் இணைந்த இணைப்பு 19 இல் குறிப்பிடப்பட்டுள்ள பத்தாயிரத்திற்கு (10,000) அன்மித்த சர்வதேச தரங்கள் மற்றும் பரிந்துரை செய்யப்பட்ட செயற்பாடுகளுக்கமைய செயற்படுவதற்கு இலங்கை அரசாங்கம் உடன்படிக்கை செய்துள்ளது. இதற்கமைய சிவில் விமான சேவைக்குரிய பணிகளை நாட்டில் அமுல்படுத்துவது தொடர்பிலாக மேற்பார்வை செய்யும் போது இலங்கை அரசாங்கத்தினால் காண்பிக்கப்படும் ஆர்வம், அர்பணிப்புக்கள் மற்றும் அவ்விடயம் தொடர்பில் பெற்றுள்ள முன்னேற்றங்களை மீளாய்விற்குட்படுத்துவதனை நோக்காகக் கொண்டு இப்பணிகளை அரசாங்கத்திற்காக மேற்கொள்ள கட்டுப்பட்டுள்ள இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபை, சர்வதேச சிவில் விமான சேவை அமைப்பினால் மேற்கொள்ளப்படும் கணக்காய்விற்கு தொடர்ந்தும் உட்படுகின்றது.

ஏதேனும் ஒரு தேசத்தில் சிவில் விமான சேவைப் பணிகளை பயன்மிக்கதாக மேற்பார்வை செய்வதற்காக அந்நாடு நிர்வாக மற்றும் நிதி ரீதியில் சுயாதீன மற்றும் நெகிழ்வுத்தன்மை கொண்ட சிவில் விமான சேவை அதிகார சபை இருக்கும் தேவை சர்வதேச சிவில் விமான சேவை அமைப்பினால் வலுவான முறையில் சுட்டிக்காட்டப்படும் விடயமாகும்.

1997 ஆம் ஆண்டில் சர்வதேச சிவில் விமான சேவை அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகளுக்கு பின்னர் இடம் பெற்ற பரிந்துரைகளுக்கிணங்க 2002 ஆம் ஆண்டு வரை திணைக்களமாக காணப்பட்ட அரச சிவில் விமான சேவை மேற்பார்வைச் செயற்பாடுகள், நிர்வாகம் மற்றும் நிதி அடிப்படையில் சுயாதீனமாகச் செயற்படக் கூடியவாறு தேவையான சட்ட ஏற்பாடுகள் கொண்டதாக இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையாக மாற்றியமைக்கப்பட்டது இத்தேவையினை நிறைவேற்றும் அடிப்படையிலாகும்.

சர்வதேச சிவில் விமான சேவைகள் அமைப்பினால் நடாத்தப்படும் மேற்கூறப்பட்ட கணக்காய்வுகளின் போது சுயாதீன அடிப்படையிலான செயற்பாடுகள் தீயாதீன மற்றும் வினைத்திறனை முன்னெடுக்க இவ்அதிகார சபைக்குக் காணப்படும் இயலுமை மற்றும் அதற்குரிய தடைகளும் தீவிரமாக விமர்சனத்திற்கு உட்படுகின்றன. இதன் போது அதிகார சபையின் வருடாந்த அறிக்கை, வெளிக்கணக்காய்வு உட்பட சகல சர்வதேச ஆவணங்களும் அவர்களின் கவனத்திற்குட்படுகின்றன.

எனவே இவ்வதிகார சபையுடன் தொடர்புபட்ட தங்களது கணக்காய்வு அறிக்கையினை தயாரிக்கும் போது இவ்வாதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்டுள்ள சர்வதேச பொறுப்புக்கள் மற்றும் அப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள தற்போதைய சட்ட ரீதியிலான கோட்பாடுகள் மீது மிகுந்த விரிவான மற்றும் நடுநிலையாக கவனம்

செலுத்துமாறும் ஏதேனும் ஒரு காரணத்திற்கமைய சர்வதேச சமூகத்தின் முன்னால் நாட்டின் சிவில் விமான சேவையினை தரக்குறைவாக மதிப்பீடு செய்யப்படும் பட்சத்தில் அதன் மூலம் முழு நாட்டிற்கும் ஏற்படக்கூடிய பாதக விளைவுகள் மீது தங்களது கவனத்தைச் செலுத்துமாறு தயவாய்க் கேட்கிறேன்.

## 2.2 நிதி வெளிப்பாடுகள் தொடர்பாக கருத்துரைப்புக்கள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(ஆ) மேற்கூறப்பட்ட வாகனங்களை கொள்வனவு செய்வதற்காக 2015 வரவு செலவில் ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதற்காக திறைசேரி அங்கீகாரமும் கிடைக்கப்பெற்றிருந்தது. இருப்பினும் 2013.06.04 ஆம் திகதிய வரவு செலவு சுற்றறிக்கை இலக்கம் 159 மூலம் வாகனக் கொள்வனவு இடைநிறுத்தப்பட்டதுடன் வாகனங்களை கொள்வனவு செய்வதற்கு மீண்டும் திறைசேரியின் அங்கீகாரம் வழங்கப்பட்டது 2013.12.12 ஆம் திகதியாகும்.

பெறுகைக் கோவைக்கமைய கொள்வனவுச் செயற்பாட்டு முறைகள் பூரணப்படுத்தப்பட்டு கொள்வனவிற்கான கட்டளைகள் உரிய விநியோகஸ்தர்களுக்கு 2013 ஆம் ஆண்டு டிசம்பர் 18 மற்றும் 31 ஆம் திகதிகளில் அனுமதிக்கப்பட்டன.

கொள்வனவுக் கட்டளைகள் வெளியிடப்படுவதனைத் தொடர்ந்து சிவல் விமான சேவைகள் அதிகார சபையின் விநியோகஸ்தரான அந்நிறுவனத்துடன் பொறுப்பிற்கு உட்படுவதினால் இவ்வாறு நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களாக 2013 ஆம் ஆண்டின் கணக்குகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 2.2.2 கணக்காய்விற்காக சாட்சிகள் இன்மை

(அ) பற்றுச் சீட்டுக்களின் முதல் பிரதி வட் கோரிக்கைக்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் சமர்ப்பிப்பதற்காக தனியான கோவையில் கோவைப்படுத்தப் பட்டுள்ளதுடன் அதன் முதல் பிரதியினைப் பரிசோதிப்பதற்காக வினவப்பட்டிருப்பின் வழங்க முடிந்திருக்கும்.

(ஆ)/(இ)/(ஈ)

- இத்தகவல்களை வழங்குமாறு உரிய தரப்பினர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அவை கிடைக்கப்பெற்றவுடன் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## 2.3 சட்டம், ஒழுங்குக் கோவைகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கு ஒவ்வாமை

(அ) (ை)/(ைை) இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் பணிகள் மற்றும் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காகத் தேவையான நிதி ஒதுக்கீடு, தேசிய வருடாந்த வரவு செலவுத் திட்ட ஆவணத்தின் மூலம ஏற்பாடுகள் மேற்கொள்வப்படுவதில்லை. இதற்காக தேவையான நிதி அதிகார சபையினால் சுய செயற்பாடுகள் ஊடாக வகுத்துக் கொள்ளப்படுகின்றது. 1971 இலக்கம் 38 கொண்ட நிதிச் சட்டத்தின் இலக்கம் 07 கொண்ட வாசகத்திற்கமைய அதிகார சபையின் பணிகள் மற்றும் செயற்பாடுகளை மேற்கொள்ளத் தேவையான ஒதுக்கீடு குறைந்த பட்சம் எதிர்வரும் 05 வருடங்களுக்குள் காணப்படுவதாக உறுதிப்படுத்த அதிகார சபையின் பணிப்பாளர் சபை கட்டுப்பட்டுள்ளது.

இவ் அதிகார சபையின் நிதி நிலுவை 5 மில்லியன் ரூபாவைத் தாண்டும் வேளையில் அம்மிகை முதலீடுகளை மேற்கொள்ள சிவில் விமான சேவைகள் அதிகார சபைச் சட்டத்தின் 16 வது வாசகத்தின் கீழ் அமைச்சின் இணக்கப்பாடு மற்றும் நிதி அமைச்சரின் அங்கீகாரத்தினைப் பெற்ற நிறுவனத்தில் மேலதிக நிதி முதலீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் அதிகார சபையின் பணிப்பாளர் சபையினால் அங்கீகரித்து திறைசேரிக்கு

அனுப்பியுள்ள வர்த்தகத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகார சபையின் பிரதான கட்டிட நிர்மானிப்பு, மத்தள அலுவலக நிர்மானிப்பு மற்றும் வீரவில உத்தியோக பூர்வ இல்ல நிர்மானிப்பிற்காக திறைசேரி அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளதுடன், அம்மூலதன செலவினத்திற்காக தேவையான நிதிக்காக 1200 மில்லியன் ரூபா குழாமில் தேக்கி வைப்பதற்கும் அந் நிதியினை திறைசேரி முறிகளின் முதலீடு செய்வதற்காகவும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் இணக்கப்பாடு மற்றும் நிதி அமைச்சரின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளது. இவ்வாறு இனங் காணப்பட்ட பணிகள் மற்றும் செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்தும் வகையில் இந்நிதி முதலீடு செய்யப்பட்டு தேக்கி வைக்கப்பட்டுள்ளது.

இது எவ்வாறாக இருப்பினும் அதிகார சபையினல் 2011,2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் தொடராக ரூபா. 250 மில்லியன், ரூபா 350 மில்லியன் மற்றும் ரூபா 200 மில்லியன் நிதி பொதுத்திறைசேரிக்கு அனுப்பட்டுள்ளது.

(ஆ) அதிகார சபையின் தற்போது காணப்படும் வாகனங்கள் நாளாந்தக் கடமைச் செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்த போதியளவு அமையவில்லை என்பதனால் தனிப்பட்ட பயன்பாட்டிற்கு உரிமை கொண்டுள்ள உத்தியோகத்தர்களால் பயன்படுத்தப்படும் வாகனங்களும் கடமை நேரத்திற்குள் நிறுவனத்தில் வேறு தேவைக்காக பயன்படுத்த வேண்டி ஏற்பட்டுள்ளது. இதற்கமைய இவ்வாகனம் தனிப்பட்ட பயன்பாட்டிற்கு உரிமை கொண்டுள்ள உத்தியோகத்தர்களினால் பயன்படுத்துவதினால் அதிகார சபையின் இலட்சனை பொறிக்கப்பட்டவில்லை.

(இ) 2012 ஆம் ஆண்டு தொடர்பில் நிதிச் சட்டத்தின் இலக்கம் 14(2)ஊ இன் கீழ் வெளியிடப்பட்ட கணக்காய்வாளரின் அறிக்கையில் இது தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் இதற்காக அவ் அதிகார சபையினால் பதவி வழங்கப்பட்டுள்ளது.

இம்மேற்பார்வைகளுக்கமைய அமைச்சின் பெறுகைக் குழுவின் தழுவல் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

(ஈ) (ை)(ை) இது தொடர்பில் உரிய கால எல்லைக்காக விலை மனுக்கள் கிடைக்கப்பெறாமையினால் கணக்காய்வு மேற்பார்வைகளுக்கு அடிப்படையாக் கொண்ட விடயங்கள் தொடர்பில் தெளிவான விளக்கம் பெறப்படவில்லை. எனவே இந்நிதி தொடர்பாக கருத்துக்களை தெரிவிப்பது சிரமமானதாகும். இது எவ்வாறாக இருப்பினும் நிறுவனத்தின் தலைவரைத் தவிர ஏனைய உத்தியோகத்தர்களுக்காக இது வரையில் வாகனங்களை ஒதுக்குதல் அல்லது அவ்வாகனங்களுக்கான எரிபொருள் ஒதுக்கீடுகள் அல்லது எரிபொருள் கொடுப்பனவு வழங்கப்படவில்லை அவ்வாகனம் உரிய உத்தியோகத்தரின் பிரயாணத்திற்காக மாத்திரமின்றி குழாமில் உள்ள வாகனத்திற்காக நிறுவனத்தில் பல்லேறுபட்ட செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதனால் வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முழுமையான செலவினம் அதில் உள்ள உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் செலவிடப்பட்டுள்ளதாகக் கூற முடியாது.

(ை) கணக்காய்வில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பணிப்பாளர் நாயகத்திற்கு வாகனம் ஒதுக்கப்படவில்லை.

(ை) அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் சட்ட ஒழுங்குகள் மற்றும் நிர்வாக ஒழுங்கு விதி முறைகளில் (ளுடுஊயீ 5000) இலக்கம் 9.3.4 ஏற்பாடுகளுக்கமைய பணிப்பாளர் சபை இக்காப்புறுதித் தழுவலை அங்கீகரித்ததுடன் இதற்கமைய கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(உ) அமைச்சரவையினால் 2008.02.06 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்ட சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் சட்ட ஒழுங்கு விதிமுறைகள் மற்றும் நிர்வாக ஒழுங்கு விதிமுறைகளின் (ளுடுஊயீ 5000) ஏற்பாடுகளுக்கமைய ஊழியர்களின் உழைக்கும் போது கொடுப்பனவு செய்யும் வரி நிறுவனத்தினால் செலுத்தப்படுகின்றது.

மேலும் 2012.11.12 ஆம் திகதி இடம் பெற்ற பொதுவர்த்தகம் தொடர்பான பாராளுமன்றக் குழுவின் ஆலோசனைகளுக்கமைய அதிகார சபையின் பணியாளர்

சபையின் சட்ட ஒழுங்குகள் மற்றும் நிர்வாக ஒழுங்கு விதிக்கோவையில் மீள அமைச்சரவை அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அமைச்சரவை அதனை பரிசீலனை செய்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக நிதி அமைச்சின் தலைமையிலான குழு நியமிக்கப்பட்டது. குழுவின் அறிக்கைகளுக்கமைய தற்போது அமுலில் உள்ள பணியாளர் சபை சட்ட ஒழுங்கு விதிகள் மற்றும் நிர்வாக ஒழுங்குக் கோவையின் ஏற்பாடுகளுக்கமைய தொடர்ந்தும் செயற்பட முடியும் என்பதற்கான பரிந்துரை என்பதுடன் அப்பரிந்துரை அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

(ஊ) (ை) அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் பணிப்பாளர் சபை சட்ட ஒழுங்குகள் மற்றும் நிர்வாக ஒழுங்குக் கோவையின் (ளுடுஊயீ 5000) இலக்கம் 9.3.4 ஏற்பாடுகளுக்கிணங்க இக்கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(ை) அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் பணிப்பாளர் சபை சட்ட ஒழுங்குகள் மற்றும் நிர்வாக ஒழுங்குக் கோவையின் (ளுடுஊயீ 5000) இலக்கம் 9.6 ஏற்பாடுகளுக்கிணங்க இக்கெடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(எ) அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் பணிப்பாளர் சபை சட்ட ஒழுங்குகள் மற்றும் நிர்வாக ஒழுங்குக் கோவையின் 9.4 வாசகத்திற்கமைய உத்தியோத்தருக்கு வழங்கப்படும் ஊக்குவிப்புக் கொடுப்பனவு மாதாந்த அடிப்படைச் சம்பளம்வரை வழங்க முடியும் எனக் குறிப்பிடப்பட்டதுடன், இதற்மைகய ஊக்குவிப்புக் கொடுப்பனவிற்கு 2012.12.13 ஆம் திகதி இடம் பெற்ற 91 வது பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. 2013 ஆம் ஆண்டில் 2013.12.09 ஆம் திகதிய முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை 01∴2013ீநுனு(1) ஊக்குவிப்புக் கொடுப்பனவு தொடர்பில் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை 4.4 வரை காணப்பட்டபோதிலும் முன்னைய ஆண்டில் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்ட முறைக்கு மேற்கொள்ளுமாறு இதற்கமைய 2013 ஆம் ஆண்டின் அடிப்படைச் சம்பளம் வரை ஊக்குவிப்புக் கொடுப்பனவு செலுத்தப்பட்டுள்ளது.

(ஏ) (ை) அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் பணிப்பாளர் சபை சட்ட ஒழுங்குகள் மற்றும் நிர்வாக ஒழுங்குக் கோவையின் (ளுடுஊயீ 5000) ஏற்பாடுகளுக்கமைய கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(ை) பணிப்பாளர் நாயகப் பதவிக்கமைய பொறுப்புக்களைக் கொண்டுள்ள கடமைகளின் அளவு மிக அதிகமாக இருப்பதனால் அக்கடமையினை மேற்கொள்வதற்கு உதவுவதற்காகத் தேவையான தேர்ச்சியினைப் பெற்ற உத்தியோகத்தர் இருக்க வேண்டும் என்பதனால் பணி மேற்பார்வைகளை இலகுபடுத்தும் நோக்குடன் மற்றும் சிரே'ட பணிப்பாளர் நாயகத்தின் சேவை அனுபவம் மற்றும் தொழில்நுட்ப அறிவினை மதிப்பீடு செய்யும் வகையில் சிவில் விமான சேவைகள் அதிகார சபைச் சட்ட ஏற்பாடுகளின் கீழ் பணிப்பாளர் சபையினால் சிரே'ட பணிப்பாளர் பதவி ஏற்படுத்தப்பட்டு அதற்குரியதாக கொடுப்பனவுகளைச் செலுத்த தீர்மானிக்கப்பட்டுதுடன் அதற்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டன. அவ்வாறான பதவியின் தேவையினை கருத்தில் கொண்டு நிதி அமைச்சு மற்றும் ஊழியர், சம்பளக் குழு அவ்வாறான பதவியினை உருவாக்க அனுமதி வழங்கியுள்ளது.

(ஐ) (ை) உரிய உத்தியோகத்தரின் கடமைத் தேவைகளுக்காக பெற்றுக் கொள்ளப்பட்ட தொலைபேசிச் செலவினம் என்பதனால் இந்நிதி உத்தியோகத்தரிடம் இருந்து அறவிட நடவடிக்கை எடுக்க முடியவில்லை.

(ஒ) தங்களது மேற்பார்வையினை நன்றியுடன் ஏற்றுக் கொள்கிறேன்.

முன்னைய ஆண்டுகளில் வேறு மாதிரிக்கமைய தயாரிக்கப்பட்டிருந்த கணணி மற்றும் உதிரிப்பாகங்கள் தொடர்பிலான தகவல்கள் உரிய சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டு மாதிரிக்கமைய தயாரிக்கப்பட்டுள்ளது.

(ஓ) (ை) அதி மேன்மை தங்கிய ஜனாதிபதியின் தலைமையில் இடம் பெற்ற இவ்விழாவில் பங்கேற்குமாறு இந்நிறுவனத்தில் உத்தியோகத்தர்களுக்கு விமானக் கம்பனியினால் உத்தியோகபூர்வமாக அழைப்பு விடுக்கப்பட்டதுடன் அதற்காக உரிய உத்தியோகத்தர்களை உத்தியோகபூர்வமாக பங்கேற்கச் செய்ய இச்செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கை போன்ற சிறிய தேசம் ஒன்றில் இவ்வாறான சர்வதேச விமான நிலையங்களை நிர்மானித்தல் மற்றும் திறப்பது மிகக்குறைவானது என்பதினால் அச்சந்தர்ப்பத்திற்கு சிவில் விமான சேவைகள் மேற்பார்வை நிறுவனமான இந்நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள் பங்கேற்கத் தீர்மானிக்கப்பட்டது.

(ை)சிவில் விமான சேவைகள் அதிகார சபை சேவையாற்றும் ஊழியர்களின் ஆக்கத்திறன் மற்றும் ஆக்கத்திறன் மிக்க சிந்தனைகளை விருத்தி செய்யும் நோக்குடன் இலங்கை மன்ற நிறுவனத்துடன் இணைந்து நிறுவனத்தின் தலைவரும் ஜனாதிபதி ஆலோசகருமான பேராசியர் ரஞ்சித் பாண்டாரவுடன் இணைந்து இச்செயலமர்வு நடாத்தப்பட்டது. இப்பயிற்சிச் செயற்பாடுகள் முழுமையான பணியாளர் சபைக்காக வழங்குதல் தனித்தனியாக உத்தியோகத்தர்களுக்கு வழங்கும் பயிற்சிகள் மூலம் பெறமுடியாத நிறுவனத்தின் நோக்கங்களை நிறைவேற்ற முடியும்.

## 2.4 போதியளவு அதிகாரத்தின் ஊடாக உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் பணியாளர் சபையின் சட்ட ஒழுங்குகள் மற்றும் நிர்வாக ஒழுங்குக் கோவையின் (ளுடுஊயூ 5000) இலக்கம் 6.10.4 இல் ஏற்பாடுகளுக்கமைய பணிப்பாளர் சபை இக்கொடுப்பனவை அங்கீகரித்துள்ளது.

## 03 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வுகள்

### 3.1 நிதி மீளாய்வு

### 3.2 கட்டமைக்கப்பட்ட நிதி மீளாய்வு

## 04. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயற்சாதனை.ஃ.(இ).ஃ.(ஈ)

(ஆ)

- இடைக்கிடையே ஆண்டு தோறும் விரிவடைந்து செல்லும் உள்நாட்டு விமான சேவைத் துறை உரியவாறு மீளாய்விற்குட்படுத்துவதற்கு தேவையான தொழில்நுட்ப பணியாளர் சபை ஊழியர்களின் எண்ணிக்கையினை அதிகரிக்க மற்றும் அவர்களுக்காக செலுத்தப்படும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை அதிகரிப்பதற்காக 2012 ஆம் ஆண்டில் முகாமைத்துவ சேவைத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட யோசனைகளுக்கு அங்கீகாரம் கிடைக்கப்பெற்றமை மற்றும் சேவையில் ஈடுபட்டுள்ள பணியாளர் சபை வெளிநாட்டுத் தொழில் வாய்ப்பிற்காக அல்லது கைத்தொழிலில் கவர்ச்சிமிக்க தொழில் வாய்ப்புகளுக்காக விலகுதல் இத்துறையில் செயற்சாதனைக்கு பாதிப்புக்களை ஏற்படுத்திய பிரதான காரணிகளாகும். 2013 மற்றும் 2012 ஆகிய ஆண்டுகளில் விமானத் தகைமை ரம்ப் பரிசோதனை தொடராக 263 மற்றும் 102 மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- இலங்கை அரசியல் யாப்பில் 154 ஆம் வாசகம் மற்றும் 1971 இலக்கம் 31 கொண்ட சட்டத்தின் 13(5) வாசகத்திற்கமைய கணக்காய்வு உட்பட அதற்குரியதாக பொறுப்பளிக்கப்பட்டுள்ள நிதி மற்றும் கணக்குகள் தொடர்பாக கணக்காய்விற்குத் தேவையான விடயங்கள் சகல புத்தகங்கள் மற்றும் ஏனைய தகவல்கள் அதிகார சபையினால் உரிய உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன..

இருப்பினும் விமான விபத்தின் பரிசோதனைகளை மேற்கொள்வது தொடர்பிலான உரிய தகவல்கள் குறித்து அமுலில் உள்ள 2010 இலக்கம் 14 கொண்ட சிவில் விமான சேவைகள் சட்டத்தின் 57 மற்றும் 61 வது வாசகத்திற்கமைய இச்சட்டத்தின் இரண்டாவது வாசகத்தின் மூலம் அமுல்படுத்தப்பட்டுள்ள சர்வதேச சிவில் விமான சேவைகள் இணக்கப்பாட்டின் 19 வது இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தரங்களுக்கமைய விமான விபத்து மற்றும் நிகழ்வுகள் தொடர்பிலான பரிசோதனைகளுக்குரிய புள்ளி விபரத் தகவல்கள் இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளுக்குப் புறம்பான செயற்பாடுகளுக்காக பயன்படுத்துவது சட்டத்தினால் தடுக்கப்பட்டுள்ளமையினால் அத்தகவல்களை வழங்குவது தொடர்பிலான கேள்விக் கோரிக்கை ஆலோசனைகளுக்காக அமைச்சின் செயலாளருக்கு சமர்ப்பிக்கப் பட்டுள்ளதுடன், செயலாளரின் பதில் இவ்அதிகார சபையுடன் கணக்காய்வாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

**(ஆ)** சிவில் விமான சேவைகள் அதிகார சபையில் மேற்கொள்ளப்படும் சேவைகளுக்காக அறவிடப்படும் கட்டணம் 2014 ஆகஸ்ட் 01 ஆம் திகதி தொடக்கம் மறுசீரமைக்கப்பட்டுள்ளது.

**(இ)** மேற்கூறப்பட்ட 4.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள பதில் உரியதாகும்.

## 4.2 முகாமைத்துவ வினைத்திறன் இன்மை

(அ) இது 2011 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செலவினமாகும். 2012 ஆம் ஆண்டு தொடர்பில் நிதிச் சட்டத்தின் இலக்கம் 14(2)ஊ இன் கீழ் வெளியிடப்பட்டுள்ள கணக்காய்வாளரின் அறிக்கையிலும் அது தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் இதற்கான பதிலும் வழங்கப்பட்டுள்ளது.

சிவில் விமான சேவைகள் அதிகார சபை தமது செயற்பாடுகளை முன்னெடுத்துள்ள சுப்ரிங் கட்டிடம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினைத் தாபிப்பதற்காக வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறிவித்து அப்போதைய அதன் முதல் குத்தகையாளரான சுற்றுலா அமைச்சு அறிவிக்கப்பட்டிருந்தமையினால் துரிதகதியில் வேறு இடத்தினை இனங்காண வேண்டிய நிலை அதிகார சபைக்கு ஏற்பட்டது. ஜினசேன கட்டிட உரிமையாளர் காணப்பட்ட நிலைமையில் கட்டிடத்தை குத்தகைக்கு வழங்க இணங்கிய போதிலும் வேறு எந்தவொரு செலவினத்தையும் மேற்கொண்டு தேவையான மாற்றங்களை மேற்கொள்ள இணங்கவில்லை. வழங்கப்பட்டிருந்த கால எல்லைக்குள் கொழும்பு நகரைச் சூழ வேறு பொருத்தமான கட்டிடத்தை இனங்காண்பதற்கு முடியாமையும் கட்டிட வளாகத்தில் கணிசமான அளவு வாகனங்களை நிறுத்துவதற்காக இடவசதிகள் இலவசமாக வழங்கப்பட்டமையினால் இக்கட்டிட உரிமையாளரினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கட்டணங்களுக்குத் திறைசேரியின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றதன் பின்னர் குத்தகைக்குப் பெற்றுக் கொள்ள அதிகார சபையினால் தீர்மானிக்கப்பட்டது.

குத்தகைக்குப் பொறப்பட்டுள்ள ஜினசேன கட்டிடத்திற்காக கட்டிட உரிமையாளர் எதுவித மேலதிக செலவினத்தையும் சமர்ப்பிக்காமை மற்றும் வேறு மாற்றுக் கட்டிடத்தை நீண்ட காலம் பயன்படுத்துவதற்காக முடியாமையின் காரணமாக அதிகார சபையின் செயற்பாட்டுப் பணிகள் மற்றும் பொறுப்புக்களை உரியவாறு மேற்கொள்ளக்கூடியதாக மாத்திரமன்றி இவ் அதிகார சபைக்குத் தொடர்ந்தும் வருகை தரும் வெளிநாட்டவர்கள் எதிர்வரும் காலங்களில் நாட்டின் தேசிய அடையாளம். அபிமானம் மற்றும் நிறுவனத்தின் கீர்த்தியினை பாதுகாக்கக்கூடிய வகையில் செயற்படக்கூடிய சூழல் கூலிக்கட்டிடத்தில் ஏற்படுத்த வேண்டும் என்பதனால் நிறுவன சுற்றுச் சூழலை விருத்தி செய்ய வேண்டி ஏற்பட்டதாக தயவாய் குறிப்பிடுகிறோம்.

(ஆ) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் கிடைக்கவேண்டியது எனக் குறிப்பிடப்பட்டுள்ள வட் வரி பெறுமதியில் காண்பிக்கப்பட்டிருப்பது இவ் அதிகார சபையினால் கணிப்பீட்டு முறையில் ஏற்பட்ட தவறினால் அன்று உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் வட் இன்வெய்ஸ் கணக்காய்விற்கு தேவைப்பட்டமையினாலாகும். இந்நிதியினைப் பெற்றுக் கொள்ளத் தொடர்ந்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2010.12.31 ஆம் திகதி வரையான காலத்திற்குரிய அறிக்கையில் ஆய்வுகள் பூர்த்தி செய்யப்படுவதுடன் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டின் ஆவணங்களைப் பரிசீலனை செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

(இ) கணக்காய்வினால் காண்பிக்கப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்யத் தேவையான நடவடிக்கைகள் தாமதம் இன்றி எடுக்கப்பட்டுள்ளதுடன் அரச கணக்குச் செயற்குழு சபையின் பரிந்துரை தொடர்பாக விசேட கவனம் செலுத்தி சகல பரிந்துரைகளையும் அமுல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 4.3 கருத்து முரன்பாட்டிற்கு உட்பட்ட கொடுக்கல் வாங்கல்கள்

(அ) இவ் ஏளைவைபெ ஊயசன அட்டை வழங்கப்பட்டிருப்பது அதிகார சபையில் சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு மாத்திரமாகும்.

அதிகார சபையுடன் மிக நெருங்கி செயற்படும் அதன் செயற்பாடுகளுக்கு பாரியளவில் பங்களிப்பு செய்யும் நிறுவனத்தினால் கவலையைத் தெரிவித்துக் கொள்ள வேண்டும் என கருத்தப்பட்ட மற்றும் அதிர சபையினால் பங்கேற்க வேண்டிய இறுதிக் கிரியைகள் தொடர்பில் அதிகார சபைக்காக இச்செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதிகார சபையின் ஊழியர்களின் குடும்பத்தினரின் இறுதிக் கிரியைகளுக்காக இச்செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(ஆ) சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் பணியாளர் சபை சட்ட ஒழுங்கு விதிமுறைகள் மற்றும் நிர்வாக ஒழுங்கு விதி முறைகளின் (ளுடுஊயுீ 5000) ஏற்பாடுகளுக்கமைய இக்கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(இ) அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் பணியாளர் சபை சட்ட ஒழுங்கு விதி முறைகள் மற்றும் நிர்வாக ஒழுங்கு விதிமுறைகள் கோவையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வைத்தியக் காப்பறுதித் திட்டத்திற்கு நிறுவனத்தின் சகல ஊழியர்களும் அடங்குவதனால் ஒப்பந்த அடிப்படைக்கமைய சேர்த்துக் கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு இவ்வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

பணிப்பாளர் சபை அங்கத்தவர்களுக்கு இவ்வசதிகள் தற்போது வழங்கப்படுவதில்லை.

(ஈ) 2012 ஆம் ஆண்டு தொடர்பில் நிதிச் சட்டத்தின் இலக்கம் 14(2)ஊ வெளியிடப்பட்ட கணக்கய்வாளர் அறிக்கையிலும் இது தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் இதற்காக பதில் வழங்கப்பட்டுள்ளது.

கௌரவ சிவில் விமான சேவைகள் அமைச்சரினால் சிவில் விமான சேவைகள் சட்டத்தின் 31.1 வாசகத்திற்கமைய அதிகார சபைக்கு மேற்கொள்ளப்பட்ட உத்தரவிற்கிணங்க உத்தியோகத்தர் ஒருவர் நிறுவனத்தின் திட்டம் மற்றும் அபிவிருத்திப் பணிகளுக்காக அதிகார சபைக்கு இணைப்புச் செய்து நியமிக்கப்பட்ட அவ் உத்தியோகத்தர் கௌரவ அமைச்சரின் உத்தரவிற்கிணங்க அமைச்சரவைக்கு 2012 ஒக்டோபர் மாதம் வரை இணைப்புச் செய்யப்பட்டிருந்தார்.

(உ) கௌரவ விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு 2002 இலக்கம் 34 கொண்ட இலங்கை சிவில் விமான சேவைகள் சட்டத்தில் 31.1 வாசத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள கட்டளைகளுக்கமைய அதிகார சபையின் அங்கீகாரத்திற்கமைய இந்நியமனங்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

(ஊ) இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் சேவைக்கு 2012 ஆம் ஆண்டில் 100 ஆண்டு பூர்த்தியை ஒட்டி அதிமேன்மை தங்கிய ஜனாதிபதி தலைமையில் இடம் பெற்ற விழாச் செலவுகளில் 2012 ஆம் ஆண்டில் திரட்டிய செலவினமாக ஆரம்பத்தில் உரிய நிறுவனத்தில் இணங்கிய செலவினத்தை விட கூடுதலாக செலவிடப்பட்ட நிதியாகும். இது எவ்வாறாக இருப்பினும் இதற்காக செலவிடப்பட்ட மொத்தச் செலவினம் ஏனைய நிறுவனத்துடன் பகிர்ந்து கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

(எ) 2012 ஆம் ஆண்டில் ரூபா 330,000 நடைமுறைப் பொறுப்புக்கள் மற்றும் சொத்துக்களின் கீழ் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் அது பிழையானது அல்ல எனத் தங்களது அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளமையினால் 2013 ஆம் ஆண்டில் தங்களது ஆலோசனைகளுக்கமைய உரிய செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது எவ்வாறாக இருப்பினும் இது தொடர்பில் தங்களது தற்போதைய மேற்பார்வையினை கருத்தில் கொண்டு 2014 ஆம்

ஆண்டில் இறுதிக் கணக்குகளில் தேவையான மறுசீரமைப்புக்களை மேற்கொள்வதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது.

## 4.4 பொருளாதாரம் அல்லாத கொடுக்கல் வாங்கல்கள்

(அ) தங்களது மேற்பார்வையில் குறிப்பிடப்பட்டுள்ள பாதகமான விடயங்களை அகற்றுவதற்கு குத்தகை உடன்படிக்கையினை மீளப் புதுப்பிக்கும் நடவடிக்கை கலந்துரையாடப்பட்ட போதிலும் அவ்வாறு மேற்கொள்ள கட்டிட உரிமையாளர் இணங்கவில்லை. அவ்வாறு அகற்றுவதாயின் வாடகைக் கட்டணம் மறுசீரமைக்கப்பட வேண்டி ஏற்படும் என அவரினால் அறிவிக்கப்பட்டது.

கட்டிடத்திற்காக கூடுதலான வர்த்தக ரீதியிலான கேள்விகள் கொண்ட கொழும்பு நகரில் ஒரு சதுர அடிக்கு ரூபா 100 நிதிக்கு மீளக் கட்டிடத்தை இனங்காண்பது சிரமமானது என்பதினால் பிரதான அலுவலகக் கட்டிடத்தினை நிரிமானிக்கும் பணிகளை வகுக்கப்பட்டுள்ள நிலையில் மீள வேறு வாடகை அடிப்படையிலான கட்டிடத்திற்கு செல்வது பயன் அற்றது என்பதனால் இவ்வாறு செயற்பட நடவடிக்கைள் எடுக்கப்பட்டன.

(ஆ) சிவில் விமான சேவைகள் அதிகார சபையில் சேவையாற்றும் ஊழியர்கள் ஆக்கத்திறன் மற்றும் ஆக்கத்திறன் சிந்தனைகள் ஆகிய சிந்தனைகளை விருத்தி செய்யும் நோக்குடன் இலங்கை மன்ற நிறுவனம் மற்றும் அதனுடன் இணைந்து இந்நிறுவனத்தின் தலைவர் ஜனாதிபதியின் ஆலோசகருமாக பேராசியர் ரஞ்சித் பண்டாரவினால் இச்செயலமர்வு நடாத்தப்பட்டது.

இவ்வாறான செயலமர்விற்காக தேவையான பொருத்தமான சூழலை உருவாக்குவதற்காக ஊழியர்கள் நாளாந்தம் பணியாற்றும் ஒரே வகையிலான அலுவலகச் சூழலிற்குப் புறம்பாக அழைத்துச் சென்று பங்கேற்கச் செய்வதன் மூலம் செயலமர்வில் எதிர்பார்க்கும் பெறுபேறுகளை மிகச் சிறந்த முறையில் பெற்றுக் கொள்ள முடியும் என இனங்கண்ட அதிகார சபையின் பணிப்பாளர் சபையும் இதற்கு அங்கீகாரம் வழங்கியது.

## 4.5 இனங்காணப்பட்ட குறைபாடுகள்

(அ) உரிய உத்தியோகத்தருக்கு இது தொடர்பில் எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பில் ஒழுக்காற்று விசாரனைகள் நடாத்தப்பட்ட அவ் உத்தியோகத்தரிடமிருந்து இவ்இயந்திரத்தின் செலவினம் மற்றும் 25மூ மேலதிக நிதியினை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) 2009-2010 ஆண்டுகளில் வருமான வரி கூடுதலாக செலுத்தப்படவில்லை.

## 4.6 பயனற்ற செலவினங்கள்

சிவில் விமான சேவைகள் பணிப்பாளர் நாயகங்களின் மாநாடு 2016 ஆம் ஆண்டு இலங்கையில் நடாத்த யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளமையினால் அதன் ஏற்பாட்டு பணிகளுக்காக பெற வேண்டிய விளக்கம் மற்றும் அனுபவம் உட்பட அறிவினை வழங்குவதற்கு அதிகார சபையின் அங்கீகாரத்திற்கமைய இக்குழு பங்கேற்கச் செய்யப்பட்டுள்ளது.

## 4.7 வேறு அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட அதிகார சபையின் வளங்கள்

கௌரவ அமைச்சரின் உத்தரவுகளுக்கமைய அவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது.

## 4.8 பணியாளர் சபையின் நிர்வாகம்

ஆண்டு தோறும் விரிவடையும் உள்நாட்டு விமான சேவைத் துறை உரியவாறு மீளாய்விற்குட்படுத்தத் தேவையான தொழில்நுட்பப் பணியாளர் சபை ஊழியர் எண்ணிக்கையினை அதிகரிக்க மற்றும் அவர்களுக்காக செலுத்தப்படும் சம்பளம் மற்றும் கொடுப்பனவினை அதிகரிப்பதற்காக 2012 ஆம் ஆண்டில் முகாமைத்துவ சேவைத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட யோசனைகளுக்கு அங்கீகாரம் கிடைக்கப்பெறாமை மற்றும் சேவையில் ஈடுபட்டுள்ள பணியாளர் சபை வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புகளுக்காக அல்லது கைத்தொழிலின் கவர்ச்சி கொண்ட தொழில் வாய்ப்புகளுக்காக விலகல் இந்நிலைமைக்கு பிரதான காரணியாகும்.

## 5. கணக்குச் செயற்பாடுகள் மற்றும் சிறந்த நிர்வாகம்

## 5.1 வரவு செலவு நிர்வாகம்

## 6. முறைமை மற்றும் நிர்வாகம்

கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் பெறுமதி மிக்க விடயங்கள் தொடர்பில் எனது கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் காலங்களில் இவ்வாறான நிலைமை ஏற்படாதவாறு செயற்படுவதற்கும் அதன் ஊடாக நிறுவனத்தின் செயற்சாதனையின் அதிகரிப்பதற்கும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக அறிவிக்கிறேன்.

மேற்கூறப்பட்ட தெளிவுபடுத்தல்களைக் கருத்தில் கொண்டு வரைபின் கணக்காய்வு வாசகங்களை சீர்திருத்துமாறு தயவாய் கேட்டுக் கொள்கிறேன்.

எச்.எம்.சீ. நிமல்சிறி
சிவில் விமான சேவைகள் பணிப்பாளர் நாயகம்
மற்றும் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர்

ஜெனரல் றொகான் டீ.எஸ். தளுவத்த
தலைவர்